# இல்லம்தோறும் இதயங்கள்

சு. சமுத்திரம்



கங்கை புத்தக நிலையம்

# இல்லம்தோறும் இதயங்கள்

சு. சமுத்திரம்

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : அக்டோபர், 1997
இரண்டாம் பதிப்பு : மே, 2002

உரிமை : ஆசிரியருக்கு

விலை : ரூ 40-00

| | | |
|---|---|---|
| ☼ Title | : | **ILLAMTHORUM IDAYANGAL** |
| ☼ Author | : | **SU. Samuthiram** |
| ☼ Subject | : | Novel |
| ☼ Language | : | Tamil |
| ☼ Edition | : | Second Edition, May - 2002 |
| ☼ Pages | : | 232 |
| ☼ Published by | : | **Gangai Puthaka Nilayam,**<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai-600 017. |
| ☼ Price | : | Rs. **40-00** |

---

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.

அச்சிட்டோர் : **மணி ஆப்செட்,** சென்னை – 5. ✆ : 8555249, 8588186

# பதிப்புரை

சமூகப் பிரச்னைகளையும், அரசியல் அவலங்களையும், அதிகாரிகளின் அத்துமீறல்களையும் நிர்வாக அமைப்புகளின் சீர்கேடுகளைப் பற்றியும் சிரிப்பாகவும், சீறிப் பாய்ந்தும், நலிந்தோர், மெலிந்தோர், வறியோர், வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றியுமே நிறைய தன் கதைகளில் எழுதிவரும் சமுத்திரம் அவர்கள் "இல்லம்தோறும் இதயங்கள்" நாவலில் குடும்பப் பாங்கான கதையோட்டமாக அமைத்து, குடும்ப உறவு மனிதர்கள் சிலரின் குரூர மனங்களை உரசி உறைத்துக் காட்டுகிறார்.

குணக்குன்றான ஒரு இளம் தாய், பிறந்த வீட்டாராலும், புகுந்த வீட்டாராலும், கணவனாலும் பாராட்டப்படும் புகழ் வாழ்வு வாழ்ந்து வந்தவள், ஒரு நோயால் பாதிக்கப்படும் போது கணவனாலும், கணவன் வீட்டு குடும்பத்தாராலும் எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறாள், சீரழிக்கப்படுகிறாள் என்பதைப் படிக்கும்போது கண்கள் குளமாகின்றன. மனித நேயமில்லாமல் இந்த மனிதர்கள் நடந்துகொள்ளும் விதம் நெஞ்சை வெடிக்கச் செய்கிறது.

கடவுள், உலகின் பாவங்களைத் தாங்குவதற்கு தைரியசாலிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் சுமக்கக் கொடுப்பாராம். அப்படிப்பட்ட பாவங் களைச் சுமக்கும் ஒரு பெண்ணின் கண்ணீர்க் காவியம்தான் 'இல்லம்தோறும் இதயங்கள்' நாவல்.

இந்நாவலைப் படிக்கும் வாசகர்கள் மனதில் ஒரு கனமான சுமையை இறக்கிவிடுகிறார் ஆசிரியர். பெண்மைக்கு துரோகமிழைக்க நினைப்பவர்களுக்கு சவுக்கடி கொடுப்பதுபோல் அவர் எழுத்து பெண்ணினத்துக்கு ஒரு பாதுகாப்புக் கேடயமாய் அமைந்துவிடுகிறது.

பெண்மைக்கு பெருமை சேர்க்கும் இந்த நல்ல நாவலை வெளியிடுவதில் கங்கை புத்தக நிலையம் பெருமை கொள்கிறது.

கங்கை புத்தக நிலையத்தார்

# இல்லம்தோறும் இதயங்கள்....

## 1

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலுக்குள் இருந்தவர்களின் எண்ணிக்கை அதிகமா அல்லது அவர்களை வரவேற்பதற்காகவோ அல்லது வருவதைத் தவிர வேறு வழியே இல்லை என்பதாலோ வந்தவர்களாய், தூத்துக்குடி ரயில் நிலைய பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை அதிகமா என்று ஒரு பட்டி மண்டபமே நடத்தலாம். பட்டிதொட்டி பதினாறுக்கும் 'டவுன் சக்கரவர்த்தியான' தூத்துக்குடி நகருக்குள் பிரவேசித்த அந்த எக்ஸ்பிரஸ்—மணியாச்சியில் இருந்து 'மீளவிட்டான்' ஊர்வரைக்கும், கட்டைவண்டிபோல் வந்த அந்த நெட்டை ரயில், இடையே முந்நூறு கிலோமீட்டர் இருப்பதுபோலவும், அதை மூன்று நிமிடங்களில் கடக்க வேண்டும் என்பதுபோல 'டகா டகா' சத்தத்துடன், தலைவிரி கோலமாக வந்து நின்றது.

ரயில் நின்றாலும், அதன் ஊளை நிற்கவில்லை. 'விருந்தாளிகளைக் கொண்டு வந்திருக்கேன். நீங்க என்ன பாடெல்லாம் படப்போறீகளோ' என்று உள்ளூர் உறவுக்காரர்களைப் பார்த்து விசாரிப்பதுபோல் இருந்தது அந்த ஊளை.

பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தவர்களில் பெரும்பாலோர், கண்களைப் பேயாய் அலையவிட்டு,

ரயில் பெட்டிக்குள் இருப்பவர்களைப் பார்ப்பதைவிட, இடிபடாமல் தப்பிப்பதையே பெரிய காரியமாக நினைத்தவர்கள்போல், நகர்ந்து நகர்ந்து தேடினார்கள். ரயில் பெட்டிகளுக்குள் இருந்தவர்களில் சிலர், குளிக்காமலே 'டிரஸ்' செய்துகொண்டார்கள். சில இளம் பெண்கள், அப்போதுதான் நிதானமாகப் பவுடர் போட்டார்கள். சில நடுத்தர வயதுப் பெண்கள், தங்கள் கழுத்துக்களை தற்செயலாகத் தடவுவதுபோல் தடவி, யாருக்குந் தெரியாமல், 'அஞ்ஞான வாசம்' செய்த நகைகளை எடுத்து, மேலே போட்டுத் தெரியப்படுத்திக் கொண்டார்கள். சில குழந்தைகள், அப்போதுதான், "ஒண்ணுக்கு ஒண்ணுக்கு" என்று அழுதன. வாசல் என்று நினைத்து, பாத்ரூமிற்குள் போன பாட்டிகளில் சிலர், இடறித் தடுமாறி, 'எனக்கு வழி பண்ணுங்க... வழி பண்ணுங்க... எனக்கு வழி விடுங்கடாப்பா... பாவிப்பய மவனுகளே... வழி விடுங்கடாப்பா..." என்று நெருக்கடியின் அடர்த்திக்கு ஏற்றபடி, குரலில் கடுமையைச் சேர்த்துக்கொண்டே கத்தினர்.

சில ரயில் காதலர்கள்—பேசக்கூடிய அளவுக்குப் பழகாமலும், பிரியக்கூடிய அளவுக்குக் கண்பார்வைப் பரிவர்த்தனையை, தடுக்காமலும் இருந்த அந்த இளைய தலைமுறையின் எரிகொள்ளிகள், வண்டியில் இருந்து இறங்க மனமில்லாமலே இறங்கிக் கொண்டிருந்தனர். அது 'ரிசர்வ்' செய்யப்பட்ட கம்பார்ட்மென்ட் என்றாலும், மணியாச்சியில் ரயில் படுத்துக் கிடந்தபோது, மளமள வென்று ஏறிய வாடிக்கைகாரர்கள், இப்போது மளமள வென்று இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த அமளிக்குப் பங்காளியாகாதவள்போல், மணிமேகலை மட்டும், ஜன்னல் ஓர இருக்கையில் அமர்ந்து கொண்டு, ஒரு கையை ஜன்னல் விளிம்பில் ஊன்றி, அல்லிப் பூ மாதிரி குவிந்த கையில் மோவாயை ஊன்றிக்

கொண்டு, தம்பி வருகிறானா என்று கண்களை சுழல விட்டும், படரவிட்டும், சிதறவிட்டும், உடம்பை நெளிக்காமலும், முகத்தைச் சுளிக்காமலும் தேடிக்கொண்டிருந்தாள். தம்பியைக் காணவில்லை. தெரிந்தவர் ஒருவர், அந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார், உள்ளூர்க்காரர்.

"மாமா... ஒங்களத்தான் மாமா..."

"அடடே... மணிமேகலையா? எப்பம்மா வந்த?"

"அப்பாவுக்கு எப்படி மாமா இருக்கு?"

"அதை ஏன் கேக்குற? சாப்பாடு இறங்க மாட்டக்கு. மூணு மாசமா படுத்த படுக்கை... பெரிய வாதை. பிராணனும் போக மாட்டக்கு..."

"மாமா, நீங்க என்ன சொல்றீங்க?"

"பெத்த மகள்மாதிரி உன்கிட்ட சொல்லுதேன். அப்பா செத்தாக்கூட தேவலன்னு எனக்கு நெனப்பு வருது. என் வீட்டுக்காரியா... அவர படாதபாடு படுத்துறாள். அவருக்கும் ஒத்துப் போகத் தெரியல."

மணிமேகலை புரிந்துகொண்டாள். அவர், அவரது அப்பாவைப் பற்றி பேசுகிறார். அவரவர் அப்பா, அவரவருக்கு உசத்திதானே! நயமான நாகரிகத்தைக் கருதியும், இயல்பான தாய்மையாலும், மணிமேகலை, அவரிடம் மேற்கொண்டு பேசினாள்.

"தாத்தாவை நல்லா கவனியுங்க மாமா. நாம குழந்தையா இருக்கையில, எவ்வளவு கஷ்டப்பட்டு வளத்திருப்பாங்க? குழந்தைங்க, பெரியவங்களா ஆகும்போது, பெரியவங்க குழந்தையா மாறிடறதும், குழந்தைமாதிரி பிடிவாதம் பிடிக்கதும் இயற்கை. அவங்க நம்மகிட்ட எப்படி ஒத்துப் போனாங்களோ, அதுமாதிரி நாம இப்போ அவங்ககிட்ட ஒத்துப் போகணும்."

"நீ மவராசியா இருக்கணும். நீ இந்த ஊர்ல இருந்து எப்போ போனியோ, அதுல இருந்தே ஊருல களை இல்ல. இப்ப இருக்கது எல்லாம் துப்புக்கெட்ட முண்டங்க!"

"எங்க அப்பாவுக்கு எப்படி இருக்கு மாமா?"

"அவருக்கென்ன? நல்லாத்தான் இருக்காரு. இப்ப காலையிலகூட வாழத் தோப்புல பாத்தேனே! நாங்கெல்லாம் பழய காலத்து உடம்புமா. அடிச்சி கொன்னாக் கூட ஆறுமாசம் ஆவும்."

"தம்பி சீரியஸ்ஸுன்னு லட்டர் போட்டுருந்தான்."

"மாமாவுக்குத் தெரியாம சீரியஸா ஆயிடுமா? கல்லு மாதிரி இருக்காரு. காலையிலகூட என்னப் பாத்து 'ஓட்டப் பந்தயத்துக்கு வாரீயாடா மாப்பிள்ளன்னு' கேட்டாரு. ஒன் வீட்டுக்காரன் சௌக்கியமா? ஒன் மவனயும் கூட்டிக்கிட்டு வந்திருக்கியா? டேய், பேரா... தாத்தாகிட்ட வாடா! சரிம்மா, மெட்ராஸ்ல இருந்து என் மயினி மவன் வாரதா எழுதியிருந்தான்... அவனப் பாத்துட்டு ஒரு நொடியில வந்துடுறேன். இங்கேயே இரு. மாமா வந்து பெட்டி படுக்கைய இறக்கி வைக்கேன்."

பேசியவர் போய்விட்டார். மணிமேகலை மீண்டும் கை ஊன்றி, ஊன்றிய கையில் மோவாயை புதைத்து, பிளாட்பாரத்தைப் பார்த்தாள். அவள் மூன்று வயதுப் பையன், அம்மாவின் முகத்தோடு முகத்தை உரசிக் கொண்டு "ரயில் ஏம்மா புறப்படல?" என்று அவள் காதுக்குள் ஊதுவதுபோல் பேசினான். மேலே, பெர்த்தில் கிடந்த சூட்கேஸ், பிளாஸ்டிக் கூடை, ஒரு கோணிப் பார்ஸல் முதலியவற்றை இறக்கமுடியாமல் இறக்கி, பிறகு அவற்றைத் தூக்க முடியாமல் தூக்கி இருக்கையில் வைத்த ஒரு இளம்பெண், மணிமேகலையின் தோளை செல்லமாகத் தட்டிக்கொண்டே "ஒங்களத்தான்... என் பேரு

பாமா... எஞ்ஜினியர் ஜெயராஜோட சிஸ்டர்...” என்றாள். மணிமேகலை அவளைப் பார்க்காமலும், வெளியே விட்டிருந்த கண்களை எடுக்காமலும் “கொஞ்ச நேரம் சும்மா இரு” என்றபோது, வாயைச் சும்மா வைத்திருக்காத பாமா “ஊருக்கு வந்ததுல என்னை மறந்திட்டிங்களோன்னு ஞாபகப்படுத்துனேன்” என்று சொன்னாள். உடனே மணிமேகலை, தன் கண்களைக் கட்டாயப்படுத்தி, அவளைப் பார்க்க வைத்துக்கொண்டு ‘அவனைக் காணுமே...’ என்று சொல்லிவிட்டு, மீண்டும் ஜன்னலுக்கு வெளியே தலையை விட்டாள். பாமாவால் சும்மா இருக்க முடியவில்லை, ஜன்னலுக்குள் தலையை விட இடமும் இல்லை.

“நான் வெளில போய் அவரைப் பார்க்கேன்...”

“நீ அவனை முன்ன பின்ன பார்த்தது கிடையாதே?”

“அதுக்கென்ன... உங்க ஊரு ஆட்கள்தான் தனியாத் தெரியுமே!”

பாமா, ரயில் பெட்டியின் வாசலுக்கருகே வந்து, கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு, வருவோர் போவோரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, ஓரளவு கறுப்பான கவர்ச்சியுடனும், கிருதா முடியுடனும் ஒவ்வொரு பெட்டியையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டுவந்த ஒரு வாலிபனைப் பார்த்து, “நீங்கதானே மிஸ்டர். சந்திரன்?” என்றாள். அவளை, ‘எக்ஸ்ரே’ கண்களுடன் பார்த்த அவன், பல பத்திரிகைகளைப் படிக்கும் அவன், அவள் பேச்சு நாகரிகமான மோசடிக்கு முதலீடாக இருக்கும் என்று நினைத்தவன்போல், தன் சட்டைப் பையைப் பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டே “நீங்க யாரு” என்றான். அதட்டலுடனும், அதே சமயம் அந்த அதட்டல் அவளுக்கு தெரியக்கூடாது என்ற ஆதங்கத்துடனும். பாமா, அவனை மேற்கொண்டும் அடையாளப்

படுத்தும் வகையில் பேசாமல், அவனை அடையாளம் கண்டுகொண்டவள் போல், “ஒங்க அக்கா உள்ளே இருக்காங்க” என்று சொல்லி வாயை மூடும் முன்னாலே, சந்திரன், அவள் வழிவிடுவது வரைக்கும்கூட காத்திருக்காமல், மண் லாரிபோல ரயில் பெட்டிக்குள் ஏறினான். பாமா, பல்லவன் பஸ்ஸுக்கு வழிவிடும் ஆட்டோரிக்ஷா போல, அங்குமிங்குமாக ஆடி, தன்னை ‘பேலன்ஸ்’ செய்து கொண்டிருந்தபோது, சந்திரன் மணிமேகலைக்கருகே வந்து, மருமகப் பையனைத் தூக்கி வைத்துக்கொண்டு “பிரயாணம் எல்லாம் எப்படிக்கா? அந்தப் பொண்ணு யாருக்கா?” என்றான். கடைசி வார்த்தையைச் சொல்லும் போது, கொஞ்சம் படபடப்பையும் காட்டினான். மணி மேகலையும், படபடப்புடன் பதிலளித்தாள்.

“அப்பாவுக்கு எப்படிடா இருக்கு?”

“நல்லா இருக்காரு. அந்தப் பொண்ணு யாருக்கா?”

“அந்தப் பொண்ணுன்னு சொல்லாதிங்க. இந்தப் பொண்ணுன்னு கேளுங்க. ஏன்னா, நான் இப்போ, அங்க இருந்து இங்க வந்துட்டேன்.”

சந்திரன், பாமாவை தர்மசங்கடமாகப் பார்த்தபோது, மணிமேகலை ‘பொறிந்தாள்.’

“ஏண்டா, அப்பாவுக்கு எப்படி இருக்குன்னு கேக்குறேன். நீ பொண்ணு விவகாரத்தை கேக்குற.”

“மோசமா இருந்தால் சொல்லியிருக்க மாட்டேனா?”

“நல்லா சாப்புடுறாரா?”

“நிறையா...”

“அப்புறம் ஹார்ட் அட்டாக் வந்துதா?”

“வரல.”

"ஒனக்கு மூளை இருக்காடா? 'அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் பழையபடியும் வந்திருக்கு... ஒன்னை பார்க்கிற துக்கு தவியாய் தவிக்கிறார்... துடியாய் துடிக்கிறார்'னு எழுதிட்டு... இப்போ அலட்சியமாய் பதில் சொல்றியே. நியாயமாடா? இப்படியாடா பொய் சொல்லி எழுதறது?"

"லேசா நெஞ்சு வலிக்குன்னார். உடனே எழுதினேன். லட்டர் எழுதி முடிச்சதும், வலிக்கலன்னார். நான்தான், இருபது பைசாவுக்கு வாங்குன லட்டரை கிழிக்க மனசில்லாம அனுப்பிட்டேன்."

"அதுக்காக இப்படியாடா எழுதறது? ஹார்ட் அட்டாக்... தவியாய் தவிக்கிறார்... துடியாய் துடிக்கிறார்... என்னடா இதுல்லாம்? இன்னும் ஒனக்கு விளையாட்டுப் புத்தி போகல. தப்புத் தப்பா லட்டர் எழுதறது தப்புடா."

"கொஞ்சந்தான் தப்புத்தப்பா எழுதினேன். ஆனால் அப்பா உன்னைப் பார்க்கணுமுன்னு தவியாய் தவிச்சது வாஸ்தவம். துடியாய் துடிக்கல. உன்னைப் பார்க்கணு முன்னு துடியாய் துடிச்சது நான்தான். அப்படி லட்டர் எழுதாட்டால் நீ வருவியா என்ன? நீதான் என்னை மறந்துட்ட. எத்தனையோ விஷயங்களை சொல்லித் தந்த நீ, ஒன்னை மறக்கறதுக்கும் ஒண்ணு சொல்லிட்டுப் போ."

மணிமேகலை தம்பியையே பார்த்தாள். முக்கோணம் போல் மடித்து வைத்திருந்த அவன் கைக்குள் அடைக் கலமாய் இருந்த தன் குழந்தையும், தம்பியும் ஒரே அச்சாக இருப்பதைக் கவனித்தாள். தம்பியின் தலை முடியை கோதிவிட்டுக் கொண்டே "அக்காமேல அவ்வளவு பாசம்! அதனாலதான் லட்டர்மேல லட்டர் போட்டும் அரக் கோணத்துக்கு வந்துட்ட பாரு" என்றாள். பொறுமைக்குப் பெயர் போகாத பாமா. "சரி சரி! எல்லாத்தையும் இறக்கி வைக்கலாம். நீங்க பேசுறதைப் பார்த்தால், நாம ஷண்டிங்

பிளேஸ்ல போய்தான் இறங்க வேண்டியதிருக்கும்" என்றாள்.

சந்திரன் எல்லாப் பொருட்களையும் எடுத்து வாசலில் வைக்க, கீழே இறங்கிய பாமா, அவற்றை ஒவ்வொன்றாக வாங்கி, கீழே வைத்தாள். அவன் கை, அப்படி வாங்கு கையில் தற்செயலாக தன்மீது பட்டபோது அவள் லேசாக ஒதுங்கிக்கொண்டே வாங்கினாள்—லேசாகத்தான்.

போர்ட்டரிடம், கொண்டு வந்தவைகளை ஏற்றிவிட்டு, மணிமேகலை, மீண்டும் தம்பியைச் சாடினாள்.

"என்னடா... இன்னைக்காவது, காலையில சீக்கிரமா எழுந்திருக்கக் கூடாதா? எவ்வளவு நேரமாடா தேடுறது?"

"நீ பஸ்ட் கிளாஸ்ல வருவேன்னு ஒவ்வொரு முதல் வகுப்புப் பெட்டியையும் பார்த்தேன். முன்னால நாலு கோச், பின்னால நாலு கோச். இந்த ரயிலை, இரண்டு தடவை அளந்தாச்சு. நீ என்னடான்னா, தேர்ட் கிளாஸ்ல வார!"

"நானும், நீ பஸ்ட் கிளாஸ்ல வருவேன்னு நினைச்சேன். கடைசில, தேர்ட் கிளாஸ்லகூட வரல."

"என்னக்கா நீ? இப்பகூடவா பரிட்சையை ஞாபகப் படுத்தணும்? அதுவும்..."

"கோபப்படாதடா... இவள் மூணாவது மனுஷியல்ல! நான் ஒங்கிட்ட சொன்னேன் பாரு, பாமா, அது இவதான்! இவளும் ஒனக்கு இளைச்சவள் இல்ல. நீயாவது பரிட்சை எழுதி கோட்டடிச்சே. இவள் பரிட்சையே எழுதல. அவ்வளவு பயம்."

"பொய் சொல்லாதிங்க அண்ணி. இந்தா பாருங்க, அண்ணி சொல்றத நம்பாதிங்க. எக்ஸாம் சமயத்துல

எனக்கு டய்பாய்டு வந்தது. அப்போதுகூட நான் பரிட்சை எழுதணுமுன்னேன். அண்ணிதான் 'உடம்புக்கு பரிட்சை வைக்கப்படாதும்மா... டய்பாய்டு திரும்பி வந்தால் தடபுடலா வருமுன்'னு சொல்லி தடுத்திட்டாங்க. இப்போ நினைச்சாக்கூட எனக்கு அழுகையா வருது."

சந்திரன், அவளை அனுதாபத்துடன் பார்த்தபோது, மணிமேகலை "என்னடா அப்படிப் பார்க்கிற? நமக்கும் இப்படி ஒரு சாக்குக் கிடைக்கலியேன்னு பார்க்கிறியா?" என்றாள்.

மூவரும், போர்ட்டர் முன்னால் நடக்க, பின்னால் நடந்தார்கள். திடீரென்று ரெயில் நிலையத்தின் நுழை வாயிலில் நின்ற மணிமேகலை, அந்த ரயிலையே கண் கொட்டாது பார்த்தாள். சந்திரன், அவள் மௌனத்தைக் கலைத்தான்.

"என்னக்கா... கூட்ஸ் வண்டிமாதிரி நிற்கிற?"

"டேய், இந்த ரயிலைப் பார்த்ததும் எனக்குப் பழைய ஞாபகம் வருதுடா. நாம் ரெண்டுபேரும் அப்புறம் காமாட்சி, வெங்கடேசன் எல்லாருமே சின்னப்பிள்ளை யாய் இருக்கையில ரயில் விளையாட்டு விளையாடுவோம். ஒருநாளு ஒனக்கும் எனக்கும் யாரு ரயில் எஞ்ஜினாய் இருக்கதுன்னு சண்டை. நான்தான் எஞ்ஜினுன்னு, சொன்னேன். நீயோ, நான்தான்னு சொன்னே. உடனே நாம ரெண்டுபேரும் வெங்கடேசன்கிட்டே சொன்னோம். உடனே அவரு, 'நீங்க ரெண்டு பேருமே எஞ்சினா இருக்க முடியாது. எஞ்சின் கறுப்பாய் இருக்காது. அதனால, கறுப்பா இருக்கற நான்தான் எஞ்சினா இருப்பேன்'னு சொன்னாரு. ஞாபகம் இருக்காடா? வெங்கடேசன் எப்படிடா இருக்காரு?"

"ஏதோ இருக்கார்."

“என்னை விசாரிப்பாராடா?” என்று கேட்கப்போன வார்த்தைகளை அவள் அடக்கிக் கொண்டாள். சந்திரன் அக்காவின் கவலையை உணரவில்லை. அவனுக்கும் ஒரு கவலை இருந்ததே காரணம். அதைப் பேச்சில் காட்டினான்.

“எக்கா! இவங்க வாரதைப் பற்றி நீ லட்டர்ல எழுதலியே?”

“இவள் கடைசி வரைக்கும் வரமாட்டேன்னு சொன்னாள். ‘ஒங்க ஊரு பட்டிக்காடா இருக்கும். மாட்டேன்’ன்னாள். நான்தான், ‘ஒனக்கும் ஊர்ல ஒரு இன்ட்ரெஸ்ட் இல்லாமலா போயிடும்... வாம்மா வா’ன்னு வலுக்கட்டாயமாய் கூட்டி வந்திருக்கேன். எப்போ ஊருக்குப் போகணுமுன்னு என்னையும் இழுக்கப் போறாளோ தெரியல?”

பாமா சிரித்துக்கொண்டே, சந்திரனிடமிருந்து குழந்தையை வாங்கிக்கொண்டாள். மணிமேகலை, ஒரு டாக்ஸியைக் கையைக் காட்டியபோது ஒரு ஆட்டோ ரிக்ஷா டிரைவர், தன் வண்டி மாதிரியே அலறிக்கொண்டு சந்திரன் முன்னால் வந்து, முதுகை வளைத்தார்.

“சாமீ... என்னை இருக்கச் சொல்லிட்டு, டாக்ஸில ஏறினால் நியாயமா? ஒங்க சொல்லுக்குக் கட்டுப்பட்டு, கிடைச்ச சவாரியையும் விட்டுட்டு நிக்கிறேன்.”

“நான் என்னப்பா செய்றது? அக்கா மட்டும் வருவாங்கன்னு உன்னை நிற்கச் சொன்னேன். இப்போ இவங்களும் வந்திருக்காங்க. இந்தா ரெண்டு ரூபாய்.”

“ஒங்களால முப்பது ரூபாய் சவாரி போயிட்டு.”

“என்னய்யா பஞ்சப்பாட்டு பாடுற? எத்தன நாளு உன் ஆட்டோவுல வந்திருக்கேன்?”

பேச்சு வார்த்தையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த மணிமேகலை, தலையில் பளுவோடு இருந்த போர்ட்டரை, அந்த ஆட்டோ ரிக்ஷாவில் வைக்கும்படி சைகை செய்துவிட்டு "நீ செய்தது தப்புடா! பாவம் அவரு! நமக்காகக் காத்திருந்தவர விடுறது தப்புடா... எத்தனையோ நாளு அவரு ஆட்டோவுல போனதால, இன்னைக்கு அவர் பிழைப்பு கெடணுமா என்ன? எத்தனையோ நாளு சாப்பிட்டுவிட்டு இன்னைக்கு சாப்பிடாட்டால் வயிறு கேக்குமா? நீ பஸ்ல வந்துடு. நானும் பாமாவும் இதுல போறோம்" என்றாள்.

மணிமேகலையும், பாமாவும் ஆட்டோவில் ஏறினார்கள். உடனே டிரைவர் "நீங்களும் ஏறிக்கிடுங்க... காட்டுப் பாதையில கான்ஸ்டபிள் நிக்க மாட்டான்" என்றார். சந்திரன் தயங்கியபோது, மணிமேகலை "சும்மா ஏறிக் கடா..." என்றாள். உடனே அவன், அவசரத்தில் எந்தப் பக்கம் உட்காருவது என்று தெரியாமல், பாமாவின் பக்கமாகப் போனபோது, "அதுக்கு நாளும் நட்சத்திரமும் பொருந்தி வரணும்டா. இப்போதைக்கு நீ என் பக்கத்துலேயே உட்காரு" என்றாள் மணிமேகலை சிரித்துக்கொண்டே.

"சே! ஒரே இட நெருக்கடி! நான் வேணுமுன்னால் இந்த ரயிலுலேயே ஏறி மெட்ராஸ் போயிடட்டுமா?" என்று சொல்லி பாமா 'விட்' அடித்தபோது, அந்த 'விட்டை' சீரியஸாக எடுத்துக்கொண்டோ அல்லது நிஜமான நெருக்கடி தாளமுடியாமலோ, சந்திரன் இறங்கி, டிரைவர் இருக்கையில் காலியாக இருந்த அணுப் பிளேசுக்குள் ஒடுங்கிக் கொண்டான். 'சே... இந்த மனுஷனுக்கு சென்ஸ் ஆப் ஹியூமர் இல்லையே...' என்று பாமா, தனக்குள்ளேயே முனங்கினாள். அதேசமயம் அவன் திண்டாடிக் கொண்டே உட்காருவதைப் பார்க்க, அவளுக்குக் கொண்டாட்டமாகவும் இருந்தது.

ஆட்டோரிக்ஷா, அவர்களை ஏற்ற வந்த டாக்ஸியைக் கடந்துகொண்டு சென்றது. பாமாவுக்கு ஒரே ஆச்சரியம். அண்ணிக்காரி நியாயத்தைக் கருதி ஆட்டோவில் அமர்ந்ததில் அவளுக்கு ஆச்சரியமில்லை. அவள், அப்படிச் செய்யவில்லையானால்தான் ஆச்சரியம். ஆனால் இந்த டாக்ஸி டிரைவர், தனக்குக் கிடைக்கவிருந்த 'கிராக்கி' பறிமுதல் செய்யப்பட்டாலும், ஆட்டோ டிரைவரை சிநேகித பாவத்துடன் பார்ப்பதைக் கண்டுதான் ஆச்சரியப் பட்டாள். ஓ... இவரு மெட்ராஸ் டிரைவர் இல்ல! இவரு ஏழைபாளைகளோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்ட ஒரு தொழிலாளி.

"சொல்லுடா... அண்ணி, அண்ணன், குழந்தைகள்ளாம் எப்படி இருக்காங்க?" என்றாள் மணிமேகலை.

"கொஞ்ச நேரம் சும்மா இருக்கா. மனுஷனுக்கு இங்க உட்காரவே முடியல."

"வேணுமுன்னா, குழந்தைய வச்சிக்கிடுறீங்களா?" என்று சொல்லிவிட்டு பாமா சிரித்ததும், மணிமேகலையும் சிரித்தாள்.

ஆட்டோ ரிக்ஷாவும் சிரிப்பதுபோல் தோன்றிய சாலையின் பள்ளங்களைத் தாண்டிக்கொண்டே பறந்தது.

தூத்துக்குடி நகரின் கிழக்கு முனையில், காவல் தெய்வம் போலிருந்த வரஸித்தி விநாயகர் கோவிலைத் தாண்டியதும், நாற்பது கிலோ மீட்டர் வேகம் அறுபது கிலோமீட்டராக, ஸ்பிக் உரக் கம்பெனியைத் தாண்டி, முள்ளிக்காடு, காயல் முதலிய சாலையோரக் கிராமங் களைக் கடந்து இன்னொரு பஞ்சாயத்து ரோடு வழியாக (அதாவது அவ்வளவு மோசமான ரோடு) பாய்ந்து, தென்னந்தோப்பும், மாந்தோப்பும், தனித்தனியாகவும், அதேசமயம் சேர்ந்தாற்போலவும் தோன்றிய—குட்டி

எஸ்டேட் பங்களாபோல் காட்சியளித்த அந்த வீட்டின் முன்னால், டிராக்டரின் மேல் மோதாமல், லாவகமாக நின்றது ஆட்டோ ரிக்ஷா.

பெரிய சாய்வு நாற்காலியில், நெடுஞ்சாண் கிடையாகப் படுத்துக்கிடந்த மிராசுதார் அருணாசலம், மகளைப் பார்த்ததும் எழுந்தார். மணிமேகலை, ஒரே தாவாகத் தாவி வந்து, அப்பாவின் கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டாள். மகளைப் பார்த்ததும் அந்த அறுபது வயது கம்பீரக் கிழவரின் மனதில் என்னவெல்லாமோ தோன்றியிருக்க வேண்டும். திருமணம் ஆவதற்கு முன்பு, அடிக்கடி வீங்கிப்போகும் தன் கால்களுக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்து, வேளா வேளைக்கு மாத்திரைகளை விழுங்க வைத்து, திருட்டுத்தனமாக தோப்பில் தொங்கும் மாம்பழம் ஒன்றைப் பறித்துத் தின்னும்போது எங்கிருந்தோ வந்தவள்போல் தட்டிப் பறித்து, அவரைக் கருணை பொங்கப் பார்த்துவிட்டு, கைகளைப் பிடித்து, வீட்டுக்குள் இழுத்துக் கொண்டுபோய், பார்லி கஞ்சியைக் கொடுத்துவிட்டு, அவர் தூங்கும்வரை, தான் தூங்காமலே கால்களைப் பிடித்துவிட்டு, தலையைக் கோதிவிட்டு, முதுகை அமுக்கி விட்டு பணிவிடை செய்யும் அந்த மகளின்—அந்தத் தாயின் தரிசனம் கிடைத்துவிட்ட நெகிழ்ச்சியில் இரண்டு சொட்டு உஷ்ண நீரை, கண்கள் விடுவிப்பதைப் பார்த்த மணிமேகலை திடுக்கிட்டாள். அவர், இப்படி கண்ணீர் விட்டதை எப்போதுமே பார்த்தறியாதவள். அறியாப் பருவத்திலேயே அவள் அம்மா இறந்தபோது கூட, மனைவிமீது உயிரையே வைத்திருந்த தன் தந்தை, துக்கத்தை வாயில் துண்டை வைத்து அடைத்தாரே தவிர, அழவில்லை என்பதை அறிந்திருந்த மணிமேகலைக்கு, என்னவோ போலிருந்தது. அப்பாவுக்கு ஏற்ற மகளான அவள், பொங்கி வந்த விம்மலை, தன் இயல்பான

கம்பீரத்தால் பொடிப் பொடியாக்கிவிட்டு "என்னப்பா... நீங்க... சின்னப் பிள்ளை மாதிரி" என்று சொல்லிக் கொண்டே, தன் முந்தானையை எடுத்து அவர் கண்களைத் துடைத்துவிட்டாள். இந்தச் சமயத்தில், குழந்தையை எடுத்துக்கொண்டு வந்த சந்திரன், நிலைமையின் நெகிழ்வைப் புரிந்து கொண்டவன்போல், குழந்தையை அவரிடம் நீட்டினான். அழப்போன கிழவர் இப்போது சிரிக்கப் போனார்.

இதற்குள், உள்ளே இருந்து மணிமேகலையின் மூத்த அண்ணன் ராமலிங்கமும், அவர் மனைவி மக்களும், குழந்தை குட்டிகளோடு வந்தார்கள். பத்து வயது பத்மா, எட்டு வயது கனகராஜ், ஐந்து வயது செல்வி ஆகிய பிள்ளைகள், "அத்த... அத்த..." என்று சொல்லிக்கொண்டு, அவளின் கைகளையும், அந்த கை வைத்திருந்த பிளாஸ்டிக் கூடையில் உள்ள தின்பண்டங்களையும் பற்றியபோது, தனக்குப் பிள்ளை பெறும் தகுதி போய்விடவில்லை என்பதுபோல், ஒரு பிள்ளை இடுப்பில் இருந்துகொண்டே எட்டிப் பார்க்க, இன்னொரு பிள்ளை வயிற்றுக்குள் இருந்துகொண்டே கீச்சு கீச்சு காட்ட அண்ணிக்காரி கனகம், "ஏமுல... இப்படிப் பறக்கிய? தின்பண்டத்த பார்த்ததும் இப்படிப் பறக்கணுமா? இங்க இல்லாத மாம்பழமா? இங்க இல்லாத பலாப்பழமா?" என்று அடுக்கிக்கொண்டே போனபோது, அங்கே இருந்த எல்லோருக்கும் என்னவோ போலிருந்தது. கனகத்திற்கு வாழ்க்கைப்பட்ட ராமலிங்கம், பேச்சை மாற்றினார். "மாப்பிள்ள சௌக்கியமாம்மா? அவரயும் ஒரு நட வரச் சொல்லப்படாதா? இது யாரு? ஒன் நாத்துனாருதான?" என்று பேச்சைத் துவங்கியபோது "நண்டு மாதுரி இருந்தவா, விலாங்கு மாதுரி வளந்துட்டா பாரேன்... என்று கனகம், பாமாவைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிரித்தாள். பிறகு மணிமேகலையின் அருகே போய் நின்று "நாங்க

போட்ட மூணு வடம் சங்கிலியைக் காணல?" என்றாள் அந்தத் திறனாய்வுக்காரி.

இதற்குள், மணிமேகலை வந்துவிட்ட செய்தி கேட்டு, உறவுக்காரர்களும், ஊர்க்காரர்களும் அங்கே குழுமினார்கள். பஞ்சாயத்துத் தலைவரான பெருமாளும், அவரை முறியடிக்க நினைக்கும் கர்ணமும், இந்த இரண்டு பேருக்கு இடையே சண்டையை மூட்டிவிடும் முன்ஸீப்பும் வந்துவிட்டார்கள். இன்னும் யார் பக்கமும் சேராமல் இருக்கும், மிராசுதார் அருணாசலத்தை ஆழம் பார்ப்பதற்காக அங்கே வந்த இந்த பிரமுகர்கள், "என்ன மணிமேகல... ஒங்க ஊரு எப்படி இருக்கு" என்று சொல்லிவிட்டு, அவள் பதிலை எதிர்பாராமலே, "அருணாசலம் மச்சான், நம்ம பெருமாள பஞ்சாயத்துக்கு நிக்காதடா... யூனியன் தலைவருக்கு நில்லுடாங்கறேன்; கேக்கமாட்டக்கான். நீராவது புத்தி சொல்லும்" என்று மிராசுதாருக்கு புத்தி சொல்வது போல, கர்ணம், பெருமாளுக்கு 'தேர்தல் குழியை' வெட்டிக் கொண்டிருந்தார். "விரலுக்குத் தக்கபடி வீக்கம்வே... நீரு நின்னா அதுல அர்த்தம் இருக்கு" என்று ப. தலைவர், பதிலுக்கு, தனக்கு வெட்டப்படும் குழியில், கர்ணத்தை தள்ளப் பார்த்தார். முன்ஸீப்போ, "ஆயிரம் சொல்லுங்க... இந்தத் தடவ அருணாசலம் மச்சான்தான் நிக்கணும்" என்று இரு தரப்புச் சண்டையை முத்தரப்பாக்கப் பார்த்தார்.

மிராசுதார் அருணாசலமும் நின்றார். தான் உட்கார்ந்தால் அவர்களும் எங்கே உட்கார்ந்துவிடுவார்களோ என்று பயந்து நின்றார். வாய்வலிக்குப் பயப்படாத அவர்கள், கால்வலிக்குப் பயந்தாவது போவார்கள் என்று நின்றபடியே, அந்தப் பகலில் அவர் கனவு கண்டுகொண்டிருந்தார். ஆசையோட மகளைப் பார்த்துக்கிட்டே இருக்கணுமுன்னு நினைச்சா, இந்த முடிச்சிமாறிப் பயலுவ எலெக்ஷனப் பத்தி பேசுறாங்க பாரு!

அவர்கள் மத்தியில், மரியாதைக்காகப் பேசிக் கொண்டிருந்த மணிமேகலை, சற்றுத் தொலைவில் நின்ற கூட்டத்தினருக்கருகே சென்றாள். குழந்தைகளுக்குக் 'கணை' வந்தால் (அதாவது மினி பிட்ஸ்) அவர்கள் வயிற்றில் சாம்பலை வைத்துக் குணப்படுத்தும் தங்கம்மா பாட்டி, அந்தக் காலத்து போஸ்ட்மேன் சண்முகம், குத்தகை நிலத்தைப் பயிரிடும் கந்தசாமியின் மனைவி காத்தாயி, பெட்டிகள் பின்னி விற்கும் ஏழை ஹரிஜனப் பெண் ராமக்கா, பவளக்கொடியாகவும், அல்லியாகவும் திரௌபதியாகவும் வேடம் போட்டு கூத்து நடத்தும் கோவிந்தன் முதலியோர் அடங்கிய அந்தக் கூட்டத்தில் யாரிடம் முதலில் பேசுவது என்று புரியாமல், எல்லோரும் ஒரே சமயத்தில் பேச, அவள் சிரித்துக்கொண்டாள்.

"எம்மாடி... ஏ பூ... நீ போனதுல இருந்து கண்ணுக் குள்ளேயே நிக்கம்மா..."

"கண்ணுக்குள்ள பூ விழப்படாது பாட்டி..."

"கூத்தாடிப் பய மவன... ஒன் வேலய பாத்துக்கிட்டு போயமில..."

"நான் குடுத்த பெட்டிய பத்திரமா வச்சிருக்கியளா அம்மா?"

"ஆமா... நீ குடுத்த பெட்டி... பவளக்கொடிக்கு அர்ச்சுன ராசதுரை நக நட்டு வச்சுக் கொடுத்த ரத்னப் பெட்டி பத்ரமா இருக்கும்."

"ஒம்ம புத்திக்குத்தான் இப்டி கூத்து கீத்துன்னு உருப்படாம போறீரு... ஒம்ம வேலய பாத்துக்கிட்டு போவும்."

"ஏழா ராமக்கா, இவனோட வேலயே எடக்குப் பேசறதுதான! நீயாவது சும்மா இரு. நாய் வால நிமிர்த்த முடியுமா?"

"நாய் வால நிமுத்துனாலும் நிமுத்தலாம். ஆனால், ஒன் கூன நிமுத்த முடியாது. இது கூனியோட கூனவிட மோசமான கூனு. ஆயிரம் ராம பாணங்களாலயும் அசைக்க முடியாத கூனு."

மணிமேகலை சிரித்துக்கொண்டே சீரியஸாகப் பேசினாள். "ஏதேது, நான் நின்னால் ஒங்களுக்குள்ள சண்டை நிக்காது போலுக்கே?"

'கூத்து' கோவிந்தன் கெஞ்சினான்:

"நீங்க நில்லுங்க அம்மா. எங்களுக்குள்ள இது சகஜம். பாசத்த கிண்டலா காட்டுவோம். பணக்காரங்க மாதுரி கிண்டல பாசமா காட்ட மாட்டோம்."

இதற்குள் மனைவியின் தூண்டுதலாலோ அல்லது தற்செயலாகவோ ஏழை எளியவர்களிடம் பேசி, அந்தஸ்தைக் கெடுப்பது போலவும், அதைத் தடுப்பதற் கென்று வந்ததுபோலவும், மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு வந்த மணிமேகலையின் அண்ணன், "மேகலா, வீட்டுக்குள்ள போ, அண்ணி கூப்புடுறாள். ஏண்டா கோவிந்தா, எதுக்குடா கூத்து கீத்துன்னு போடுற? பேசாம மெட்ராஸுக்குப் போ. ஒன் அழகுக்கு நீ மட்டும் சினிமாவுல சேர்ந்தால், ஸ்ரீதேவிக்கும், ஸ்ரீபிரியாவுக்கும் மார்க்கெட் போயிடும். பொய் சொல்லலடா... நிசமாத்தான் சொல்லுதேன்" என்றான். கோவிந்தன், மணிமேகலையை கண்ணைச் சிமிட்டிக்கொண்டே பார்த்தான். "பாத்தியா... பணக்காரங்க, கிண்டல பாசமா காட்டுவாங்கன்னு நான் சொன்னது புரியுதா" என்று அவன் கேட்பது போலிருந்தது. அவனது அனுமானத்தை ஊர்ஜிதப் படுத்துவதுபோல், ராமக்கா "யோவ்! நீரு பாட்டுக்கு கேப்பார் பேச்சைக் கேட்டுட்டு, மெட்ராஸ் கிட்ராஸுன்னு போயிடாதயும். அங்க போனால், நாயி படாத பாடு படணும். இங்க

கிடக்கிற கஞ்சையோ... கூழயோ குடிச்சிக்கிட்டு சும்மா கிடயும். எங்க ஊட்டுக்காரர் ஒமக்கு ஆறுமுவ நேரியில கூத்துக்கு ஏற்பாடு பண்ணுறதா சொல்லியிருக்காரு" என்றாள்.

கூட்டம் கலைந்தது.

இரவுச் சாப்பாட்டை, எல்லோரும் ஒன்றாக அமர்ந்து முடித்தார்கள். பாமாவுக்கு பெயர முடியாத அளவுக்கு அந்த வீடு பிடித்துவிட்டது. காஞ்சீபுரத்து ஏகாம்பரேஸ் வரர் கோவிலையும், வரதராஜ பெருமாள் கோவிலையும் பார்த்து "இப்படிப்பட்ட கோவில்களை இப்போது எந்த மாடர்ன் ஆர்க்கிடெக்டாலும் கட்டமுடியுமா?" என்று வியப்படைகிற அவள், அந்த வீட்டைப் பார்த்ததும்— வெளியே சாதாரணமாகவும், உள்ளே கடைந்தெடுத்த தேக்குத் தூண்களையும், அவற்றின் சிற்ப வேலைப்பாடு களையும், மேலே முத்துப்பல்லக்குபோல், இரண்டு கட்டிடங்கள், சன்னமான கம்பி வலைகளால் இணைந் திருக்க, போதுமான அளவு சூரிய வெளிச்சம் படும்படி கட்டப்பட்டிருந்த அந்த வீட்டை, மாடர்ன் ஆர்க்கிடெக்ட் என்று சொல்லும் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

மணிமேகலை, ஒவ்வொன்றாக எடுத்து, ஒவ்வொரு வரிடமும் நீட்டினாள்.

அண்ணனுக்கு எட்டு முழ வேட்டி, பாப்ளேன் சட்டை. தம்பிக்கு டெர்லின் துணிகள், அண்ணிக்கு ஒரு உல்லி உல்லி. குழந்தைகளுக்கு 'பிராக்குகள்'. பிறகு சூட்கேஸைத் திறந்து ஒரு சின்ன மிக்ஸி யந்திரத்தை எடுத்தபோது அண்ணிக்காரி கனகம் கன்னத்தில் கை வைத்தாள். "அண்ணி! அப்பாவுக்கு தினமும் இதுல ஆரஞ்சு ஜூஸ் எடுத்துக் கொடுங்க..." என்றபோது, கனகத்தின் முகம் கறுத்தது. அதைப் புரிந்துகொண்டவள்

போல் மணிமேகலை. "குழந்தைகளை... மாம்பழத்த தோலோட சாப்பிட விடாதீங்க... இதுல ஜூஸ் எடுத்துக் கொடுக்கலாம்" என்றபோது கனகம் வாயால் மட்டுமல்ல கண்களாலும் சிரித்தாள்.

எல்லோரும் தூங்கிவிட்டார்கள். தூங்கக்கூடாத சந்திரனும், பாமாவும்கூட தூங்கிவிட்டார்கள். மணிமேகலை நாலைந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்து, தோலுரித்து ஜூஸ் எடுத்து வெளியே கட்டிலில் படுத்திருந்த தந்தையிடம் கொண்டுவந்தாள். அவர் அதை வாங்கிக்கொண்டு காலடியில் உட்கார்ந்த மகளின் தலைமுடியைக் கோதிவிட்டுக் கொண்டே "என் ராசாத்தி, நீ வந்ததுல ஏற்பட்ட சந்தோஷத்த அனுபவிக்க முடியாம நீ போகப் போவும்போது ஏற்படப்போற துக்கத்த நினைச்சிப் பார்க்காம இருக்க முடியலம்மா!" என்றபோது இதுவரை தன்னைக் கட்டுப்படுத்தியிருந்த மணிமேகலை இப்போது விம்மினாள்.

"அப்பா. அப்பா! எதுக்குமே கலங்காத நீங்க என்னைப் பார்த்ததும் கண் கலங்கி கண்ணீர் விட்டியளே, எதுக்குப்பா? எதுக்குப்பா? அண்ணி ஒங்களுக்கு வேளா வேளைக்கு மருந்து தராமலும், பிள்ளைங்களை திட்டுறது மாதுரி ஜாடையாயும் திட்டுறதா தம்பி சொன்னான். நிசமாவா அப்பா, நிசமாவா?"

அருணாசலம் எதுவும் பேசவில்லை. மகளின் கையை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டார். சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, பிறகு அந்தக் கைகளை வருடிக்கொண்டே பேசினார்.

"நான் அரக்கன். எனக்கு... இப்போ படுறது பத்தாது... ஒன்னப் பொறுத்த அளவுல பெரிய தப்புப் பண்ணிட்டேன். ஒன் மனசு தெரிஞ்சும், கண்காணாத இடத்துக்கு அனுப்பிட்டு இப்போ கண்கலங்குகிறேன். நீயாவது ஒரு

வார்த்த சொல்லியிருக்கலாம்... அம்மாவுக்கு அம்மாவா இருந்த எங்கிட்ட நீ சொல்லப்படாதாம்மா? சொல்லப்படாதா?"

மணிமேகலை, தந்தையின் பேச்சைப் புரிந்து கொண்டாள். புரியப் புரிய, வெங்கடேசன் அவள் முன்னால் வந்து நின்றான்.

அவள் சுதாரித்துக் கொண்டாள்.

அப்பாவின் கால்களைப் பிடித்துவிட்டாள். வாடைக் காற்றுப் படாமல் இருப்பதற்காக, அவருக்காக வாங்கி வைத்த சால்வையை எடுத்து அவர்மீது போர்த்தினாள். தூளியிலே போட்டு, தோளிலே எடுத்து, கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த அந்த பெற்ற மனம், அண்ணிக் காரியாலும், தன் பிரிவாலும் படும் வேதனையை தன்னுள்ளே வாங்கிக்கொண்டவள் போல்—

அவரது கால்பாதங்களை தலையணையாக்கியவள் போல், அவற்றில் தலைவைத்துத் தூங்கினாள். தூக்கம் கலைந்த அருணாசலம். மகளின் தூக்கத்தைக் கெடுக்க விரும்பாதவர்போல், மடக்க நினைத்த கால்களை அப்படியே வைத்துக்கொண்டு—அந்த லேசான வேதனை யில் ஒரு பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

## 2

**அ**ந்த ஊரும், அதன் ஏரியும், மாந்தோப்பும், வாழைத்தோப்பும், எலுமிச்சை மரங்களில் பட்டு அதன் பழங்களில் உராய்ந்து, வாசனையுடன் வரும் காற்றும்... கல்லூரிக்காரியான பாமாவிற்குப் பிடித்துவிட்டது. குறிப்பாக, ஏரிக்கருகே உள்ள தென்னந்தோப்பும், அந்தத்

தோப்புக்கருகே மொய்த்திருந்த கரும்புத் தோட்டத்தில் கரும்பை ஒடித்து சந்திரன் கொடுக்கும் நேர்த்தியும், அவளுக்கு அவனிடம் பிடி கொடுக்க வேண்டும் என்கிற அளவுக்குப் பிடித்துவிட்டது. ஊர் விவரங்களோடு, உலக விவரங்களையும் தெரிந்துவைத்திருந்த அவனும், அவள் உணர்ச்சிகளைப் போற்றுபவன் போல் நடந்து கொண்டான்.

அரக்கோணத்திலேயே பிறந்து வளர்ந்து, அங்கே வீசும் தொழிற்சாலையின் கரித்தூள்களை சுமந்து வரும் காற்றாலும், சென்னைக் கல்லூரி விடுதியில், உஷ்ணத்தை உக்கிரப்படுத்தும் காற்றில் வெந்தும் நொந்தும் போயிருந்த பாமா, அந்தக் கிராமத்துக் காற்றில், தங்கு தடையில்லாமல் குமண வள்ளலைப்போல் வீசிய காற்றில் குளிப்பவள்போல், தன்னை மறந்து தலைமுடியை விரித்து அப்படியே மெய்மறந்து நின்றிருக்கிறாள். ஒரு வாரப் பொழுதும் அவளுக்கு ஒரு நாளாகப் பறந்தது.

ஆகையால் அன்றும், பொழுது சாய்கிற சமயத்தில், 'மாட்டேன்' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்த இடத்திலிருந்தே கைவிரித்த மணிமேகலையின் கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, அவளையும் வலுக்கட்டாயமாக தென்னந்தோப்பை நோக்கி நடக்க வைத்துவிட்டாள்.

இருவரும் ஏரிக்கரை மீது நடந்துகொண்டிருந்தார்கள். மணிமேகலை 'ஒருமாதிரி' இருந்தாள். பாமா கேட்பதற்கு மட்டுந்தான் பதில் சொன்னாளே தவிர அவளாகப் பேசவில்லை.

"ஏன் அண்ணி ஒரு மாதிரி இருக்கிங்க?"

"நான் எங்கே இருக்கேன்? நடக்கல்லா செய்யுறேன்..."

"சும்மா சிரிச்சி மழுப்பாண்டாம். நீங்க செயற்கையாச் சிரிக்கதுக்கும் இயற்கையா சிரிக்கதுக்கும் முகத்துல வித்தியாசம் தெரியும்."

"எப்படி?"

"செயற்கையாச் சிரிக்கும்போது, ஒங்க புருவம் உயரும். உதடு குவியும். கன்னம் உப்பும். இயற்கையா சிரிக்கையில, புருவம் வளையும். பல்லெல்லாம் சிப்பிக்குள்ள இருக்கிற முத்துமாதிரி ஜொலிக்கும். அதுசரி, ஏன் ஒரு மாதிரி இருக்கிங்க? எங்க அண்ணிக்கு ஒண்ணுன்னால், எனக்கு ரெண்டாக்கும்..."

"ஒண்ணுமில்ல... ஒங்க அண்ணாவ நினைச்சேன். மனசுக்குக் கஷ்டமா இருக்கு. இதுதான் எங்களோட முதல் பிரிவு. இப்படி ஒரு வாரம் வரைக்கும் பிரிஞ்சதில்ல. பாவம் என்ன பண்ணுறாரோ?"

"அண்ணன் குழந்தையில்ல அண்ணி."

"ஒனக்குத் தெரியாது. சாயங்காலம் பேக்டரியில் இருந்து வீட்டுக்கு வரும்போது டயர்டாய் வருவாரு. உடம்பு வலிக்குது, தலை சுத்துதுன்னு சொல்லுவார். நான் பயந்துபோய் பிளட் பிரஷ்ஷரா இருக்குமோ? சர்க்கரை வந்திருக்குமோன்னு நினைப்பேன். கடைசில பார்த்தால் மத்தியானம் சாப்பிட மறந்திருப்பார். 'ஓ மை காட்... லஞ்ச் சாப்பிடல'ன்னு சின்னப்பிள்ளை மாதிரி சிரிப்பாரு, இப்போ... என்ன பண்ணுறாரோ? ஒன்கிட்ட சொல்ல வெட்கமா இருக்கு... யாருகிட்டயும் சொல்லமாட்டியே?"

"சும்மா சொல்லுங்க அண்ணி."

"இப்படித்தான் ஒரு நாளு..."

பாமா, மைனாக்குருவி மாதிரி கழுத்தை நீட்டி, 'இப்படித்தான்,' 'எப்படித்தான்' ஆகிறது என்பதைப் பார்க்க முடியாவிட்டாலும், கேட்கலாம் என்ற நப்பாசையுடன் நடந்தபோது, எதிர்ப்பக்கமாக நடந்துவந்த வாலிபன்—

முண்டாப்பனியனும், முரட்டு மீசையும் வைத்திருந்த அவன் "மணிமேகலை... சுகமா இருக்கியா? பொழுது சாய்ந்த நேரத்துலயா கம்மாவுக்கு போறது?" என்றான். ஏழ்மையை கம்பீரமாக ஏற்றுக்கொண்டிருப்பதுபோல் தோன்றிய அவனைப் பார்த்து பாமாவுக்கு லேசாக எரிச்சல்கூட ஏற்பட்டது. ஆனால் எட்டாவது வகுப்புவரை பள்ளித் தோழனாகவும், பள்ளியிலேயே முதலாவதாக வந்தும், பணவசதி இல்லாமல் படிக்க முடியாமல் போன அந்த ரத்தினத்தை (பெயரே அதுதான்) பார்த்ததும் மணிமேகலை அங்கேயே நின்றாள். பல் தெரியச் சிரித்து நின்றாள்.

"என்ன ரத்தின அண்ணன்... என்னை வந்து பார்க் கணுமுன்னு ஒனக்குத் தோணல பாத்தியா?"

"இதே கேள்வியை நானும் ஒன்கிட்டே கேட்கலாம் இல்லியா?"

"அப்படீன்னா... நான் ஒன்னை மறந்துட்டால் நீயும் என்னை மறந்துடுவே இல்லியா?"

"சும்மா தமாஷுக்குச் சொன்னேன். என் தங்கச்சிய, பள்ளிக்கூடத்துல தனக்கு வாங்குன நோட்டையும் சிலேட்டையும் எனக்குத் தந்த தங்கச்சிய, நான்தான் முதல்ல பார்க்கணும். அதுதான் முறை. ஆனால் முறை தெரியாத ஒன் அண்ணனால, வரமுடியாமப் போச்சு."

"விவரமாச் சொல்லு."

"ஒண்ணுமில்லம்மா... நான் விவசாயச் சங்கம் வச்சா ஒங்க அண்ணனுக்கு என்னம்மா? அரசாங்கம் கொடுக்கச் சொல்ற குறைந்த பட்சக் கூலி ரூ.7—25ஐ கேக்கறதுக்கும், குத்தகை சட்டத்தை அமல் செய்யுறதுக்கும் சங்கம் வச்சிருக்கோம், 'பள்ளுப் பறையன்களோட ஒனக்கென் னடா வேல' என்கிறார். பள்ளுப் பறையன்கள் மனுஷங்க

இல்லியா? எல்லாம் ஒங்க அய்யா முகத்துக்காவ பார்க்கோம். இல்லன்னா சங்கதி வேற...”

“கடைசிவரைக்கும் அதையே பாரு...”

“எதுக்கும் ஒரு அளவு உண்டும்மா. இவருகிட்ட அடியாள் இருந்தால், எங்கிட்ட விவசாயத் தொழிலாளிங்க இருக்காங்க. ஒங்கண்ணன் சேரில குடிக்கப் போவலாம். நான் சேரில போயி, பணக்காரங்க ஒண்ணாச் சேருறது மாதிரி நாம ஏழைங்க ஒண்ணாச்சேரணுமுன்னு சொல்லப் போவக்கூடாதா? இப்போ நாட்ல ஹரிஜனங் களுக்கு, ஐயருங்க புகலிடம் கொடுக்கிறதும், புகலிடமா கிறதுமான காலம் வந்திருக்கு. ஒங்க அண்ணனோட கெட்ட காலம், அவரு இன்னும் அந்தக் காலத்தைப் புரிஞ் சிக்கல. அத புரிய வைக்க எவ்வளவு நேரமாயிடும்? நேற்று டிராக்டர் ஓட்டுன ராமசாமிய கை நீட்டி அடிச்சாராம். போனவாரம் பனையேறுற மாடக்கண்ணுவ செருப்பால அடிப்பேன்னாராம். அவராவது புதுச் செருப்ப, நல்ல செருப்ப வச்சி அடிக்கலாம். இவங்க பழைய செருப்ப வச்சி அடிப்பாங்க. நீ தப்பா எடுக்கப்படாது தங்கச்சி. வயிறு எரியுது. சரி உன் விவகாரத்தைச் சொல்லு, உன் பேக்டரியில தொழிலாளிங்களுக்கு சம்பளம் எப்படி?”

மணிமேகலை, ஏரி மடை ஒன்றில் உட்கார்ந்து, ஏதோ பேசப் போனாள். பாமாவுக்குப் போரடித்தது. அண்ணி இப்போது நகரமாட்டாள் என்பதை அனுமானித்துக் கொண்ட பாமா, ஓரளவு அதற்குச் சந்தோஷப்பட்டவள் போல், “அண்ணி, எனக்குப் போரடிக்குது. நான் தோட்டத்துக்குப் போறேன். நீங்க வாங்க” என்று சொல்லி விட்டு, அவள் எங்கே “நானும் வாரேன்” என்று சொல்லி விடுவாளோ என்று பயந்தவள் போல, அப்படி அவள் சொன்னால்—அந்த வார்த்தைகள் கேட்காத தொலை விற்குப் போகவேண்டும் என்று நினைத்தவள்போல பாமா திரும்பிப் பாராமலே நடந்தாள்.

தென்னந்தோப்பு வரப்பு வழியாக—புல் மெத்தை விரித்த, வெட்டுக் கிளிகள் துள்ளி ஓடிய, வண்ணத்துப் பூச்சிகள் அள்ளிப் பருகும் மலர் கொண்ட அந்தத் தோப்புக்குள் நடந்தபோது, தோப்புக்கும் கரும்புத் தோட்டத்திற்கும் இடையே இருந்த வரப்பில், அவள் எதிர்பார்த்ததுபோல் சந்திரன் உட்கார்ந்திருந்தான். பாமாவுக்கு பயமாக இருந்தது. படபடப்பாக இருந்தது. தயக்கமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது. மாநிறம் என்றாலும் கவர்ச்சியுடனும் கட்டான உடம்புடனும், எல்லாவற்றிற்கும் மேலாக இதுவரை கோபப்பட்டுப் பார்த்தறியாத குணபாவத்துடன் சிரித்த முகத்துடன் விளங்கும் அவனை இப்போதுதான் தனிமையில் சந்திக்கிறாள். கடந்த ஒருவார காலமாக பலர் நடுவே, அவனை வம்புக்கிழுத்தும், வக்கணை சொல்லியும் வாதாடியும், நிமிடத்திற்கு அறுபது வார்த்தைகள் பேசிய அவள், இந்த இரண்டு நிமிட நேரத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசமுடியாமல்—பேசத் தெரியாமல் அவனருகே நடந்தாள்.

டிரான்ஸிஸ்டர் ரேடியோவைக் கேட்டுக்கொண்டிருந்த அவன், அதை 'ஆப்' செய்துவிட்டு, 'அக்காவ எங்கே' என்றான். பாமாவால் பேச முடியவில்லை. கையைத் தூக்கி ஏரிக்கரையைக் காட்டினாள். அவன் புரியாதவன் போல் உதடுகளை கோணலாக்கியபோது "யாரோ ரத்தினமாம்... அந்த ஆள்கூட பேசிக்கிட்டிருக்காங்க. வந்துட்டேன்" என்றாள்.

இருவருக்குமே, எதுவும் பேசத் தெரியவில்லை. சொல்லப் போனால் சந்திரன்தான் அவளைவிட அதிகமாக நாணினான். கோணினான். பிறகு, கரும்பு ஒன்றை ஒடித்து மூன்று துண்டாக்கி, ஒரு துண்டை வாயில் வைத்து பட்டையை உரித்துவிட்டு, அவளிடம்

கொடுத்தான். அவள் அதை வாங்காமலே “அரிவாள வச்சி சீவுனால் என்ன? எதுக்காக வாயில கடிக்கணும்?” என்று சொன்னதும் ‘ஐ அம் ஸாரி’ என்று சொல்லிக்கொண்டே அருகே கிடந்த அரிவாளை எடுத்தபோது, அவள் “பரவாயில்ல! கரும்ப வேஸ்டாக்கக் கூடாது” என்று சொல்லிக்கொண்டே உரித்த கரும்பை வாங்கிக் கொண்டாள்.

சந்திரனுக்கு, தைரியம் வந்தது. ‘நீங்க’ ‘நீ’யாகும் அளவிற்குத் தைரியம் வந்தது.

“ஆமா... என்னை ஸ்டேஷன்ல பார்த்ததுமே அடையாளம் கண்டுட்டியே... ஒன்னால எப்படி முடிஞ்சுது?”

“எல்லாம் காமன் சென்ஸ்தான்.”

“காமன்னால் மன்மதன்னு ஒரு அர்த்தம் உண்டு.”

பாமா, அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். அவனோ “அட! சும்மா சொல்லுங்க... சும்மா சொல்லு!” என்று கெஞ்சினான்.

“அண்ணி என் தம்பி, எஞ்ஜின் மாதிரி நிறம். அதாவது டீஸல் எஞ்சின் நிறம். ஒரு பல்லு தெத்துப் பல்லு. ஆனால் அதுவே அழகா இருக்கும். எப்போ பார்த்தாலும் சிரிச்சுக்கிட்டு இருப்பான். சிந்தனையே இல்ல என்கிற அளவுக்கு சிரிச்சிட்டு இருப்பான். கூடவே ஒரு கெட்ட பழக்கமும் உண்டு. எப்போ பார்த்தாலும் சட்டைக் காலரைப் பிடிச்சி தேய்த்துக்கிட்டே இருப்பான்னு சொல்லியிருக்காங்க. ஈஸியா கண்டுபிடிச்சிட்டேன்.”

சட்டைக் காலரைப் பிடித்துக் கழுத்தில் தேய்த்துக் கொண்டிருந்த அவன், திடுக்கிட்டு கையை எடுத்து சட்டைப் பித்தானில் பிடித்துக்கொண்டே, அவளைப் பார்த்தான். உற்றுப் பார்த்தான்.

தக்காளிப் பழ நிறம். கரும்புத் தோகை போல் அடர்த்தியான பின்னல். முன்பல்லில் ஒன்று பெரிது என்றாலும், தெத்து அல்ல. எத்தில்லாத முகம். கொஞ்சம் வளர்ந்திருக்கலாம்... நம்ம உயரத்துக்கு இது போதும்.

திடீரென்று அவன் "ஒங்க கன்னத்துல ஒரு மச்சம் இருக்கு போலுக்கு... இப்பத்தான் பாக்கேன்" என்றபோது, அவளும் அவனை 'இப்பத்தான்' பார்ப்பது போல் பார்த்தாள்.

சிறிது தயக்கத்திற்குப் பிறகு, அவன் அவள் மோதிரக் கையைப் பார்த்துக்கொண்டே முன்னே குவிந்து பின்னால் வளைந்திருந்த மோதிரத்தைக் காட்டி "இந்த மோதிரத்துக்கு என்ன பேரு" என்றான்.

"வங்கி மோதிரம்."

"எனக்குத் தரப்படாதா?"

"சீ... லேடீஸ்தான் போடலாம். ஜென்ட்ஸ் போடக்கூடாது!"

"கையை நீட்டுங்க பார்க்கலாம். நான் இப்படிப்பட்ட மோதிரத்தை இப்பத்தான் பார்க்கிறேன்."

அவளும் 'இப்பதான்' கையை நீட்டினாள். அவன் மோதிரக் கரத்தை லேசாகப் பற்றிக்கொண்டே விரலை அழுத்தினான். விரல் கொண்ட உள்ளங்கையை அழுத்தி னான். பாமாவின் பயம் படபடப்பான பேச்சாக மாறியது.

"எனக்கு இந்த ஊர்ல எல்லாமே பிடிச்சிருக்கு. பாரதியார் பாட்ல வருமே காணி நிலம். அந்தப் பாட்டு ஞாபகந்தான் எனக்கு வருது."

"ஒனக்குத்தான் பட்டிக்காடுன்னா பிடிக்காதே?"

"நோ, நோ...ஐ அம் எ இடியட். பட்டிக்காட்டைப் பற்றி, நான்தான் கதை கட்டுரைங்கள படிச்சதால தப்பா

நினைச்சுட்டேன். நகரத்தைவிட ஒருவகைல இங்கதான் நாகரிகம் பண்பாடே இருக்கு. சந்திரன்னு ஒரு பேரு கிராமத்துல இருக்குமுன்னு நான் நினைக்கக்கூட இல்ல. இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னாடியே அந்தப் பேரு இருக்குதுன்னா, அது பெரிய விஷயம். ஆமா, உங்க பேரு நிஜமாகவே சந்திரன்தானா?"

"பின்னே என்னவாம்? எங்கப்பா இதைவிட நல்ல பேரு வைக்கணுமுன்னு சொன்னாராம். அம்மாதான் சந்திரன்னாங்களாம்."

"பொய்! சுத்தப் பொய்! இவன் பேரு ஹரிச்சந்திரன். இவனே ஹரியை இன்னொரு அவதாரம் எடுக்கச் சொல்லிட்டு, சந்திரன்னு எஸ். எஸ். எல். சியில் மாத்திக் கிட்டான்."

இருவரும் திடுக்கிட்டுத் திரும்பியபோது, மணிமேகலை அங்கே சிரித்துக்கொண்டு நின்றாள். சந்திரனுக்கு, தான் பற்றி இருந்த மோதிரக்கையை விட வேண்டும் என்ற சுரணை வரவில்லை. பாமாதான் தன் கையை வன்முறைப் பிரயோகத்தால் விடுவித்துக் கொண்டு கையை நான்கைந்து தடவைகள் உதறினாள். மணிமேகலை மேலும் சிரித்தாள். பாமாவைப் பார்த்துக்கொண்டே, "என்ன பண்றது... காதல்னு வந்துட்டால் ஹரிச்சந்திரன்கூட பொய் சொல்லுவான் போலுக்கு... ஆனால் இது பாசத்தால் வந்த பொய். நன்மை ஏற்படுறதாய் இருந்தால் பொய் சொல்லலாமுன்னு திருக்குறள்ல படிச்சிருக்கோம். இவன்... படித்தபடி நடக்கிற பையன்" என்றாள்.

"சின்ன விஷயத்துக்கா பொய் சொல்றது" என்று பாமா சிணுங்கியபோது, "ரொம்பவும் அலட்டிக்காதம்மா... ஒரு காலத்துல ஹரிச்சந்திரன்மாதிரி நடக்கிறவங்களப் பார்த்துச் சிரிச்சாங்க. இப்போதான் காலம் முன்னேறிட்டே. ஹரிச்சந்திரன் என்கிற பேரை வச்சிருக்

கிறவங்களைப் பார்த்து சிரிக்கிற அளவுக்கு முன்னேறி யிருக்கு. இருந்தாலும் நீ இப்படி கையை நீட்டியிருக்கக் கூடாது."

"அவருதான் இந்த மோதிரத்தைப் பார்க்கலானார்."

"டேய் சந்திரா... ஹரிச்சந்திரா... நீ இந்த வங்கி மோதிரத்தைப் பார்த்ததே இல்லியா? எனக்குப் போன வருஷம் இதேமாதிரி வாங்கித் தாரேன்னு சொன்னே. நான் வேண்டாமுன்னு சொன்னேன்... ஞாபகம் இல்லியாடா?"

இருவரும் ஞாபகப்பிரக்ஞை இல்லாதவர்கள்போல் தங்கள் தலைகளை, தங்கள் கைகளாலேயே உருட்டிய போது, மணிமேகலை பல் தெரியச் சிரித்து, பாநயம் போல் பேசினாள்.

"கவலப்படாதிங்க. என் பிரச்னையும் முடிஞ்சிட்டதுல எனக்கு சந்தோஷம். என் பையனோட ஜாதகத்தைப் பார்த்த ஜோஸ்யர், என் மவன் ஒண்ணு தாய்மாமா மகளைக் கட்டுவான். இல்லன்னால் அத்தை மகளைக் கட்டுவான்னு சொன்னாரு. கடைசி காலத்துல நானும் அவரும் 'அத்த பொண்ணா, மாமா பொண்ணா'ன்னு சண்டை போட வேண்டியதிருக்குமோன்னு பயந்தேன். இப்போ பிரச்னை தீர்ந்துட்டு."

சந்திரனும், பாமாவும் நாணத்துடன் அவளைப் பார்த்தார்கள். மணிமேகலை, தாயின் கருணையுடன் அவர்களைப் பார்த்துக்கொண்டே பேசினாள்.

"நான் ஒங்க இரண்டு பேரையும் இணைத்து வைக்கறதுக்கு பெரியவங்ககிட்ட சொல்லப் போறேன். சம்மதந்தானே? வாயைத் திறந்து சொன்னால்தான் ஏற்பாடு பண்ணுவேன்."

"அக்கா" என்று அவனும், "அண்ணி" என்று அவளும், மணிமேகலையின் இரு கரங்களையும் அழுந்தப் பற்றிக் கொண்டார்கள். வாய்கள் பேசாததை, கைகள் ஆணித்தரமாகப் பேசின.

## 3

மறுநாளும் மாலைப் பொழுது.

மணிமேகலை, ஒரு கடிதத்தை ரசனையோடு எழுதிவிட்டு, கவரில் போடப் போனாள். அப்போது மாந்தோப்பில் உட்கார்ந்து ஒரு நாவலைப் படித்துவிட்டு முன்னறைக்கு வந்த பாமாவிடம் எம.பி.பி.எஸ்ஸூம், பி.ஈ.யும் ஒரே படிப்பு. எம்.பி.பி.எஸ்ஸூக்கு டாக்டர்னு பெயருக்கு முன்னால போடலாம். எஞ்சினியர் ஜெயராஜூன்னு போட முடியல பாரு" என்று மணி மேகலை சொன்னாள்.

"யாருக்கு அண்ணி லட்டரு? அண்ணனுக்கா?"

"நாம் ரயில் பெட்டியில் இருந்தத பார்த்துட்டும், அந்த மாமா 'எப்பமா வந்தேன்னு' கேட்டதச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பியே, இப்போ நீ மட்டும் வேற மாதிரியா கேட்கிற?"

"அண்ணி, அண்ணி! நானும் அண்ணனுக்கு ரெண்டு வரி எழுதறேன். ஒட்டிடாதிங்க அண்ணி."

மணிமேகலை, சிறிது நாணினாள். பிறகு அப்பா அங்கே இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு "எந்தப் பெண்ணும் புருஷனுக்கு எழுதற லட்டரை காட்டமாட்டாள். நீ கேட்கிறது அதைவிட அதிகம்."

"எங்க அண்ணனுக்கு நான் எழுதக்கூடாதா? நீங்க கர்நாடகம்."

"இப்போ நான் சொல்றது ஒனக்குப் புரியாது. ஒனக்கும் சந்திரனுக்கும் கல்யாணமாகி, நீ பிரசவத்துக்கு அரக்கோணம் வரும்போது, புருஷனுக்கு லட்டர் எழுதுவே. அப்போ நான் 'என் தம்பிதானே? நானும் ரெண்டு வரி எழுதறேன்னு' சொல்லும்போதுதான் என் சங்கடம் ஒனக்குப் புரியம்."

பாமா, தனக்குத் திருமணமாகி, கர்ப்பமும் தரித்துவிட்டதுபோல் நாணினாள். பிறகு அண்ணியிடம் மேற்கொண்டும் ரசனையான வார்த்தைகளை எதிர்பார்ப்பவள்போல் அங்கேயே நின்றாள்.

ஆனால் மணிமேகலையோ திடீரென்று எழுந்து, சுவரில் மாட்டப்பட்டிருந்த காலண்டரை உற்றுப் பார்த்து விட்டு, "ஆல் ரைட்! இன்னும் ஒரு மணி நேரத்துல ராகு காலம் வரப்போவுது. நான் பெரியவங்களோட, ஒரு சுப காரியத்தைப் பற்றிப் பேசணும்... இந்தா இந்த லட்டரை போட்டுட்டு தோப்புல போய் உட்காரு" என்றாள்.

மணிமேகலை கொடுத்த கடிதத்தை பாமா வாங்கிக் கொண்டாள். தானும் ஏன் சந்திரனுக்கு இப்பவே ஒரு கடிதம் எழுதக்கூடாது என்ற சிந்தனையுடன், அவள் முதலில் நாணிக்கொண்டும் பிறகு துள்ளிக்கொண்டும் வெளியேறினாள்.

மணிமேகலை உள்ளே போனாள். அண்ணன்காரன் ஒரு பட்டுப் பாயில் உட்கார்ந்திருந்தான். அண்ணிக்காரி சமையலறை வேலையை முடித்துவிட்டு, 'அப்பாடா' என்று சொல்லிக்கொண்டே, கர்ப்பிணி வயிற்றை லேசாகத் தடவிக்கொண்டே உட்கார்ந்தாள். அப்பாக்காரர், பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

மணிமேகலை யோசித்தாள். ஆரம்பித்துவிட வேண்டியதுதான். முதலில் பொதுப்படையாகவும், பிறகு வெளிப்படையாகவும் பேச வேண்டும். அவளுக்கே கொஞ்சம் வெட்கம். கல்யாணம் நடக்கிற வயசுதானே தவிர, அதை நடத்துற வயசில்ல. பரவாயில்ல... எப்படிப் பேசுறது... பேசிப்பிடலாம்.

"எங்க பாமாவுக்கு இந்த ஊரு பிடிச்சி போயிட்டு அண்ணி."

"எங்க பாமான்னு ஏன் பேசுற? நம்ம பாமா தங்கமான பொண்ணு."

"அவங்க வீட்ல கல்யாணத்துக்கு பேசிக்கிட்டு இருக்காங்க."

"மாப்பிள்ளை பார்த்தாச்சா? எனறார் அண்ணன்.

"இன்னும் முடிவாகல... நம்ம ஊர்ப் பக்கமா பார்க்காங்க."

"அவளைக் கட்டுறவன் கொடுத்து வச்சவன்..." என்றாள் அண்ணி.

"அப்படின்னா, நம்ம சந்திரன் கொடுத்து வச்சவன்தான்."

அண்ணி, திடுக்கிட்டவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அண்ணன் வாயில் கிடந்த வெற்றிலையைக் காறித் துப்பிவிட்டு, 'சம்மணம்' போட்டு உட்கார்ந்தார். அப்பா, பேப்பரில் இருந்து கண்களை விலக்கினார்.

சிறிது நேர மெளனம். அண்ணிக்காரி. காலை மடக்கிப் போட்டு உட்கார்ந்துகொண்டு பேசினாள்.

"பெரிய விஷயத்த எவ்வளவு சாதாரணமாய்ப் பேசிட்டே... பொருத்தம் பார்க்காண்டாமா? நகை நட்டு

பேசாண்டாமா? நல்லது கெட்டது யோசிக்காண்டாமா? நாலையும் பார்க்காண்டாமா?"

"பார்க்கலாம் அண்ணி. குடும்பம் கோத்திரம் பார்க்க வேண்டியதில்ல. எனக்கு, நீங்க எவ்வளவு போட்டீங்களோ, அவ்வளவும் அவங்க போடுவாங்க."

அண்ணிக்காரியின் வாயில் நெருப்பு வீசியது.

"அவ்வளவு தொலைவுல, எதுக்காக பெண் எடுக்கணும்? ஒன்னைக் கொடுத்துட்டு, எப்பொ பாக்கலாம் எப்பொ பாக்கலாமுன்னு நாங்க படுற பாடு போதாதா?"

"நாம பொண்ணு எடுக்கிறமே தவிர, கொடுக்கலியே? பாமா இங்கதான் வரப்போறாளே தவிர, சந்திரன் அங்கேயா போகப்போறான்?"

அண்ணிக்காரி, புருஷன் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். அந்த வேகத்தில் அவர் காது ஆடியதே தவிர வாயாடவில்லை. என்றாலும் புருஷனின் மௌனத்தை தன் கட்சிக்கு சம்மதமாக அனுமானித்துக்கொண்டு, கனகம் பேச்சில் காரத்தைச் சேர்த்தாள்.

"மணிமேகல! இந்த விஷயத்துல நீ தலையிடாத. ஒன் தம்பிக்கு, என் தங்கச்சிய கொடுக்கிறதா எங்க அப்பா சொல்லிட்டாரு."

"ஒங்க அப்பா சொன்னால், நாங்க கேட்கணுமுன்னு நீங்க வற்புறுத்துறது தப்பு அண்ணி."

கனகம், இப்போது தன் நிஜத்தைக் காட்டினாள்.

"அண்ணன் தம்பி ஒற்றுமையாய் இருந்தால் ஊர்ல பெருமை. நாங்க கடைசி காலம் வரைக்கும் ஒற்றுமையாய், ஒரு பானையில ஆக்கி, ஒரு இலையில சாப்பிடலாமுன்னு

நினைச்சுக்கிட்டு இருக்கோம். இதுக்காவே நானே அப்பா கிட்ட வாதாடி சம்மதம் வாங்கியிருக்கேன். நாங்க ஒற்றுமையா இருக்கது ஒனக்குப் பிடிக்கலியாக்கும். இதக் கெடுக்கதுக்காவ மெனக்கெட்டு ரயில் ஏறி வந்தியாக்கும்?"

மணிமேகலை திகைத்துப் போனாள். கல்யாணம் ஆகு முன்னால் அண்ணிக்காரியிடம், இப்படிப்பட்ட சுடு சொற்களை அவள் வாங்கி இருந்தாலும், இப்போது அவள் பேசியது, அவள் சுயமரியாதையை எரித்தது. அண்ணன் காரன் வேறு சும்மா இருந்தார். எதோ காரமாகப் பேசப் போன மணிமேகலை, அப்பாவைப் பார்த்தாள். அந்த முகத்தைப் பார்த்ததும் அவளால் பேச முடியவில்லை.

அந்த நெடிய—கொடிய மௌனத்தில், அருணாசலம் தலையைப் பிடித்துக்கொண்டே யோசித்தார்.

பல தென்னந் தோப்புக்கள், மாந்தோப்புக்கள், ஊருக்கே உணவளிக்கும் அளவுக்கு நிலபுலனும் கொண்ட தன்னைவிட, செல்வச் செருக்கில் அவருக்கு அடுத்த படியான அளவுக்கு வசதியுள்ள குமரேசன், தன் மகன் வெங்கடேசனுக்கு பெண் வீட்டார்தான் முதலில் கேட்க வேண்டும் என்ற வரம்பையும் மீறி மணிமேகலையைக் கேட்டார். 'இவன் நமக்கு ஜோடியா' என்று மனதுக்குள்ளே நினைத்த இதே இந்த அருணாசலக் கிழவர், மகளை அரக்கோணத்தில் ஒரு எஞ்ஜினியருக்குக் கட்டிக் கொடுத்தார்.

மாப்பிள்ளை வீட்டார், முப்பது வருடத்திற்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் இருந்து பஞ்சம் பிழைப்பதற்காக அரக்கோணம் போய், இரண்டு மூன்று வீடுகளுடனும், ஒரு சின்ன தொழிற்சாலையுடனும், காரோடும் பங்களா வோடும் இருப்பதில், இப்போது அவருக்குப் பெருமை யில்லை. ஆண்டுக்கணக்காக மகளை வளர்த்துவிட்டு, இப்போது ஆண்டுக்கு ஒருமுறை மகளைப் பார்க்கும்

துர்ப்பாக்கிய நிலையில் இருக்கும் அவர், பாமாவை சந்திரனுக்குக் கட்டிவிட்டால், அரக்கோணத்தாருடன் உறவு பலப்படும் என்றும், அந்த பலத்தில் மகள் அடிக்கடி வரலாம் அல்லது குறைந்த பட்சம் அவளைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வரும் என்று நினைத்தார். அதோடு பாமா நல்ல பொண்ணு; அதோடு இந்த கனகத்தோட தங்கச்சியும் இவள் மாதிரிதான் இருப்பாள். இவள் சூர்ப்பணகை... அவள் தாடகைப் பிராட்டியாம். ஒரு தடவை குட்டுப்பட்டது போதும்!

எல்லோரும் அந்தக் கிழவரைப் பார்த்தார்கள். அவர் நிதானமாக எழுந்து செருப்பைப் போட்டுக்கொண்டே "எம்மா, ஆயிரம் பேரு ஆயிரம் சொன்னாலும், பாமாதான் இந்த வீட்டுக்கு மருமகள். அடுத்த மாசம் ஆவணில வச்சிடலாம். மாப்பிள்ளையோட கலந்து பேசி தேதிய எழுது..." என்று சொல்லிவிட்டு மருமகளை ஜாடையாகப் பார்த்துக்கொண்டே வெளியேறிவிட்டார்.

கனகத்தால் தாங்க முடியவில்லை. கைகளை நெறித்தாள். மணிமேகலைக்கே அவள்மீது அனுதாபம் ஏற்பட்டது.

"என்னை மன்னிச்சிடுங்க அண்ணி. போன தடவ வந்திருக்கும்போது என்கிட்ட ஒரு வார்த்த சொல்லியிருந்தால், நான் இந்தப் பேச்சையே எடுத்திருக்க மாட்டேன். எந்த விஷயத்தையும் மூடிமூடி வச்சால் நிலைமை இப்படித்தான் முடியும்."

"இப்பகூட நீ நினைச்சால் எதாவது பண்ணலாம்."

"நிலைமை என்னையும் மீறிட்டு அண்ணி! பாமாவும் சந்திரனும் ஒருவர ஒருவர் மனசார விரும்புறாங்க. இப்போ நம்ம விருப்பத்த அவங்க விருப்பம் விழுங்கிட்டு. கவலப் படாதிங்க. ஒங்க தங்கச்சிக்கு நல்ல மாப்பிள்ளையா பார்க்கிறது என்னோட பொறுப்பு."

கனகம், தலையில் கை ஊன்றிக்கொண்டாள். புருஷன் மீது லேசாகச் சாய்ந்துகொண்டாள். ஒப்பாரி வைக்காத குறையாக முழங்கினாள்.

"எனக்கு அப்பவே தெரியும். அவ தளுக்கி மினுக்கும் போதே தெரியும். பட்டணத்து முண்ட, அவள் புத்தியக் காட்டிட்டாள். சினிமாக்காரி மாதிரி வந்து, வீட்டயே சினிமா கொட்டகயா மாத்திட்டா. பாவி மனுஷா! ஏன் இப்படி கல்லு மாதுரி இருக்கியரு? படிச்ச வீட்டு சம்பந்தம் வரப்போவுது. எல்லாரும் ஒம்ம தலையில மிளகாய் அரைக்கப் போறாவ. நீரு தலய நீட்டும். நீரு மாடா உழச்சி நாயா திரியுறியரு. ஒம்ம தம்பியும் அந்த சினிமாக்காரியும் ஒய்யாரமாச் சுத்தப் போறாவ! பாவி மனுஷனுக்கு வாக்கப் பட்டு பாழாப் போயிட்டேனே— பாழாப் போயிட்டேனே..."

அருவருப்படைந்த மணிமேகலை, வேகமாக எழுந்து அதிவேகமாக வெளியே வந்தாள். அங்கே கனகம் பேசுவதைக் கேட்டுக்கொண்டு, கல்லாய் சமைந்தவர்கள் போல் பாமாவும் சந்திரனும் நின்றார்கள். சந்திரன், முதல் தடவையாகக் கோபப்பட்டு முன்னேறப் போனான்.

இதற்குள் தபால்காரர் வந்து ஒரு தந்தியைக் கொடுத்தார். இதனால் சந்திரன் ஆவேசம் தணிந்து நின்றபோது, தந்தியைப் பிரித்துப் படித்த மணிமேகலை திகைத்து நின்றாள்.

## 4

**ம**றுநாள் காலைப் பொழுது.

மணிமேகலையும் பாமாவும் ஊருக்குப் புறப்பட்டார் கள். 'பேமிலி பிராப்ளம்—ஸ்டார்ட்' என்று தன்

பெயருக்குக் கணவன் கொடுத்த தந்தி வாசகத்தின் தலையும் புரியாமல் அந்த இரண்டு பெண்களுமே தவித்துப் போனார்கள்.. குடும்பப் பிரச்னை என்றால் என்ன பிரச்னை? சீதாவுக்கு உடம்புக்கு சுகம் இல்லையா? பி.யூ.ஸி. படிக்கும் அவள் ஏடாகோடமாய் நடந்தருப் பாளோ? சின்ன மைத்துனன் பாஸ்கருக்கு ஏதாவது ஏற்பட்டிருக்குமோ? விஸ்கியும், அது கிடைக்காத சமயத்தில் சாராயமும் போடும் கணவனின் அண்ணனை போலீஸ் பிடித்திருக்குமோ? மாமனாருக்கு பிரஷ்ஷர் அதிகமாய் இருக்குமோ? மூத்தாளுக்கு ஏதாவது... மாமியாருக்கு ஏதாவது... பேக்டரியில் ஏதாவது... ஒருவேளை அவருக்கே ஏதாவது... அட கடவுளே! சிக்கனமின்னா இதுவா சிக்கனம்? சிக்கனம், கஞ்சத்தனமா மாறிடக்கூடாதுன்னு ஏன் புரியல? தந்தியில விவரமா சொன்னால் என்ன? ‘பாவி மனுஷனுக்கு’ இதுகூட தெரியலையே?

மணிமேகலை அந்த நெருக்கடியிலும் தனக்குள்ளேயே சிரித்தாள். அண்ணியுடன் பத்துநாள் தங்கியதில், அவள் புருஷனுக்குக் கொடுத்த ‘பாவி மனுஷப்’ பட்டத்தைத் தானும், தன் கணவனுக்குத் தன்னையறியாமலே கொடுப்பதை நினைத்து கொஞ்சம் அவமானப்பட்டாள்.

பாமாவும் சந்திரனும் மூட்டை முடிச்சுகளை சீராக்கிக் கொண்டிருந்தார்கள். அண்ணனைக் காணவில்லை. அண்ணிக்காரி, இழவு விழுந்ததுபோல் கால்களை வயிற்றோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டு முடங்கிக் கிடந்தாள். அப்பா மகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த ஊர் வழக்கப்படி மணிமேகலை உறவினர் களிடம் விடைபெறுவதற்காகப் புறப்பட்டாள். தெருக்களில் நின்று கொண்டிருந்த ஏழைப் பெண்களிடம் சொல்லிக்

கொண்டே, உறவினர் வீடுகளில் படியேறிக் கொண்டிருந்தாள். இறுதியாக தூரத்து உறவினரான குமரேச மாமா வீட்டுக்கு வந்தாள்.

குமரேச மாமாவைக் காணவில்லை. அவர் மகன் வெங்கடேசன், புதிதாக வாங்கியிருப்பதுபோல் தோன்றிய ஒரு பின்னல் நாற்காலியில் உட்கார்ந்து எதையோ எழுதிக்கொண்டிருந்தான். இருபத்தொன்பது வயதாகியும் இன்னும் கல்யாணமாகாமல், குறுந்தாடி மீசையுடன், ஒரு ஞானிக்குரிய தோரணை இல்லாமலும், அதேசமயம் அபிலாஷைகளைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவன் போலவும் தோன்றிய அவனைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. பிறகு தன்னைப் பார்க்கவும் அந்தகணத்தில் அவளுக்குப் பாவமாக இருந்தது. அவனை ஊருக்கு வந்தபிறகு, பலதடவை பார்த்திருக்கிறாள். ஆனால் அவன் வீட்டுக்குள் நுழையும்போது—மருமகளாக நுழையபபோகும் வீடு என்று அவளே கற்பனை செய்திருந்த அந்த வீட்டின் படிவாசலில் கால் வைத்த போது, நினைவுகள் பின்னால் போயின!

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, தூத்துக்குடி கல்லூரி ஒன்றில், அவள் பி.யூ.ஸி. படித்துக்கொண்டிருந்தாள். அங்கே இன்னொரு கல்லூரியில் பி.ஏ. படித்துக்கொண்டிருந்த வெங்கடேசன், பஸ் நிலையத்தில் அவளிடம் சகஜமாகப் பேசுவான். திடீரென்று ஆங்கில போதனா மொழிக்குள் அகப்பட்டு திக்குத் தெரியாமல் அவள் தவித்தபோது, அவன் திசை காட்டினான். தூரத்து உறவுப் பலத்தில், அவள் வீட்டிற்கு வந்து சகஜமாகப் பேசுவான். அவளும் வில்லங்கம் இல்லாமலே பழகினாள். ஆனால் ஊர் விடவில்லை.

ஊர்க்காரர்கள் இருவரையும் இணைத்துப் பேசப் பார்த்தார்கள். கிழவர்கள் ராம—லட்சுமி என்றார்கள்.

வாலிபர்கள் ஒரு நடிக—நடிகையைக் குறிப்பிட்டார்கள். செய்தி, அருணாசலத்தின் காதுக்கு அடிபட்டபோது, அவர் மகளைப் பார்த்து "நீ காலேஜுக்குப் போகணு மாம்மா?" என்றார்.

காலேஜ் நிற்கவில்லை. அவள் நின்றாள்.

ஊராரின் ஊதாரித்தனமான பேச்சால் அவள் மனதிலும் ஒரு புள்ளி விழுந்தது. அந்தப் புள்ளியில் வெங்கடேசன் எப்போதாவது, சின்னதாக வருவான். அவனிடம் தனியாகப் பேசுவதுபோல் கற்பனை செய்தாளே தவிர, பேசவில்லை.

இரண்டு மூன்று ஆண்டுகள் வெங்கடேசனை அப்பப்போ நினைத்துக்கொண்டும், தந்தைக்குப் பணி விடை செய்தும், அவள் காலத்தைக் 'களித்துக்' கொண் டிருந்தபோது, திடீரென்று குமரேசன் பெண் கேட்டார். அருணாசலம் கொடுக்க மறுத்தார். மணிமேகலைக்கு, தன்னை யாரோ தனிக்காட்டில் தனியாக விட்டிருப்பது போல் தோன்றியது. ஒரு 'பாட்டியை' அப்பாவிடம் 'தூது' அனுப்பலாம் என்று அவள் நினைத்தபோது "நான் படிக்காதவன்னு குமரேச மாமா... அவரு பொண்ண எனக்குக் கேட்டபோது சாக்குப் போக்குச் சொல்லிட் டார். இப்போ நான் மட்டும் என் தங்கச்சிய அவரு மவனுக்கு எப்படிக் கொடுப்பேன்" என்று அண்ணன் காரன் சொல்வதும், "ஓ அவரு மவள நினைச்சிக்கிட்டு இருந்தீரா? அதான பாத்தேன். அதனாலதான் கட்டுன பொண்டாட்டிகிட்ட பேசுறதுக்கு ஒமக்கு கசக்கு" என்று அண்ணி சொல்வதும் அவளுக்குக் கேட்டது.

மணிமேகலை ஒரு முடிவுக்கு வந்தாள்.

அவள் அண்ணன் கொஞ்சம் மக்குதான். என்றாலும் ரோஷக்காரன். மனதார விரும்பிய ஒரு பெண் கிடைக்க

வில்லை என்றால், விரும்பிய மனம் என்ன பாடுபடும் என்பதை அவளே அனுபவித்து வரும்போது, வெந்த புண் வேல்போல் வெங்கடேசனை மணந்து அண்ணனைச் சிறுமைப்படுத்த அவள் விரும்பவில்லை. அவளுக்கு தன் மானசீகக் காதலைவிட, அண்ணனின் மானமே பெரிதாகத் தெரிந்தது. அதோடு அப்பா எது செய்தாலும் அது நன்மையில் முடியும் என்ற அடிப்படை நம்பிக்கையை அவள் விடவில்லை.

'அரக்கோணம்' ஜெயராஜுக்கு, அவள் கழுத்தை நீட்டினாள். 'வெங்கடேச அத்தானை மறக்க மடியுமா?' என்று தனக்குள்ளேயே தவித்துக்கொண்டிருந்த அவள், காலப்போக்கில் தானே வியக்கும் அளவுக்கு மறந்துவிட்டாள். ஆனால் ஊருக்கு வரும்போதெல்லாம், அருகில் உள்ள வீட்டில் இருந்தாலும், அவளைப் பொறுத்த அளவில் தொலைவாய்ப் போன அவன் நினைப்பு, நெஞ்சில் நெருப்புக் கட்டியாவதுண்டு. அவன் தன்னால் தான் திருமணம் செய்ய மறுக்கிறான் என்று உணரும்போது ஒரு தாபம். தன்னையேதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் ஒரு பெருமிதம். என்றாலும், மனதில் உதித்த அந்த சின்னப்புள்ளி சிறிதாகிக்கொண்டிருந்ததே தவிர, பெரிதாகவில்லை.

வீட்டுப் படிக்கட்டில் முன்னோக்கிச் சென்ற கால்களைப் படியில் தேய்த்து, பின்னோக்கி இழுத்த எண்ணங்களைத் தேய்த்துக்கொண்டே, அவள் அவனருகே போனாள்.

அவன், லேசாக சிரித்தான். அவள் இன்னொரு நாற்காலியில் உட்காருவது வரைக்கும் எழுந்து நின்றான்.

"என்னத்தான்! பி.எல்.ல கம்ப்ளீட் பண்ணிட்டீங்களாம். ஆனால் பாவம் பெயிலாயிட்டீங்களாமே?"

"இந்தத் தோல்வி ஒரு மைனர் பெயிலுதான்."

"நான் அடுத்த தடவ ஊருக்கு வரும்போது ஒங்கள மாலையும் கழுத்துமா பாக்கணும்."

"ஒருவனுக்கு ரெண்டு தடவ மால விழும். கல்யாணம் ஆகும்போது—அப்புறம் செத்தபிறகு... நீ எதைச் சொல்ற?"

"நான் இதுநாள் வரைக்கும் சொல்லாத ஒண்ண—நானே நினைச்சிப் பார்க்கவே பயந்த ஒண்ண—இப்போ சொல்றேன். நான் உங்கள விரும்புனது வாஸ்தவந்தான். உங்கள மறக்க முடியாதுன்னு மனசுக்குள்ளேயே அழுததும் உண்மைதான். ஆனால் இப்போ அந்தமாதிரி எண்ணமே வரல. இதனால உங்கள மறந்திட்டேன்னு அர்த்தமில்ல. சொல்லப்போனா அதிகமா நினைக்கேன். என் மூணு வயசுப் பையன் அடம் பிடிக்கும்போதெல்லாம், இந்த இருபத்தொன்பது வயது குழந்த ஞாபகம் வரும். நம்ம மதத்துல ஒரு சாரார், கணவன் அடுத்த ஜன்மத்துல மனைவிக்கே மகனாய்ப் பிறக்கலாமுன்னும், தகப்பன் மகளுக்கே கணவனாகப் பிறக்கலாமுன்னும் சொல்றாங்க. இது உண்மையோ பொய்யோ போகட்டும். ஆனால் இதுல ஒண்ணு தெரியுது. பாசம், எந்த ரூபத்தில வேணுமுன்னாலும் வரலாம். அது ஒரு சக்தி. சக்தியை அழிக்க முடியாது. அதேசமயம் அதை இன்னொரு விதத்துல மாற்றிடலாம். மைண்ட, சூன்யத்தில் நிற்காதுன்னு, நீங்களே காலேஜ்ல பேசியிருக்கீங்க. ஒரு கல்யாணம் பண்ணிக்கங்க. அப்புறம் என்னைமாதிரி ஆயிடுவிங்க."

வெங்கடேசன், அவளையே உற்றுப் பார்த்தான். வாளிப்பான தேகக்கட்டில் அன்னை தெரேஸாவின் கண்களை 'டிரான்ஸ்பிளான்ட்' செய்துகொண்டு அவள் அங்கே வந்திருப்பது போல் அவனுக்குத் தெரிந்தது. அவன் ரசித்த அவளின் அந்த 'பப்பாளி நிறம்' இப்போது மதுரை மீனாட்சியின் 'குங்குமம்' போல் தோன்றியது.

அவள் பேசியதைக் கேட்டதும், அவனுக்கு புதுத் தெம்பு வந்ததுபோல் தோன்றியது. அவள் சொன்ன கருத்துக்கள் புதிதல்ல. அவன் படித்தவை; சிந்தித்தவை. ஆனால் அப்படிப் படிக்கும்போதும் சிந்திக்கும்போதும் ஏற்படாத தெம்பு, இப்போது ஏற்பட்டது. ஒருவேளை, சொல்கிறவர் சொன்னால்தான் புரியுமோ?

மணிமேகலை இயல்பாகக் கேட்டாள்:

"மெட்ராஸ்ல வேலையில இருந்திங்களாமே, ஏன் அத விட்டுட்டிங்க?"

"இப்போ அலுவலகங்களுல ஒவ்வொரு அறையும் ஒரு பொலிடிக்கல் ஹாட்—பெட்டா மாறிட்டு. பாலிடிக்ஸ் இல்லாத ஆபீஸே இல்ல. நாலு சுவருக்குள்ள இருந்துகிட்டே வெளி உலகம் தங்களுக்குள்ளேயே இருக்கதா நினைக்கவங்க... நாலு சுவருக்குள்ள அடிமையாய் வாழ்ந்து, வெளியுலகத்துக்கு போயிடலாமான்னு நினைச்சும் பிள்ளை குட்டிகளுக்காக அவமானத்தை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கும் முன்னாள் சுயமரியாதைக்காரங்க, ஆபீஸ்ல 'பேச்சு' வாங்குனாலும் வெளில 'நிமிர்ந்து' நிற்கும் போலிகள். இப்படி குட்டிச் சுவராய் போச்சு. ஒருவனுக்கு உலை வைக்கிறவன், அவனுடன் கேன்டீன்ல டிபன் சாப்புடுறவனாய்தான் இருப்பான். ஒருவன் மேல பெட்டிஷன் போட்டுட்டு, அப்புறம் அவனையே கட்டிப் பிடித்துத் தழுவும் நண்பங்க. இப்படி ஆயிட்டு! பறவைகள் சுதந்திரமாய் இருக்கதாய் நினைக்கோம். ஒரு காக்காவையாவது சிட்டுக்குருவியையாவது பாரு... உட்காரும்போது நாய் இருக்கா பூனை இருக்கான்னு பார்த்துக்கிட்டேதான் உட்காருது. இது மாதிரிதான் படிச்சவங்க நிலமை. படிக்காதவங்க, அவங்கள சுதந்திரமாய் வாழ்றதாய் நினைக்காங்க. ஆனால் அது காக்காவோட சுதந்திரம். அந்த காகத்துக்கு தப்பிக்கத்

துடிக்கும் ஓணானோட சுதந்திரம். அந்த ஓணானிடம் பிடிபட்டு விடக்கூடாதேன்னு நினைக்கிற பல்லியோட சுதந்திரம். அதன் வாயில் விழப்போகும் கரப்பான் பூச்சியோட சுதந்திரம்! இதுக்குக் காரணமே இந்த படிச்சவங்கதான். படிப்பு 'நாலேஜாகாது' என்பதை உணராமல், 'நாலேஜ் இஸ் பவர்' என்பதை உணராமல், வெறுமனே அதிகார ஆடம்பரத்திற்காக, ஒவ்வொருவனும் தன்னைச் சுற்றியே ஒரு வலையை பின்னிக்கிட்டான். மொத்தத்துல, பாரதப் பெருங்குடியினரான படிச்ச வங்களுக்கு, ஒரு தேசிய கேரெக்டர் கிடையாது. இந்த சூழ்நிலையில, ஊர்ல கௌரவம் வரணுமுன்னு, நான் ஆபீஸ்ல அகௌரவப்படத் தயாராய் இல்ல."

வெங்கடேசன் பேச்சை முடித்துவிட்டு, அவளையே பார்த்தான். அவளும் "காலேஜ் ஞாபகம் வருது அத்தான். சரி நான் வரட்டுமா? ஊருக்குப் போறேன். சொல்லிட்டுப் போகலாமுன்னு வந்தேன். ரயிலுக்கு நேரமாவுது. வரட்டுமா?" என்றாள்.

வெங்கடேசன், தலையை வலுக்கட்டாயமாக ஆட்டியபோது, மணிமேகலை, முதலில் மெதுவாக்வும், பிறகு வேகமாகவும், அந்த வீட்டைத் தாண்டியதும் நிதானமாகவும் நடந்து வீட்டுக்கு வந்தாள். லேசான உள்ளம், இப்போது லேசாகக் கனத்தது.

வீட்டு முன்னால், 'டாக்ஸி' நின்றது. பாமாவும், சந்திரனும் மாம்பழக் கூடையையும், பலாப்பழக் கூடையையும் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். கனகம், இன்னும் முடங்கிக் கிடந்தாள். அப்பா, சாய்வு நாற் காலியில் உட்கார்ந்து, எதையோ வெறித்துப் பார்த்தார். எங்கேயோ போய்விட்டு வந்த அண்ணன், சந்திரனைப் பார்த்து "ஏண்டா, அனாவசிய செலவு எதுக்குடா? டிராக்டர்லயே போகலாமே?" என்றபோது, கிழவர்,

பொங்கிய ஆத்திரத்தை அடக்கும் பொருட்டு, மாந்தோப்புப் பக்கமாகப் போனார்.

மணிமேகலை, 'தூங்கிக்' கொண்டிருந்த அண்ணியின் அருகே, குத்துக்காலிட்டு உட்கார்ந்து "நான் போயிட்டு வாரேன் அண்ணி..." என்றாள். கனகம், 'உம்' என்றாள். சிறிதுநேரம் அப்படியே மணிமேகலை உட்கார்ந்தாள். அந்தப் பக்கம் வந்த அண்ணனுக்கே மனசு கேட்கவில்லை. "போயிட்டு வாரேன்னு சொல்றாள். எழுந்திருச்சி வழி அனுப்பேமிழா. அறிவு கெட்ட தடி மாடு" என்று அவன் சொன்னபோது, கனகம், கிட்டத்தட்ட தடிமாடு மாதிரியே எழுந்தாள்.

பாமா, சந்திரன், மணிமேகலை பின்னால் உட்கார்ந்து கொண்டார்கள். அங்கே தற்செயலாக வந்த 'கூத்து' கோவிந்தன், ரயில் நிலையத்தில் ஒத்தாசை செய்வதற்காக, முன்னால் உட்கார்ந்தான்.

டாக்ஸி புறப்பட்டது.

மணிமேகலை, அப்பாவைத் தேடினாள். அவர் அங்கே இல்லை. ஏதோ ஒரு மாமரத்தின் முனையில், பூமியைத் துளைப்பவர் போலவும், ஆகாயத்தைத் துழாவுகிறவர் போலவும், குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந் தார். மணிமேகலை, அப்பாவைக் கூப்பிடவில்லை.

வழிநெடுக தெரிந்தவர்களிடமெல்லாம் 'போயிட்டு வாரேன்' என்று அவள் கும்பிட, 'சீக்கிரமா வரணும்' என்று அவர்கள் பதிலுக்குக் கைகூப்புவதுமாக, டாக்ஸி, திருச்செந்தூர் சாலைக்கு வந்தது.

"அடுத்த பிரசவத்த இங்க வச்சிக்க" என்றாள் தங்கம்மா பாட்டி.

சந்திரன், அக்காவைப் பார்த்து "டிராக்டர்ல போகச் சொல்றான். இவன் பெண்டாட்டி, பக்கத்து ஊர்ல

இருக்கிற அப்பன் வீட்டுக்குப் போறதுக்கு மட்டும், தூத்துக்குடில இருந்து டாக்ஸி வரணுமாம். எனக்கு வந்த கோபத்துக்கு...” என்றான்.

பாமா சீண்டினாள்.

“ஒங்க கோபம் எனக்குத் தெரியாதா? பாரு அண்ணி, கனகக்கா என்னைப் பற்றிப் பேசும்போது, இவரை தள்ளாத குறையா அனுப்பி, பதிலுக்கு ஏதாவது பேசுங் கன்னு சொன்னேன். ஆசாமி, பிள்ளையார் மாதிரி இருந்துட்டு, இப்போ சின்ன விஷயத்துக்கு குதிக்காரு.”

“அண்ணன்மேல கோபப்படாதடா. அவன், டிராக் டர்ல போகச் சொன்னதுல எனக்குக் கோபம் வரல. நம்ம ரத்தினம் அண்ணன்கிட்ட போனா நிறைய விஷயம் புரியுது. டிராக்டர்லயா போறதுன்னு கோபப்படுறது, பாலுக்கு சர்க்கரை இல்லையேன்னு கஞ்சிக்கு உப்பில்லா தவங்கிட்ட சொல்றது மாதிரி. அதோட, அண்ணன் எனக் காக அண்ணிய திட்டுனதையும் பார்க்காண்டாமா? பாமா, எங்க அண்ணி பேசுறதை தப்பா நினைச்சுக் காதம்மா...”

“நான் ஏன் நினைக்கேன்? இந்த வீட்டுக்கு நிரந்தரமாய் வந்த பிறகு, அவங்க பேசுறதுக்கு இப்போ ஒத்திகை பார்க்காங்க. கனகக்காவை, ஒரு கேரக்டரா நினைச்சி ரசிச்சேன்...”

“இந்த வீட்டுக்கு நிரந்தரமாய்...” என்று சொன்னபோது, முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்த கோவிந்தன், சுவாரஸ்யமாகத் தலையைத் திருப்பினான். இதைப் பார்த்த மணிமேகலை “பார்த்துப் பேசும்மா. நம்ம கோவிந்தன் ஊர்ல, பவளக்கொடிக்குப் பதிலா, பாமாக் கொடின்னு ஒரு கூத்தே போட்டுடுவான்” என்றாள்.

உடனே கோவிந்தனும் “இந்த சமாச்சாரம் எனக்குப் புதுசில்லம்மா. என்னைக்கி அர்ச்சுன ராசதுரை

சிரிச்சாரோ, அன்னைக்கி பவளக்கொடி விழுந்துட்டாள். என்னைக்கு கரும்புத் தோட்டத்துப் பக்கத்துல, சந்திரன் பாமாக்கொடியோட மோதிரக் கையை அழுத்துனாரோ, அன்னைக்கே கழுத்துல தாலி விழப்போறது எனக்குத் தெரியும்."

மற்றவர்கள் அசந்துவிட்டார்கள். இந்த கோவிந்தனுக்கு, எப்படித் தெரியும்? கேட்டால் எப்படியோ தெரியும் என்பான். சொல்லமாட்டான்.

கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் புறப்பட்டது. எதிரே வந்த டிராலி வண்டியில் மோதப்போன சந்திரனை 'பாத்துடா' என்றாள் அக்கா.

"முன்னெல்லாம் ஒன்னை வழியனுப்பும்போது ஒரே ஒரு கண்ணுதான் போனதுமாதிரி தெரியும். இன்றைக்கு, ரெண்டு கண்ணும் போனதுமாதிரி தெரியும். எப்படி பார்க்கதாம்?" என்றான் சந்திரன். அவன் சிரித்துக் கொண்டே பேசினாலும், பாமாவின் கண்கள், பார்வையை மறைக்கும் அளவுக்குக் குளமாயின. தோளில் வைத்திருந்த மருமகனை, சந்திரன் பாமாவிடம் நீட்டிய போது, ரயில் ஊளையிட்டது.

ஊதிக்கொண்டே போன ரயிலில் குலுங்கிக் கொண்டிருந்த மணிமேகலைக்கு, மீண்டும் புருஷன் வீட்டு ஞாபகம் வந்தது. பேமலி பிராப்ளம் என்றால் எதுவா இருக்கும்? ஒருவேளை இந்த பாமாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருக்குமோ? அது எப்படி பிராப்ளமாகும்? அந்த வீட்ல, நல்லதும் பிராப்ளம்தான்... கெட்டதும் பிராப்ளம்தானே... ஒருவேளை பாமாவுக்கு வேறு இடத்துல உறதியாகி இருந்தால்? அட கடவுளே...

மணிமேகலை, தன் பயத்தை உள்ளடக்கிக் கொண்டே, எங்கேயோ லயித்திருந்த பாமாவின் கையைத் திருகி

"பாமா, சும்மா ஒரு பேச்சுக்குத்தான் சொல்றேன். சந்திரனை நீ கட்டிக்க, நம்ம வீட்டு பெரியவங்க சம்மதிக்கலன்னு வச்சுக்கோ... என்ன பண்ணுவே?" என்றாள்.

பாமா, இருக்கையில் இருந்து, ஆவேசமாக எழுந்தாள். சீறிப் பேசினாள்.

"அண்ணி, இந்த மாதிரி பேச்சுக்குக்கூட சொல்லாதிங்க. நான் உங்களை மாதிரி 'குடும்பப் பெண்' அல்ல. என் வாழ்க்கைக்கு நான்தான் எடிட்டர். எனக்கு இப்பவே இந்த ரயிலுல இருந்து குதிக்கலாம்போல தோணுது."

மணிமேகலை, பாமாவை தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். இதர பிரயாணிகள் அவர்களை விநோதமாகப் பார்ப்பதைப் பொருட்படுத்தாமலே, அந்த அணைப்பை விடாமல் இருந்தாள்.

ரயில், இனிமேல் திரும்பிவரப் போவதில்லை என்பது மாதிரி, குதிப்பதுபோல ஓடிக் கொண்டிருந்தது.

## 5

ரயில், சென்னையை நெருங்க நெருங்க, மணிமேகலைக்கு, பிறந்த வீட்டு ஞாபகம் சிறிதாகவும், புகுந்த வீட்டு ஞாபகம் பெரிதாகவும் மாறிக் கொண்டிருந்தன.

அவள் கணவன் ஜெயராஜ், அரக்கோணத்தில் இருந்து தனது காரை எடுத்துக்கொண்டு, எழும்பூர் ரயில் நிலையத்திற்கு வந்திருந்தான். மணிமேகலை, உள்ளே வந்த அவனின் கையை, பாமாவுக்குத் தெரியாமல் கிள்ளிக் கொண்டே சிரித்தாள். 'பேமிலி பிராப்ளத்தைப் பற்றி அவள் கேட்கவில்லை. அவனே, ஆற அமறச் சொல்லட்டும்

என்று வெளிமனம் பாசாங்கு போட்டாலும், உள்மனம் பிரச்னையின் கனபரிமாணத்தைக் கண்டுகொள்ளப் பயப்படுவதுபோல் தெரிந்தது.

ஜெயராஜ் காரை ஓட்டினான். சுருள்முடி, தலையில் கிரீடம்போல் தோன்ற, 'போட்டோ ஜீனிக்' முகம்—வட்ட மான அந்த அழகு முகத்தை, அப்படியே உள்ளங்கையில் ஏந்திக் கொள்ள வேண்டும்போல், அவளுக்குத் தோன்றியது. முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்த மனைவியிடம், "நீ போன பத்து நாளும்... பத்து..." என்று சொல்லிக்கொண்டு போனவனை "மணி மாதிரி போயிட்டுதா" என்று அவன் கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்யும் பள்ளிப்பாலகி மாதிரி சொன்னபோது, ஜெயராஜ் 'ஸ்டேரிங்கை' திருப்புகிற சாக்கில் அவள் தோளில் இடித்தான். பின்னால் இருந்த இந்த பாமாவும் அண்ணன் மகனுக்கு புட்டிப்பால் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் பிரச்னையைத் தொடாமல், தன்னை மட்டும் தொடுவதை உணர்ந்த மணிமேகலை "என்ன பிரச்னை?" என்றாள்.

"எங்க அண்ணாவ பழையபடியும் முருங்கை மரத்துல ஏத்தப் பாக்குறாங்க..."

"யாரு?"

"வேறு யாராய் இருக்கும்? எல்லாம் அவரோட அருமை மாமனார் ராமபத்திரன்தான்."

"என்னவாம்?"

"பாகத்தைப் பிரித்துக் கொடுக்கணுமாம்."

"அதெப்படி முடியும்?"

"நாங்க முடியாதுன்னு சொன்னோம்."

"சொன்னிங்களா? சொல்றீங்களா?"

"சொன்னோம்."

"அப்படீன்னா?"

"எப்படியோ... தான்தான் குடும்பத்தைக் கட்டிக் காப்பாத்துறதா அவருக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டுட்டு. இதுக்கு மேலயும் அவரத் தாங்குனால், என் சுயமரியாதை தாங்காது."

"உங்க அண்ணாவோட ஈகோவுக்கும் ஒங்களோட சுயமரியாதைக்கும் சின்னஞ் சிறிசுகள் பலியாகணுமா?"

"குடும்பத்தை விட்டு சொத்தோட பிரியுறது அண்ணா தான். நாம இல்ல."

"எனக்கு தந்தி அடிச்சிங்களே—நான் வாரது வரைக்கும் பொறுக்கப்படாதா?"

"இப்போ வெள்ளம் கழுத்துக்குத்தான் வந்திருக்கு. தலைக்கு வரல. இன்னைக்கு செட்டில்மென்ட் பண்றதா ஏற்பாடு. ஒனக்கு சாமர்த்தியம் இருந்தால் தடுத்துப் பாரு. அப்பாதான் தந்தி கொடுக்கச் சொன்னாரு."

"அப்போ ஒங்களுக்கு தந்தி கொடுக்க இஷ்டமில்லியா?"

"எனக்கும் இஷ்டந்தான். ஆனால் ஒரு வித்தியாசம். அப்பாவுக்கு சொத்து பிரியுறத பார்க்க இஷ்டமில்ல. எனக்கு நீ பிரிஞ்சத பார்க்க முடியல..."

"சும்மா பொறுப்பில்லாம பேசாதிங்க. நீங்க கொஞ்சம் மனசு வச்சிருந்தால் இதைத் தடுத்திருக்கலாம். பேசாம காரை ஸ்பீடா ஓட்டுங்க."

அரக்கோணத்தை விட்டு விலகியதுபோலவும், ஒட்டியிருப்பது போலவும் தனியாக இருந்த நான்கைந்து பெரிய வீடுகளிலேயே மிகப்பெரிய வீட்டின் முன்னால் கார் போய் நின்றது. ஜெயராஜ் டிக்கியைத் திறந்தபோது மணிமேகலை வராந்தாவிற்கு வந்தாள்.

அங்கே போட்டிருந்த ஸோபா ஸெட்டில் அவள் மாமனார் சபாபதியும், அவள் பெரிய மைத்துனன் சங்கரனும், அவனது மாமனார் ராமபத்திரனும், 'டென்ஷனோடு' உட்கார்ந்திருந்தார்கள். எதிரே இருந்த ஒரு துண்டு ஸோபாவில் 'துக்க' (கறுப்பு) கோட் போட்ட வக்கீல் ஒருவர் சிரித்தபடி உட்கார்ந்திருந்தார்.

அவர்களிடம் பேசப்போன மணிமேகலை, மாமியார் வந்து உள்ளே வரும்படி சைகை செய்தார். மைத்தனர் மனைவி லட்சுமி வந்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அவள் பிள்ளைகள் ரமாவும் சேகரும் ஓடி வந்து 'சித்தி சித்தி' என்று சொல்லிக்கொண்டே காலைக் கட்டிக் கொண்டன. சின்ன மைத்துனியும் பி.யூ.ஸிக்காரியுமான சீதா, அண்ணியின் வலது தோளைப் பிடித்தாள். அவளுக்கு இளையவனான 'ஹையர் செகண்டரி' பாஸ்கர் குழைந்துகொண்டே வந்து நின்றான். கடைக்குட்டியான இந்திரா, அண்ணியின் உடம்பில் பிடிக்க இடந்தேடி கிடைக்காமல் அவள் கொண்டு வந்த பிளாஸ்டிக் கூடையில் இருந்த ஒரு மாம்பழத்தைப் பிடித்தாள். கொண்டு வந்த பொருட்களை, அண்ணனுடன் சேர்ந்து இறக்கி வைத்துவிட்டு அங்கே வந்த பாமா, தன்னை யாரும் கவனிக்காமல் இருப்பதைக் கணக்கிட்டுக் கொண்டே "அய்யோ என்னையும் கொஞ்சம் கவனியுங்க. நானுந்தான் பத்து நாள் பிரிஞ்சிருக்கேன்." என்றாள்.

மாமியார், மணிமேகலையின் இரண்டு கைகளையும் தன் உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு "நல்ல சமயத்துல வந்துட்டம்மா. இங்க பட்டப் பகலுல அனியாயம் நடக்கு. நாங்க அதப் பாத்துட்டு பட்டமரமா நிக்கோம். எந்த வீட்லயும் இந்த அனியாயம் கிடையாது" என்றாள்.

உடனே மூத்த மைத்துனர் மனைவி லட்சுமி, "ஆமா நாங்கதான் அநியாயக்காரங்கன்னு தெரியுதே. அநியாயக்

காரங்கள எதுக்காவ வீட்ல வச்சிருக்கணும்? எங்க பாகத்தை பிரிச்சிக் கொடுக்க வேண்டியதுதானே?" என்று சொன்னாள். சொன்னதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லவில்லையே என்று மோவாயைத் தண்டிப்பவள் போல், கையை அதில் வைத்து இடித்துக்கொண்டே அவள் போனாள். எங்கேயோ போனாள்.

இதற்குள், "எமகண்டம் வரதுக்குள்ள முடிச்சிடலாம்" என்றார் ராமபத்திரன். இவரும் முன்னாளய தூத்துக்குடி வாசிதான். அக்காள் புருஷனின் மளிகைக் கடையில் எடுபிடி வேலை செய்ய வந்து, அவரது தங்கையையே மனைவியாக்கி அரவை மிஷினும், மளிகைக் கடைகளும், கட்டைத் தொட்டிகளும், கசாப்புக் கடைகளும் வைத்து முன்னேறி, தன் மகள் லட்சுமியை மைத்துனன் மகனுக்குக் கொடுத்தவர். 'எஞ்ஜினியர் உருப்படுவான்' என்று கொடுத் தார். ஆனால் இந்த மருமகன் சங்கரனோ, சங்கரா... சங்கரா... அதை ஏன் சொல்லணும்? 'என்னைக்கும் குடும் பத்துல இருக்கையிலேயே, குறியா துட்ட ஒதுக் கணும்... தனியா அமுக்கணும். ஆபத்துக்கு அப்பா தம்பி உதவ மாட்டான். பணந்தான் உதவும். நான் மட்டும் மச்சான் கடையில துட்ட ஒதுக்காட்டா இப்டி ஆவ முடியுமா? அவரு தங்கையைப் பிடிக்க முடியுமா? இது தெரியமாட் டக்கே இவனுக்கு. எப்போ உருப்பட? எப்படி உருப்பட?'

உருப்படாமல் போய்க் கொண்டிருக்கும் மருமகனை உருப்பட வைக்க நினைத்த ராமபத்திரன், பாகப்பிரிவினை செய்தால்தான் மகளுக்கு விமோசனம் பிறக்கும் என்று நினைத்தார். அண்ணன் தம்பிக்கிடையே சண்டை, மாமியார் மருமகளுக்கிடையே சண்டை முதலியவைகளை மூட்டி அவர்கள் அசரும்போது தானும் வந்து "என் மவள பாழுங் கிணத்துல தள்ளிட்டேனே" என்று சொல்லி சண்டை போட்டு நிலைமையை இந்த அளவுக்கு 'முன்னுக்குக்' கொண்டுவந்த புண்ணியவான் அவரு.

மணிமேகலை, மாமியாரிடம் பேசிக் கொண்டிருந்த போது "ஜெயராஜ்! சீக்கிரமா வாரும். எமகண்டம் வரப் போவுது" என்று அவர் மீண்டும் கூவுவதைக் கேட்டு நிற்க முடியாமல் மணிமேகலை வெளியே வந்தாள்.

"என்ன பெரியப்பா, நல்ல காரியத்துக்குத்தான் சுப காலம் பார்க்கணும். நீங்க செய்யுற காரியத்துக்கு எதுக்கு?"

ராமபத்திரன், அவளைப் பார்த்து முறைத்துக் கொண்டே "இது ஆம்புள விவகாரம். நீ ஒன் வேலயப் பாத்துக்கிட்டுப் போ" என்றார். இதுவரை பேசா மடந்தை மாதிரி இருந்த ஜெயராஜின் அப்பா "அவளுக்கும் இதுல பேசுறதுக்கு உரிமை உண்டு. படபடப்புல அத மறந்துடாதேயும்..." என்றார்.

மாமனார் கொடுத்த ஊக்குவிப்பால் மணிமேகலை நிதானமாக , அதே சமயம் ஆணி வைத்து அடித்ததுபோல பேசினாள்.

"இது ஆம்புள விவகாரம் மட்டுமில்ல பெரியப்பா. பொம்புள விவகாரம். ஒரு பாவமும் அறியாத பாமா வோட விவகாரம். சீதாவோட விவகாரம். இதுல பேச எனக்கு மட்டுமில்ல, அந்த பொண்ணுங்களுக்கும் உரிம உண்டு."

ராமபத்திரனின் ஆவேசத்தை மீசை காட்டியது.

"அப்படீன்னா, என் மகள் ஒங்க எல்லாருக்கும் சேவை செய்யணுமா? அவள் கிழவியாவது வரைக்கும், ஒங்க எச்சித் தட்டக் கழுவிக்கிட்டே இருக்கணுமா? என்ன பேச்சு பேசுற? இது பேச்சா... இது பேச்சா?"

மணிமேகலை அவர் அருகே வந்தாள். அவரின் கண்களை நேராகப் பார்த்துக்கொண்டே பேசினாள்.

"நல்லா யோசித்துப் பாருங்க பெரியப்பா. மூணு தலைமுறைக்கு முன்னால இங்க வந்து இப்போ நல்ல

நிலைமையில இருக்கிங்க. எங்க பேக்டரியில, இரண்டு லேத் மிஷின்ல குத்துவிளக்கு தயாரிச்சும், ஸ்பேர் பார்ட்ஸ் தயாரிச்சும் நல்லபடியா வாழறோம். இன்னொரு லேத் மிஷின் வரப்போவுது. இந்த சமயத்துல, ஆளுக்கொரு லேத் மிஷினை எடுத்துக்கிட்டால் பேக்டரி என்னாவும்? ஆர்டர் கொடுத்தவங்க என்ன நினைப்பாங்க? பேக்டரி என்ன அரவ மிஷினா நினைச்ச இடத்துக்கு மாத்துறதுக்கு?"

"என் தொழில மட்டமா பேசுனா, எனக்குப் பொல்லாத கோபம் வரும்."

"கோபமே பொல்லாதது. இதுல வேற பொல்லாத கோபமுன்னு ஒண்ணு இருக்கா? பெரியப்பா, ஒங்க மகளுக்கு யாரும் எந்த குறையும் வைக்கல. எங்களுக்கு மாமாவுக்குப் பதிலா தகப்பனார் இருக்காங்க. அக்கா சந்தோஷமாத்தான் இருக்காங்க. அவங்க ரமாவையும், சேகரையும் பெத்துத்தான் போட்டாங்க. வளத்ததுல்லாம் எங்க மாமியார்."

"ஓஹோ! என் மவளுக்கு பெத்த பிள்ளியள வளக்கதுக்கு துப்பில்லன்னு சொல்றீயோ?"

"இப்படி சகுனிமாதிரி பேசுனா, எந்த வீடும் உருப்படாது..."

"என்னை சகுனின்னு பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும். டேய் ஜெயராஜ்! ஒன் பொண்டாட்டிய வார்த்தய அளந்து பேசச் சொல்லுடா."

மணிமேகலை தொடர்ந்தாள்:

'சகுனி எவ்வளவோ மேலு பெரியப்பா. அவன் கௌரவர்களுக்கு மட்டுந்தான் தாய்மாமன். பஞ்சபாண்டவங்க சம்பந்தம் இல்லாதவங்க. அதனால் அவன் செய்ததக்கூட மன்னிச்சிடலாம். ஆனால் ஒங்களுக்கு, இந்த

எஞ்ஜினியர்களும், இந்த சின்னஞ் சிறிசுகளும் சொந்தமான அக்கா மக்கள். அப்படி இருந்தும் குடும்பத்தைக் கலைக்கப் பார்க்கிறிங்க. சகுனி அப்படிப் பண்ணமாட்டான்."

"மணிமேகல... எனக்கு ஒய்யாவ விட மூணு வயசு அதிகம். வயசுக்காவது மரியாத கொடு..."

"அதனாலதான் நிதானமா பேசுறேன். எங்க அப்பா மட்டும் இப்படி இங்க வந்து பேசியிருந்தால், நானே அவரை கழுத்தைப் பிடிச்சி வெளில தள்ளியிருப்பேன்."

ராமபத்திரன் எழுந்தார். ஆக்ரோஷமாக எழுந்தார். "என்னையா கழுத்தப் பிடிச்சி தள்ளுவேன்னு நாக்கு மேல பல்லப் போட்டுச் சொல்லுற? எல்லாத்தையும் கோர்ட்ல பாத்துக்கலாம். ஏய் லட்சுமி! புருஷனையும், பிள்ளை யளையும் கூப்பிடு. வா... போகலாம்."

மணிமேகலையும் கோபியானாள்.

"எந்த கோர்ட் வரைக்கு வேணுமுன்னாலும் போக லாம். ஏங்க ஒங்களத்தான். குழந்தைய எடுங்க. நீங்களும் எஞ்ஜினியர்தான். நாம் எங்கேயாவது வேல தேடி பிழைச் சிக்கலாம். இந்த சின்னஞ்சிறிசுங்க, ஒங்கள மாதுரியும் ஒங்க அண்ணன் மாதுரியும் சுயமாய் சம்பாதிக்கிற அளவுக்கு வாரது வரைக்கும், ஒங்க இரண்டு பேருக்கும் சொத்துல உரிமை கிடையாது. இது உங்க அப்பாவோட சுயமான சொத்து. அவரு யாருக்கு வேணுமுன்னாலும் கொடுக்க லாம். என்னங்க உங்களத்தான். புறப்படுங்க... சின்னஞ் சிறிசுகளுக்கும், பெண் பிள்ளைகள் கல்யாணத்துக்கும் இருக்க வேண்டிய சொத்த, நாம சாப்பிடுறது மாதிரி இருக்கப் படாது. புறப்படுங்க! கார் உங்களுக்கும் கிடையாது. மோட்டார் பைக், ஒங்க அண்ணனுக்கும் கிடையாது."

ராமபத்திரன் அசந்துவிட்டார். வக்கீலைப் பார்த்தார். அவர் அங்கே இல்லை. அவர் மகளைப் பார்க்க, அவள்

புருஷனைப் பார்க்க, அவன் அம்மாவைப் பார்க்க, எல்லோரும் கைகளைப் பிசைந்தார்கள். 'நல்ல வேள. லட்சுமி 'வாரேன்னு' சொல்லல' என்று மனதுள் நினைத்துக்கொண்டே, ராமபத்திரன் பத்திரமாகப் போய்விட்டார்.

மணிமேகலை, 'முத்தாளிடம்' வந்து அவள் திருப்பிய 'மூஞ்சியின்' மோவாயைப் பிடித்துக்கொண்டு, "அக்கா, சொல்லப்போனால் நான்தான் வேற்றாள். நான் பாகப் பிரிவினை கேட்டால் அர்த்தம் உண்டு. ஆனால் என் வீட்டுக்காரர், இந்த பாமா, இந்த பாஸ்கரன் இவங்கெல் லாம் உங்களோட ரத்தம். உங்களோட சொந்த அத்தை பிள்ளிங்க. நீங்க வேற்றுமை காட்டலாமா? இனிமேல், நீங்க எச்சித் தட்ட கழுவ வேண்டாம். ஒங்க தட்டையும் நானே கழுவுறேன்" என்றாள்.

"நான் ஒண்ணும் அப்படிச் சொல்லல!" என்றாள் லட்சுமி.

பெருமாள் மாடு மாதிரி எட்டிப் பார்த்த, 'பெரியத் தான்' சங்கரனையும் மணிமேகலை விடவில்லை.

"எல்லாரும் ஒண்ணாச் சாப்பிட்டு, ஒரே மாதுரி இருக் கிறதுலயும், ஒருவருக்கு வார கஷ்டத்த ஒன்பது பேரும் தங்களுக்கு வந்ததா நினைக்கிறதிலேயும், ஒன்பது பேருக்கு வார சந்தோஷத்த ஒருவர், தனக்கு வந்ததா நினைக்க துலயும் இருக்கிற இன்பத்துக்கு ஈடு உண்டா? உங்களத் தான் அத்தான்! இதையும் கேளுங்க, அப்புறமா போகலாம். நம்ம பேக்டரியில தொழிலாளிங்க விழாகிழா நடக்கும்போது, தமிழ்த்தாய் வாழ்த்து பாடும்போதும், தேசிய கீதம் பாடும்போதும், நம்மோட சேர்ந்து புல்லரித்து நிற்காங்களே, ஏன்? அந்தப் பாட்டுக்களோட ராகமா காரணம்? இல்ல. நாம எல்லாம் ஒரு தாய் மக்கள் என்கிற எண்ணம் அப்போ வாரதுதான் காரணம். புரியுதா?

இந்தாங்க உங்களத்தான்! இனிமேல், காரை அத்தானிடம் கொடுத்துடணும். உங்களுக்கு மோட்டார் பைக்தான். என்ன அத்தான் பேசமாட்டக்கிங்க. ஒங்களுக்கு ஏரோப் பிளேன்தான் வேணுமா?"

சங்கரன் சிரித்துக்கொண்டே பேசினான்.

"நம்ம பேக்டரி பெரிசானதும், உன்னை பப்ளிக் ரிலேஷன் ஆபீஸராய் போடப் போறேன்."

"வேண்டாம்... நான் எப்பவும் பேமிலி ரிலேஷன் ஆபீஸராய் இருக்கத்தான் போறேன். வேணுமுன்னால் பாமாவைப் போடுங்க. எங்க ஊர்ல, பத்து நாளையில அவளுக்குக் கடுமையான சிநேகிதம்."

மணிமேகலை, பாமாவைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

எல்லோருக்கும் நிம்மதி. சங்கரன் 'நம்ம பேக்டரி' என்று சொன்னபிறகு, குடும்பத்தில் பழைய உற்சாகம் பிறந்தது. எவரும் மணிமேகலையைப் பார்த்து 'கை கொடுத்த தெய்வம்' என்றோ 'பிரிவினையைப் பிரித்த பிராட்டி' என்றோ 'வசனம்' பேசவில்லை. அதே சமயம் ஒவ்வொருவரின் கண்களும் ஆயிரமாயிரம் வசனங்களை 'ஒளிபரப்பின'. எழுபது வயதில், தான் கஷ்டப்பட்டு சேர்த்த சொத்து பிரியாமல் போனதைக் கண்ட கிழவர், 'தரநன்னா...' என்றுகூட பாடினார்.

இரவு எட்டிப் பார்த்து, வீட்டுக்குள் நுழைந்தது.

படுக்கையறைக்குள் நுழைந்த மணிமேகலை, பையனை எடுத்து குட்டிக் கட்டிலில் கிடத்திவிட்டு, கணவனருகே படுத்தாள். "எப்படியோ ஒரு பிரளயத்தை தடுத்தாச்சு" என்றாள். ஜெயராஜ் சப்புக் கொட்டினான்.

"எனக்கென்னமோ அவங்க நேரத்த எதிர்பார்த்து, ஓநாய் பின்வாங்கி இருக்கது மாதிரி தெரியுது. உடைந்த கல் ஒட்டாது..."

மணிமேகலை சீறினாள்.

"உடைந்த கல் ஒட்டுமோ ஒட்டாதோ? அந்தக் கல்லை எடுத்து உங்கள மாதிரி அவநம்பிக்கை ஆசாமிங்க மேல எறியுறது வரைக்கும் இந்த மாதிரி பிரச்னை தீராது."

"கார்... 'தம்பிகிட்டேயே இருக்கட்டு'முன்னு ஒரு வார்த்தை சொல்றானா பாரு!"

"ஒங்களோட பெரிய வம்பு. எல்லாரும் மொத்தமாய் இருக்கும்போது ரகசியமாய் பேசுவிங்க. தனியாய் இருக்கும்போது பகிரங்க விஷயத்த பேசுவிங்க."

ஜெயராஜ், மணிமேகலையையே பார்த்தான். அவளை அணைக்கவோ அள்ளிப் பருகவோ தோன்றவில்லை. அவளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்போல் தோன்றியது.

## 6

ஒரு மாத காலம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடியது.

மத்தியான வேளை!

மணிமேகலை, புருஷனின் துணிகளை 'அயன்' செய்து முடித்துவிட்டு, அந்த வீட்டுக் குழந்தைகளின் உடுப்புகளுக்கு 'கஞ்சி' போட்டுக் கொண்டிருந்தபோது, ஜெயராஜும் அவன் அண்ணன் சங்கரனும், காரிலிருந்து இறங்கி, ஒருவர் தோள் இன்னொருவர் தோளில் படும்படி சிரித்துக்கொண்டே வந்தார்கள்.

மணிமேகலை புரிந்துகொண்டாள். சகோதரர்கள் சிரித்துக்கொண்டு வருகிறார்கள் என்றால், ஏதாவது

நல்லதோ கெட்டதோ லாபகரமான செய்தியாக இருக்கும். அவள் கேட்கு முன்னாலேயே சங்கரன் சொன்னான்:

"நாம் பெட்ரோல் பங்க் வைக்கிறதுக்கு, ஆயில் கார்ப்பரேஷன் பெர்மிஷன் கொடுத்திட்டு. இப்போதான் லட்டர் வந்துது."

"ஆனால் பணத்ததான் எப்படி புரட்டுறதுன்னு தெரியல? ஏற்கனவே இன்னொரு லேத் மிஷின் வாங்க பாங்க்ல பணம் கட்டியிருக்கோம்" என்றான் ஜெயராஜ்.

மணிமேகலை சளைக்கவில்லை.

"அதுக்கென்ன! என்னோட எழுபது பவுன் நகையில எவ்வளவு வேணுமுன்னாலும் எடுத்துக்குங்க. நாட்ல எப்போ தங்கத்தைவிட மிஷினுக்கு முக்கியம் கொடுக்காங்களோ அப்போதான் நாடு உருப்படும்!"

"நீ உண்மையிலயே தங்கமான பொண்ணுதான்" என்று சொல்லிச் சிரித்தான் சங்கரன். மணிமேகலை தொடர்ந்தாள்:

"இந்த நல்ல நாள்ல, இன்னொரு நல்ல சமாச்சாரத்தயும் அப்பாவுக்கு எழுதிடலாம். பாமா—சந்திரன் கல்யாணத்த ஆவணில வைக்கிறதா எழுதலாமா?"

"ஆவணில பெட்ரோல் பங்க் வேலையில பிஸியா இருப்போம். ஐப்பசில வச்சுக்கலாம்."

"எங்கே வைக்கலாம்?"

"ஒங்க ஊர்ல வைக்கலாம். ஒங்க ஊர இந்த மாதிரி சமயத்துலதான் பார்க்க முடியும். மேளதாள சமயத்துல மட்டும்தான் அது ஊராய் தெரியும். லட்டர் எழுதிடு."

"அத்தான்! நீங்கதான் இந்த வீட்டுக்கு மூத்த பிள்ள உங்க கைப்பட எழுதிப் போடுங்க."

"நோ நோ! இந்த வீட்டுக்கு நீதான் பிரைம் மினிஸ்டர்! நீதான் எழுதணும். நாங்க வெறும் டெப்டிங்கதான்."

"நோ... நோ... நான் பிரைம் மினிஸ்டராய் இருந்தாலும் பெண்வீட்டுக் கட்சியின் தலைவி. நான் மாட்டேன்."

"அப்படின்னா, நம்ம 'ஸ்பீக்கர்' லட்சுமிய எழுதச் சொல்லு." மணிமேகலை சிறிது யோசித்தாள்.

"பேசாம நம்ம பிரஸிடெண்ட எழுதச் சொல்லலாமே? அதுதான் முறை!"

மணிமேகலை வீட்டுக்குப் பின்னால் போட்டிருந்த தோட்டத்துச் செடிகளோடு 'பேசிக்' கொண்டிருந்த மாமனாரிடம் ஐந்து நிமிடம் பேசிவிட்டு, முன்னறைக்கு வந்து "மாமா நிஜமாவே பிரஸிடெண்ட்தான். 'நீ எழுது. நான் கை எழுத்துப் போடுறேன்' என்கிறாரு" என்றாள்.

எல்லோரும் சிரித்தார்கள்—பாமாவைத் தவிர. அவள் நாணிக் கோணி நளினப்பட்டு நின்றாள். இந்தச் சமயத்தில் சமையலறைக்குள் நல்லெண்ணெயை ஊற்றிக்கொண்டே, நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த லட்சுமி அங்கே திடீர் பிரவேசம் செய்து "இந்த நல்ல நாள் கொண்டாட வேண்டாமா? பேசாம மெட்ராஸ் போய், எக்ஸிபிஷன் பார்த்துட்டு வரலாம்" என்றாள்.

ஜெயராஜ் உதட்டைக் கடித்தபோது சங்கரன் முகத்தைச் சுழித்தான்—லட்சுமி ஏதோ பேசக்கூடாததைப் பேசுவதுபோல. மணிமேகலை இப்போதும் பேசினாள்.

"அக்கா சொல்றதுல என்ன தப்பு? ஓடாய் உழைத்து அவங்களோ, நானோ என்னத்த கண்டோம்? எங்களுக்கும் ஒரு 'சேஞ்ச்' வேண்டாமா? நாம நாளைக்குக் காலையில, நம்ம கார்ல போகப் போறோம்."

உடனே குழந்தைகள் "ஓ எக்ஸிபிஷன் எக்ஸிபிஷன்" என்றார்கள். பாமாவும், சீதாவும் கண்களை உருட்டினார்

கள். சின்ன மைத்துனன் பாஸ்கரும், குட்டி மைத்துனி இந்திராவும், "ஜாலிதான்... நாளைக்கு ஸ்கூலுக்கு போகாண்டாம்" என்றார்கள்—எக்ஸிபிஷனுக்குப் போவதைவிட, பள்ளிக்கூடம் போகாமல் இருப்பதில் அதிக இன்பம் கண்டவர்கள்போல.

பொழுது இருட்டிக்கொண்டிருந்த போது, லட்சுமியின் தங்கையும், ராமபத்திரனின் இரண்டாவது புத்திரியுமான வசந்தி வந்தாள். எஸ்.எஸ்.எல்.சி.யை நாலைந்து தடவை பார்த்தவள். நல்ல சிவப்பு. நல்ல உடல்வாகு. இப்போது இருபத்திரண்டு வயது இருக்கும். எவரையும் கவிழ்ந்து கொண்டே பார்க்கிறவள். பேசும்போது, பெருவிரலால் தரையில் வட்டம் போடுபவள்.

மணிமேகலை கடிதத்தை எழுதி, மாமனாரிடம் கையெழுத்து வாங்கி தபால் பெட்டியில் சேர்ப்பித்துவிட்ட திருப்திச் சிரிப்போடு, அடிக்கடி வரும் வசந்தியை அப்போதுதான் வருபவள்போல் வரவேற்றாள்.

"வாம்மா! நாளைக்கு கார்ல மெட்ராஸ் போய், எக்ஸிபிஷன் பார்க்கப் போறோம். வாரியா?"

"எத்தன பேரு போறிங்க?"

"மாமா தவிர, எல்லாரும்."

"கார்ல இடம் இருக்காதே."

"அதுக்கு நானாச்சு. அப்படியே இடம் இல்லாட்டா என்னோட இடத்த ஒனக்குத் தாரேன்."

அப்போது அங்கே வந்த பாமா, லேசாக முகத்தைச் சுழித்தாள். பிறகு சந்திரனை மீண்டும் நினைத்துக்கொண்டு எங்கேயோ போய்விட்டாள்.

அன்றைய இரவு, மறுநாள் காலைப் பொழுதாக மலர்ந்தது.

எல்லோரும் காரில் ஏறிக்கொண்டார்கள். பின்னால் சங்கரன், அவன் சம்சாரம், அவர்களது இரண்டு குழந்தைகள், சீதா, இந்திரா, வசந்தி, டிரைவர் இருக்கையில் ஜெயராஜ்? அதற்கு அடுத்தாற்போல் மாமியார் கிழவி. அப்புறம் மணிமேகலை. அப்புறம் சின்ன மைத்துனன் பாஸ்கரன். வண்டி புறப்படப் போகும்போது, கிழவியம் மாள் "எனக்கு காத்து வேணும்... நீ இந்தப் பக்கமா உட்காரு மணி" என்றாள் மருமகளைப் பார்த்து. "நீங்களே ஒங்க மகன் பக்கத்துல இருங்க" என்று மணிமேகலை நாணிக் கொண்டே சொன்னபோது, "இவளுக்கு இன்னும் சின்னப் பொண்ணுன்னு நினைப்பு" என்றான் ஜெயராஜ். வசந்தி அவனைத் தலையை கவிழ்த்துக்கொண்டே பார்த்தாள்.

அந்தப் பார்வை தாங்கமாட்டாது கார் புறப்பட்டது. கிழவர் பெருமிதமாகக் காரைப் பார்த்துவிட்டு, அந்தக் காலத்து ரயில் சிக்னல் மாதிரி கையைத் தூக்கிக் கீழே போட்டார்.

எங்கெல்லாமோ சுற்றிவிட்டு, இம்பாலாவில் சாப்பிட்டுவிட்டு ஸ்நேக் பார்க்கைப் பார்த்துவிட்டு, அவர்கள் பீச் ரோடு வழியாக பொருட்காட்சிக்கு வந்தார் கள். பல அரசு நிறுவனங்கள், இலாக்காக்கள், தனியார் கம்பெனிகள் முதலியவை வைத்தருந்த 'ஸ்டால்களை' பார்த்துக்கொண்டே வந்தவர்கள் 'வாலன்டரி ஹெல்த் அஸோஸியேஷன்' என்ற சமூக ஸ்தாபனம் போட்டிருந்த ஸ்டாலுக்கு முன்னால் வந்தபோது, ஒரு போர்டில் 'இங்கே வைத்திய பரிசோதனை செய்து கொள்ளலாம். கட்டணம் மூன்று ரூபாய்' என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தை, பியூ.ஸி.க் காரியான சீதா படித்து முடித்துவிட்டு "அண்ணி! எனக்கு அடிக்கடி தலை சுத்துது! செக்கப் பண்ணிக் கட்டுமா?" என்றாள். உடனே ஜெயராஜ் "ஒனக்கு வீட்டு வேலைய செய்யச் சொல்லும்போதுதான் தலை சுத்தும்?"

என்றான். சங்கரன் ஒருபடி அதிகமாய் போய் "இதுக்குத் தான் இதுங்கள இங்க கூட்டிக்கிட்டு வரப்படாது" என்றான்.

மணிமேகலை பர்ஸில் இருந்து மூன்று ரூபாயை எடுத்து சீதாவிடம் நீட்டினாள். "நீங்களும் வாங்க அண்ணி. எனக்குப் பயமா இருக்கு" என்று சொல்லி, மணிமேகலையின் கையைப் பிடித்து இழுத்தாள் சீதா. "சரியான செல்லக் கிறுக்கு" என்று லட்சுமி மோவாயைத் தூக்கிய போது மணிமேகலை மைத்துனியுடன் ஸ்டாலுக்குள் போனாள். மற்றவர்கள் அந்த ஸ்டாலுக்கு சற்றுத் தொலைவில் உட்கார்ந்தார்கள். பத்து நிமிடம் ஆகியிருக்கும்... பதினைந்து ஆகியிருக்கும்... போனவர்களைக் காணவில்லை. எல்லோரும் எதிர்பார்ப்புடன் பார்த்தபோது சீதா அங்கிருந்து ஓடிவந்து "அண்ணா, ஒன்ன டாக்டர் கூப்புடுறாங்க" என்றாள் மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டே. ஜெயராஜ் "என்னடா இது வம்பு" என்று சொல்லிக் கொண்டே ஸ்டாலுக்குள் போனான். 'பெண்களுக்கு' என்றிருந்த அறைக்குள் போகலாமா வேண்டாமா என்று சிறிது யோசித்துவிட்டு, பிறகு மெள்ள மெள்ள நடந்து உள்ளே போனான். அங்கே—

லேடி டாக்டர், மணிமேகலையின் காதுக்கருகே மங்கலாக இருந்த ஒரு வட்டமான புள்ளியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, பிறகு அவளின் இதர மேனிப் பகுதிகளை உற்றுப் பார்த்துவிட்டு தலை நிமிர்ந்தவள், "நீங்க மிஸ்டர் ஜெயராஜா? வாங்கோ..." என்று சொல்லி அவனை இன்னொரு நாற்காலியில் உட்காரச் சொன்னாள். மணிமேகலை பித்துப் பிடித்தவள் மாதிரி, தான் இருப்பதே தனக்குத் தெரியாதது போல் இருந்தாள். டாக்டரம்மா பீடிகையுடன் பேசினார்:

"இந்த பேட்ச் இருக்கே இது ஒரு வகையான ஸ்கின்டிஸ்ஸீஸ். நான் பார்த்ததுல குஷ்ட ரோகத்துக்கான

லேசான அறிகுறி மாதிரி தெரியுது! ரொம்ப மைனர்தான். எதுக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரில செக்கப் பண்றது நல்லது. அப்படியே இருந்தாலும் எர்லி ஸ்டேஜ்தான். நத்திங் டு ஒர்ரி!"

ஜெயராஜ் பதறினான். மணிமேகலையின் தோளை ஆதரவாகப் பிடித்துக்கொண்டே, "டாக்டர், நல்லாத்தான் பார்த்துச் சொல்றிங்களா?" என்றான்.

"ஒரு டாக்டர், பேஷியண்ட்கிட்ட கொஞ்சம் மறைத் தாலும் மறைக்கலாமே தவிர, எக்ஸாஜிரேட் பண்ண மாட்டார்."

"டாக்டர்! டாக்டர்! அப்படின்னா... இவளுக்கு அதுவேதானா? அதுவேதானா?"

"நிச்சயமாய் சொல்ல முடியாது. நாளைக்கு ஜி.ஹெச்ல செக்கப் பண்ணுங்க... டோண்ட் ஒர்ரி எங்மேன்" என்றாள்.

மணிமேகலை வெறித்த பார்வையோடு எழுந்தாள். பிறகு கணவனைப் பார்த்தாள். அவனோ, அவளிடம் ஆறுதல் கேட்பவன் போல் மருட்சியுடன் பார்த்தான். சிறிதுநேர மௌனத்திற்குப் பிறகு, அவன் "இப்போ அவங்ககிட்ட ஒண்ணும் சொல்லாண்டாம். நாளைக்கு செக்கப் செய்த பிறகு பார்க்கலாம்" என்றான்.

இருவரும், அவர்களிடம் சொல்லவேண்டிய அவசிய மில்லை. 'என்ன நடக்கிறது' என்பதைப் பார்ப்பதற்காக, சங்கரனால் ஸ்டாலுக்கு அனுப்பப்பட்டிருந்த வசந்தி, அவர்களிடம் 'குஷ்ட ரோகம்... குஷ்ட ரோகம்' என்று சொல்வது இருவருக்கும் கேட்டது. கேட்கக்கூடாத அளவிற்குக் கேட்டது.

இருவரும் அவர்களை நெருங்கினார்கள். உட்கார்ந் திருந்த அவர்கள் ஒன்றாக ஒரே சமயத்தில் எழுந்தார்கள்.

யாரும் யாருடனும் பேசவில்லை. "என் ராசாத்தி... ஒனக்கா... ஒனக்கா?" என்று மாமியார் லேசாக முனங்கிவிட்டு, மணிமேகலையின் கையைப் பிடித்தாள். பிள்ளைகள் எதுவும் புரியாமல், அதே சமயம் எதுவோ நடந்துவிட்ட திகிலில், லட்சுமியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டார்கள். தலையைக் குனிந்து புருவத்தை நெறித்துக் கொண்டிருந்த சங்கரன், சற்று சுதாரித்துக் கொண்டு "இப்போ 'அது' வந்திருக்கு என்கிறது வெறும் யூகந்தான். அப்படியே இருந்தாலும், 'பேஸ்' பண்ணித்தான் ஆகணும். ஆல்ரைட். டேய் ஜெயராஜ் நாங்க டிரெயின்ல போறோம். நீ காலையில இவள ஜி. ஹெச்ல பார்த்துட்டு வா? நான் வேணுமுன்னால்கூட இருக்கட்டுமா?" என்றான்.

எங்கும், எதிலும் உல்லாச ஓசைகளும், இனிய நாதங்களும், எக்காளச் சிரிப்புக்களும், இன்பமயமான சூழலும் நிலவிய அந்த பொருட்காட்சியில் இருந்து, அவர்கள் காட்சிப் பொருட்கள் போல் வெளியே வந்தார்கள். 'இன்னும் பார்க்கணும்... இன்னும் பார்க்கணும்' என்று அடம்பிடித்த சேகரை, லட்சுமி பட்டுப் பட்டென்று அடித்தாள். யாரும் அவளைத் தடுக்கவில்லை. ஏனென்று கேட்கவில்லை. மெளனமாக நடந்தார்கள். நடக்கமுடியாமல் தங்களைத் தாங்களே தூக்கிக்கொண்டு போவது போல் நடந்தார்கள்.

அரக்கோணம் வழியாகப் போகும் எக்ஸ்பிரஸ்ஸில் அவர்களை ஏற்றிவிட்டுவிட்டு, மணிமேகலை மாமியாரிடம் இருந்த கைக் குழந்தையை வாங்கி, மார்போடு அணைத்துவிட்டு, அந்தச் சாக்கில் அவன் தலையில் தன் கண்ணீரைத் துடைத்துவிட்டு, மகனை மீண்டும் மாமியாரிடம் ஒப்படைத்தாள்.

ஜெயராஜும், மணிமேகலையும் ரயில் நிலையத்திற்கு வெளியே வந்து காரில் ஏறினார்கள். இருட்டத் துவங்கி

விட்டது. ஜெயராஜ் எதையோ பேசப் போனான். அவளோ, எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சவேரா' ஹோட்டலில் அறை எடுத்தார்கள். ஜெயராஜ் ஆறுதல் சொன்னான்.

"கவலப்படாத! இது வெறும் ஸ்கின் டிஸ்ஸீஸாத்தான் இருக்கும். 'இது' நமக்கேன் வரப்போவுது? ஓ மை காட்!"

மணிமேகலை எதுவுமே பேசவில்லை. "எனக்கு இருக்காது... எனக்கு இருக்காது..." என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே, அருகே படுத்திருந்த கணவனின் கையை எடுத்து, தன் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டாள்.

அவன் தூங்குவதுபோல் அசந்தபோது, அவள் எழுந்து உட்காருவது, அவள் அசந்ததுபோல் தூங்கும்போது, அவன் எழுந்து உட்காருவதுமாக இரவுப் பொழுது இருவரும் தூங்காமலே கழிந்தது.

காலையில் ஏழு மணிக்கெல்லாம் இருவரும் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்கள். ஜெயராஜுக்கு பல டாக்டர் நண்பர்கள் உண்டு. அவர்களுக்கு டெலிபோன் செய்யலாமா என்று முதலில் நினைத்தான். மணிமேகலை அதைத் தடுத்துவிட்டாள்.

'லெப்ரஸி' வார்டில், அந்த நோயாளிகளைப் போல் ஒரு சில உறுப்புகளை இழந்து கிடந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார்கள். அங்கே இருந்த நோயாளிகளைப் பார்க்கப் பார்க்க—எந்தப் பாவமும் அறியாதவர்கள் போலவும், எந்த இன்பத்தையும் நுகராதவர்கள் போலவும் இருந்த அந்த ஏழை—எளியவர்கள்மீது மணிமேகலைக்கு அனுதாபம் ஏற்பட ஏற்பட, அவள் தன் சுய அனுதா பத்தைக் குறைத்துக்கொண்டாள். தான் தனிமைப் படவில்லை என்று உணர்ந்து கொண்டாள். அதே சமயம்

'கடவுளே! செந்தூர் முருகனே... எனக்கு... எனக்கு இருக்கப் படாது' என்று மனதுக்குள்ளே முட்டிக் கொண்டாள். ஜெயராஜ், தெரிந்தவர்கள் பார்த்துவிடக் கூடாதே என்று வலதுகையை மடித்து, முன் நெற்றியையும் பின் தலையையும் மறைத்துக் கொண்டான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, மணிமேகலையின் முறை வந்தது. 'கடவுளே... கந்தனே... இது தோல் வியாதி யாகத்தான் இருக்கணும்... இருக்கணும்' என்று சொல்லிக் கொண்டே போனாள். அவளை, போகக்கூடாத ஊருக்கு வழியனுப்பி வைப்பவன்போல் ஜெயராஜ் கலங்கினான்.

அரைமணி நேரமாயிற்று. அவளைக் காணவில்லை. ஜெயராஜ் முரட்டுத்தனமாக உள்ளே போனான். மனைவிக்கருகே போய் உட்கார்ந்தான். டாக்டர் மைக்ராஸ்கோப்பில் தேடிக் கொண்டிருந்தார்.

பிறகு, அதை லேசாகத் தள்ளிவிட்டு, தன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்த டாக்டர், அவர்களது தோற்றத்தையும், தோரணையையும் பார்த்து 'சூள்' கொட்டிவிட்டு அவரே கொஞ்சம் 'எக்ஸைட்' ஆனவர் போல பேசினார்.

"ஐ அம் ஸாரி ஸார்! இது அதுதான்! ஆனால் பயப்படும்படியாய் ஒண்ணுமில்ல. இப்போதான் துவக்கம். 'பேச்ல' கூர்மை இருக்கு. நிறமும் ஒயிட்டாய் மாறல. அதோட ஒரே ஒரு 'பேச்'தான் இருக்கு. முகத்துல தடிப்பு இல்ல. மூக்குச் சளியிலயோ, ஸ்கின்னுலயோ கிருமி இல்ல. மைக்ராஸ்கோப்புல நல்லா பார்த்துட்டேன். டெய்லி ஐம்பது மில்லிகிராம் டேப்ஸோன் மாத்திரை, ஒண்ணே ஒண்ணு சாப்பிட்டால் போதும். மூணு மாதத்துல சரியாப் போயிடும். பட், மூணு வருஷம் வரைக்கும் மருந்து சாப்பிடணும். டெய்லி ஒரே ஒரு மாத்திரதான்!"

"நாங்க யாருக்கும் எதுவும் பண்ணலியே டாக்டர்?"

"டோண்ட் வீப் எங்மேன்! ஆரம்ப கட்டத்துலயே கண்டுபிடிச்சாச்சு. இதுக்காக நீ கடவுளுக்கு நன்றி சொல்லணும்... எந்த ஊரு?"

"அரக்கோணம் ஸார்!"

"அங்க டாக்டர்கிட்ட அடிக்கடி செக்கப் பண்ணுங்க. ஓகே! போயிட்டு வாரீங்களா? இந்தாங்க பிரிஸ்கிரிப்ஷன். பேஷியண்ட்ஸ் நிறைய வந்திருக்காங்க."

இருவரும் எழுந்து அவரையே பார்த்தார்கள்.

"அப்புறம் ஒண்ணு... இந்த நோய் நல்லவங்களுக்கும் வரலாம்... கெட்டவங்களுக்கும் வரலாம். பணக்காரனுக்கும் வரலாம், ஏழைக்கும் வரலாம். ஆணுக்கும் வரலாம், பெண்ணுக்கும் வரலாம். இது தொத்துவியாதியில்ல. குறிப்பா... ஒங்க ஒய்புக்கு இருக்கது ஜஸ்ட் எ பிகினிங்... நாட் இன்பெக்ஸூவஸ். அவங்களோட தாராளமா செக்ஸ் வச்சிக்கலாம். அவங்க தாராளமாய் கைக்குழந்தை இருந்தால் பால் கொடுக்கலாம். ஆனால் மாத்திரை சாப்பிடுறதை விடப்படாது. காட் இஸ் கிரேட். இந்த மகாலட்சுமிய மட்டும் கைவிட்டுடாதே. ஓகே!"

அப்போதுதான் அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அப்போதுதான் திருமணம் ஆனவர்கள் போல், இருவரும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டு—ஆதரவோடும், ஆதரவுக்காகவும் பிடித்துக்கொண்டு வெளியே வந்தார்கள்.

டிரைவர் இருக்கையில் அமரப்போன ஜெயராஜ், திடீரென்று "என்னால இப்போ வண்டிய ஓட்டமுடியாது" என்றான். மணிமேகலை மௌனமாக அவனைத் தொட்டு கார் சாவியை வாங்கினாள். ஒரு மாதம் விளையாட்டுத் தனமாகக் கார் ஓட்டக் கற்றுக் கொண்டவள். ஒருசமயம், சென்னை நகர சாலைகளிலும் சிரமத்துடன் இதே காரை ஓட்டியிருக்கிறாள். ஆனால் அப்போதைய சூழ்நிலையோ வேறு...

இருவரும், சவேரா ஹோட்டலுக்கு வந்தார்கள். விடிந்ததில் இருந்து பச்சைத் தண்ணிகூட குடிக்கவில்லை. 'எனக்கா? எனக்கா?' என்று தன்னுள் எண்ணத்தை மோத விட்டு, 'எனக்குத்தான்... எனக்குத்தான்' என்று அந்த எண்ணம் கொடுத்த எதிரொலியை இதயத்தில் வாங்கி அதை வாய்மொழிப் பெருமூச்சாக ஆவியாக்கி, தன்னையே அடக்கிக்கொண்டு மணிமேகலை அறைக்குள் வந்தாள்.

அதற்குமேல், அவளால் தாளமுடியவில்லை. தாங்க இயலவில்லை. கண்ணீர் தானாகப் பெருகியது. உள்ளத்தின் ஓலம் விம்மலாக வெடித்தது. தன்னையே அனுதாபமாகப் பார்த்த கணவனின் தோளில் முகம் சாய்த்து, "அத்தான்... அத்தான்... என்னைக் கைவிட மாட்டீங்களே, கைவிட மாட்டீங்களே" என்று பல தடவை சொல்லியவாறு அவன் முதுகை அழுந்தப் பற்றினாள். குழந்தை மாதிரி அவன் கைகளை, தன் ஆடும் கைகளால் பிடித்துக் கொண்டாள்.

ஜெயராஜ், அவளை ஆதரவோடு அணைத்துக் கொண்டான். பிறகு அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு, தன் கண்களையும் துடைத்துக் கொண்டான்.

'கண பட்டு போச்சு' என்பதுபோல், இருவர் கண்களும் நீரிழந்த நிலம்போல, வெறுமையாக இமைகளை அடித்துக்கொண்டன.

## 7

ஒரு வார காலம் ஓடியிருக்கும்.

மணிமேகலை—பொருட்காட்சி பார்ப்பதற்காக அனைவரையும் அழைத்துச் சென்ற அவள், தன்னையே தானாகப் பார்த்துக் கொண்டாள். இப்போது உலகமே

வேறுவிதத்தில்—சிலசமயம் தலைகீழாகத் தெரிந்தது. வீட்டுக்குப் பின்னாலும், முன்னாலும் உள்ள பசுமையான மரங்களைப் பார்த்து ரசிக்கும் அவள் கண்களில் இப்போது பட்ட மரங்களே பட்டன. அணில்கள் ஓடிய இடங்களில் ஓணான்களைத்தான் பார்த்தாள். வீட்டில் மொஸாயிக் தரையில் எங்கே கறை படிந்திருக்கிறது என்று கண்டு, அதை ஈரத்துணியினால் துடைக்கும் அவள், இப்போது வெளியே உள்ள தெருவில் உள்ள குண்டுக் குழிகளைத்தான் உற்றுப் பார்த்தாள். முனிஸிபாலிட்டியின் அதிகாலை சங்கு முழங்கியதும், உடனே எழுந்து வீட்டுக் காரியங்களை கவனிக்கத் துவங்கும் அவள் இப்போது அந்த ஓசையையே இழவுச் சங்காக நினைத்தாள். அருகே படுத்திருக்கும் கணவன், தொலைதூரத்தில் இருப்பது போலவும், தொலை தூரத்தில் உள்ள தந்தை அருகே இருப்பது போலவும் தோன்றியது.

என்றாலும், சும்மா சொல்லக்கூடாது, எல்லோருமே அவள்மீது அன்பைப் பொழிந்தார்கள். அவள்மீது, முன்பெல்லாம் லேசாகப் பொறாமைப்படும் லட்சுமிகூட அவளை எந்த வேலையும் செய்யக்கூடாது என்று தடுத்தாள். மாமனார் அவளை அனுதாபத்துடன் பார்ப்ப துடன், வெளியே போய்விட்டு வரும்போதெல்லாம் முதலில் அவளைப் பார்த்து 'எப்படிம்மா இருக்கே' என்று சொல்லிக்கொண்டேதான் வீட்டுக்குள் நுழைகிறார். எப்போது பார்த்தாலும் ஸ்பேனர்களை எடுத்து வரும் அவன், இப்போது மல்லிகைப் பூ வாங்கி வருகிறான். சென்னையில் இருந்து வந்ததும், செய்தி ஊர்ஜிதம் ஆனதும் அதிகமாய்த் துடித்தவர்கள் குடும்பத்தினர்தான். நாலைந்து நாட்கள் வரை அந்த வீடே இழவாகி இருந்தது. எதையாவது பேசி, அந்தப் பேச்சில் எப்படியாவது சந்திரனை இணைத்துவிடும் பாமாகூட, இப்போது அவளைப் பற்றிய உள் விவரத்தைப் பேசுவதில்லை.

ஒரே ஒரு சமயத்தில்தான் "கவலப்படாதீங்க அண்ணி! அண்ணன் இருக்கார். அதைவிட ஒங்களுக்குத் துணையாய் சந்திரன் இருக்கார்" என்றாள். முன்பெல்லாம், அவள் இப்படிப் பேசினால் 'அடியே கள்ளி' என்று கூறும் மணிமேகலை இப்போது வெட்டப்பட்ட கள்ளிச் செடிபோல் அவளைப் பார்த்தாள். ரமாவுக்கு பள்ளிப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் அவளுக்கு, இப்போது பாடங்களில் லயிக்க முடியவில்லை. தினமும் மாத்திரை சாப்பிடும் போது, அந்த குழந்தை 'எனக்கும் சித்தி' என்று சொல்லும் போது "இது ஒங்களுக்கு என்றைக்குமே தேவைப்படக் கூடாது" என்று சொல்லிவிட்டு புத்தகத்தை மூடுவாள்.

ஒருநாள், மணிமேகலை தற்செயலாக ஒரு பத்திரிகையைப் புரட்டினாள். அதில் 'தொத்து வியாதிகளிலேயே அதிகமாகப் பரவும் வியாதி சோகந்தான். அதைச் சுமந்திருக்கும் முகத்தைப் பார்ப்பவர் உடலெங்கும் அது பற்றிக் கொள்ளும்' என்று எழுதியிருந்தது. சில இலக்கிய வரிகள் ஒருவரது மனோபாவத்தை அடியோடு மாற்றும் என்ற கருத்துக்கு உதாரணம்போல் இருந்த அந்த வரிகளைப் படித்ததும் மணிமேகலை வரிக்குதிரை போல் நிமிர்ந்து நின்றாள். இப்போ என்ன நடந்துவிட்டது? விடுதலைப் போரில் வீரனாக, சிங்கமாக கர்ஜித்த சுப்பிரமணிய சிவாவுக்கு வரவில்லையா? ஆப்பிரிக்க நாட்டில் பெருவியாதிக்காரர்களுக்காகவே வாழ்ந்த ஆல்பர்ட் ஸ்வச்சருக்கு வரவில்லையா? எனக்கா? எனக்கா என்று சொல்லிக்கொள்வதில் என்ன அர்த்தம்? அந்த தியாகிகளைப் பார்க்கையில் நான் எம்மாத்திரம்? அதோட எனக்கு ஆரம்பந்தான். கிள்ளி எறியப்பட்டு வரும் வெறும் முளைதான்.

மணிமேகலை பழையவளாக மாற முயற்சித்தாள். பாதிக்குமேல் வெற்றி பெற்றாள். ரமாவுக்கு, சத்தம்

போட்டு பாடஞ் சொல்லிக் கொடுத்தாள். பாடங்களைப் படிக்காமல் அரட்டை அடிக்கும் பாஸ்கரையும், சீதாவையும் பலமாகக் கண்டித்தாள். மாமனாருக்கு பால் கொண்டு கொடுத்தாள். கணவனுடன் செல்லமாகச் சிணுங்கினாள். அதே சமயம், முன்பிருந்த ஏதோ ஒன்று குடும்பத்தினரிடம் குறிப்பாகக் கணவரிடம் இல்லை என்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. சீச்சி... காமாலைக் கண்ணுக்கு, கண்டதெல்லாம் மஞ்சளாம்...

மணிமேகலை ஆராய்ச்சியில் இறங்கவில்லை... அதற்கு அவசியமும் ஏற்படவில்லை.

ஒருநாள்... அதற்குப் பிறகு வந்த நாட்களை எல்லாம் மாற்றிய ஒருநாள்.

ராமபத்திரன் வீட்டுக்கு வந்திருந்தார். இப்போதெல்லாம் அவர் அடிக்கடி வருகிறார். மணிமேகலையிடமும் சகஜமாகப் பழகுகிறார். அவர் வந்திருந்தபோது அவள், வீட்டுக்குப் பின்னால் முருங்கைக் கீரையைப் பறித்துக் கொண்டிருந்தாள். கொல்லைக் கதவு சாத்தப்பட்டிருந்தது. என்றாலும் அவரைப் பார்க்க முடியவில்லையே தவிர கேட்க முடிந்தது. ராமபத்திரன், வீரபுத்திரன் போல் பேசினார்:

"நான்... நல்லதுக்குத்தான் சொல்லுறேன் என்கிறது ஏன் ஒங்களுக்குப் புரியமாட்டக்கு? இது மோசமானது. அந்த நல்ல பொண்ணுக்கு வந்திருக்கப்படாது. ஆனால் வந்துட்டே. ஒரு குடும்பத்துல ஒருவருக்கு வந்தால் எல்லாரும் டாக்டர்கிட்ட சோதிச்சி பார்க்கணுமுன்னு ஏன் தோணமாட்டக்கு? அக்கா, ஒனக்கு அறிவு எங்க போயிட்டு? மச்சான் நீரு புத்திய கடன் கொடுத்திட்டீரா? சரி. ஒங்களுக்கு இஷ்டமில்லன்னா வேண்டாம். என் மகளயும், பேரப் பிள்ளியளயும் தடுக்கறதுக்கு ஒங்களுக்கு என்ன உரிம இருக்கு? ஒண்ணு கிடக்க ஒண்ணு

வந்துட்டா, என்ன பண்ண முடியும்? வெள்ளம் வருமுன்னே அணை போடாண்டாமா? ஏய் லட்சுமி! ரமா, சேகரோட பேசாம வீட்டுக்கு வந்துரு! நீ வாழ்ந்தது போதும்!"

லட்சுமியே தந்தைக்குப் பதில் கொடுத்தாள்.

"ஒங்க வேலய பாத்துக்கிட்டு போங்கப்பா. அவங்க படிச்ச ஆம்பிளைங்க. அவங்களுக்குத் தெரியாதா? ஒருவருக்கு ஏதோ ஒண்ணு வந்துட்டு என்கிறதுக்காக, அதையே பிடித்துக்கிட்டு இப்படியா குதிக்கது?"

ராமபத்திரன் மகளை முறைத்துப் பார்த்தபோது, லட்சுமியின் கணவன் சங்கர் "அப்படியே பேசினாலும் இப்படியா சத்தம் போட்டுக் கத்தறது? இவரு போடுற கூச்சலுல இந்த அரக்கோணம் முழுசும் கேட்டிருக்கும்" என்றார்.

பேத்தி ரமாகூட, தாத்தா எதையோ சொல்லக் கூடாததை சொல்லிவிட்டார் என்பதுபோல முறைத்துப் பார்த்தாள். நாலு வயதுப் பயல் சேகருக்கு எதுவும் புரியவில்லை என்றாலும் ஒன்று புரிந்தது. தாத்தா அங்கே நிற்கக்கூடாது... நிற்கவே கூடாது...

தாத்தாவின் பின்னால் வந்து "போ... போ... போ" என்று சொல்லிக்கொண்டே அவன் அவரைத் தள்ளி னான். எல்லோருக்கும், லேசாக சிரிப்புக்கூட வந்தது. ராமபத்திரன் இன்னும் கோபப்பட்டார்.

"ஒப்புக்காவது அப்படிச் சொல்லாதடான்னு சொல்றியளா? சின்னப் பிள்ளய ஏவி விடுறியளாக்கும்!"

லட்சுமிக்கு அப்பாவின்மீது இரக்கம் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் மணிமேகலையின் மீதும் சிறிது வெறுப்பு ஏற்பட்டது. சேகரின் கையைப் பிடித்து இழுத்தாள். ராமபத்திரன் பேச்சை விடாமலே "இது சின்னப் பிள்ள செய்யுற காரியமான்னேன்" என்று சொல்லிக் கொண்

டிருந்த போது, கடைக்குட்டியான இந்திரா, "மாமா ஒங்களுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்" என்று சொல்லிச் சிரித்தாள்.

ஜெயராஜின் அப்பாதான், ராமபத்திரனை சமாதானப் படுத்தினார்.

"அவன் ஒம்ம பேரன்தான் வே! ஒம்ம புத்தியில கொஞ்சமாவது இருக்காதா? ஏய் சேகரு! தாத்தாவ தள்ளுனால் அடிப்பேன் படுவா! இருந்தாலும் நீரு, பேசப் படாத வார்த்தய பேசப்படாதுல்லா..."

ராமபத்திரன் போய்விட்டதுபோல் தெரிந்தது. அவர் வெளியே போவது வரைக்கும் உள்ளே போக வேண்டாம் என்று நினைத்தவள்போல், முருங்கை மரத்தைப் பிடித்துக்கொண்டே நின்ற மணிமேகலை உள்ளே வந்தாள். முருங்கைக் கீரையை சமையலறையில் வைத்துவிட்டு, தனது அறைக்குள் வந்தாள். ஜெயராஜ் உடையணிந்து கொண்டிருந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் சங்கட மாகப் பார்த்துக்கொண்டார்கள். அதற்குக் காரணமும் இருந்தது. வெளியே லட்சுமி தன் மைத்துனி பதின்மூன்று வயது இந்திராவை சாடிக் கொண்டிருந்தாள்.

"ஏண்டி! எங்கப்பாவ பார்த்து 'ஒங்களுக்கு... இதுவும் வேணும்... இன்னமும் வேணுமுன்னு' சொல்றியே, என்னத்தடி அப்படி பெரிதா கண்டுட்டே? அவரு என்னத்தடி அப்டி பேசக்கூடாதத பேசிட்டாரு?"

## 8

**கா**லம் மாறிவிட்டது.

அப்படித்தான், மணிமேகலை உட்பட எல்லோருமே நினைக்கிறார்கள். ஆனால் காலம் மாறவில்லை. அன்று

தித்த சூரியனும், வானமும், பூமியும், விஞ்ஞான ரீதியில் தங்களுக்குள்ளே மாற்றங்களுக்கு உட்பட்டாலும், மனிதனைப் பொறுத்த அளவில், அப்படியேதான் இருக்கின்றன. இளமையையும், வாலிபத்தையும், முதுமையையும் ஒரு சேர அனுபவித்துக்கொண்டே காலம் நிற்கிறது. ஓடவில்லை. முதுமை மறுபடி வாலிபமாக, வாலிபம் மறுபடி பால்யமாக, பால்யம் மறுபடி வாலிபமாகி, முதுமையாக காலம் மாறாமல் நிற்கிறது. மாறவில்லை. ஆனால் சூழலுக்கு ஏற்றபடி மாறும் மனிதன்—பிறரை மாற்றியும் பிறரால் மாற்றப்பட்டும் பிறரோடு மாறியும் வரும் மனிதன் பழியை சௌகரியமாக, காலத்தின்மீது போட்டுவிடுகிறான்.

அப்படித்தான் மணிமேகலையும் மனிதர்களின் செயலை காலச் செயலாகக் கணக்கிட்டு, காலத்தை நொந்தாள். கண் முன்னாலேயே பிறக்கும் குழதை, அதே கண் முன்னாலேயே— அதே சமயம் அந்த கண்ணுக்குத் தெரியாமலேயே அணு அணுவாய் வளர்ந்து, தானே ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதுபோல, அந்த வீட்டு மனிதர்களும் அவள் உணராமலே— அதாவது படிப்படியாக உணர்ந்தாலும் மொத்தமாக உணராமலே மாறிக் கொண்டிருந்தார்கள். மாறாமல் இருக்க நினைத்த மணி மேகலையையும், அந்த மாற்றம் இட்டும், தொட்டும் இடையூறு செய்தும் மாற்றிக்கொண்டிருந்தது. ராமபத்திரன் மாறியிருந்தால் அவர்கள் மாறியிருக்காமல் இருந்திருக் கலாம். அவர் மாறவில்லை. அவர் புத்தி அப்படியேதான் இருந்தது.

ஒருநாள்; செவ்வாய்க்கிழமை என்று ஞாபகம்.

எல்லோரும் மத்தியானச் சாப்பாட்டு மயக்கத்தில் லேசாகத் தூங்கிக்கொண்டிருந்தபோது மணிமேகலை ஏதேதோ நினைவுகளுடன் வெளியேயுள்ள மாமரத்து

தூணில் உட்கார்ந்து, லட்சுமியின் மகன் சேகருக்கு ஒரு பனியன் பின்னிக் கொண்டிருந்தாள். தற்செயலாக வீட்டுப் பக்கம் திரும்பியவள் லட்சுமி ஒரு வட்டக் கண்ணாடியை கையில் வைத்துக்கொண்டு முகத்தில், உதட்டின் ஓரத்தை தடவிவிட்டுக் கொண்டிருந்தாள். மணிமேகலை அங்கிருந்தே குரல் கொடுத்தாள்.

"என்னக்கா, பெரியப்பா வீட்டுக்கு போறிங்களா? வெயிலாய் இருக்கே?"

"இல்ல!"

"நீங்க கண்ணாடியைப் பார்த்தத வச்சு சொன்னேன்."

"அவர இவங்க பேசுன பேச்சுக்குப் பிறகு, நான்தான் போகமுடியுமா? இல்ல... அவருதான் வரமுடியுமா? இந்த உதட்டுப் பக்கமாய் ஒனக்கு வந்தது மாதிரி ஒரு புள்ளி வந்திருக்கு. அத பாக்குறேன்."

மணிமேகலை விக்கித்துப் போனாள். பனியனில் தப்புத் தப்பாக பின்னல்கள் விழுந்தன. என்ன செய்வதென்று புரியாமலும், எப்படிப் பேசுவதென்று தெரியாமலும் லட்சுமியையே வெறித்துப் பார்த்தபோது, லட்சுமி அந்தப் பெயருக்கு எதிர்மாறான பெயரின் முகத்தைப் போல் தன் முகத்தை வைத்துக்கொண்டு கண்ணாடியை அதில் ஏதோ கோளாறு இருப்பதுபோல் உற்றுப் பார்த்துக்கொண்டு "ஒனக்கு இருக்கது மாதிரியே தான் வந்திருக்கு. எல்லாம் எதிர்பார்த்ததுதான்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய்விட்டாள்.

மாமரத்து வேரில் உட்கார்ந்து, அதன் அடியில் தலைவைத்து அமர்ந்திருந்த மணிமேகலைக்கு அந்த மரத்தின் ஒரு கிளையாகப் போய்விடக் கூடாதா என்று தோன்றியது. கிளையாக தன்னை எடுத்துக்கொள்ள மறுத்த மரத்தை தண்டிப்பவள் போல், தன் தலையை வைத்தே

அதில் அடித்துக்கொண்டாள். மரத்தின் வேருக்கு வேராக, அவள் போகத் துடித்தாள். அப்படித் துடிப்பவள்போல், வேருக்கும் மண்ணுக்கும் உள்ள இடைவெளிக்குள் பெருவிரலை விட்டுக் கிளறினாள்.

எப்படிப் பேசிவிட்டாள்! அப்படியா பேசினாள்? அப்படியா? எதிர்பார்த்ததுதானாம்! எனக்கு இருக்கது மாதிரியே இருக்காம்... எனக்கு எங்கே இப்போ இருக்கு? புள்ளி போயிட்டே! டாக்டர்கூட குணமாயிட்டு... ஆனால் மருந்தை நிறுத்தாண்டாமுன்னுதானே சொல்லியிருக்கார். லட்சுமி அக்காவா இப்படிப் பேசினது? லட்சுமி அக்காவா...?

பின்னிய பனியனில் வில்லங்கம் ஏற்பட்டது. ஊசியையும், நூலையும் உள்ளே வைப்பதற்காக அவள் வந்தபோது லட்சுமி தன் மாமியாரின் காதைப் பிடித்துக் கொண்டு "ஒங்களுக்கு லேசா தெரியுது அத்த" என்று சொன்னாள். அவள் சொல்லட்டும். ஆனால் இந்த மாமியார் மருமகளான தம்பி மகளிடம் இன்னொரு காதையும் நீட்டுகிறாள். புள்ளி இருக்கோ, இல்லியோ புள்ளி போடுகிறார்கள்.

மணிமேகலையைப் பார்த்த மாமியார்க்காரி, அவள் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நினைத்து "ஏம்மா வெளில போய் உட்காருற? எனக்கு காதுல லேசா வலி. முன்னால காத வடிச்சி தடயம் போட்டிருந்தேனா... அப்புறம் இவருகூட ஊர்ல இருந்து இங்க வந்த பிறகு காத அறுத்து கம்மல் போட்டனா... அறுத்துட்டு தச்சவன் சரியா தைக்கலியா... அதனால, வயசாக வயசாக லேசா வலிக்கு. அதத்தான் என் தம்பி மகள்கிட்ட காட்டிக்கிட்டு இருக்கேன்" என்றாள்.

மணிமேகலை, வெளியே சிரித்து உள்ளே அழுதாள். மாமியார் தன்னை நேரடியாகக் குறை சொல்லாததில்,

அவளுக்கு சற்று மகிழ்ச்சிதான். ஆனால் என்னமா நடிக்கிறார்? இவருக்கு, ஒரு காதுதானே வலிக்கதாய் சொல்வாரு. இப்பொ எப்படி ரெண்டு காதையும் காட்டணும். 'தம்பி மகள்கிட்ட' என்கிறாரே, நான் அந்நியம் என்கிறதை சொல்லாமச் சொல்றாரோ? ஒரு மாதத்துக்கு முன்னால சமையலறைப் பக்கம் போன போது... 'இனிமே நீ எங்களுக்கு உழச்சது போதும். நாங்க தான் ஒனக்கு உழைக்கணுமுன்னு' சொன்னாரே. அதுல நான் 'கொடுத்து வச்ச மருமகள்'னு சந்தோஷப்பட்டேனே... அது தப்போ? சமையலறைக்குள்ள என்ன விடக் கூடாதுன்னு அப்பிடிப் பண்ணியிருப்பாங்களோ? நான் பறிச்சி கொடுத்த முருங்கை இலைகளை பார்த்துட்டு 'ஒரே புழும்மா...' என்று சொல்லி அவற்றை வெளியில் எறிந்தார் களே, அவர் எறிந்தது கீரைகளையா? அல்லது...

வெம்பிப்போன மாம்பழம்போல் முகம் மாற, அவள் தன் அறைக்குள் வந்தாள். கணவன் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனை அப்போதே எழுப்பி, அப்போதே சொல்லி அப்படியே கட்டிப்பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

அந்த இரண்டு நிமிட மனக் கலக்கத்தை பத்து நிமிடமாகப் போராடி அடக்கிக்கொண்டு கண்ணயர்ந்த கணவனையே பார்த்தாள். வெளிலே நிற்கும்போது, மல்லாந்து படுத்து ஏதோ ஒரு புத்தகத்தை படிப்பதுபோல் தெரிந்த கணவன் உடனடியாகத் தூங்கிவிட்டதில், அவளுக்கு அவன்மீது அனுதாபம் ஏற்பட்டது. படுத்தவுட னேயே தூங்கிவிடுகிற பழக்கம். சர்தார் படேலும், மகாத்மா காந்தியும் இப்படித்தான் தூங்கிவிடுவார்களாம். அவ்வளவு உறுதியான மனமாம்...

தலைவர்களோடு தன் கணவனை ஒப்பிட்டபோது மணிமேகலைக்குப் பெருமையாக இருந்தது. கொஞ்சம்

அனுதாபமும் ஏற்பட்டது. 'இனிமேல்... வழியே இல்லை' என்பதுமாதிரி துக்கம் வரும்போதெல்லாம், இயற்கை தூக்கத்தைக் கொடுப்பது அவளுக்கே தெரியும்... பாவம்! படுத்தவுடனே தூங்கிடுறாரே... இருக்காதா பின்னே... லேத் மிஷின் இன்னும் வரல. பெட்ரோல் விலை தீர்மானம் ஆகிறது வரைக்கும் பங்க் கிடைக்காதாம். இதுவாவது பிஸினஸ்; கவலயில்ல! பொறுப்புணர்வு. ஆனால் கட்டின மனைவிக்கு ஏற்பட்டிருக்கும் 'அதை' நினைத்தால் கவலை இருக்காதா? என்மேல உயிரையே வச்சிருக்கவரு... என் உடம்புக்கு வந்தத தன் உயிருக்கு வந்ததா நினைச்சுக் கிட்டாரு... எழுந்திருக்கட்டும். 'இப்படியா கவலப் படுறதுன்னு' நல்லா திட்டணும்.

மணிமேகலை அவனுக்கருகே ஒரு காலை தந்தையின் இடுப்பில் போட்டுக்கொண்டு தூங்கும், தன் மூன்று வயது மகனையே பார்த்தாள். முன்னால் துருத்திக்கொண் டிருக்கும் முடி அப்பாவைப் போன்ற உருண்டை முகம். அதே கம்பீரம். அம்மாவைப் போன்ற பப்பாளிப் பழநிறம். அளவுக்கு மீறி வருத்தப்படும் போதெல்லாம், கன்னத்தில் கைவைத்து நிற்கும் தன்னருகே வந்து முன் கைக்கும், தோளுக்கும் இடையே தலையைத் திணித்துக் கொண்டு அறிந்தோ அல்லது அறியாமலோ கையை அவன் எடுத்து விடுவான். அந்த நிமிடத்திலேயே அவள் தன்னையே மறந்துவிடுவாள். ஓசைப்படாமல் குழந்தையின் கன்னத்தில் ஒரு முத்தத்தைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தபோது அவள் கைபட்டு தூக்கம் கலைந்து கணவன் எழுந்தான்.

லட்சுமி சொன்னதை கணவனிடம் சொல்லலாமா என்று அவள் யோசித்தபோது, ஜெயராஜ் மடமடவென்று எழுந்து ஹேங்கரில் தொங்கிய பேண்ட், சட்டையைப் போட்டுக் கொண்டான். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில், முன்பெல்லாம் அவள் கைகளைப் பிடித்திழுத்து தன்மேல்

கவிழ்க்கும் அவன் இப்போது முறுவலிக்காமலே எழுந்து என்னவென்று கேட்காமலே, உடையணிந்து புறப்படப் போனான். அவனிடம் நடந்ததைக் கூறி, முடியுமானால், கணவனுடன் சொத்தைப் பிரிக்காமலே தனியாக இருக்கலாம் என்று யோசனை சொல்வதற்காக, அவள் நெஞ்சுக்குள் வார்த்தைகளுக்கு வடிவம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் புறப்படப் போனபோது "ஓங்களத்தான்! ஒரு முக்கியமான விஷயம் பேசணும்" என்றாள் ஜெயராஜ் அதைவிட முக்கியமான விவகாரத்திற்குப் போகப் போகிறவன்போல், இரண்டு கன்னங்களையும் 'டென்ஷனாக' உப்பிக்கொண்டே "அப்புறமாய் பேசலாம். இப்போ பேக்டரிக்கு அவசரமாய் போகணும்" என்றபோது, அவள் "ஐ அம் ஸாரி" என்றாள். இரண்டு நிமிட இடை வேளைக்குப் பிறகு 'இன்னும் மோட்டார் பைக் ஸ்டார்ட் ஆன சத்தம் கேட்கவில்லையே' என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோது வரவேற்பு அறையில் இன்னொரு சத்தங் கேட்டது. லட்சுமியின் தங்கை வசந்தி வந்திருக்காள் போலும். அவளும் கணவனும் பேசுவது நன்றாகக் கேட்டது. மற்றவர்கள் பேசுவதும் தெளிவாகக் கேட்டது.

"வசந்தி! நீ புறப்படுகிற சமயத்துல எதிர்ல வந்திருக்கே. இன்னைய ஈவினிங் எப்படிக் கழியுதுன்னு பார்க்கலாம்."

வசந்தி கவிழ்ப்புப் பார்வையுடனேயே பேசினாள்.

"எங்கப்பா எந்த நோயும் இல்லாம ஏன் ஹெல்தியாய் இருக்கார் தெரியுமா? சொல்லுங்க பார்க்கலாம்."

"சொன்னால் பார்க்க முடியாது. கேட்கத்தான் முடியும். நீயே சொல்லு பார்க்கலாம்."

"நீங்களே பார்க்கலாமுன்னுதானே சொல்றிங்க..."

“ஓ அதுவா? ஒன்னமாதிரி அழகான பொண்ணு பேசுனாலும், பாடுனாலும் கேட்க முடியாது. ஆளையே பார்த்துக்கிட்டு இருக்கலாம் போலத் தோணும்.”

வசந்தி தன் கவிழ்ந்த பார்வையை அவனை நோக்கி வீசியபோது பாமா, “ஏய்... மாட்டிக்கிட்டாங்க... மாட்டிக் கிட்டாங்க...” என்றாள். ஜன்னல் வழியாக தவியாய் தவித்த மணிமேகலை பாமாவையே பார்த்தாள். இந்த பாமாகூட மாறியிருப்பாள் போலுக்கே. ஆரம்பத்தில் அவளுக்கு வந்ததை தனக்கு வந்ததுபோல் கருதியவளாய் கன்னம் வீங்க அழுத அவள், இப்போது அதே கன்னங்கள் வீங்கும்படி சிரிக்கிறாள். சீச்சி! நான் ஒரு பிசாசு! பேய்! அரக்கி! பிறர் சந்தோஷப்படுறதை பொறுக்க முடியாத பொறாமைக்காரி!

வெளியே கும்மாளமான பேச்சு அவள் காதில் குத்தியது. ஜெயராஜ், வசந்தியைச் சீண்டினான்.

“சரி ஸப்ஜெக்டுக்கு வருவோம். ஒப்பா ஹெல்தியாய் இருக்கதுக்கு என்ன காரணம்? சிட்டுக்குருவி லேகியம் சாப்பிடுறாரா?”

“இல்ல தினமும் காலையில எழுந்ததும் என் முகத்துலதான் விழிக்காரு.”

“ஓஹோ! இந்த சிட்டு முகத்துல விழிக்காரா? அப்படின்னா ஒண்ணு பண்ணேன். தினமும் நான் தூங்கி எழுந்திருக்கு முன்னால என் முகத்துல விழியேன்.”

“அதத்தான் ஒங்க அப்பா கெடுத்துட்டாரே” என்று கிழவிக்காரி பெருமூச்சு விட்டாள்.

ஜெயராஜுக்கு திருமணம் ஆகும்போது, வசந்தி ‘பெரியவளாக’வில்லை. ராமபத்திரன் தன் மகள் பெரிய வளானவுடனேயே ஜெயராஜுக்குக் கொடுப்பதாகவும்

அதுவரை அவனைக் காத்திருக்கச் செய்யும்படியும், அக்கா கிழவியிடம் சொன்னார். ஆனால் கிழவர் மறுத்துவிட்டார். "ஒன் தம்பி வீட்ல பெண்ணு எடுக்க இன்னும் எனக்குப் பைத்தியமா?" என்றார். ஜெயராஜ், அம்மாவிடம் 'ஒனக்குப் பைத்தியமா? இல்ல ஒங்க தம்பிக்குப் பைத்தியமா? இல்ல ஒங்க ரெண்டு பேருக்கும் பைத்தியமா? அவள் வய சென்ன... என் வயசென்ன" என்று சொல்லிவிட்டான்.

கிழவி பழையதை கோடி காட்டிப் பேசியதால் பாதிக்கப்பட்டவர்கள் போல், எல்லோருமே சிறிது துணுக்குற்றார்கள். ஜெயராஜ் எதையோ சிந்திப்பவன் போல் மோட்டார் பைக் சாவிக்கொத்தின் வட்டத்தைப் பிடித்து சுற்றிக் கொண்டிருந்தான். பிறகு திடீரென்று மோட்டார் பைக்கை நோக்கிப் புறப்படப் போனான். உடனே வசந்தி "உங்களுக்கென்னய்யா, மோட்டார் பைக் இருக்கு ஒரு நொடில போயிடுவிங்க. நான்தான் எங்க வீட்டுக்கு நடந்து போகணும்" என்றாள்.

சங்கரன் சும்மா இருக்கலாம். இருக்கவில்லை.

"வேணுமுன்னால் பின்னால ஏறிக்கோ. ஒன்னை வீட்ல 'டிராப்' பண்ணிடுவான்."

ஜெயராஜ் ஸ்டார்ட் செய்த பைக்கில் எதையோ துடைப்பவன்போல் 'பாவலா'. செய்தபோது வசந்தி, லட்சுமியை தர்மசங்கடத்துடன் பார்க்க கிழவி, "அய்யா கூடப் பிறந்த அத்தை மகனோட போக யாருகிட்ட கேக்கணும்? வேணுமுன்னா போ" என்றாள். லட்சுமி "ஆமாம். சீக்கிரமா வீட்டுக்குப் போயிடலாம். அடேயப்பா, எங்க வீடு எவ்வளவு தொலவுல இருக்கு" என்றாள்.

ஜெயராஜின் 'பைக்' இன்னும் நகரவில்லை. வசந்தி தயங்கித் தயங்கியே நடந்தபோது, பாமா "இவங்க சரியான கர்நாடகம்" என்றாள். உடனே வசந்தி தான், மிஸ்.

மெட்ராஸ் என்பதுபோல் வேகமாக நடந்து, பின் ஸீட்டில் உட்கார்ந்தாள்.

'பைக்' நகர்ந்தது. மணிமேகலையும், தெருவைப் பார்த்திருந்த ஜன்னலருகே நகர்ந்தாள். அவள் இருதயம் அந்த எஞ்ஜின் மாதிரி துடித்தது. வசந்தி தன் கவிழ்ப்புப் பார்வையை உரிமைக்காரியின் மீது வீசினாள். மணி மேகலை மறைந்து கொண்டாள்.

ஜெயராஜூம், வசந்தியும் சிரித்துக்கொண்டே போனார்கள். சற்று தொலைவில், அவன் திரும்பி அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே செல்வதும், அவளும் பதிலுக்கு எதையோ சொல்லிச் சிரித்துவிட்டு, தான் சாய்ந்திருக்கும் ஜன்னலையே பார்ப்பதும் மணிமேகலைக்குத் தெரிந்தது. அவளால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கணவனுடன் பைக்கிலும் பல இடங்களுக்குப் போயிருக்கிறாள். அநேகமாக மாலை சமயங்களாகத்தான் இருக்கும். சாலையில் ஆட்கள் கண்ணில் படாதபோது அவன் தன் முழங்கையை வைத்து அவளை இடிப்பான். அவள், அதற்குப் பயந்ததுபோல் தன் இடுப்புக்கு மேலுள்ள பகுதியை அவன் முதுகோடு இறுக்கிக்கொண்டு அவன் விலாவில் முகத்தை வைத்து உராசுவாள். அவரும்... இவள்கிட்டயும் அப்படி நடப்பாரோ? அவளும்... என்னை மாதிரியே... என்னை மாதிரியே...

மணிமேகலைக்குக் கண்ணீர் வரவில்லை. அளவுக்கு மீறித் துக்கம் வந்தால், கண்ணீர் வராதாம். அது துக்கத்துக்குப் பயந்து ஒதுங்கிக் கொள்ளுமாம். அவசரமாக வேலையிருப்பவர் போலவும், மனைவியிடம் அரைநிமிட நேரங்கூடப் பேச அவகாசம் கிடைக்காமல் போனவர் போலவும், அறையை விட்டு வெளியேறியவர், அரைமணி நேரம் பேசிவிட்டுப் போகிறார். பேசிவிட்டு சும்மா

போகவில்லை. வசந்தியுடன் போகிறார்! வசந்தி வரும் போதெல்லாம் 'கவு கண்ணுப் பேய் வந்துட்டு... இவளைப் பார்த்துட்டு போற காரியம் உருப்பட்டாப் போலத்தான். அவளுக்கும், அவள் அப்பன் மாதிரியே புத்தி... அற்பப் புத்தி' என்று முன்பு அடிக்கடி சொல்பவர்; தான் அவரது வாயை 'அப்படிப் பேசக்கூடாது' என்பது போல் கைவிரல்களால் மூடும் போதெல்லாம், அந்த விரல்களைக் கிள்ளி விலக்கிவிட்டு வாய்க்கு விடுதலை வாங்கி வார்த்தைகளை வெளியிடுபவர்; இப்போது அதே வசந்தியை, காலையில் வரச் சொல்கிறார். கவு கண்ணுப் பேய் சிட்டாகிவிட்டாள். அற்பப் புத்தி அற்புதப் புத்தியாகிவிட்டது. பேய் பின்னால் உட்கார்ந்துவிட்டது.

தனக்குள்ளே சத்தம் போடுவதுபோல் விவாதித்துக் கொண்டிருந்த மணிமேகலை, வரவேற்பு அறையில் எஞ்சி யிருப்பவர்களின் பேச்சையும் காதில் வாங்கிக் கொண் டாள். லட்சுமியின் குரல் பலத்தது.

"ஒங்களத்தான் என்னை போற வழில எங்க வீட்ல விட்டுட்டுப் போங்க."

"நான் கார்ல சோளிங்கர் போறேன்."

"காருக்கு ஆசப்பட்டுத்தான் கேட்கேன். ஒங்கமேல ஆசப்பட்டுன்னு நினைக்காதிங்க."

"ஒனக்கு வரவர வாய் அதிகமாவுது. இப்போ ஒப்பா வீட்ல என்ன பண்ணப் போற?"

"ஆயிரம் இருக்கும். நீங்க அவரைத் துரத்திட்டீங்க. ஆனால் நான் அவருகிட்டே பேசியாகணும். யாருகிட்ட மறச்சாலும் அவருகிட்ட மறைக்கப்படாது."

"என்ன உளறுற!"

"ஒண்ணும் உளறல. கார்ல போகும்போது சொல்றேன்."

"ஓ! இப்பதான் எனக்குப் புரியுது. ஏய்... என் தம்பி... ஒன் தங்கச்சிய எங்கேயும் கொண்டு போயிட மாட்டான். வீட்லதான் விட்டிருப்பான். நீ 'செக்' பண்ண வேண்டியதில்ல."

"ஒங்களுக்கென்ன பைத்தியமா?... அத்தை மகன் பாடு... மாமா மகள் பாடு... நான் அப்பாவ அவசரமா பார்த்தாகணும். பெத்தவருக்குத்தான் தெரியும் பிள்ளை அருமை."

இப்போது கிழவி இடைமறித்தாள்.

"கொண்டுதான் விட்டுடேண்டா. அவள் இந்த வீட்ல கால் வச்சபிறகு வாங்கின காரு இது. அவளுக்கில்லாத காரா?"

சங்கரனும், லட்சுமியும் காரில் போனார்கள். மணிமேகலை பதைபதைத்தாள். லட்சுமி அப்பாக்காரரிடம், தன் உதட்டுப்பக்கம் புள்ளி இருப்பதாகச் சொல்லப் போகிறாள். அந்த மனிதர் இங்கே வந்து குதிக்கப் போகிறார். பாகப் பிரிவினையைத் தடுத்த தன் உடம்பின் ஒவ்வொரு பாகத்தையும் வெட்டுவது போல பேசப் போகிறார்.

ராமபத்திரன் வருவாரே என்ற எண்ணத்தை அவள் வலுக்கட்டாயமாக விலக்கும்போது, வசந்தி கணவனுடன் சேர்ந்து போன நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. இது போனால் அது... அது போனால் இது...

மணிமேகலை, இன்னும் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையையே பார்த்தாள். ஏனோ, அவனை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. அவனை 'என் ராசா... ஒன்னத்தான்' என்று சொல்லி தட்டியெழுப்பினாள். அப்படியும் தூங்கிய குழந்தையை வாரியெடுத்து, தோளோடு சேர்த்து எடுத்துக்கொண்டே வெளியே வந்தாள்.

வீட்டுக்குப் பின்னால் வந்து, அவள் முருங்கை மரத்தை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தபோது, தன் தோளில் யார் கையோ படுவது கண்டு அவள் திரும்பி னாள். கடைக்குட்டி மைத்துனியான இந்திரா—இன்னும் பதின்மூன்று வயதுகூட முடியாத அந்தச் சிறுமி, அண்ணி யின் மனவுளச்சலைப் புரிந்துகொள்ளும் பக்குவம் செல் லாத அவள், அண்ணி ஏதோ கஷ்டப்படுவதால், தானும் கஷ்டப்படுவது போல் மணிமேகலையின் முன்னால் வந்து அவள் மாராப்புச் சேலையை இழுத்து மூடி, காதுப் பக்கம் தொங்கிய முடியை ஒதுக்கி, கை வளையல்களை உருட்டினாள். எல்லாவற்றிற்கும் மேலாக அந்தக் கண்கள் அன்பைச் சொட்டின.

மணிமேகலையால் தாள முடியவில்லை. மைத்துனி யின் கைகளைப் பற்றிக்கொண்டே "நீ நல்லா இருப்பம்மா. நல்லா இருப்பே..." என்று சொல்லி விம்மினாள்.

"எதுக்கு அண்ணி அழுவுறிங்க? நோய்தான் சுகமா யிட்டே!"

"ஒண்ணுமில்லம்மா. எதையோ நினைச்சால் என்னமோ வருது. நான் அழுததை யாருகிட்டயும் சொல்ல மாட்டியே?"

"சரி அண்ணி. பிள்ளியக் குடுங்க. ஒங்களுக்கு கை வலிக்கும்."

எந்தச் சமயத்தில் ராமபத்திரன் வரப்போகிறாரோ என்று, அவள் முருங்கை மரத்தை சுற்றிச் சுற்றியே வந்தபோது, பூமியும் தன்னைச் சுற்றியதில் இரவு வந்தது.

லட்சுமி வந்தாள். வசந்தியை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாள். இந்திரா மூலம் விசாரித்ததில், மணி மேகலைக்கு இரண்டு இனிப்புச் செய்திகள் கிடைத்தன. ராமபத்திரன் தூத்துக்குடிப் பக்கம் போயிருக்காராம்.

வருவதற்கு ஒரு வாரம் ஆகுமாம். மகள் வசந்திக்கு, அங்கே ஒரு வரன் இருக்காம். பையனைப் பார்த்துவிட்டு, அல்லது அவனைப் பார்க்க முடியாவிட்டாலும் பெரிய காரிய மில்லை, அவன் சொத்துச் சுகங்களைக் கண்டிப்பாகப் பார்த்துவிட்டு வரப் போகிறாராம். ஆக ஆசாமி, இப்போதைக்கு வரமாட்டார். அவர் லட்சியம்—போன காரியம்—வெற்றி பெற வேண்டும். மோட்டார் பைக்கின் பின்ஸீட் காலியாக இருக்க வேண்டும்.

மணிமேகலை, சந்தோஷத்தில் தன் குழந்தையை தூக்கிப் போட்டுப் பிடித்தாள். வெளியே விளையாடிக் கொண்டிருந்த ரமாவைப் பார்த்து "வா, பாடம் படிக்கலாம்" என்றாள். ரமாவுக்குப் பதிலாக லட்சுமி 'புரக்ஸி' அட்டெண்டென்ஸ் கொடுத்தாள்.

"அவள் விளையாடட்டும். விளையாடுற பிள்ளய கெடுக்காண்டாம்."

அந்தச் சமயத்தில், அந்த வார்த்தை பெரிதாகத் தெரியவில்லை. கணவன் வந்ததும் லட்சுமி 'புள்ளி' போடுவதை பக்குவமாகச் சொல்லி, தனியாக ஒரு வீடு பார்த்து இருக்க வேண்டும். டாக்டர் சொல்லியும், சந்தேகப் படும் இவர்களுக்கு ஒரு 'மெண்டல் ட்ரீட்மெண்ட்' தேவை. அவர்களுக்கு மனநோய் வந்திடக் கூடாது. அதற்கு மருந்து கணவனுடன் விலகியிருப்பதுதான்.

ஜெயராஜ், இரவு பத்து மணிக்கு வந்தான். அயர்ந்து படுத்துக் கிடந்த மணிமேகலையை எழுப்பினான். அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. என்னதான் இருந்தாலும் கட்டிய கணவனாச்சே. அடியே வசந்தி! இங்க பாருடி! இப்போ என்னடி சொல்ற?

தாங்கள் பேசுவது, பிறருக்குக் கேட்க வேண்டாம் என்பதுபோல் மணிமேகலை கதவைச் சாத்தப் போனாள். ஜெயராஜ் சாவதானமாக ஆணையிட்டான்.

"கதவச் சாத்தாதே. இங்க ஒரே புழுக்கமாய் இருக்கு. பெட்ஷீட் வேணும். அதுக்குத்தான் ஒன்னை எழுப்பி னேன். வராந்தாவுல படுக்கப் போறேன்."

ஜெயராஜ், அவள் பதிலையோ அல்லது அவளையோ எதிர்பாராததுபோல் போகப் போனான். 'இங்கே ஜன்னல் காற்று நல்லா வருமே' என்று சொல்லப்போன அவள், அந்த வார்த்தைகளைக் கடிப்பவள் போல் பற்களைக் கடித்தாள். மத்தியானமே ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும் என்று சொல்லியாகிவிட்டது. இப்போது பேசலாம் என்று அப்போது சொன்ன அவரே, எப்போதும் பேச விரும்பாதவர்போல போகத் துடிக்கிறார். போகட்டுமே—போனால் போகட்டுமே...

ஜெயராஜ் போய்விட்டான். அந்தச் சுவருக்கு அருகே உள்ள இடத்தில்தான் படுக்கப் போகிறான் என்றாலும், அவன் எங்கேயோ போவதுபோல் தோன்றியது. இரு வருக்கும் இடையே இருப்பது ஒரே ஒரு குறுக்குச் சுவர் தான்... இதை இடித்துக் கொண்டுபோய், அவரைப் பார்க்க முடியாது. இந்த நான்கு சுவர்களுக்குள் உள்ள இடிபாடு களுக்குள்ளேயே அவள் இருந்தாக வேண்டும்.

இவரும் மாறிவிட்டாரே. ஒருவேளை இங்கே இருந்தால் உடலுறவை கேட்பேன் என்று நினைக்கிறாரோ? இந்த நிலைமையில் 'அதுவா' பெரிசு? சரியாய் இரண்டு மாதம், எட்டு நாளாகிறது—இவருடன் அந்தரங்கமாய் பேசி, அந்தரங்கங்களைப் பகிர்ந்து நாட்டில் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக, லூப், வாசெக்டமி, நிரோத், டூபெக்டமி என்கிறார்களே... அதெல்லாம் தேவையில்லை. ஒரு பெண்ணுக்கு 'அந்த' வியாதி வந்திருப்பதாய் சொல்லிட்டால் போதுமே, அப்புறம் ஜனத்தொகை தாராளமாய் குறையுமே. இது ஏன் இந்த சர்க்காருக்கு தெரியமாட்டக்கு? எழுதிப் போடணும்...

மணிமேகலை, தனக்குள்ளே பேசிய நகைச்சுவையை தானே கேட்டு தானே ரசித்து, தானே சிரித்து, தானே அழுதாள். தூங்கிக் கொண்டிருந்த பையனின் கால்களை எடுத்து தன் மடியில் போட்டு, அவன் கையை எடுத்து பெற்ற வயிற்றில் வைத்துக்கொண்டு அழுத்தினாள்.

வெளியே—

"பரவாயில்லயே... என் முகத்துல காலையில விழிக்கதுக்காக வந்துட்டாளே வசந்தா."

"ஒங்க முகத்துல நான் விழிக்கதுக்காக அல்ல; என் முகத்துல நீங்க விழிக்கதுக்கு."

"அப்படின்னா, என் ஹெல்த்தைப் பற்றி நான் பயப்படாண்டாம். ஆஹா... ஒஹோ... ஹா... ஹோ ஹி.. ஹி..."

உள்ளே—

அம்மாவின் வயிற்றோடு தன் கையை வைத்திருந்த குழந்தை, அந்த வயிற்றின் சூடு தாங்காமல் கையை எடுத்தது.

## 9

ஒரு வாரம், தவிப்பும் திகிலுமாக மணிமேகலை துடித்தாள். அப்பாவின் நினைவு அடிக்கடி வந்தது. அண்ணிக்காரியின் ஞாபகம்கூட வந்தது.

தபால்காரர் கொடுத்துவிட்டுப் போன கடிதத்தைப் படிக்கும்போது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அப்பா சுகமாக இருக்கிறாராம். அண்ணிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம். பரணி நட்சத்திரமாம். தரணி ஆள்வானாம்!

சந்திரன் கடிதம் போட்டிருந்தான். ரயில் நிலையத்தில், அவன் இரண்டு கண்களும் போனதுபோல் உணர்வதாய் சொன்னானாமே, அது இன்னும் போகவில்லையாம். அக்கா, அடிக்கடி கடிதம் போடாதது வருத்தமாம். உடனே கடிதம் போடவில்லையென்றால, ரயிலேறி வந்துவிடு வானாம்.

அட கடவுளே! இவன் வேறயா? நான் படுற பாடு போதாதா?

தம்பிக்கு உடனடியாகக் கடிதம் எழுதி, சூசகமாக வரவேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். அப்போது அந்தப் பக்கமாக வந்த பாமா அண்ணியின் கையிலிருந்ததை அர்த்தபுஷ்டியுடன் பார்த்ததும், மணிமேகலை "சந்திரன் எழுதியிருக்கான். 'உங்கள் நினைவாய் இருக்கேன்னு' எழுதியிருக்கான். 'உங்கள் என்பது பன்மையா, இல்ல. அக்கா என்கிற மரியாதை ஒருமையான்னு தெரியல" என்றாள் சிரிப்பை வலிய வரவழைத்துக்கொண்டு. அது வந்தால்தானே?

பாமா, சிறிதுநேரம் அந்தக் கடிதத்தையே பார்த்தாள். அவள் கண்கள் எங்கேயோ பார்த்தன. கைகள் தானாக வங்கி மோதிரத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டன.

மணிமேகலைக்கு மகிழ்ச்சி. தன்னை விட்டு சிறிது விலகி நின்றாலும் தன் தம்பியை அவள் மறக்கவில்லை. முந்தா நாள்கூட, சங்கரன் வாங்கிக்கொண்டு வந்த கரும்பைத் தின்னும்போதுகூட, "இந்தக் கரும்பு இனிக்கல" என்று 'இந்த'வுக்கு ஏகப்பட்ட அழுத்தம் கொடுத்து, வலது உள்ளங்கையை இடது கைவிரல்களை குவித்து அழுத்திய கள்ளியாயிற்றே...

பாமா போய்விட்டாள்.

இதற்குள் நாலைந்து வீடுகள் தள்ளியுள்ள ஒரு வீட்டில், அவுட்ஹவுஸில் குடியிருக்கும் கம்பவுண்டர் மணி

வந்தான். மணிமேகலையை அடிக்கடி டெஸ்ட் செய்யும் டாக்டருடைய நர்ஸிங் ஹோமில் வேலை பார்ப்பவன். இவள், அவனை அண்ணனென்றோ அல்லது தம்பி யென்றோ சொல்லமுடியாத வயது. இருந்த இடம் தெரியாதபடி இருப்பவன். அவன்தான் அடிக்கடி வந்து, மாத்திரைகளைக் கொடுத்துவிட்டுப் போவான். சில சமயம், அவள் நோய்த் திகிலில் இருக்கும்போது, அந்த நோய் பற்றிய புத்தகங்களைப் படித்துக் காட்டிவிட்டுப் போவான். "நல்லா படியுங்க. நாளைக்கு டெஸ்ட் வைப் பேன்" என்று அவள் மகிழ்ச்சியாக இருந்தால், தமாஷாக சொல்லிவிட்டுப் போவான். அவனைப் பார்த்ததும் மணிமேகலைக்கு ஆறுதலாக இருந்தது.

"லட்டர்ல விசேஷமா? சந்தோஷமா இருக்கிங்க..."

"பரவாயில்லியே... டக்குன்னு கண்டுபிடிச்சிட்டிங் களே... அண்ணிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்காம். தரணி ஆளப்போற பரணி நட்சத்திரமாம். அவன் பிறந்த நேரத்துலயாவது, எனக்கு சுகமானால் சரி."

"என்ன நீங்க? உங்களுக்குச் சுகமாயிட்டு, சுகமாயிட் டுன்னு எத்தன தடவ சொல்றது. இப்போ நீங்க என்னை மாதிரி... ஆரோக்கியமான யாரையும் மாதிரி—ஒரு நார்மல் பேஷன்ட்."

"அப்படின்னா, இன்னும் மூணு வருஷம் மாத்திரை சாப்பிடணுமுன்னு ஏன் கஷ்டப்படுத்துறிங்க?"

"இனிமேல் நீங்க கஷ்டமே படக்கூடாது என்கிறதுக்குத் தான். உடம்புல ரிஸிஸ்டன்ஸ் இல்லாததுனாலதான, கிருமிகளுக்குக் கொண்டாட்டமாயிடுது. மூணு வருஷம் ரிஸிஸ்டன்ஸ் பவரைச் சேர்க்கதுக்குத்தான். அதோட தப்பித் தவறி, உடம்புக்குள்ள அந்த கிருமியோ நோயோ இருக்கப்படாது பாருங்க."

"அய்யய்யோ! அப்படின்னா, இன்னும் எனக்கு நோயிருக்கா?"

"இல்லம்மா. சத்தியமாய் இல்ல. இருந்தாலும் ஜாக்கிரதையா இருக்கணும் இல்லியா? இது கன்னிப் பெண்ணுக்குப் போடுற காவல் மாதிரி. இதனால அவள் கெட்டுப் போயிடுவான்னா அர்த்தம்? ஒருவர் சில்லறைக் காசுகள கொடுக்கும்போது எண்ணிப் பார்க்கிறோம். இதனால கொடுத்தவர்மேல சந்தேகப்படுறதாவா அர்த்தம்? இது மாதிரிதான், நீங்க மாத்திரை சாப்பிடறதும் உங்களுக்கு இப்போ எந்த நோயும் கிடையாது. என்னை நம்புங்க. நான் பார்மஸி கோர்ஸ்ல டிப்ளமா வாங்குனவன்."

மணிமேகலை அவனை நம்பியவள்போல் லேசாகச் சிரித்தாள். பிறகு எதையோ சொல்ல நினைப்பவள் போலவும், சொல்லத் தயங்குபவள் போலவும் ஆள்காட்டிவிரலை உதட்டில் வைத்து அடித்தாள். மணி புரிந்து கொண்டான். பொல்லாத மணி.

"எதையோ சொல்ல வந்திங்க போலுக்கு?"

"ஆமாம். பரவாயில்ல சொல்லிடுறேன். நான் இப்போ நார்மல் லேடிதான்னு எங்க... என் வீட்டுக்காரர்கிட்ட சொல்லிடுவிங்களா?"

"எப்பவோ சொல்லிட்டேனே. இன்னைக்கும் சொல்றேன்!"

மணிமேகலை திடீரென்று எழுந்தாள். ராமபத்திரன்!

ராமபத்திரன் ஆவேசமாக உள்ளே வந்தார். அக்காள் காரியை ஒரு உலுக்கு உலுக்கினார்.

"என்னக்கா இதெல்லாம்? எதுக்கு சும்மா இருக்கணும். எதுக்கு சும்மா இருக்கப்படாதுன்னு ஒரு வரமுறை வேண்டாம்? லட்சுமியானதால பொறுத்துக்கிட்டாள். ஒன்

பொண்ணுன்னா பொறுப்பியா? பாமாவுக்கு கன்னத்துல புள்ளி வந்தால் பொறுப்பியா? சீதாவுக்கு காலுல புள்ளி வந்தால் பொறுப்பியா? என் பொண்ணுன்னா ஒங்களுக்கு அவ்வளவு இளக்காரம்!"

"என்னடா சொல்ற?"

"பின்ன என்ன... இன்னைக்கி இவளுக்கு வந்திருக்கு; நாளைக்கு அவருக்கு வரும். ஒனக்கு வரும். தள்ளாத வயசுல மச்சானுக்கு வரும். இந்த வீட்டுக்கு வார எனக்குக்கூட வரும். விளையாடுறதுக்கு விளையாடணும்; விளையாடாததுக்கு விளையாடப் படாது!"

"என்ன பண்ணணுமுன்னு நீயே சொல்லேன்!"

"நம்ம குடும்பத்துல இருக்கிற எல்லாரும் டாக்டர் கிட்ட டெஸ்ட் பண்ணிக்கணும்."

"இதோ வாராங்களே இவங்ககிட்ட சொல்லு. ஒருத்திக்கு வந்திருக்கது ஊருக்கே வருமுன்னு சொல்லு. ஒன் பேச்சைக் கேட்டிருந்தால் இந்த கதி வந்திருக்காது. இப்போ சொல்லியும் லாபமில்ல... சொல்லாமலும் லாபமில்ல..."

ராம—லட்சுமணர்போல் அங்கே வந்த சங்கர—ஜெயராஜ் சகோதரரில், மூத்தவன் "ஊர்ல இருந்து எப்போ மாமா வந்திங்க?" என்று எடுத்துக் கூற, "வசந்திக்கு கல்யாணம் ஒழுங்காயிட்டுதா?" என்று இளையவன் தொடுத்துக் கூறினான். மருமகன்களின் உபசரிப்பு மாமனாருக்கு மிளகில் பப்பாளி விதையை கலப்படம் செய்து விற்கும்போது ஏற்படும் திருப்தியைச் சாதாரணமாக்கியது.

"பின்ன என்ன மாப்பிள்ளை. எதுக்கு மரியாத கொடுக்காட்டாலும், வயசுக்கு மரியாத கொடுக்காண்டாமா?"

"ஏன்? ஊர்ல மாப்பிள்ளை வீட்ல மரியாதக் குறைவா நடந்துகிட்டாங்களா?"

"நான் அதச் சொல்லல. வசந்திக்கு பார்த்த மாப்பிள்ளை பட்டந்தான் பி.ஏ. கிம்பளம் வாங்காமல் சம்பளத்துலேயே காலந்தள்ளப் பார்க்கிறவனாம். எப்படிப்பட்டவன்? சர்க்கார் வேலையில எப்படி குப்ப கொட்டுவான்? அவன எவனும் தள்ளாம இருப்பானா என்ன? விடுங்க குப்பைய! நான் அதைச் சொல்லல... நான் சொல்ல வந்தது லட்சுமிக்கு புள்ளி வந்திருக்கு. நாளைக்கு அவருக்கு வரும். மறுநாளைக்கு இவருக்கு வரும். மறுநாளைக்கு இவருக்கு வரும். டாக்டர்கிட்ட டெஸ்ட் பண்ணுனா என்ன? என்னேன்னன்..."

ஜெயராஜ் சப்புக் கொட்டிக்கொண்டே பேசினான்:

"ஆல்ரைட்! இன்னைக்குச் சாயங்காலமே நம்ம டாக்டர் குமரன்கிட்ட செக்கப் பண்ணலாம். இப்போ திருப்திதானே?"

ராமபத்திரன் முதல் ரவுண்டில் வெற்றி பெற்ற குஸ்தி வீரன்போல் ஜாக்கிரதையாகப் புன்முறுவல் செய்தபோது, மணிமேகலை அருகில் நின்றுகொண்டிருந்த கம்பவுண்டர் மணி அங்கே வந்தான். அவனால் பொறுக்க முடியவில்லை. "தயவுசெய்து, நான் சொல்றத கேளுங்க. நானும், லட்சுமியம்மாவோட புள்ளியப் பார்த்தேன். லேசா பஞ்சை வைத்து அமுத்துனேன். வலிக்குதுன்னாங்க. அதனால அது வெறும் பூச்சிக்கடிதான். நோயைவிட, நோய் வந்திருக்கோ என்கிற பீதிதான் மோசமானது."

ராமபத்திரன் எகிறினார். யாரும் தடுக்க முடியாத அளவிற்கு எகிறினார்.

"பேசாம உன் வேலய பார்த்துக்கிட்டு போயேன். நீ எதுக்கு வார என்கிற சங்கதி எனக்குல்லா தெரியும்? நாளைக்கு என் மவளும், மருமக்கமாரும், கூடப் பிறந்த அக்காவும் பேரப் பிள்ளிகளும் தெருவுல விரல் இல்லாம

நின்னால், நீயா உதவப் போற? மேயுற மாட்ட கெடுக்குமாம் சாயுற மாடு!"

'சங்கதி எனக்குல்லா தெரியும்' என்று ராமபத்திரன் சொன்னதை யாருமே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. வெளியே இருந்த மணிமேகலைகூட புரிந்துகொள்ள வில்லை. ஆகையால் கம்பவுண்டர் மணியும், அவரைப் புரிந்துகொள்ளாமலே சொன்னான்.

"குழந்தைங்க மனசுல தாங்கள் நோயாளிங்க என்கிற பீதியைக் கிளப்பக் கூடாதுன்னு பார்க்கிறேன். வேணு முன்னால் எங்க டாக்டர் குமரன்கிட்ட கேளுங்க. அவரும் இதைத்தான் சொல்வாரு. யாருக்கும் எதுவும் கிடையாது சாமீ. மிஸ்ஸஸ் ஜெயராஜுக்குகூட இப்போ ஒண்ணும் கிடையாது. டாக்டர் குமரன் கொடுத்த மருந்துல சரியாப் போயிட்டு."

"இந்தா பாருப்பா! நீ எந்த டாக்டர வேணுமுன்னாலும் பேசு. ஆனால் டாக்டர் குமரனைப் பத்தி மட்டும் பேசாத. பத்தி எரியுது! டாக்டரய்யா அவன்? ரெண்டு மாத்திரையைக் கொடுத்து நோயை அடக்குவானே தவிர, அப்புறப்படுத்த மாட்டான். தன்ன எல்லாரும் கைராசிக் காரன்னு சொல்லணுங்கறதுக்காக, நோய் சுகமாகும் முன்னாலேயே சுகமாயிட்டுன்னு சொல்றவன். சுகமில்லாத டாக்டர். இனிமேல் அவன் பேச்சை பேசாத. சரி! எல்லாரும் ரெடியாகுங்க. திருவள்ளூர்ல நர்ஸிங்ஹோம் வச்சிருக்கிற டாக்டர் மாதவன்கிட்ட போகலாம். நல்ல ராசிக்கார மனுஷன். மருந்து கொடுக்கு முன்னாலயே நோய் சுகமாயிடும். நோய சொல்லிக்கிட்டு இருக்கும் போதே மருந்த எழுதுவாரு. அவ்வளவு சீக்கிரமாய் கண்டு பிடிக்கவரு." மணி இறுதியாக இடைமறித்தான்.

"நீங்க செக்கப் பண்ணப் போறதே தப்பு. அதுவும் மாதவன்கிட்ட போறதவிட, மரணத்துக்கிட்ட போவலாம்.

சுத்த அம்போக்கு மனுஷன். அவ்வளவுதான் நான் சொல்லுவேன். அப்புறம் உங்க இஷ்டம்.”

“எங்க இஷ்டமுன்னு தெரியுதுல்லா, பிறகு எதுக்குய்யா கிளிப்பிள்ள மாதிரி சொல்லிக்கிட்டே இருக்கியரு? ஒம்ம வேலய பாத்துக்கிட்டு போவீரா...”

கம்பவுண்டர் மணி போனான். தனக்கு அங்கே ‘வேல இல்லை’ என்பதைப்போல் போய்விட்டான். ராமபத்திரன் எல்லோரையும் அதட்டுவதுபோல் பார்த்தார். பெண்கள் உடைமாற்றப் போனார்கள். ஆண்கள் ‘கை கழுவப் போனார்கள். அந்த வீட்டுக் கிழவர் மட்டும் எதுவும் புரியாமல் எதிர்த்துப் பேசவும் முடியாமல், மணிமேக லையைப் பார்ப்பதும் மற்றவர்களைப் பார்ப்பதுமாக இருந்தார்.

ஒரு மணி நேரத்தில் எல்லோரும் ரெடியானார்கள்.

மாமியார்க்காரி, மணிமேகலையைப் பார்த்து ‘வீட்ட பாத்துக்கம்மா’ என்றாள் எதுவும் நடவாததுபோல. மணிமேகலையும் தான் ஒன்றும் பாதிக்கப்படவில்லை என்பதைக் காட்டும் வகையில் “சமைச்சு வைக்கட்டுமா?” என்றாள். உடனே லட்சுமி பதறியடித்து “திருவள்ளூர்லயே சாப்பிட்டுட்டு வந்துடுறோம். பாவம் ஒனக்கு எதுக்குச் சிரமம்?” என்றாள்.

எல்லோரும் காரில் ஏறிக்கொண்டார்கள். கிழவர், பேசாமல் உட்கார்ந்திருந்தார். ராமபத்திரன் வந்து “ஒமக்காகத்தான் மச்சான் டாக்டர்கிட்டயே கூட்டிக்கிட்டு போறேன். நீரு நூறு வருஷம் வரைக்கும் வாழ வேண் டாமா?” என்று ராகம் போட்டுச் சொல்லிக்கொண்டே, அவரது கையைப் பிடித்து ஆளைத் தூக்கினார். கிழவர் ஒரேயடியாகத் தலையாட்டிவிட்டார்.

“விடும்வே... விடும்வே... ஒம்ம கை என்மேல படப்படாது... விடும்வே. பாழாப் போற காளியம்மா

என்னை உயிரோட வச்சிருக்காளேன்னு சந்தோஷப் பட்டேன். இப்போதான் அவளோட மாய்மாலம் எனக்குப் புரியுது. இவ்வளத்தையும் நான் கண்ணால பார்க்கணு முன்னு விட்டு வச்சிருக்காள். விடும்வே... என்னைத் தொட் டால், ஒம்ம கையில கரையான் அரிக்கும். விடும்வே!"

இதுவரைக்கோ அல்லது இப்போதைக்கோ, கரையான் அரிக்காத கைகொண்ட ராமபத்திரன் அவரை விட்டு விட்டார். மற்றவர்களுக்கு அவரைக் கூப்பிடத் தைரிய மில்லை. ஜெயராஜ் டிரைவர் இருக்கையில் அமர்ந்தான். திடீரென்று பாமா, "இந்திராவக் காணல! இந்திராவக் காணல!" என்றாள்.

சங்கரன் காரிலிருந்து இறங்கி இந்திராவைத் தேடி னான். பின்கதவைத் தட்டினான். கதவு உடைபடும் அளவுக்குத் தட்டப்பட்டதால், முருங்கை மரத்தில் சாய்ந்து கொண்டிருந்த இந்திரா கதவைத் திறந்தாள்.

"அம்மாவை ஸ்பெஷலா கூப்புடணுமோ?" என்று சங்கரன் ஸ்பெஷலாய் கத்தினான்.

"நான் வரல. எனக்கும் வரல. நீங்க போங்க."

"ஏய்!"

"போண்ணா... அண்ணிக்கு நான் துணையாய் இருக்கணும்!"

"ஏய்!"

"மாமா பேச்ச கேட்டு நீதான் ஆடுற. நான் எதுக்காவ ஆடணும்? நான் அண்ணிகிட்ட இருப்பேன். அண்ணி கிட்டேயே இருப்பேன்!"

அவ்வளவுதான்.

சங்கரன் அவள் தலைமுடியைப் பிடித்து கைக்குள் பந்துமாதிரி சுருட்டி வைத்துக்கொண்டு, தோளிலும்

முதுகிலும் புறநானூற்று வீரன்போல் குத்திக்கொண்டே, அவளைத் தரதரவென்று கால்கள் தரையில் படும்படி இழுத்து காருக்குள் தொப்பென்று போட்டான். அவள் கதறக் கதற, அந்த சத்தத்தை அடக்குவதுபோல், கார் சத்தம் போட்டது. அங்கே அப்போது வந்த வசந்தியும் காரில் ஏறிக்கொண்டாள். வழியில் இறங்குகிறாளோ வழிகாட்டப் போகிறாளோ?

வரவேற்பு அறைக்கு முன்னால் கைக்குழந்தையுடன் காரையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றாள் மணிமேகலை. ஜெயராஜ் திடீரென்று காரை 'ஆப்' செய்துவிட்டு, மணிமேகலையை நெருங்கி குழந்தையைப் பிடித்தான். பிறகு இழுத்தான்.

மணிமேகலை ஒரு கணம் யோசித்தாள். கொடுக்கலாமா, வேண்டாமா? கொடுத்துடலாம். பிள்ளையாவது, தன் பிள்ளை என்கிற ஞாபகம் இருக்கே!

ஜெயராஜ், தன் மகனுடன் காருக்குள் போய், அண்ணன் அமர்ந்த இடத்தில் உட்கார அவன் டிரைவர் இருக்கையில் உட்கார, இதனால் கணவனருகே இருந்த லட்சுமி பின்னால் வர, பின்னாலிருந்த வசந்தா, ஜெயராஜின் அருகே வர, கார் புறப்பட்டது. நிற்காமலே புறப்பட்டது.

இந்திரா ஏங்கி ஏங்கி அழ, பலவந்தமாக பிடுங்கப்பட்ட பையன் கதற, கார் போய்விட்டது.

காரையே வெறித்துப் பார்த்தாள் மணிமேகலை. மனிதர்கள் இப்படி மாறிவிட முடியுமா? அன்பு, பாசம் என்பது போலிதானா? அவள் ஆகாயத்திற்குள் ஒளிந்து கொள்ளப் பார்த்தாள். பாதாளத்திற்குள் பதுங்கிக் கொள்ளப் பார்த்தாள். கைகால்கள் வேர்த்தன. உச்சந்தலை வலித்தது. உணர்வுகள் நெஞ்சுள்ளே கனத்தன.

எண்ணங்கள் இதயத்தைப் பாம்புகள் போல் கௌவின. எண்ணப் பாம்புவாய்ப் பட்ட இதயத் தவளை படபடக்க, கால்கள் பூமியில் படாமலே பட, கைகள் சுவரைப் பிடிக் காமலே பிடிக்க, அவள் நடக்காமலே நடந்து, அறைக் குள்ளே தன்னையறியாமலே தாவி கட்டிலில் விழுந்தாள். அதை பாடையாக நினைத்துக்கொண்டு பிணம்போல் விழுந்தாள்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, அந்தப் பிணம் எழுந்தது.

வெளியே கதவைத் தட்டுஞ் சத்தங் கேட்டு வந்தாள். மணி நின்றுகொண்டிருந்தான். “இந்தாங்க மாத்திரை. மொத்தம் முப்பது இருக்கு. ஒங்கள அனாதை மாதிரி விட்டுட்டுப் போறதை நினைத்தால்...”

மணிமேகலை அவனை நிமிர்ந்து பார்த்தாள். என்ன தான் என்றாலும், அவன் அன்னியன். விட்டுக் கொடுத் தால் அப்புறம் விடுபட முடியாது. காலையில் இவனிடம் கணவரிடம் சொல்லும்படிச் சொல்லியிருக்கக் கூடாது.

அவள் பிராயச்சித்தம் செய்தாள்.

“குடும்பமுன்னா ஆயிரம் இருக்கும். புத்தர், சாவாத வீட்ல கடுகு வாங்கிட்டு வாங்கன்னு சொன்ன கதைதான். வீட்டுக்கு வீடு வாசல்படி. அதோட செக்கப் பண்ணிக் கொள்றதுல தப்பில்ல. அவங்க மேல தப்பில்ல...”

“தப்பில்லதான். அதுக்காக இப்படியா ஆர்ப்பாட்டம் செய்யுறது?”

“போகட்டும். திருவள்ளூர் டாக்டர் மாதவனா... ஆமாம். மாதவன்தான் அவரப்பற்றி அப்போ ஏதோ சொன்னீங்க போலுக்கு?”

“ஆமா. அவன் சுத்த அம்போக்கு. டாக்டர் குலத்துக்கே அவன் ஒரு விதிவிலக்கு. முன்னால கள்ளப்பபிள்ளியளை...

நர்ஸிங்ஹோம்ல கழிச்சிக்கிட்டு இருந்தான். இதுல ஏகப்பட்ட காசு சேர்த்தான். இப்போ, அபார்ஷன லீகலைஸ் பண்ணிட்டதால பிழப்புக்கு என்னடான்னு பார்த்தான். அவனுக்கும் கிடைக்குது. ஒரு முள்ளு குத்திட்டால் போதும். 'அய்யய்யோ! ஸெப்டிக்காயிட்டு. பெட்ல நாலு நாளைக்கு இருக்கணுமுன்னு' சொல்லி, ஓட்டை ரூம்ல போட்டு, தினம் பதினைஞ்சு ரூபா பிடுங்கிடுவான். நர்ஸிங் ஹோம நடத்துறதே வாடகைக்கு விடத்தான். இந்த லட்சணத்துல, இவன் ஆஸ்பத்திரில வேற ஹானரரி சர்ஜன். ஆஸ்பத்திரி மருந்த எடுத்து நர்ஸிங் ஹோம்ல போடுவான். ஆஸ்ப்ரோ மாத்திரையை, அடையாளம் தெரியாம தூளாக்கி, பொட்டலம் போட்டு ஒவ்வொரு பொட்டலத்தையும் ஒரு ரூபாய்க்கு விக்கிறவன். முள்ளு குத்துன இடத்த மூனுநாள் 'அப்ஸர்வ்' பண்ணணுமுன்னு சொல்றவன்."

"அவ்வளவு மோசமானவரா?"

"வேணுமுன்னா பாருங்களேன்! ஒங்க ஆட்கள எவ்வளவு தூரம் காப்ராபடுத்தப் போறான்னு... 'மாதம் ஒரு தடவ, கண்டிப்பா வரணு'முன்னு சொல்லப் போறான் பாருங்க. இந்த டாக்டருக்கு, காச பிடுங்குறதுக்கே ஒரு டாக்டரேட் கொடுக்கலாம்."

மணிமேகலை உதட்டைக் கடித்துக்கொண்டே எதையோ யோசித்தாள். மணி, கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டான்.

"சாப்பிட்டிங்களா?"

பதிலில்லை.

"கவலப்படாதிங்க."

"....................................."

"போகட்டுமா?"

"உம்..."

கம்பவுண்டர் வாலிபன் போய்விட்டான்.

மாலைப் பொழுதும் அவளைப்போல் மயங்கி, அவள் முகம்போல் இருண்டது.

மணிமேகலை ஸ்விட்சைப் போட்டாள். அவசரக் கோலத்தில் புடவைகளை அங்கங்கே போட்டிருந்தார்கள். அவற்றை எடுத்து ஒழுங்குபடுத்தினாள். பூட்ஸ்களோடு போன கால்கள் கழட்டிப் போட்ட செருப்புகளை எடுத்து சட்டப் பலகையில் வைத்தாள். வராந்தாவில் எதுவும் கீழே கிடக்கிறதா என்று பார்த்த போதுதான், அவளுக்கு மாமனார் ஞாபகமே ஏற்பட்டது. உடனே அவசர அவசர மாக, ஹார்லிக்ஸ் கலந்து மாமாவிடம் கொண்டு வந்தாள்.

சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்த கிழவர், டம்ளரை மௌனமாக வாங்கிக் கொண்டார். மணி மேகலை குத்துக்காலிட்டு உட்கார்ந்து அவரது கால்களைப் பிடித்துவிட்டாள். முட்டிகளை தேய்த்துவிட்டாள்.

அவளையே பார்த்த அந்த கிழவரின் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் அவரது வயதையும் மீறிய வலுவோடு வந்தன.

"பாவி மகளே! நீ வாழ்ந்த அருமை என்ன, வாழ்விழந்த கொடுமை என்ன? ஈ எறும்பயும் மிதிக்காம பாத்து நடக்கும் உன்னை, ஈ எறும்பு மாதிரி மிதிக்காங்களே. நீ ஒண்ணு சேர்த்த மனுஷங்களே ஒன்னைத் தனியாய் பிரிச்சி வச்சிட்டாங்களே. ஆண்டவா! இதையும் நான் பார்த்துகிட்டு இருக்கணுமாடா? இன்னுமாடா நான் இருக்கணும்? இன்னுமாடா நான் இருக்கணும்? வாழ்ந்ததுலயும் கணக்கில்லாம, செத்ததுலயும் கணக்கில்லாம போயிட்டாளடா! போயிட்டாளடா!"

மணிமேகலை குழந்தையானாள். அந்தக் கிழவரின் கால்களைக் கட்டிக்கொண்டே "மாமா... மாமா..." என்றாள். பிறகு, அவர் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டே "அப்பா! அப்பா!" என்றாள். அவர் நெற்றியில், தன் நெற்றியைத் தேய்த்துக்கொண்டே "அம்மா அம்மா" என்றாள். அவரைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே "ஆண்டவா! ஆண்டவா!" என்றாள்.

## 10

'கம்பவுண்டர்' மணி, திருவள்ளூர் டாக்டரைப் பற்றிச் சொன்னது, ஒரு குறைந்த மதிப்பீடு என்பதை அவரிடம் போய்விட்டு வந்தவர்கள் நிரூபித்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வரும்போதே அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். படுக்கையறைக்குள் புரண்டு கொண்டிருந்த மணிமேகலை, தன் குழந்தையைப் பார்ப்பதற்காக வெளியே ஓடி வந்தாள். ராமபத்திரன் அவளைப் பார்த்ததும் பேச்சின் ஒலியைக் கூட்டினார்.

"பாத்தியளா, நான் சொன்னபடியே டாக்டர்கிட்ட காட்டுனது நல்லதாப் போச்சி பாத்தியளா! நீங்க, இவளுக்கு வந்தத லேசா நினைச்சதுக்கு எப்படி கண்டிச் சாரு பாத்தியளா?"

மாமியார்க்காரி தம்பிக்கு தவிலடித்தாள்.

"இனிமேயாவது ஒன் பேச்ச இவங்க கேட்காங் களான்னு பார்ப்போம். ஒன் பேச்ச மட்டும் முதலுலயே கேட்டிருந்தா இந்த கதிக்கு வந்திருக்காண்டாம்."

"அதுக்காக பதினைந்து நாளைக்கு ஒரு தடவ, எல்லாரும் போய் உடம்பக் காட்ட முடியுமா? எவ்வளவு கஷ்டம்?"

"என்ன பாமா அப்படிச் சொல்லிப்பிட்டே? பேய்க்கு வாழ்க்கப்பட்டால் புளிய மரத்துல ஏறி ஆகணும். நல்ல வேள இப்போ இல்ல. இருந்தாலும் டாக்டர் வைட்டமின் மாத்திரை சாப்பிடச் சொல்லியிருக்கார் பாரேன். பணத்த பார்த்தால் முடியுமா?"

"நாங்க பணத்த பாக்கல, அலைச்சலத்தான் பாக்கோம்."

"என்ன செய்யுறது? ஒரு ஆளுக்கு ஒண்ணு வந்துட்டா, ஒன்பது பேருக்கு பார்க்க வேண்டியதிருக்கு. காலத்தோட கோளாறு."

எல்லோரும், அந்த 'ஒரு ஆளையே' பார்த்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தார்கள். வசந்தியும் வந்திருந் தாள். அவளும் தன் பாட்டுக்கு "மாமாவயும் காட்டணும்; அவரு இருக்கிறதைப் பார்த்தால், எனக்குச் சந்தேகமாய் இருக்கு" என்றாள் அந்த சந்தேகத்திற்குரியவள்.

கணவனின் தோளில் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள் மணிமேகலை. அவன் 'அம்மா... அம்மா...' என்று சொல்லி, அவள் கழுத்தைச் சுற்றி, கைகளைக் கோர்த்துக்கொண்டு, சங்கிலிப் பிடியை இறுக்கினான். நசுக்கப் போகும்போது, கட்டிலோடு கட்டிலாக ஒட்டிக் கொள்ளுமே மூட்டைப் பூச்சி—தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, பந்துமாதிரி சுருட்டிக் கொள்ளுமே முள்ளெலி— அந்த மூட்டைப் பூச்சிபோல், முள்ளெலி போல் தன்னைச் சுருட்டி அம்மாவைப் பிடித்துக் கொண்டான். 'இனிமேல் என்னை விடாதம்மா... நான் ஒனக்குப் பிடிக்கலியா' என்று சொல்வது போலிருந்தது அந்தப் பிடி. 'நான் உன்னை மட்டுந்தான் பார்ப்பேன்' என்று சொல்லியது அப்பார்வை.

மணிமேகலை, ஒட்டிய குழந்தையுடன் ஒட்டிக் கொண்டு படுக்கை அறைக்கு வந்தாள். யாரும் அவளிடம்

பேசவில்லை. இந்திரா மட்டும் சங்கரனை ஜாக்கிரதை யாகப் பார்த்துக்கொண்டே, அண்ணியின் கையை ரகசியமாகப் பிடித்தாள்.

படுக்கை அறைக்கு வந்த ஜெயராஜ், ஒரு லுங்கியைக் கட்டிக்கொண்டு பெட்ஷீட்டை எடுக்கப் போனான். மணிமேகலை புரிந்துகொண்டாள். அவன் கையிலிருந்து அதை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு கட்டிலில் படுக்கப் போட்டிருந்த பையனைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு வெளியே வந்தாள். ஜெயராஜ் உள்ளேயே இருந்தான். இப்போது காற்று அங்கே நல்லா வீசுதாம்.

வராந்தா பக்கம் வந்து சிறிது தயங்கிய மணிமேகலை, வீட்டு காம்பவுண்ட் சுவர் மூலையில் இருந்த அறையை நோக்கிப் போனாள். முன்னாளைய சமையலறை. வீட்டுக்கு 'கேஸ்' வந்த பிறகு, தட்டுமுட்டுச் சாமான் களோடு உபயோகமில்லாத பொருட்கள் உள்ள அறை. மணிமேகலை, அந்த உபயோகமில்லாத பொருட்களை ஒரு ஓரத்தில் குவித்துவிட்டு தானும் தன் மகனுமாக இன்னொரு மூலையில் போய் படுத்துக் கொண்டாள். அவளுக்கு அழுகை வரவில்லை. உணர்வு உள்ளோருக்கே அழுகை வருமாம்.

நாட்கள் நகர நகர, மணிமேகலை அவர்களிடம் இருந்து நகர்ந்தாளோ இல்லியோ நகர்த்தப்பட்டுக் கொண் டிருந்தாள். டாக்டரிடம் இருந்து வரும்போது, இழவு விழுந்தது போல் வந்தவர்கள், இப்போது அவளையே இழவெடுக்கத் துவங்கினார்கள். ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவையும், விதவிதமான கலர் மாத்திரைகளோடு வரும் அவர்கள், அவளையும் விதம் விதமாக அதம் செய்தார்கள்.

ஒருநாள், இந்திரா. கிசுகிசுத்தாள்.

"அண்ணி! ஒங்க தட்டைப் பார்த்திங்களா?"

"அதுக்கென்ன? நானே அத நல்லாக் கழுவி வைக்கனே!"

"அதுக்குச் சொல்லல அண்ணி. சாப்பிடும்போது, தட்டை கவனிச்சிங்கன்னா தெரியும். ஒரே தட்டுதான், உங்களுக்கு எப்பவும் கிடைக்குது. புரியுதா?"

"புரியுதும்மா! நான் தனித்தட்டு. சாப்பிட்ட தட்டை யாவது சரி பண்ணிடலாம். ஆனால் என்னைச் சரி பண்ண முடியாதுன்னு நினைக்காங்க."

மணிமேகலை விம்மியபோது, இந்திரா கண்ணீர் விட்டாள். இன்னொரு நாள்—அவர்கள் திருவள்ளூர் போய்விட்டு வந்த 'பொல்லாத' நாள்.

உபயோகமில்லாத அறையில் படுத்துக் கிடந்த மணிமேகலை நள்ளிரவில் கண் விழித்தாள். குழந்தையைக் காணவில்லை. எங்கே போயிருப்பான்? குழம்பி, தாழ்ப்பாள் போட்டிருந்த வீட்டின் கதவைத் தட்டினாள். ஜெயராஜ்தான் கதவைத் திறந்தான்.

"என்ன விஷயம்?"

"குழந்தய காணும்!"

"காலையில பேசிக்கலாம். போய்த் தூங்கு."

"குழந்தய காலையில தேடலாமுன்னு சொல்றிங்களா?"

"அது ஒன் புத்தி. என்கூட படுத்திருக்கான்."

"ஜன்னல் வழியா பார்த்தேன். காணுமே."

"உம்... இங்கதான் இருக்கான்."

"என் குழந்த எங்க இருக்கான்னு தெரிஞ்சிக்கது என் உரிமையா இல்லாம இருக்கலாம். ஆனால் கடமையா இல்லாம போயிடுமா?"

"குழந்த வசந்தாவோட தூங்குறான்."

"குழந்த மட்டுந்தானே?"

மணிமேகலை, நாக்கைக் கடித்துக் கொண்டாள். ஜெயராஜ் அவளை முறைக்கவில்லை. அமைதியாகப் பார்த்தான். விவகாரத்தை அவளே புரிந்துகொண்டதில் அவனுக்கு சந்தோஷம். மணிமேகலை மீண்டும் பேசினாள்.

"என் பிள்ளய கொடுங்க."

"அது எனக்கும் பிள்ளைதான்."

"பரவாயில்ல... பிள்ளயாவது உங்களுடையதுன்னு நெனப்பிருக்கே."

"இந்தா பாரு மேகலா! எதுக்கு வீண் பேச்சு. எப்போ திருவள்ளூர் டாக்டர்கிட்ட ஒன்னை செக்கப் பண்ண கூப்பிட்டு, நீ வரமாட்டேன்னு சொல்லிட்டியோ அப்பவே ஒனக்கும் எனக்கும் சம்பந்தமில்லாம போயிட்டு."

"நீங்க எனக்குல்லா நன்றி சொல்லணும். சாக்கு தேடிக் கொண்டிருந்த ஒங்களுக்கு நல்ல சாக்கு கொடுத்திருக் கேனே. திருவள்ளூர் டாக்டர் நல்ல மனுஷனில்லன்னு கேள்விப்பட்டேன். ராமபத்திர பெரியப்பா தூண்டுதலால எதையாவது செக் பண்ணாமலே தீர்மானம் செய்திடுவா ரோன்னு பயந்தேன். வேற எந்த டாக்டர்கிட்ட வேணு முன்னாலும் போகலாமுன்னேன். நீங்கதான் கேட்கல."

"பொறுப்பில்லாம பேசுறது எனக்குப் பிடிக்காது."

"ஒங்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு ஆரம்பத்தில் இருந்து சொல்லிக் கொடுத்தவளே நான். இப்போ நானே பிடிக்காமல் போயிட்டேன். அப்படியும் நான் பொறுப்பில்லாம இல்ல. நேற்று டாக்டர் குமரன் நர்ஸிங் ஹோமிற்குப் போனேன். கம்ப்ளீட்டர் சுகமா யிட்டதா சொன்னார்."

"கைராசிக்காரர்."

"ஓஹோ! ராமபத்ர பெரியப்பா சொன்னத சொல்லிக் காட்டுறிங்க போலுக்கு. சரி உங்களுக்கு எதுக்கு வருத்தம்? நாளைக்கு மெட்ராஸ்ல ஜி. ஹெச்ல போய் செக்கப் பண்ணுவோமா?"

"பெட்ரோல் விற்கிற விலையில போயிட வேண்டியது தான்."

"சரி! என் குழந்தய கொடுங்க."

"வேற பேச்சுப் பேசு!"

"சரி! கொண்டுவந்து கண்ணுலயாவது காட்டுங்க."

"நான் கொலைகாரன்; கொன்னுப்புட்டேன். சரி போ! எனக்குத் தூக்கம் வருது. நீ போடுற சத்தத்துல, மற்றவங்க தூக்கம் கலைஞ்சிடப் போவுது. பிறத்தியாருக்கு சிரமம் கொடுக்கக் கூடாது."

"சரி நான் ஒங்களுக்கு சிரமம் கொடுக்கல. குழந்த நடுராத்திரில அம்மான்னு கூப்பிடுவான். தோளோடு தோள ஒட்டிப் படுப்பான். முன்னங்கையை ஊன்றி மோவாய அதுல வைத்து அம்மா படுத்திருக்காளான்னு பார்த்துட்டு அப்புறமாய் படுப்பான். ஜாக்கிரதயா பார்த்துக்கங்க. அப்புறம் ஒண்ணு. அவன் நம்ம பையன். நமக்கு மத்தில தூங்குனவன். ஒங்ககூட மட்டுமாவது படுக்கட்டும். பிறத்தியார்கிட்ட போடாதிங்க."

"அவள் பிறத்தியார் இல்ல. என் தாய் மாமா மகள்!"

மணிமேகலை தயங்கிக்கொண்டே, படியிறங்கினாள். உள்ளே போன ஜெயராஜ் 'கொஞ்சம் நில்லு' என்று அங்கிருந்தே குரல் கொடுத்தான். மணிமேகலைக்கு சந்தோஷம். குழந்தையைக் கொடுக்க வருகிறார். என் மகனை என்னிடம் தர வருகிறார்.

ஜெயராஜ் குழந்தைக்குப் பதிலாக ஒரு பொட்டலத்தை நீட்டினான். அவளுக்கு சிரமம் கொடுக்கக் கூடாது என்று நினைத்தவன்போல் பின்னர் அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான்.

கையுறைகள்!

ஜெயராஜ் விளக்கினான்.

“இனிமேல் இதைப் போட்டுக்க. ஒனக்கும் நல்லது எங்களுக்கும் நல்லது. சாப்பிடும்போது ஸ்பூனை வைத்து சாப்பிடு. குழந்தைக்கு முத்தம் கொடுக்காதே!”

மணிமேகலை போகுமுன்னாலேயே ஜெயராஜ் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு போய்விட்டான். நெற்றியைச் சுருக்கி கண்களை இழுத்துப் பிடித்துக் கொண்டே தன் அறைக்கு வந்த மணிமேகலை, தலையில் கை வைத்துக்கொண்டே தூங்காமலும், சுயஉணர்வு இல்லாமலும் மூலையில் தன் மேனியைச் சாத்தினாள்.

நள்ளிரவில் பையன் அழுதான். வீல் வீலென்று கத்தினான். அந்த அழுகையில் சந்தோஷப்பட்டவள் தாய், பிள்ளையைக் கொடுத்திடுவாரு... கொடுத்திடுவாரு...

மணிமேகலை வீட்டின் முன்பக்கம் வந்தாள். வீட்டிற்குள் விளக்கு போடப்பட்டிருந்தது. வசந்தி குழந்தையை எடுத்து உடம்பைக் குலுக்கி, குழந்தையை குலுக்குகிறாள். குழந்தை இப்போது குலுங்கி அழுகிறது.

“அம்மா....ம்மா...அம்மா...கிட்ட....அம்மா கிட்ட...”

திடீரென்று விளக்கு அணைகிறது. மணிமேகலை அனைந்த உள்ளத்துடன் தன் வசிப்பிடம் வருகிறாள். வாழ் விடத்தில் வசந்தி இருப்பதை எண்ணி எண்ணி தன் வசிப் பிடத்திலேயே அழுகிறாள். ஊமை அழுகை அது. ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வராமல், ரத்தத்தை சுண்டி

யிழுக்கும் நொண்டி அழுகை. குழந்தையும், அம்மாவுக்குப் போட்டியாக அழுகிறான்.

“அம்மாங்க... அம்மாங்க?” அம்மா எங்கே என்ற வார்த்தையை, குழந்தை கூட்டிச் சொன்னான் கழிக்கப்பட்ட அன்னையோ ஆவலுடன் குழந்தையுடன் கூட முடியாமல் தவித்தாள். கைகளை வயிற்றில் வைத்து அழுத்திக்கொண்டாள். குவிந்த உதடுகளை உள்நோக்கி விட்டுக்கொண்டாள்.

மறுநாள் காலையில் கணவனுக்குத் தெரியும்படியாக கையுறைகளைப் போட்டுக் கொண்டாள். அவள் கணவன் உட்பட அனைவருமே மானாதிமான மனிதாபிமானிகள். பையனை விட்டார்களா. அவன் பாய்ந்து வந்து, அவள் கால்களைக் கட்டிக்கொண்டான். அவள் அவனை வாரியெடுத்து வாய் முத்தம் கொடுக்கப் போனாள். ‘எதிர்வீட்டு’ ஜெயராஜ் முறைத்துப் பார்த்தான். “முத்தம் கொடுக்கல... நான் கொடுக்கல...” என்றாள் கணவனைப் பார்த்து.

பொழுது போய்க்கொண்டே இருந்தது.

இப்போதெல்லாம் ரமாவுக்கு அவள் பாடஞ் சொல்லிக் கொடுப்பதில்லை. அவளே ‘பாடம்’ படிக்கிறாளே. பிள்ளைகள் அவள் கண்முன்னாலயே “ஏய், இங்க புள்ளியிருக்கு. ஓனக்கும் இருக்கு” என்றார்கள். குழந்தையோ இரவில் அம்மாவைப் பார்க்க முடியாமல் போனதற்காக, அழுகையை நிறுத்தவில்லை. அவள், வீட்டுக்குள் போய் வந்துகொண்டுதான் இருந்தாள். யாரும் அவளைத் திட்டவில்லை.. தனித்தட்டைக் கொடுத்து அவளை விசேஷமாகத்தான் கவனிக்கிறார்கள். பாமாவும் பார்த்ததும் புன்னகை செய்யத்தான் செய்கிறாள். லட்சுமி மங்களகரமாகத்தான் இருக்கிறாள். வசந்தியும் வந்து கொண்டுதான்

இருக்கிறாள். மணிமேகலைக்கு எந்தக் குறையையும், யாரும் குறைவாக வைக்கவில்லை.

ஒருநாள் அந்த வீட்டுக் கிழவர் ஒரு புரட்சியை செய்தார். அதில் அதிகமாக ஆடிப் போனவள் மணிமேகலைதான்.

கிழவரை பாமா வந்து சாப்பிடக் கூப்பிட்டாள். 'உம்' என்றுதான் சொன்னார். லட்சுமி வந்து கூப்பிட்டாள். "சோறு வேண்டாம்" என்றார். சங்கரன் வந்து "பசிக்கலியா?" என்றார். "பசிக்குது. ஆனால் சாப்பாடு வேண்டாம்" என்றார், இறுதியாக கிழவி வந்தாள்.

"ஒமக்கு வாலிபம் திரும்புதாக்கும். கல்யாணமான புதுசுல எங்கய்யா வீட்டுக்கு தீபாவளிக்கு போயிருந் தப்போ, நல்ல வேட்டியா எடுக்கலன்னு சாப்பிடாமக் கிடந்தீரே அந்த புத்தி வந்துட்டாக்கும்."

"எனக்கு புத்தி வரவுமில்ல. போகவுமுல்ல. ஒங்க ளுக்குத்தான் ஒரு நாளைக்கி ஒம்பது புத்தி."

"சரி சாப்பிட வாரும்."

"சரி! மணிமேகலய சாப்பாடு கொண்டுவரச் சொல்லு."

"ஒமக்கென்ன பைத்தியமா?"

"எதுக்கு அனாவசியமான பேச்சு. இனிமேல் இந்த கட்ட உயிரோட இருக்கது வரைக்கும், என்னோட இளைய மருமவள் கையாலதான் சாப்புடுவேன்."

வேடிக்கை பார்ப்பதுபோல் சின்னவர்களும், வெகுண் டவர்கள் போல் பெரியவர்களும் அங்கே கூடினார்கள். கிழவர் வெகுண்டு பேசினார்.

"நானும் பார்த்துக்கிட்டுதான் வாரேன். கொடுமைக் கும் ஒரு அளவு வேண்டாமா? அவளுக்கு நோய்

சுகமாயிட்டு. முன்ன எப்படில்லாம் இருந்தாளோ, அப்படில்லாம் இருக்கலாமுன்னு குமரன் டாக்டர் சொன்ன பிறவும், நீங்க அவள தள்ளி வச்சா பூமி தாங்காது. மணிமேகல! பசிக்குது. சோறு கொண்டாம்மா! ஒன்னத்தான், நீ மட்டும் கொண்டு வரலன்னா இனிமே எப்பவும் சாப்புடமாட்டேன்."

மணிமேகலை அந்த ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டவள் போல் சமையலறைக்குள் போனாள். பாத்திரங்களைக் கொண்டுவந்து சாப்பாடு போட்டாள். ரசத்திற்கு உப்பு கூடியிருக்க வேண்டும். ஏனெனில் அவள் கண்ணீர் அதில்தான் விழுந்தது.

அனைவரும் திகைத்து நின்றார்கள். கிழவர் சாப்பிட்டு முடித்ததும் மணிமேகலை "ஒங்களத்தான், ஒரு நிமிஷம் இப்படி வாரிங்களா" என்றாள்.

ஜெயராஜ் வந்தான்.

"இந்த நிலமயில நான் இங்க இருக்கது நல்லது இல்லன்னு நினைக்கேன். எனக்கும், ஒரு 'சேஞ்ஜ்' வேணும். நாளைக்கு ஊருக்குப் போயிட்டு ஒரு மாசம் இருந்துட்டு வரலாமுன்னு நினைக்கேன்."

ஜெயராஜ் பேசவில்லை. மனைவி போவதை பொறுக்க முடியுமா? ஆகையினால் தலையாட்டினான்.

"நாளைக்கே புறப்பட்டுப் போறேன். ஆனால் என் பையன் என்கிட்ட தந்திடணும். சரிதானே?"

இதுக்கும் தலையாட்டினான் ஜெயராஜ். பிறகு அவளைப் பாராமலே பேசினான்.

"காரு, ஒன்னால அண்ணன்கிட்ட போயிட்டு. மோட்டார் பைக் நாளைக்கு ஸர்வீஸ் போகுது."

"பரவாயில்ல. நான் பஸ்ல போயிடுவேன். ஒங்களுக்கும் வேலயிருக்கும். ஸ்டேஷனுக்கு வர முடியாது. பிறக்கும் போது தனியாத்தானே பிறந்தேன். போகும்போதும் தனியாவே போறேன். சரி. போய்த் தூங்குங்க."

"நான் ஒண்ணும் உன்னை போகச் சொல்லல."

"எனக்குத் தெரியாதா? நீங்க என்னைக்குமே என்னை வாயால போன்னு சொல்லமாட்டிங்க. நான் கொடுத்து வைத்தவள்."

மறுநாள் மத்தியான வேளையில் மணிமேகலை புறப் பட்டாள். கையில் ஒரே ஒரு சூட்கேஸ்தான். எல்லோரும் மௌனத்தால் விக்கித்து நின்றார்கள். இந்திரா அழுது கொண்டிருந்தாள். அந்தக் கணத்தில் மட்டும் மனிதாபி மானம் வந்ததுபோல் அனைவரும் செயலற்று நின்றார்கள். வசந்திகூட கவிழ்ந்து பார்க்கவில்லை.

எல்லோரிடமும் பொதுப்படையாகப் பேசிவிட்டு, தனக்குள்ளேயே கோபப்பட்டவர் போல் வார்த்தைகளை பிறர் கேட்காதபடி குதப்பிக்கொண்டு சுவரில் சாய்ந்தபடி நின்ற மாமனாரின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். கிழவர் குடும்பத்தினரைப் பார்த்து "பாமாவ அவள் போயிருக்கதால கேட்கிறேன். இவள்கிட்ட என்ன சொல்லி அனுப்பணும்? சொல்லுறியளா?"

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபோது, கிழவி 'கொட்டினாள்'

"ஜெயராஜ்தான் அவஸ்தப்படுறான். என் மவளும் அவஸ்தப்படணுமா? கைகாலு குறஞ்சி போகணுமா?"

எல்லோரும் எப்படிச் சொல்வது என்று திகைத்ததை, யாராவது சொல்லட்டும் என்று எண்ணியதை கிழவி சொல்லிவிட்டாள். எல்லா விஷயங்களையும் ரத்னச் சுருக்கமாகச் சொல்லிவிட்டாள்.

மணிமேகலை பெட்டியைப் பற்றிக்கொண்டு, பையனைப் பார்த்தாள். அவனைக் காணோம். இப்போது தான் டிரஸ் பண்ணிவிட்டேன். எங்கே? எங்கே?...

ஜெயராஜ் அவள் பரபரப்புக்குப் பதில் கொடுத்தான்.

"வசந்தி எடுத்துட்டுப் போயிட்டாள். என் பிள்ளை அங்கெல்லாம் வரமாட்டான்."

மணிமேகலை நிதானித்தாள். 'பிள்ளையை கொடுய்யா...' என்று ஏகவசனத்தில் கேட்கலாமா? வேண்டாம். அங்கே நிலைமை எப்படியோ? இவனாவது—இந்தத் தொடர்பாவது—இங்கே இருக்கட்டும்."

மணிமேகலை சூட்கேஸுடன் நிமிர்ந்துகொண்டே, பாமாவைப் பார்த்து "பாமா! அந்த புளியமரம் வரைக்கும் வர்றீயா?" என்று சொல்லிக்கொண்டே திரும்பிப் பாராமல் நடந்தாள். இந்திரா, "அண்ணி! அண்ணி!" என்று கதறுவது கேட்காததுபோல் மனதைக் கல்லாக்கிக் கொண்டு நடந்தாள். திரும்பினால் அழுகை வரும். இவர்கள் முன்னால் அழக்கூடாது. கூடாது!

தன் வழியே நடந்துகொண்டிருந்த அவள் இன்னொரு நிழலும் தன் நிழலோடு இணைவதைப் பார்த்துத் திரும்பினாள். பாமா!

"பாமா! ஒன்கிட்ட கேட்க வேண்டியது என் கடமை என்கிறதுனால கேட்கிறேன். பழைய காதலை ஞாபகப் படுத்தல. இங்க... ஒனக்கு ஒங்க அம்மா பேசுவது புரிஞ்சிருக்கும். ஒன் மனச தெரிஞ்சிக்கலாமா?"

பாமா முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டே "பெரியவங்களோட இஷ்டம். அவர்களா பார்த்து, என்ன பண்ணுனாலும் எனக்குச் சம்மதம்தான். அப்புறம் எனக்கு ஒரு சின்ன உதவி செய்யணும்."

"ஊர்ல இருந்து வந்த ஒரு மாதத்துக்குள்ள அவனுக்கு நீ எழுதின லட்டருங்கள வாங்கணும். அவ்வளவுதானே? நானே கொண்டு வரேன். நீயே கிழிச்சுடலாம். சரி, போம்மா!"

"நானும் அரக்கோணம் ஸ்டேஷன் வரைக்கும் வாரேன்!"

"வேண்டாம்மா. ஸ்டேஷனுக்கு வருவே! அப்புறம் ரயிலுக்குள்ள வருவ! பிறகு ஓடுற ரயிலுல இருந்து குதிக்கப் பார்ப்பே! வேண்டாம். போம்மா..."

பாமா துணுக்குற்றவள்போல் சிறிது நின்றாள். மணிமேகலை அவளோடு நிற்காமல் தன் பாட்டுக்கு நடந்தாள். திடீரென்று ஒரு கார் தன்னருகே வந்து நின்றது. ஜெயராஜ், "வண்டில ஏறு... அரக்கோணம் ஸ்டேஷன் வரைக்கும் கொண்டு வந்து விடுறேன்..." என்றான்.

மணிமேகலை அவனையே பார்த்தாள். எதையோ சொல்லத் துடித்த உதடுகள், பிரியாமல் மடிந்தன. அவனை அணைத்த கைகள் ஆடின. ஒருகணம் ஒரே கணம்தான். பிறகு நிதானமாகச் சொன்னாள்.

"பெண்டாட்டி போகிற கவலையில உங்களால வண்டியை சரியா ஓட்ட முடியாது. நான் வாரேன். பிள்ளய மட்டும் நல்லா கவனிச்சுக்கங்க. அப்போ, நான் வரட்டுமா?"

ஜெயராஜ், காரை ரிவர்ஸில் கோபமாக ஓட்டிய போது மணிமேகலை தாபமாக நடந்தாள். ஒருவேளை, கணவனிடம் அப்படிப் பேசியிருக்கக்கூடாதோ என்று கூட நினைத்தாள். ஏன் கூடாது? சென்னை வரைக்கும் வரக்கூடாதா? மோட்டார் பைக் சர்வீஸுக்கு போகுதாம். ஒருநாள் தள்ளி விடக்கூடாதா? இதுதான் அவருடைய சர்வீஸ். மொத்தம் ஐம்பது ரூபாய் கொடுக்கிறார். முன்ன

ஆயிரம் ரெண்டாயிரமுன்னு கொடுத்தாரே அப்படிக் கூட கொடுக்காண்டாம். செலவுக்கு போதும்படியாய் கொடுக்கப்படாதா? ஐம்பது ரூபாய்ல மெட்ராஸ் வரைக்கும் அஞ்சு ரூபா ஆயிடும். டிக்கட்டு முப்பத்தஞ்சு. மீதி ரூபாய்ல, தூத்துக்குடியில் இருந்து ஊருக்குப் போகணும். இடையில வேற சாப்புடணும். திரும்பி வாரதுக்கு பணம் கொடுக்கல. ஒருவேள வரக் கூடாதுன்னே நினைக்காரோ? யார் என்ன நினைச்சு என்ன? என் நிலைமை இப்படி ஆயிட்டு...

கையில் இருந்த சூட்கேசைவிட, உள்ளம் கனக்க அவள் கனவேகமாக ரயில் நிலையத்திற்குள் போனாள். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, எக்ஸ்பிரஸ் ரயில் வந்தது. ஒரே கூட்டம். ஏற முடியவில்லை. இன்னொரு பாஸஞ்ஜர் ரயிலில் ஏறினாள். அது மயானப்புகைபோல், கங்குலைக் கக்கிக்கொண்டே புறப்பட்டது.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் அவளுக்கே ஆச்சரியம். 'லேடீஸ் கம்பார்ட்மெண்டில்' இருந்த அவளை, 'கம்பவுண்டர்' மணி பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு வரவேற்றான். அவள் கீழே இறங்கியதும் "நீங்க எப்படி புறப்படுறிங்க, யாரோட வாரிங்கன்னு கவனிச்சுக்கிட்டே இருந்தேன். சீமாட்டியா வாழ்ந்த உங்கள பிச்சைக்காரியா அனுப்பிட்டாங்க. நீங்க தப்பா நினைக்கமாட்டீங்க என்கிற தைரியத்துல வந்தேன். அதோட மாத்திரை தீர்ந்திருக்கும். வாங்கிக் கொடுத்துவிட்டுப் போகலாமுன்னு வந்தேன்." என்றான்.

இருவரும் மௌனமாக நடந்தார்கள். எழும்பூர் ரயில் நிலையத்திற்கருகே வந்ததும், அவளை காபி சாப்பிடக் கூப்பிட்டான். அவள் மறுத்துவிட்டாள். பிறகு ரயில் நிலையத்தில் 'வெயிட் மிஷின்' அருகே அவளை உட்காரச் சொல்லிவிட்டு மாயமாக மறைந்தான். பிளாட்பாரத்தில்

கூட்டம் வழிந்து பொங்கியது. இவ்வளவு பெரிய கூட்டத்தில் எப்படி ஏறுவது என்று அவள் அல்லாடிக் கொண்டிருந்தாள். முன்பெல்லாம், முதல் வகுப்பில் போகும்படி கணவன் வற்புறுத்துவான். அவள்தான், 'ஸ்லீப்பர்' போதும் என்று வாதாடி வெற்றி பெறுவாள். இப்போ 'ரிசர்வ்' கூட செய்யவில்லை.

மணிமேகலை கையைப் பிசைந்துகொண்டிருந்தபோது, மணி ரிசர்வேஷன் டிக்கட்டோடு வந்தான். நூறு பேர் 'வெயிட்டிங்' தவம் செய்த அந்த ஸ்டேஷனில் அவனுக்கு டிக்கெட் கிடைத்துவிட்டது.

மணிமேகலை பர்ஸை திறந்து பணத்தை நீட்டினாள். அவன் வாங்க மறுத்தபோது, இவள் டிக்கெட்டைத் திருப்பிக் கொடுத்தாள். மணிக்கு பணத்தை வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பெண்கள் கம்பார்ட்மெண்டில், ஜன்னலோர இருக் கையில் அமர்ந்திருந்த அவள், அவனையே பார்த்தாள். பாவம்! அரக்கோணத்தில் இருந்து வந்திருக் கார். மனிதர்கள் முழுவதும் சாகவில்லை. முற்றிலும் அழியவில்லை.

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவன் போல் 'அய்யய்யோ' என்று சொல்லிக்கொண்டே மணி வெளியே ஓடினான். பத்து நிமிடங் கழித்து திரும்பி வந்தான். ஒரு பாக்கெட்டை நீட்டினான். "இதுல மருந்திருக்கு. வேளா வேளைக்குச் சாப்பிடணும்."

கன்னி கழிந்த குமரிபோல் சீரழிந்த பெட்டிகளை உள்ளடக்கிய தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் குரல் கொடுத்துக் கொண்டே நகர்ந்தது. ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு நகர்ந்த மணியின் கைகளைப் பிடித்துக்கொண்டு மணிமேகலை கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிறகு விம்மினாள்.

ரயிலும் விம்மிக்கொண்டே ஓடியது. மணி விலகிக் கொண்டான். கம்பார்ட்மெண்டில் இருந்த ஒரு கிழவி, இன்னொரு இளம் பெண்ணிடம் "பார்த்தியாடி. புருஷன் பெண்டாட்டின்னா இப்படில்லா இருக்கணும். நீயும் இருக்கியே, ஒன் புருஷனும் இருக்கானே?" என்றாள்.

மணிமேகலை தலை நிமிர்ந்தாள். நிமிர்ந்த வேகத்திலே குனிந்தாள்.

அட கடவுளே! வீட்டுக்காரன் வெளியாளாய் மாறினால் வெளியாள் வீட்டுக்காரன் மாதிரி தெரியுமோ?

## 11

தூத்துக்குடி ரயில் நிலையத்தில் இறங்கிய மணி மேகலைக்கு, ஏற்கனவே பார்த்திருந்த எல்லாப் பொருள்களும், எல்லா இடங்களும், இப்போது மாறுபட்டவையாகத் தெரிந்தன. அந்த ரயிலையும், அதனைச் சம்பந்தப்படுத்தி ஏற்பட்ட எண்ணமும்—அதாவது அவளும், தம்பியும், வெங்கடேசனும் சிறுவர் சிறுமிகளாக இருந்தபோது விளையாடிய ரயில் விளையாட்டும், ரயில் சினேகிதம் போல் தோன்றியது. அந்த ரயிலைப் பார்த்தால், ஏதோ ஒரு அரக்கன்போல தெரிந்தது. பச்சைக்கொடி பாடை போலவும், ஜனநெரிசல், மனநெரிசல் போலவும் தோன்றின. முன்பெல்லாம் லெட்டர் போட்டுவிட்டு ஊருக்கு வரும்போது தம்பி வந்து வரவேற்பதும் புன்னகை தவழ புத்துலகுக்குள் நுழை பவள்போல அவள் ரயிலை விட்டு இறங்காமல் படியில் நின்றுகொண்டே தம்பியிடம் பேசுவதும் பழங்கதையாய் போனவள்போல் ரயில் பெட்டியில் இருந்து இறங்கினாள். ஓரேயடியாய் இறங்கிவிட்டாள்.

வெளியே வந்ததும் அனிச்சையாக 'டாக்ஸி' என்று வாயில் வந்த வார்த்தையை விட்டுவிட, உடனே அருகிலேயே ஒரு டாக்ஸி வந்து நின்றதும் என்ன செய்வதென்று புரியாமல் கைகளை நெறித்தபோது பார்வை மூலமே பர்ஸை புரிந்துகொள்ளும் டிரைவர் வண்டியை இன்னொரு பக்கமாக நகர்த்தினார். பழைய ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கூட அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பிறகு தன்னையே ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டார். 'அந்த அம்மாவா இருக்காது. அவங்க சிரிச்ச சிரிப்பென்ன, மங்கள லட்சுமிமாதிரி பார்த்த பார்வை என்ன, இது ஏதோ ஏழைப்பொண்ணு! வரவர எனக்கு ஏன் கண் பார்வை குறையுது? புத்தி ஏன் பிசகுது? இந்தப் பொண்ணு அந்த அம்மாவா இருக்காது. இருக்கக்கூடாது!"

தூத்துக்குடி பஸ் நிலையத்தில் ஒரே கூட்டம் 'கட்ட பொம்மன்' உட்பட, தனியார் பஸ்கள் வரை திருச்செந்தூர் டிக்கட்டுகளைத்தான் ஏற்றினார்களே தவிர, இடையேயுள்ள காயலையோ ஆத்தூரையோ கண்டுக்கவில்லை, திருவிழாக் கூட்டத்தில் இடையே உள்ள ஊர்கள் அவர்களைப் பொறுத்த அளவில் அன்றைக்கு இல்லை. இரண்டு மணி நேரம் கழித்து 'எப்படியோ வந்துட்டேன்' என்பதுபோல் வந்த டவுன் பஸ்ஸில் ஏறினாள்.

அவள் ஊருக்குள் வந்தபோது மாலை மயங்கிக் கொண்டிருந்தது. சூரியனை மலையென்னும் மலைப் பாம்பு கௌவிக் கொண்டிருந்தது போல் தோன்றியது. ஊருக்கு 'அகழிபோல்' இருந்த ஓடைநீரைக் கடந்து, வாயில்புடவை பாதித் தலையை மறைக்க, கனமில்லாத சூட்கேஸ் வலதுகையைப் பிடித்திழுக்க, இடதுகை தலையில் குவிந்திருக்க, ஜனவாடை பட்ட முனைக்கு அவள் வந்தாள். தெருவோரத்தில் 'தெல்லாங் குச்சி' விளையாடிய பையன்கள், அவளை ஆச்சரியமாகப்

பார்த்துவிட்டு, "ஏய் அக்கா வந்துட்டா! மிட்டாய் கிடைக்குண்டா" என்று ஒரு காகம் இரையைக் கண்டதும், இதர காக்கைகளைக் கூப்பிடுவது போல, தொலைவில் 'பலீஞ் சடுகுடு' விளையாடிய பயல்களைக் கூப்பிடுவது போல் கத்தினார்கள். "இந்தாங்கடா... இங்கயே வாங்கிக் கங்கடா..." என்று அன்று சொன்னவள், இன்று அவர் களைப் பாராததுபோல் ஒதுங்கிப் போனாள். திமிரைப் பாருன்னு பார்க்கிறவர்கள் சொல்வார்கள். சொன்னால் சொல்லிட்டுப் போகட்டும்!

பஞ்சாயத்து போட்ட புதிய குழாய்களில், 'பழைய' தண்ணீரைப் பிடித்துக்கொண்டு நின்ற பெண்களில் ஒருத்தி "என்னக்கா, காரு ஓடத்தண்ணில சிக்கி நின்னுட்டா?" என்று யதார்த்தமாகக் கேட்டபோது, அவள் அன்றைய யதார்த்தம் தாங்க முடியாதவளாய், 'கார் சிக்கல... நான்தான் சிக்கிட்டேன்' என்று தன்னளவில் சொல்லிக்கொண்டு அந்தப் பெண்களைப் பார்த்து, லேசாக சிரிக்க முடியாதபடி சிரித்து, வேகமாக நடந்தாள். எதிரே வெங்கடேசனின் அப்பா குமரேச மாமா வந்தார்.

அவர் அவளைப் பார்த்து, "எப்பம்மா வந்த? ரயிலு லேட்டா வந்துதா? இல்ல, எங்கேயாவது விழுந்துட்டு வந்துதா? இப்பத்தான், நல்லா இருக்கதா நாம நினைக்கிற ரயிலும் தண்டவாளத்த விட்டு, தரையில ஓடுற காலமாச்சே!" என்று எதேச்சையாகக் கேட்டது இவளுக்கு அவர் தன்னை விழுந்துபோன ரயிலுக்கு ஒப்பிடுவதுபோல் பட்டது. அவரைப் பார்த்து விழித்துக் கொண்டே, அவருக்கு தன் நிலைமை புரியக்கூடாது என்பதுபோல், தனக்கே புரியாத ஒரு சில வார்த்தைகளைச் சேர்த்துக் குழப்பிப் பதிலாகச் சொல்லிவிட்டு,. கிட்டத்தட்ட ஓடினாள். மீன்களைக் கூறுபோட்டு விற்கும் வீராசாமி, அதன் அருகிலேயே ஊரில் கிடைக்காத உருளைக்கிழங்கு, பீட்ரூட் கிழங்குகளை எடைபோட்டு விற்கும் மங்கம்மா

முதலிய எளியவர்களிடங்கூட அவர்கள் பேசியும் பேசாமல் நடந்தாள். பாதையில் நடுவில் நடக்காமல் இருமருங்கும் இருந்த வீடுகளில் ஒரு மருங்கில் சுவரோடு சுவராக, தன்னை மறைத்துக்கொண்டு தணலைக் காலில் வைத்தவள் போல் அவள் நடந்தாள்.

வாழ்வோடு வரும் தான், வாழாவெட்டிபோல் வந்திருப்பது அங்கிருப்பவர்களுக்குத் தெரியவேண்டாம் என்பதற்காக அவள் தெரிந்த தலையை மூடி, நீண்ட கைகளை மடக்கி நிமிர்ந்த தலையை குனிந்து நடந்தாள்.

அப்படியும் அவளை அடையாளம் கண்டுகொண்ட இரண்டு கிழவர்கள் அவளைப் பார்த்து "லட்டர் வந்து தாமா?" என்றார்கள் 'துஷ்டிக்' குரலில். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தெரியாமலே, 'ஆமாம்... இல்ல' என்று இரண்டையும் சொல்லிக்கொண்டு அவள் நடந்த போது எதிரே வந்த தங்கம்மாக் கிழவி அவளைக் கட்டிப் பிடித்துக்கொண்டே "பட்ட காலுலயே படுங்கறது சரியாப் போச்சே என் தங்கம்! ஒனக்கா குஷ்டம் வரணும்? ஒனக்கா வரணும்? ஒனக்கு வந்துதுன்னா யாருக்குத் தாம்மா வராது?" என்று முதுமைக் குரலில் முனங்கிய போது மணிமேகலை சிறுமைப்பட்டவள்போல் துடித்தாள். அவள் தன் நோயைப்பற்றி லட்டரில் எழுத வில்லை. அப்படி இருந்தும் பாட்டிக்கு எப்படித் தெரிந்தது? ஊர் விவகாரங்களின் துவக்கமே அவை முடிந்த பிறகுதான் இந்தப் பாட்டிக்குத் தெரியும். அப்படிப் பட்ட இந்தப் பாட்டிக்கு இது தெரிந்திருந்தால், ஊர் முழுவதும் தெரிந்திருக்கும். அட கடவுளே! குமரேச மாமாவுக்கு இளக்காரமா இருக்குமே! வெங்கடேசத்தான் 'நல்ல வேள, நாம இவள கட்டல'னு நினைச்சிருப்பாரே...

பாட்டி விடவில்லை. மூக்கைச் சிந்திவிட்டு, முழங்கையை தூக்கிவிட்டு பெருவிரலை ஆட்டிக்கொண்டு

"என் ராசாத்தி! பட்ட காலுலயே படுங்கறது சரியாய் போச்சே சரியாப் போச்சே! இந்தச் சமயத்துலயா ஒனக்கும் வரணும்?" என்று அவள் சொன்னபோது, நடப்பது தெரியாமல் நடந்து, கேட்பது தெரியாமல் கேட்டு, பேசுவது தெரியாமல் பேசி, எதிரே இருப்பவை கூட என்னவென்று தெரியாத பார்வையுடன் நின்ற மணிமேகலை சிறிது தன்வசமானாள். சிறிது சிந்தித்தாள். "பட்ட காலுலயே... இந்தச் சமயத்துலயா..." பாட்டி என்ன சொல்கிறாள்? மணிமேகலை ஊரில் கால்வைத்த பிறகு முதல் தடவையாக உணர்ந்து பேசினாள்.

"என்ன பாட்டி சொல்ற?"

"என்னத்தச் சொல்ல? சொன்னாலும் தீராது, சொல்லியும் மாளாது!"

"நான் கிடக்கேன் விடு. இங்கு என்ன நடந்தது? சொல்லு பாட்டி!"

"சொல்லித்தான் என்ன செய்ய? சொல்லாம என்ன செய்ய? ஒய்யா...எறும்ப பாத்தாக்கூட, மிதிக்காம விலகிப் போற மனுஷன்."

மணிமேகலை துடித்தாள்.

"ராசய்யா மாமா! நீங்களாவது சொல்லுங்களேன். பாட்டி என்ன சொல்றாள்?"

"ஒனக்கு விஷயம் தெரியாதாம்மா?"

"எனக்கு எதுவுமே தெரியாது. சீக்கிரமா சொல்லும் மாமா."

"ஒங்க அப்பாவுக்கு வாதமா, ரத்தக் கொதிப்பான்னு தெரியல. போனமாசம் கைகாலு முடங்கிப் போச்சி. வாயும் கோணிப்போச்சி. ஒரு காலும், ஒரு கையும் சுத்தமா செத்துப்போச்சி. உடம்புல உயிரு இருக்கத, வயிறு மேலயும் கீழேயுமாய் போறத வச்சிதான் தெரிஞ்சிக்கிடலாம்."

அவ்வளவுதான். ஒதுங்கி ஒதுங்கி நடந்துகொண்டிருந்த மணிமேகலை ஓடினாள். "அப்பா! அப்பா! என்னப்பா! என்னை பெத்த என் அப்பா..." என்று கத்திக்கொண்டே பெரிய தெருவைக் கடந்து, காளியம்மன் சந்தைத் தாண்டி, தெற்குத் தெருவை விலக்கி, குட்டி எஸ்டேட்டாய் குலை தள்ளிய வாழைகளுடன் சற்று இலையுதிர்ந்து போன மாந் தோப்புக்கே மகுடம்போல் இருந்த வீட்டின் படிக்கட்டை மிதிப்பது வரைக்கும் அவள் ஓயாமல் ஓடினாள். சத்தம் போட்டுப் பேசுவதை அநாகரிகமாகக் கருதும் அவள் "அப்பா அப்பா" என்று ஐந்து வயதுக் குழந்தைபோல் கத்திக் கொண்டும், அறுபது வயது பாட்டி போல் தள்ளாடிக் கொண்டும் ஓடிவந்து, அப்பாவைப் பார்த்து, மூச்சைப் பிடித்தவள்போல், மூச்சு விட முடியாதவள் போல், திறந்த வாய் திறந்தபடி இருக்க, விழித்த விழி விழித்தபடி நிற்க, குவிந்த கை குவிந்தபடி இருக்க, அவள் அப்படியே நின்றாள். அப்பாவை வைத்த கண் வைத்தபடி பார்த்துக்கொண்டே நின்றாள்.

வராந்தாவை அடுத்து இருந்த அறையில் சிம்மாசனம் போலிருந்த கடைந்தெடுத்த தேக்குக் கட்டிலில் அவள் தந்தை மல்லாந்து படுத்துக் கிடந்தார். கண்கள் நிலைகுத்தி நின்றன. தோள் துவண்டிருந்தது. கை கால்கள் மடங்காமல், மடக்க முடியாதபடி மரக்கம்புகள் போல் கிடந்தன. உடம்பில் சூடு இருந்தாலும் உணர்வு இல்லை. மூச்சு மட்டும் கொல்லர் உலைபோல இழுத்து இழுத்து பெரிதாக வந்தது. உச்சந்தலை தலையணையில் பதிய, மோவாய் முன்னால் தூக்கி நின்றது. வேட்டி முழுவதும் நனைந் திருந்தது. வாயில் கொசுக்கள், கண்ணிலும் கொசுக்கள்.

கடந்த ஒரு மாத காலமாக உயிரே இல்லாதது போல் ஆடாமல். அசையாமல் உணர்வற்றுக் கிடந்த அந்த ஜீவன் எதிரில் யார் நின்றாலும் பாராததுபோல் தோன்றிய அந்த முதிய உயிர், இப்போது மகளை அடையாளம்

கண்டுகொண்டதுபோல் 'ஆ...ஆ...' என்று எழுத முடியாத ஒரு ஓசையை மாபெரும் இலக்கியம்போல் வெளியிட்டது. மகளை பாதாதிகேசம் பார்ப்பது போல, அந்தக் கண்கள் மேலும் கீழுமாக நகர்ந்தன. பிறகு பக்கவாட்டில் உருண்டன.

"ஆங்...ஆங்...ஆங்..."

என்ன சொல்கிறார்? எதைச் சொல்ல விரும்புகிறார்?

'வந்துட்டியா மகளே' என்கிறாரா? இனிமேல் நிம்மதியாய்ச் சாவேன் என்கிறாரா? என்னை இப்படி விட்டுட்டு எப்படிம்மா போவேன்னு சொல்கிறாரா? 'சுகமாயிட்டுன்னு' ஒரு சொல் சொல்லும்மா, நான் மகமாயிகிட்ட போறேன்னு சொல்லப் பார்க்கிறாரா? அவளைத் தோளில எடுத்த கை—தூளியிலே போட்ட கை—'கைகொடுக்காமல்' போய்விட்டதே என்று கலங்குகிறாரா? இப்போது ஏன் வாசல்படியில் நிற்கும் மகன்களைப் பார்த்துட்டு மகளைப் பார்க்கிறார்? அவளை கை விட்டு விடாதீங்கடா என்கிறாரா? வந்ததே வந்துட்ட, என்னை எமன் வந்து கூட்டிக்கொண்டு போவது வரைக்கும் இங்கேயே இரு மகளே என்கிறாரா? கவலப்படாதே கண்மயிலே! நான் செத்து மடிந்தாலும், சிவலோகம் போகாமல் ஒன்னையே சுத்திக்கிட்டு இருப்பேன்னு இதயம் நினைப்பதை எடுத்தியம்பப் பார்க்கிறாரா? என்ன சொல்கிறார்? எதைச் சொல்லப் பார்க்கிறார்!

"ஆங்...ஆங்...ஆங்..."

சுற்றி நின்ற கூட்டம், மணிமேகலையையும் அந்த மாளாத பிணத்தையும் மாறி மாறிப் பார்த்தார்கள். யாருக்கும் பேச நாவில்லை. அவர்களே ஆறுதல் வேண்டுபவர் போல் அனாதரவாய் நின்றார்கள். கடைசியில்

காத்தாயிதான் வெடித்த விம்மலைப் பிடித்துக் கொண்டே பேசினாள்.

"ஒங்க வீட்டுக்காரரோட தாய்மாமனா அந்த மனுஷன்? அவன் நாய் மாமன்! ஒங்களுக்கு குஷ்டம் வந்துட்டதா ஊரு முழுக்கும் தமுக்கு அடிச்சது மாதிரி பேசுனதோட, இந்த மவராசனுகிட்டயும் 'இனுமே நீங்க தேருறது கஷ்டம் கைய அரிச்சிட்டு, காலு விரலு மடங்கிட்டுன்னு, ஒரு நாளைக்கி ஒம்பது தடவ சொல்லிட்டுப் போயிட்டாரு. அவரு கையில கரையான் அரிக்க. வாயில குஷ்டம் வர. அந்தப் பாவி எந்த நேரத்துல சொன்னானோ, அந்த நேரத்துல இருந்து ஒரு வாரம் வரைக்கும் இந்த மவராசன் உண்ணாம திங்காம பயித்தியம் பிடிச்சவரு மாதுரி அலஞ்சாரு. கடைசியில, ஒரு நாளு கை காலு இழுத்து இப்படிப் போயிட்டாரு."

காத்தாயியின் தழுதழுத்த குரலில், எல்லோரும் கிறங்கிப்போய், அந்தக் கிழவரையே பார்த்தார்கள். அவரோ, காணாததைக் கண்டுவிட்டவர்போல் மகளையே பார்த்தார். மகளோ...

திடீரென்று, அப்பாவின் கால்களைப் பிடித்துக் கொண்டே கதறினாள். அவர் கன்னத்தில் முத்தமிட்டு கட்டிலோடு கட்டிலாக அவரை அணைத்து 'அப்பா அப்பா' என்று வானம் விழும்படி பூமி பிளக்கும்படி கத்தினாள். "ஒங்களுக்காப்பா... ஒங்களுக்காப்பா இப்படி வரணும்?" என்று சொல்லிக்கொண்டே, பெற்றவனை தன் மடியில் வைத்துக்கொண்டே மருவினாள்.

இறுதியில் தங்கம்மா பாட்டி "எழுதாக் குறைக்கி அழுதா முடியுமா? எப்படியோ ஒய்யாவ நீயும் பார்த்துட்ட. அவரும் ஒன்னப் பாத்துட்டாரு. இனும ஆண்டவன் விட்ட வழி!" என்று சொன்னபோது, கிழவரின் பொட்டல் கண்களில் பாலைவன நீரூற்றுப்

போல் ஒரு துளி துளிர்த்தது, மணிமேகலையின் வாயில் விழுந்தது.

மணிமேகலை தன்னை அடக்கிக்கொண்டு அப்பாவை கட்டிலில் உட்கார வைத்துவிட்டு சற்று விலகி நின்று, அவர் முன்பு உட்காரும் நேர்த்தியை இப்போது கற்பனை செய்து, அதுவே சூன்யமாக அந்த சூன்யத்தின் சூடு தாங்காதவள்போல் சிறிது இடம் பெயர்ந்து தன்னை ஈன்றவனை—தானாக விழுந்தவனை பார்த்துக்கொண்டே நின்றாள்.

கட்டிலில் நிமிர்த்தி வைக்கப்பட்ட அந்த உருவம், கொஞ்சங் கொஞ்சமாக அங்குலம் அங்குலமாக பின்நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. மணிமேகலை பதைபதைத்து, அப்பாவைக் கட்டிலில் கிடத்தப் போனாள். அப்போது அண்ணிக்காரி குறுக்கிட்டு, "நீ சும்மா இரு. கீழ விழமாட்டாரு. கொஞ்சம் கொஞ்சமாய் சாஞ்சி விழுறது தெரியாமலே உடம்பு தலையணைக்குப் போயிடும்." என்றாள். அப்படி அவள் சொன்னது அந்தக் கிழவர், கொஞ்சம் கொஞ்சமாக, கட்டிலில் விழுவது தெரியாமல் விழுவதை ரசிப்பதுபோல் தெரிந்தது. 'போயிடும்' என்று சொல்லி, மாமனாரை இப்போதே பிணமாகக் கருதிவிட்டவள்போல் தோன்றியது.

மணிமேகலை அப்பாவின் முதுகைப் பிடித்து கட்டிலில் கிடத்தினாள். "இப்படித்தான் தெரிஞ்சவங்கள பாத்துட்டா போதும். கொஞ்ச நேரம் போன உயிரு திரும்புனது மாதிரி உடம்பு துடிக்கும். இன்னைக்கி இவளப் பாத்ததும் கண்ண உருட்டுனது மாதிரி எப்பவுமே இப்படி உருட்டல; இன்னிக்கிதான் கண்ணீரே வந்து இருக்கு," என்று அண்ணிக்காரி 'நேர்முக' வர்ணனை கொடுத்த போது, மகள்காரி தலையணையை எடுத்து வீசிவிட்டு தன் மடியில் தந்தையை மகனாகப் போட்டாள். கூட்டத்தினர்

ஒவ்வொருவராக கலைந்து கொண்டிருந்தபோது, "அன்னம் தண்ணி இறங்கமாட்டக்கு... அப்படியும்..." என்று அண்ணிக்காரி இழுத்தபோது, அவள் எதைச் சொல்லப் போகிறாள் என்பதைப் புரிந்தவன் போல் "ஒன் தோல் வாய வச்சிக்கிட்டு சும்மாக் கிட" என்றான் புருஷன். அவள் வாய் சும்மா கிடக்கவில்லை. "இன்னா, பழயபடியும் சுரண இல்லாம போயிட்டத பாரு. இனும ஒன்ன மாதுரி வேற நெருக்கமானவங்கள பாத்தாத்தான் பழையபடியும் கண்ணு உருளும். அதுவரைக்கும் இப்படித்தான். போன வாரம் எங்க அய்யா வந்திருந்த சமயத்துலயும் கண்ணுல தண்ணி வந்துது" என்று உண்மையில் பொய்யைக் கலப் படம் செய்தாள்.

மணிமேகலை அப்பாவை உற்றுப் பார்த்தாள்.

அண்ணி சொன்னது போல அந்த உருவம் அசை யாமல் இல்லை கண்கள் இன்னும் உருண்டு கொண்டு தான் இருந்தன. உதடுகள் துடித்துக் கொண்டுதான் இருந்தன. அவள் அசையும் இடமெல்லாம் அந்தக் கண்கள் அசைந்தன. நோக்கும் இடத்தையெல்லாம் நோக்கின.

எல்லோரும் போய்விட்டார்கள். சந்திரன் தோப்பருகே போய்விட்டான். அண்ணனை அண்ணி சமையலறைப் பக்கம் சாடுவது, ஒரு ஸ்டூலில் உட்கார்ந்து அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலைக்குக் கேட்டது.

"ஒண்ணுமில்லாம வந்திருக்கா பார்த்தியரா? வந்தா வரட்டும். அவள் போவையில வாயும் வயிறுமா இருந்தேன். ஒங்க பிள்ள எப்படி இருக்கான் அண்ணின்னு ஒரு வார்த்த சொல்றாளா பாத்தியரா? இந்த கிழவன பாரும். ஒம்மப் பாத்து, இப்ப துடிச்சது மாதுரி எப்பவாவது துடிச்சாரா? தனக்குத் தனக்குன்னா, தாழி குடமும், பதக்கு பிடிக்குமாம்" என்றாள்.

மணிமேகலைக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது. பிள்ளையைப் பற்றிக் கேட்டிருக்க வேண்டும். தப்புத்தான். சொந்தப் பிள்ளையின் ஞாபகங்கூட இப்பத்தானே வருது!

மணிமேகலை சமையலறைப் பக்கம் போனாள். தொட்டிலில் தூங்கிய அண்ணன் மகனை எடுத்து தோளில் போடப் போனாள். அண்ணிக்காரி "இப்பத்தான் தூங்குறான். தூக்கத்த கெடுக்காத!" என்று சொன்னதோடு, குழந்தையையும் அவளிடமிருந்து வலுக்கட்டாயமாக வாங்கி தொட்டிலில் போட்டாள். அண்ணன்காரன் சற்று அதட்டலோடு அவளை விசாரித்தான்.

"ஆமாம், ஆயிரம் கஷ்டம் வரட்டும். தொளாயிரம் நோய் இருக்கட்டும். அதுக்காவ இப்படியா 'குளுவச்சி' மாதுரி நடந்து வாரது? ஒரு கார்ல வாரது? காசு இல்லாட்டாலும், நான் குடுக்காமலா போயிடுவேன்? ஒரு லட்டர் எழுதியிருந்தா சந்திரனை அனுப்பி இருப்பேமில்லா? நீ நடந்து வந்தத பார்த்தா, நாளைக்கு தெருவுல எந்தப் பயலாவது என்னை மதிப்பானா? இப்படியா 'கூறு' கெட்டு போவணும்? சே... சே... ஏன் இப்டி புத்திய கடன் கொடுத்த?"

மணிமேகலை கடன் கொடுத்த புத்தியை வட்டியோடு சேர்த்து வாங்கிக்கொண்டவள் போல் யோசித்தாள். தப்புத்தான். ஊர்லயே பணக்கார வீட்டுப் பெண்ணான நான் தூத்துக்குடில பிச்ச எடுத்தாவது அந்தக் காசுல டாக்ஸில வந்திருக்கணும். அண்ணன் பிச்ச எடுத்தத பெரிசா நினைக்காமல் நான் கார்ல இறங்குவதை பெருமையா நினைச்சிருப்பான். ஒரு வார்த்தை உடம்புக்கு என்னம்மா வந்துதுன்னு கேக்குறானா? உடன் பிறந்த பாசம் என்பது பெண்களுக்கு மட்டுந்தானோ? சகோதரி மனம் பித்து, சகோதரன் மனம் கல்லுன்னுகூட

பழமொழிய மாத்திக்கலாமோ? சீ... அப்படியும் சொல்ல முடியாது. அதோ அங்க பித்துப் பிடிச்சவன் மாதுரி நிற்கானே சந்திரன் அவனை இவனோட சேர்க்க முடியுமா? அக்காளோட கோலத்தப் பாத்துட்டு பாவம் தனியா தவிச்சு நிற்கான். இந்த அண்ணன் என்னைக்குமே இப்படித்தான். ஒருநாள்கூட சிரிச்சுப் பேசமாட்டான். ஒரு வேளை வயசு வித்தியாசம் காரணமாய் இருக்கலாம். நான் காருல வராமல் கால் வலிக்க நடந்ததுக்காக இவன் வருத்தப்படல. இவன் கௌரவம் அதனால வலியெடுத்துட்டுன்னு வந்ததும் வராததுமா இப்டி அதட்டுறான். ஆனால் சந்திரன்... கூடப் பிறந்த பிறப்புன்னா... அவன் தான் பிறப்பு!

மணிமேகலைக்கு அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. மெள்ள நடந்து முன்னறைக்கு வந்தாள். அப்பாவை வெறித்துப் பார்த்தாள். அவர் இப்போது சுரணையற்று, உறுப்பெல்லாம், செத்து உயிர்மட்டும் சாகாமல் இருப்பது போல் மல்லாந்து கிடந்தார்.

அவரையே சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றவள், கண்களை முந்தானையால் துடைத்துக்கொண்டே தோப்புக்கு வந்தாள். சந்திரன் குறுந்தாடி மீசையுடன் மலங்கலான கண்கள் மருட்சியான பார்வையைக் கொடுக்க ஆகாயத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். "தம்பி, ரயில் விளையாட்டு விளையாடி, இப்போ வாழ்க்கையே விளையாட்டாய் போனதால, நிஜ ரயிலுல வந்து நிஜமில்லாம போயிட்டனே" என்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழப் போனவள் தன்னை அடக்கிக்கொண்டே அவன் தோளில் ஆதரவாகக் கை போட்டுக்கொண்டே 'தம்பி...' என்றாள். பிறகு அவன் கையை கெட்டியாகப் பற்றிக்கொண்டாள்.

தம்பி அவளையே பார்த்தான். கண்கள் லேசாகக் கலங்கியிருந்தது. அந்தக் கலக்கம் அழுகைக்கு அச்சாரம்

போல் இருந்தது. மணிமேகலை அவன் தோளில் மீண்டும் கைபோட்டுக்கொண்டே "கவலப்படாதடா. அக்காளுக்கு சுத்தமா சுகமாயிட்டு! நல்ல வேள, ஆரம்பத்துலயே கவனிச்சதால முளையிலயே கிள்ள முடிஞ்சுது. இப்போ நானும் ஒன்னை மாதிரிதான்! உடம்புக்கு ஒண்ணும் கிடையாது! கவலைப்படாதடா" என்றாள்.

சந்திரன் கவலையை விடுவதாத் தெரியவில்லை. அக்காளின் கையிரண்டையும் பிடித்துக்கொண்டு 'அக்கா' என்று சொல்லிக்கொண்டே விம்மினான். மணிமேகலை தாயானாள். ஏதேது... இந்த சந்திரன் சுகமாயிட்டுதுன்னு சொன்னபிறகும் விம்முறானே? எனக்குமுல்லா அழுகை வருது? நான் அழப்படாது. இவனுக்கு மூத்தவள். ஆறுதல் சொல்ல வேண்டியவள்; அதைத் தேடுபவள் அல்ல. மணிமேகலை தம்பியின் தலையைக் கோதி விட்டுக் கொண்டே அவனைக் குழந்தையாகப் பாவித்துக் கொண்டே "அழாதடா ராஜா! இப்போ ஒண்ணும் கெட்டுப்போயிடல. அழாதடா!" என்றாள்.

சந்திரன் இப்போது அழுதுகொண்டே "அக்கா... அக்கா... பாமா எப்படிக்கா இருக்காள்? என்னை விசாரிச் சாளா? எனக்கு ஏன் லட்டர் போடுறத நிறுத்திட்டாக்கா? என் தவிப்பு ஏக்கா அவளுக்குத் தெரியல? அக்கா, அவள் என்ன மறக்கலன்னு ஒரு வார்த்தை சொல்லுக்கா" என்று சொல்லி அழுதவன் விம்மினான்.

திடுக்கிட்டுப் போன மணிமேகலை அவனையே விளங்காதவள்போல் வெறித்துப் பார்த்தாள். பிறகு, அதைவிட வேறு எதையாவது பார்க்கலாம் என்பதுபோல், மாமரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த பழைய பசு மாட்டைப் பார்த்தாள். அது அவளைப் பார்த்து 'ம்மா... ம்மா...' என்று பேரானந்தமாகக் கத்தியது.

# 12

ஐந்தாவது வகுப்பிலும், உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும் ஒரே குறளைப் படித்தாலும் அதை வேறு வேறு மாதிரியான கோணங்களில் பார்ப்பதுபோல மணிமேகலை இன்றைய வாழ்க்கைக் கல்லூரியில் கிடைத்த அனுபவத்தில் முன்னைய உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையை வேறுவிதமாகப் பார்க்கத் துவங்கினாள். இதனால், தந்தையைத் தவிர மற்ற எல்லாருமே—தான் உட்பட—அவளுக்கு வேறு விதமாகத் தென்பட்டார்கள்.

ரயில் பயணம் நெடுக, பெற்ற குழந்தையையும், அவனை கையோடு கொண்டுவர முடியாமல் போன கொடுமையையும் நினைத்து கலங்கி வந்தாள். ஊருக்குள் வந்தபோது, தன்னுடைய நிலைமை இப்படி ஆகிவிட்டது தெரியக்கூடாது என்று ஒடுங்கி வந்தாள். ஆனால் எப்போது அப்பாவை வாதம், அவர் அதனுடன் வாதிட முடியாதபடி முடக்கிவிட்டது என்பதை அறிந்தாளோ, அப்போதே தான் மிராசுதார் அருணாசலம் என்பவரின் மகள் என்பதைத் தவிர மற்றதை மறந்துவிட்டாள். கல்யாணம் ஆனதும், கணவன் இருப்பதும், கண்மகனைப் பிரிந்துவிட்டு வந்திருப்பதும், அவளுக்கு மறந்துவிட்டது.

அவளும், அவளைப் பெற்றவனையும் தவிர அவளுக்கு யாருமே அப்போதைக்கு உயிருடன் இல்லை. ஆனால் இந்தச் சந்திரன்—போன 'ரெண்டு' கண்ணில் ஒரு கண் வந்துவிட்ட திருப்தியில் இருக்க வேண்டியவன்—ஒரே தட்டில் சாப்பிட்டு, ஒன்றாக வளர்ந்த அக்காவை, அப்போதைக்காவது நினைக்க வேண்டிய அந்த

உடன்பிறப்பு அல்லது தாய்க்குத் தாயாய் வளர்த்த தந்தையின் அவலத்தை, அப்போதைக்காவது தாங்க முடியாததுபோல் துடிக்க வேண்டிய அந்த செல்ல மகன், பாமாவை நினைத்து விம்முகிறான். அந்த 'புனிதக் காதலில்' சிக்குண்டு அவன் பெற்ற தந்தையையும், உற்ற உடன் பிறப்பையும் ஒரேயடியாய் மறந்தவன்போல் நடந்து கொண்டான். அண்ணிக்காரி எதிர்பார்த்ததுபோல் நடந்துகொண்டாள். அண்ணன் அசல் பெருமாள் மாட்டைவிட, ஒருபடி அதிகமாகப் போய்விட்டான்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவை நகர நகர, மணிமேகலை தன் பையனின் பக்கமாய் நகர்ந்து கொண்டிருந்தாள். காலையில் எழுந்ததும் அப்பாவின் கண்களை ஈரத் துணியால் துடைத்துவிட்டு நனைந்த வேட்டியை நீக்கி, புதுவேட்டி கட்டிவிட்டு அவரைத் தூக்கி வைத்து தன்னோடு அணைத்துக்கொண்டே, தலையணை உறையை மாற்றி, அவர் வாய் உலராமல் இருப்பதற்காக வெந்நீர்த் துளிகளை ஆறவைத்து, அவரது உதட்டோரத்தில் தடவிவிட்டு பணிவிடை செய்து வந்தாள்.

'டேபிள் விசிறி'யைப் போட்டு கொசுக்களை விரட்டப் பார்த்தாள். ஆனால் அப்பாவுக்கு குளிரும் என்று அவளே அனுமானித்து அதை நிறுத்திவிட்டு கைவிசிறியால் கண் முன்னால் வீசிக்கொண்டிருந்தாள். கைவலிக்கும்போது, அந்தப் பக்கமாக வரும் சந்திரனிடம் கொஞ்சம் வீசுடா என்று சொல்லப் போவாள். ஆனால் அவனோ தன் கண்களை 'அரக்கோண' திசையில் வீசியவன்போல் அக்காவையும் அப்பாவையும் சிறிதுநேரம் அப்படியே பார்த்துவிட்டு, பிறகு தன் துயரம் அதைவிட மோசமானது என்று ஒப்பிட்டுப் பார்த்தவன்போல் விலகிப் போவான். படுக்கையில் கிடக்கும் தந்தை தனக்குச் செய்த நல்லதையெல்லாம் அவன் நினைத்துப் பார்க்கும்போது, அவர் பாமாவை தான் மணக்க சம்மதம் தெரிவித்ததே

லிஸ்டில் முதலில் வந்தது. எங்கும்... எதிலும் அவனுக்கு பாமாதான். அப்பா? அக்காள்? அதுதான் எங்கும் எதிலும் அந்த பாமா நிற்கிறாளே!

காலையில் கண் விழித்ததில் இருந்து இரவில் கண் மூடும் வரைக்கும் மணிமேகலை பெரும்பாலும் அப்பா வின் அருகிலேயே இருந்தாள். அவரது உடம்பும் லேசாக அசைவதுபோல் தெரிந்தது. பலாச்சுளை அடுக்குப்போல, வாழைப் பூ நெட்டுக்கள்போல, எண்ணத்திற்கு மேல் எண்ணமாகக் குவிந்த அவள் உள்ளத்தில் மகனின் நினைவு ஊடுருவி நின்றது. தகப்பனிடம் தாய்போல் நடந்த அவள், குழந்தையை நினைத்து குழந்தைபோல் கேவினாள். ‘அம்மாங்க... அம்மாங்க’ என்று அழுதுகொண்டிருப்பான். அவர் அடகக’ முடியாமல் அடித்திருப்பார். என் பிள்ளை எப்படித் துடிக்கிறானோ? கண் கலங்கி நிற்கும்போது தன் மோவாயைத் தூக்கி முத்தமிடும் என் செல்ல மகன் எப்படி அழுகிறானோ? எப்படித் தவிக்கிறானோ? நான்கூட அவனை சில சமயம் அடிச்சிருக்கேனே. என்னால எப்படி அடிக்க முடிஞ்சுது? இப்போ எப்படி இப்படி இருக்க முடியுது? மணிமேகலை தோப்புப் பக்கமாக வெறித்துப் பார்த்தாள்.

பசு மாடு தன் கன்றை நக்கிக்கொண்டிருந்தது. கூடு கட்டிய காகம், கூட்டுக்குள் குஞ்சுக்கு எதையோ கொடுத்துக் கொண்டிருப்பதுபோல் தெரிந்தது. பத்துப் பன்னிரண்டு குஞ்சுகளுடன் வலம் வந்த கோழி, வீட்டுப் பூனையைப் பார்த்துக் கொக்கரித்தது. தூரத்துப் பாதையில் தெரிந்த பன்றி பின்னால் இடைவெளி போட்டு வந்த தன் குட்டிகள் வந்து சேருவது வரைக்கும் காத்து நின்றது.

மாட்டிலும், கோழியிலும், பன்றியிலும் மோசமாகப் போயிட்டேனே! உயிர்கொல்லி பூனையையே துரத்தும் கோழி மாதிரி, வசந்தி கொண்டுபோன பிள்ளையை வாங்காமல் வந்துட்டனே! அதோ அந்தப் பன்றிகூட,

தற்செயலாகப் போகும் அந்த நாய் தன் குட்டிகளைத் தாக்க வருகிறது என்பதுபோல் தீப்பிழம்பு போன்ற தன் 'மூஞ்சியை' தூக்கிக்கொண்டு, முன்னாலும் பின்னாலும் நகருது. பெண்புலி தன் குட்டிகளைத் தின்ன வரும் 'கணவன் புலியை' எதிர்த்து கடைசிவரை போராடுமாமே. நான் புலியாய் இல்லாட்டாலும் பரவாயில்ல. ஒரு பன்றியாக்கூட இல்லாம போயிட்டேனே! இப்போ இந்த நிமிடத்தில் என் பிள்ளை என்ன செய்கிறானோ? யார் அடிக்கிறார்களோ? 'என் செல்வமே! என் ராஜா! வந்துடுறேண்டா... சீக்கிரமா வந்துடுறேண்டா!

அவளுக்கு அப்போது ஆறுதல் தேவைப்பட்டது. யாரிடமாவது சொல்லியாக வேண்டும். எவரிடமாவது அழ வேண்டும். தாங்க முடியல... தாங்க முடியாது... தாங்கவே முடியாது!

அந்தப் பக்கமாக வந்த அண்ணிக்காரிகூட அவளுக்கு தன் அம்மாபோல் தெரிந்தாள். அவள் கையைப் பிடித்துக் கொண்டு "என் பையன் கண்முன்னாலயே நிக்கான் அண்ணி. இந்த வீட்ல பிறந்தவன் எந்த வீட்லயோ நிக்கான் அண்ணி. நான் இன்னும் சாகாம இருக்கேனே... இருக் கேனே..." என்று அவள் தோளில் சாய்ந்து துவண்டாள்.

அண்ணிக்காரியும், 'ஆறுதல்' சொன்னாள்.

"இந்தப் புத்தி, புறப்படுறதுக்கு முன்னால் வந்திருக் கணும். 'சித்திரப்பன் தெருவுல' என்கிறது சரியாப் போச்சி ஒன் மவன் எந்த சித்திரையில பிறந்தானோ, அதுக்கு அடுத்த சித்திரையில ஒன் அப்பாவுக்கு மாரடப்பு வந்தது. ஒனக்கு குஷ்டம் வந்தது. அப்பன துரத்தாம, அந்த அப்பன வச்சி ஒன்னையும் துரத்திட்டான். இப்போ இந்தப் 'பாவி மனுஷன்'கூட லேசா இருமுறார். இன்னும் என்னெல்லாம் நடக்கப்போவுதோ? இருமுனாக்கூட பரவாயில்லே; கையில காலுல படை படையா வருது."

மரக்கிளை என்று நம்பி மலைப்பாம்பைத் தொட்டவள்போல, மணிமேகலை திடுக்கிட்டாள். அவளிடம் இருந்து விலகி நின்று 'ஒங்களுக்கு இந்தப்பிள்ள பிறந்த பிறகுதான் எங்கப்பா முடங்கிப் போயிட்டாரு' என்று கூட வாதாடப் போனாள். 'என்னை யாரும் துரத்தல, நானாத் தான் வந்தேன்' என்று சொல்லப் போனாள். அவளையே கோபமாகப் பார்க்கப் போனாள். ஒரு நிமிடந்தான்.

பிறகு, கோபம் இருந்த இடத்தில் இயலாமை குடியேற வார்த்தைகளைச் சுமந்து நின்ற வாயில் கண்ணீர் சொட்டுக்கள் கரிக்க, தலையை குனிந்துகொண்டே அவள் தோப்புப் பக்கமாக நகர்ந்தாள். யாரை நொந்து என்ன பிரயோஜனம்? எல்லாம் தலைவிதி! காலத்தின் கோலம்!

வந்து ஒரு மாதமாகிவிட்டது. இதுவரை கணவனுக்கு மூன்று லட்டர் எழுதிவிட்டாள். முன்பெல்லாம் அவள் கடிதம் போய்ச் சேருமுன்னாலே 'ஏன் லட்டர் போடல' என்று அவன் எழுதுவான். அப்போதுதான் கடிதத்தை தபால் பெட்டியில் போட்டுவிட்டு வரும் அவள், அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு, 'உங்க லட்டர் இப்போதான் வந்துது' என்று இன்னொரு லட்டரை அப்போதே எழுது வாள். அதிலும் முழுக்க முழுக்க எழுதுவாள்! 'சீக்கிரமா வாரேன். சீக்கிரமா வாரேன்... கோபம் வேண்டாம்... கோபம் வேண்டாம்!' மனைவிக்கு பேக்டரியில் கடிதம் போடவில்லை என்று 'கோபித்து' கடிதம் எழுதிப் போட்ட அவனும், வீட்டில் காலை பத்து மணிக்கே வந்திருக்கும் கடிதத்தைப் படித்துவிட்டு, 'உன் லட்டர் வந்துது. இதுக்கு முன்னால எழுதிய கடிதத்தைத் தப்பா எடுத்துக்காதே. இருந்தாலும் இவ்வளவு நாளாகவா அங்கே இருக்கது? உன் வீடு அங்கே இல்லை; இங்கே தான்' என்று எழுத, உடனே அவளும் 'உன் வீடு இங்கேதான்னு நீங்கள் எழுதியதை நான் இப்போ இந்த மாந்தோப்பில் நின்று

படித்தேன். அப்படின்னா என் வீடு 'இங்கேதானா'? இந்த மாந்தோப்புப் பழைய வீடுதானா? அங்கே இல்லை என்றால் அந்த அரக்கோணம் வீடும், அந்த வீட்டின் இரண்டாவது 'பிள்ளையாண்டானும்' எனக்கில்லையா? இவ்வளவு கல்நெஞ்சம் ஒங்களுக்கு ஆகாது. அதனால இன்னும் ஒரு வாரம் இருக்கப் போறேன்' என்று சுடச்சுட எழுதுபவள் போல் அவனைக் 'குளிப்பாட்டி' எழுதுவாள்.

இப்படி யார் பதில் போட்டது, எந்தக் கடிதத்திற்கு எந்தக் கடிதம் பதில் என்று தெரியாதபடி இருவரும் எழுதிக் குவிப்பார்கள். இப்போது அவள்கூட மூன்று லட்டர்கள்தான் எழுதினாள். அவனோ இதுவரைக்கும் பதில் போடவில்லை. பாமாவுக்கும் லட்டர் போட்டாள். அவளும் 'அவரின்' தங்கைதானே. இந்த இந்திராதான் எழுதியிருக்கலாமே? ஒருவேளை அவளும் மறந்துட்டாளோ? இருக்காது! சிலர், பிறக்கும்போதே அன்பைச் சுமந்துகொண்டே பிறக்கிறவர்கள். அவர்கள் இறப்பது வரைக்கும் அந்த அன்பும் இறக்காது. ஜாதி மதம் கடந்த அன்பு அது. இந்த இந்திரா அவர்களில் ஒருத்தி. சரி அவளாவது எழுதலாமில்லையா? பொறுத்து பொறுத்துப் பார்த்து கடைசியில் 'கம்பவுண்டர்' மணிக்குக் கடிதம் போட்டாள். அவனிடமிருந்து உடனடியாக வந்தது. இப்போது தான் அந்த வீட்டுக்குப் போவதில்லை என்றும் குழந்தை அழுதுகொண்டே இருந்தாலும் சுகமாக இருக்கிறது என்றும் எழுதியிருந்தான். இன்னும் தன்னைப் பற்றி விரிவாக எழுதியிருந்தான். அவள் நினைவாகவே இருக்கானாம்.

அவனுக்கு இப்போது ஒரு லட்டர் எழுதி மகனைப் பற்றி விசாரிக்கலாமா? வேண்டாம். பனை மரத்தடியில் இருந்து பால்கூட சாப்பிடக்கூடாது. அதுவும் ரயிலில் அந்தக் கிழவி அப்படிச் சொன்னபிறகு, முதல் லட்டர் போட்டதே தப்பு!

மணிமேகலை, மாந்தோப்பின் முனைக்கு வந்தாள். 'அவர்' எப்படி இருக்காரோ? கஷ்டப்பட மாட்டார். வசந்திதான் இருக்காளே. இப்போ எந்த சட்டையை அவர் போட வேண்டும் என்று அவருக்கு ஆணையிடும் அளவுக்கு முன்னேறியிருப்பாள். கெட்டிக்காரி. சீச்சி! நான் ஒரு பெண்ணா? என் புத்தி ஏன் இப்படிக் கெட்டுப் போகணும்? அத்தை மகனிடம் மாமா மகள், தங்கை மாதிரி பழகக்கூடாதா?

மாந்தோப்பில் குருவிகள் ஓலமிட்டன. ஒரு கரிச்சான் குஞ்சு காகத்தை துரத்திக்கொண்டு வந்தது. ஊரெல்லாம் குஷ்டம் குஷ்டமுன்னு ஒரே பேச்சாப் போச்சு. ராம பத்திரன் புண்ணியவான்... போகட்டும்... என் வாயால அவரை சபிக்க வேண்டாம்.

கடந்த பதினைந்து நாட்களாக மருந்து சாப்பிடாமல் விட்டது அவளுக்கு நினைவுக்கு வந்தது. மாத்திரைகள் தீர்ந்து போய்விட்டன. மறுபடி வாங்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. ஞாபகம் இல்லை. ஞாபகப் படுத்தவும் ஆட்கள் இல்லை. ஊர் ஜனங்கள் எல்லாம் அவளை அன்போடுதான் பார்க்கிறார்கள். அவர்களுக்கு மாத்திரை விவரம் தெரியாது. 'விவரம்' தெரிந்த சகோதரர்களோ, அதைப்பற்றி விசாரிக்கவில்லை. எப்படியோ போகட்டும். உடம்பு எக்கேடும் கெடட்டும் உடம்பு சுகமாயிட்டுன்னு தெரிந்த பிறகும் நம்பாதவன் போல் நடக்கும் கணவனுக்காக இருந்த இந்த உடம்பு இனிமேல் எப்படியோ போகட்டும். சீக்கிரமா போகட்டும்.

எவையெவை எல்லாமோ நெஞ்சில் புரள, அவள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தபோது, 'கூத்து' கோவிந்தன் அங்கே வந்தான். அடிக்கடி வந்து பார்க்கிறவன். அவளின் மனக் குமைச்சல் தெரியாமல்

பேசினான். ஹிப்பி மாதிரி தொங்கிய முடியை தட்டி விட்டுக்கொண்டே பேசினான்.

“நாளைக்கி நம்ம பத்ரகாளியம்மன் முன்னால ஹரிச்சந்திரனோட மயான காண்டத்த போடுறேன். அம்மா கண்டிப்பா வரணும். இது மத்த கூத்தவிட புது சான கூத்து. வெட்டியான் வேலை பாக்கும் ஹரிச்சந்திரன், அங்கே தனியாக் கிடந்துவிட நோய் சொறிந்து செத்துப் போன மகனைத் தூக்கிக்கொண்டு காசில்லாமல் அவனோட மன்றாடச்சே, அவன் ‘பெண்ணே! ஒன் தாலியைத் தரக்கூடாதான்’னு கேட்பான். உடனே சந்திரமதி ‘கணவனுக்கு மட்டும் தெரிய வேண்டிய இந்தத் தாலி இந்தப் புலையனுக்கும் தெரிஞ்சுட்டே. விதியே! விதியே!’ என்று ஒரு பாட்டுப் பாடுவாள். இப்படித்தான் எல்லாரும் கூத்துப் பண்ணுதாங்க. ஆனால், நான் புதுசாயும் மனோதத்துவப்படியும் பண்ணப்போறேன்.

‘புலையன் பார்த்துட்டானேன்னு’ ஒரு பத்தினிக்கு தன்மீதே சந்தேகம் வரப்படாது. தன் தாலிமீதே சந்தேகம் வரப்படாது. அதோட புலையன்னு கேவலமா அவள் நினைச்சால் என்னப் பொறுத்த அளவுல அவளுக்குப் பட்ட கஷ்டம் பத்தாது. அவ்வளவு கஷ்டப்பட்ட பிறகு, அவளுக்கு ஜாதி வித்யாசம் தெரிஞ்சிருக்காது. ஏன்னா, ஜாதி என்கிறதே தப்பு. அது இன்னும் இருக்குது மகா தப்பு.”

“அதனால என்னோட ஹரிச்சந்திரன் ‘கையில் ஒன்றுமில்லை என்று பொய் புகல்கிறாய் பெண்ணே. பொய் புகல்கிறாய். கணவனைப் பற்றிக் கேட்டபோது கண்ணீர் விட்ட காதகியே! ஒன் கழுத்தில் தாலி இருக் கிறதே, எப்படி இருக்கிறது? இதைப் போட்டவன் யார்? கை விட்டானா? ஒன் மெய்யைத் தொட்ட அந்த பொய்யன் போய்விட்டானா? புகல்வாய் பெண்ணே,

புகல்வாய்!' என்கிறான். அவன் தாலியை தாவென்று கேட்கும் கொடியவன் இல்லை. 'தாலி இருக்கே, அதைக் கட்டியவனைக் காணலியே' என்று தன் சந்தேகத்தைத்தான் கேட்கிறான். உடனே சந்திரமதி சொல்பவன் தன் கணவன் என்பதைப் புரிந்துகொண்டு, 'அப்படியானால், சாமீ தாங்கள்...' என்கிறாள். வார்த்தையை முடிக்க முடியாமல் திண்டாடுகிறாள். எப்படி நம்ம கற்பனை? இது என்னோட கற்பனை இல்லம்மா. தஞ்சை கோவிந்தராசுன்னு ஒரு கலைஞர், மெட்ராஸ்ல வன்னிய தேனாம் பேட்டையில இருக்கார். இங்க நாடகம் போட வந்தபோது இதைச் சொன்னார். இதனால என் பங்கு இல்லன்னு நினைக்காதிய. ஊர் விவகாரத்தயும் ஜாட மாடயா இடையில விட்டிருக்கேன். ஒங்க அப்பாவுக்கு தினமும் ரெண்டு ரூபாய் மாத்திர கொடுத்துக்கிட்டு வரும்போது அவரு லேசா உட்காருவாரு. ஒங்க அண்ணன் காசுக்கு ஆசப்பட்டு மாத்திர கொடுக்கறதை நிறுத்திட் டாரு. பாழாப்போற பாவி, இந்த மனுஷன் இல்லாம இவரு எப்படி வந்தாரு? இருக்க வைக்கிற மாத்திரைய வாங்கப் படாதா? இவ்வளவு சொத்துல ஒரு ரெண்டு ரூபா பெரிசா? அதனாலதான் சந்திரமதி, பிணமாப்போன மகனை வைத்து தவிக்கும்போது 'மகனே! மகனே! மரணப் படுக்கையில் பிதா கிடக்கையில் நீ அன்னவர் வேதனை யைக் குணப்படுத்த அயச்செந்தூரம் கொடுக்க மாட்டாய். மருந்து கொடுக்காமலே உன்னை பிறப்பித்த வனை இறக்க விடுவாய் என்று நினைத்து இந்த நல்ல பாம்பு மருந்து கிடைக்காத இடத்தில் உன்னைக் கொத்தி கொன்றதோ?' என்கிறாள். அப்புறம் தன் தந்தையை நினைத்து,

அய்யாவே அய்யாவே அழகான அய்யாவே—ஓமக்கு
மருந்துகொடுக்காமல் மாளடித்த பாவியில்ல...
பொற்காசு போமென்று உம்மை போகவைத்த பாவியல்ல
முடங்கிக் கிடந்த ஓம்மை மூலையிலே சாத்தவில்லை

அடங்கிக்கிடந்த ஓம்மை அடுக்களையில் வைக்கவில்லை
விடமுண்(ட) நீலகண்டன் விடையேறி ஈஸ்வரனாம்
அசந்து படுத்த அந்த அருணாசலம் போல—நீர்
அசந்து படுக்கையிலே சுமந்து நின்ற மகளல்லவா"

என்று பாடுகிறாள். எப்படி பாட்டு? இனிமேயாவது ஒங்க அண்ணனுக்கு உரைக்கான்னு பார்க்கலாம்? ஏம்மா பேசமாட்டக்கிய? எதுவும் தப்பாச் சொல்லியிருந்தா மன்னிச்சிடுங்க. ஒங்களோட இந்த நிலைமையில இதைப் பேசியிருக்கப் படாதுதான். ஆனால் இந்த கலைஞன் இருக்கானே அவனுக்கு சோறு வேண்டாம். தண்ணி வேண்டாம். அந்தரங்க சுத்தியோட சொல்லுததை கேக்கதுக்கு ஒரு ஆளு கிடச்சால் போதும். படுவாப்பய மவன் விடமாட்டான்." மணிமேகலை 'கூத்து' கோவிந்தனை ஏறிட்டுப் பார்த்தாள். களங்கமில்லாத முகம். அதைவிட களங்கமில்லாத நெஞ்சம். சிறிது தலையை ஆட்டி சிந்தித்துவிட்டுக் கேட்டாள்.

"அந்த மாத்திர எங்க கிடைக்கும்?"

"தூத்துக்குடில கிடைக்கும்... மாத்திர பேரு ஒங்க தம்பிக்கும் தெரியும். நம்ம ரத்துனத்தோட அய்யாவுக்கும் இப்பிடித்தான் வந்துது. வேளா வேளைக்கி மருந்து கொடுத்து, இப்போ அவரு சடுகுடு ஆடுவேன்னு சொல்றாரு. நான் வரட்டுமா? அப்பாவுக்கு எப்படியாவது அந்த மாத்திரைய வாங்கி எப்படியாவது கொடுங்கம்மா. நாளைக்கி என்னோட சந்திரமதி கூத்த பாக்க வாரதுக்கு மறந்துடாதிய. நிச்சயமா அழுதுடுவிய."

"நான் கூத்த பாத்துட்டுதான் அழணுமா?"

கூத்து கோவிந்தன் அவளையே பார்த்தான். அவள், அவனுக்குப் புதிய சந்திரமதி போலவும், பழைய சீதை

போலவும் தெரிந்தது. அவள் கஷ்டத்தைக் கேட்காமல், தன் கலியுக சிருஷ்டி வினோதத்தைப் பேசப் போனதற்கு வெட்கப்பட்டவன்போல் அதேசமயம் பிராயச்சித்தம் செய்யத் தெரியாதவன்போல் கால்களை இடறிக் கொண்டே போனான்.

மணிமேகலைக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஊருக்கெல்லாம் தானம் கொடுத்து, மிராசுதார்கள் என்றாலே ஒருமாதிரி மனிதர்கள் என்று ஆகிப்போன இந்தக் காலத்தில் இப்போதும் ஊர்மக்கள் 'புண்ணியவான்' என்று சொல்லும்படி வாழ்ந்து இப்போ வதங்கிக் கிடக்கும் தந்தைக்கு, சகோதரர்கள் கேவலம் நிலையில்லாத காசுக்கு ஆசைப்பட்டு மாத்திரைகளை நிறுத்தியதால், மாகாளியாய் ஆனவள்போல் மாந்தோப்புச் சுவரில் சாய்ந்துகொண்டு எதையோ மௌனமாக உற்றுநோக்கிக் கொண்டிருந்த சந்திரனை நோக்கி நடந்தாள்.

"ஏண்டா! (இப்போதான் 'டா' போட்டாள்) அண்ணனுக்குத்தான் அறிவில்ல... ஒனக்கு எங்கடா போச்சு? அப்பாவுக்கு மாத்திரை வாங்க இல்லாத பணம் எதுக்காவடா இருக்கணும்?"

சந்திரன் பதில் பேசவில்லை. அவளிடம் அருணாசலக் கிழவர் பெயருக்கு வந்திருந்த ஒரு அழைப்பிதழைக் கொடுத்தான். படித்துப் பார்த்த மணிமேகலை விழித்தாள். பாமாவின் கல்யாண அழைப்பிதழ். இந்நேரம் கல்யாணம் நடந்திருக்கும். தமிழக அரசில், நெடுஞ்சாலை இலாகாவில் மாப்பிள்ளை எஞ்ஜினியராம்.

'எனக்கு ஒரு லட்டர் எழுதப் படாதா? எனக்கு உரிமையில்லாமப் போயிட்டுதா? நான் இல்லாம காதுகுத்துகூட நடக்காத வீட்டில், இப்போ கல்யாணமா...?

தம்பியை அவள் பரிதாபமாகப் பார்த்தாள். அதோடு, இனிமேல் அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதால்

இவனும் தனக்குக் கல்யாணம் ஆவதற்குரிய வழியைப் பார்ப்பான் என்று எண்ணி, சற்று திருப்திப்பட்டுக் கொண்டாள். பிறகு தம்பியின் கைகளை எடுத்து, தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டே "அவள் கிடைக்காமல் போனதும், ஒரு வகையில் நல்லதுக்குத்தாண்டா. சினிமாக்காரின்னு அண்ணி சொன்னதுல பாதியாவது சரியா இருக்கும். நான்கூட கேட்டேன். பெரியவங்க எதைக் காட்டினாலும் கட்டுவேன்னு என்கிட்டயே சொன்னாள். நல்ல வேளையா, ஆரம்பத்துலேயே அவள் சுயரூபம் தெரிஞ்சுபோனது நல்லதாப் போச்சு. ஒனக்கு பொண்ணா கிடையாது? விடுடா! எனக்கு வந்த நோயி, ஒனக்கும் வந்துடுமோன்னு பயந்துட்டாள். இவ்வளவுக்கும் படிச்சவள். விடுடா!"

சந்திரன் விட்டான். அக்காளின் கைகளை விட்டான். பாமாவின் 'சுய ரூபத்தை' பார்க்க முடியாமல் போனதுக்கு அக்காதான் காரணம் என்பதுபோல், அவளையே பார்த்தான். நெடிய மௌனம்; கொடிய பார்வை.

மணிமேகலை தன்னை சமாளித்துக்கொண்டே பேசினாள்:

"இப்போ அப்பா இருக்கிற நிலையைப் பாரு. ஏதோ ஒரு மாத்திரை இருக்காமே, ரெண்டு ரூபாயாம். அதை எதுக்குடா நிறுத்தினிங்க? நம்மை பெத்து வளர்த்தவருடா அவரு. இப்பவே போய் ஒரு மாதத்துக்கும் சேர்த்து மாத்திரை வாங்கிட்டு வாடா. போடா! நம்ம அப்பாவை விட யாருடா உசத்தி? இந்த பாமா போனால், இன்னொரு பிரேமா கிடைப்பாடா, போய் மாத்திரை வாங்கிட்டு வாடா!"

சந்திரனால் பொறுக்க முடியவில்லை. இவள் அமரக் காதலின் மகத்துவம் தெரியாத மண்ணாங்கட்டி. இந்தக் காதல் அமரத்துவம் பெற்றதுக்கு இவளே காரணம்;

இவளுக்கு—இந்த நோயாளிக்கு—தான் தம்பியாகப் பிறந்ததே காரணம். இனிமேலும், அவளுக்குத் தம்பியாக இருக்கப் போவதில்லை என்பதுபோல் கத்தினான்.

“போக்கா ஒன் வேலய பார்த்துட்டு! எந்தச் சமயத்துல என்ன பேசணுமுன்னு தெரியல. எதைச் சொன்னாலும், அதுக்குன்னு ஒரு வேளா வேளை வேண்டாம்? ஒனக்கு சாகப்போறவரு பெரிசாயிட்டாரு. வாழப் போறவன் சிறிசாயிட்டான். பேசாமல் போ! இல்லன்னா எதை யாவது சொல்லிடப் போறேன்.”

மணிமேகலை ‘சிறிசாயிட்ட’ தம்பியையே பார்த்தாள். இவன் தம்பியல்ல. சொந்த அப்பனின் நோயைப் பற்றியோ, அவர் இருந்தும் இறப்பவராய் இருப்பதைப் பற்றியோ கவலைப்படாதவன்; அப்பனுக்குப் பிள்ளையாகாதவன், அக்காளுக்கு எப்படித் தம்பியாவான்?

மணிமேகலை தனது ‘முன்னாள்’ தம்பியைப் பார்க்கா மலே, வீட்டருகே வந்தாள். அண்ணன்காரன், மனைவிடம் கை, கால்களை காட்டிக்கொண்டிருந்தவன், தங்கையைப் பார்த்துவிட்டு, வேட்டியை இழுத்துப் போட்டான். மணிமேகலை எதையும் கவனிக்கவில்லை. அப்பாவுக்கு மாத்திரை கொடுக்க வேண்டும். அவர் எழுந்து உட்காரு வதைப் பார்க்க வேண்டும். அவ்வளவுதான் குறிக்கோள்.

குறிக்கோளில் குறி வைத்தவள்போல், அவள் அப்பா வைப் பார்த்துக்கொண்டே அண்ணனிடம் பேசினாள்.

“அப்பாவுக்கு முன்ன கொடுத்த மாத்திரையை எதுக்காவ நிறுத்துன அண்ணே? ஊர்ல நாலுபேரு நாலு விதமா பேசும்படியாவா நடந்துக்கது? அப்பா, நீ பிறந்த போது எவ்வளவு சந்தோஷப் பட்டிருப்பாரு. நினைச்சிப் பார்த்தியா?”

அண்ணன் ராமலிங்கம் 'நினைச்சிப்' பார்க்காதவன் போல் பேசினான்.

"எந்தப் பயலுவ நாலுவிதமா பேசுனது? செறுக்கி மவனுவள காலுல கிடக்கத கழட்டிக்கிட்டு அடிக்கேன் பாரு. என் வீட்ல ஆயிரம் நடக்கும். இதப்பத்திப் பேச எந்தப் பயலுக்கு உரிமை இருக்கு? யாரு சொன்னது? சொல்லு—சொல்லுமா!"

அண்ணி கனகம் நூறடி தாண்டிய கணவனை மீறி 'குதித்தாள்.'

"ஒனக்கு பொறுக்க முடியலன்னா, நீ வாங்கிக் கொடேன்? நாலுபேரு சொன்னாவளோ என்னமோ நீ நாலு பேருகிட்ட சொல்லியிருப்ப. இவ்வளவு நாளா புருஷன் ஞாபகமும், பிள்ள ஞாபகமும் இல்லாதவளுக்கு, அப்பா மேல பாசம் பொத்துகிட்டு வருதாக்கும்? இந்தப் பாவி மனுஷங்கிட்ட படிச்சிப் படிச்சி சொன்னேன், அவரு கேக்கல. நீ வந்த ஒரு வாரத்துல காலு கை ஊறுதுன்னார். பெருவியாதியா இருக்குமுன்னேன். பெரிசா கத்துனாரு. இப்போ நீ வந்த புண்ணியத்துல படை படையாய் வந்திருக்கு. நாங்க... மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவியாய் தவிக்கோம். நீ என்னடான்னா, இன்னிக்கோ நாளைக்கோ சாகப்போற கிழவனுக்கு அழுவுற. எல்லாம் இந்த பாவி மனுஷனுக்கு 'வாக்கப் பட்டதால' வந்த வினை. இன்னிக்கி இவருக்கு வந்தது, நாளைக்கி எனக்கும் வரும், வரத்தான் போவுது!"

கண்ட கண்ட இடங்களில் காசு கொடுத்து, பட்டைச் சாராயத்தோடு பகட்டுக்காரிகளையும், பகட்டில்லாதவர் களையும் கட்டிப்பிடித்து 'மேகப்பண்டகளை' வாங்கிக் கொண்ட ராமலிங்கமும் மனைவி சொல்வது சரிதான் என்பதுபோல், அவள் தலையில் கிடந்த ஒரு தென்னங்குச்சியை எடுத்துக் கீழே போட்டான்.

மணிமேகலை அங்கே நிற்கவில்லை. மௌனியாக, கண்ணீர் விடாமலே அழுகிறவள்போல் வீட்டின் காம்பவுண்ட் சுவர் கேட்டருகே வந்தாள். எதிரே தங்கம்மா பாட்டி வந்துகொண்டிருந்தாள். இவள் கேட்காமலே அவள் பேசினாள்.

"அதுல போயி உட்காரும்மா. நான் இந்த சாம்பல வச்சி மந்திரம் சொல்லி தடவிப் போடுறேன். எந்த நோயி இருந்தாலும் பஞ்சாப் பறந்து போயிடும். நான் சொல்ற மந்திரம் குஷ்டத்தக்கூட குத்தி விரட்டிடும். வாடியம்மா என் ராசாத்தி. வந்து உட்காரும்மா. இங்கயே உட்காரலாம். நேத்து சாம்பலோட வந்தேன். ராமலிங்கம் அடிக்காத குறையா துரத்திட்டான். உக்காரு ராசாத்தி. ஒனக்கா இந்த கதி?"

மணிமேகலை, அந்தக் கிழவியையே பார்த்தாள். மனிதாபிமானம் இன்னும் சாகவில்லை. மனிதர்கள் இன்னும் முற்றிலும் மடியவில்லை.

மந்திரம்—மாயையில் நம்பிக்கை இல்லாத அவள், இப்போது அந்தக் கிழவியைத் திருப்திப்படுத்துவதற்காக, ஓரமாகக் கிடந்த ஒரு கல்லில் உட்கார்ந்தாள். தங்கம்மாக் கிழவி அவள் கழுத்துப் பக்கத்தில் சாம்பலைத் தடவிய போது மணிமேகலை அந்தப் பாட்டியின் கழுத்தை குழந்தை மாதிரி கட்டிக்கொண்டு விம்மினாள்.

## 13

**ம**றுநாள் பொழுது, வேறுபட்ட பொழுதாக மலர்ந்தது.

சாமக்கோழி கூவும்போது எழுந்து, அப்பாவுக்குப் பணிவிடைகள் செய்துவிட்டு, அவரது பழைய துணிமணிகளை கொல்லைப்புறக் கிணற்றில் துவைத்து

உலற வைத்துவிட்டு அவள் சாப்பிடத் தயாரானபோது, காலை மணி ஒன்பது. சாப்பாடு வந்தது பத்து மணிக்கு.

அப்படியும் அவளால் சாப்பிட முடியவில்லை. நேற்றிரவு சாப்பிடாமலே, ஏன் சாப்பிடல என்று யாரும் கேட்காமலே, தூங்கி எழுந்தவளுக்கு உடம்பின் 'பௌதிகத் தனம்' தன் இயல்புப்படி பசியாக மாறியது. சிறுகுடலை பெருங்குடல் தின்பது போன்ற பசி. ஆனால் பசித்தபோது அவளுக்கு உணவு கிடைக்காததால் அந்தப் பசியே ஒரு உணவாகி இப்போது அவளால் புசிக்க முடியவில்லை. ஒரு கவளம் உணவுகூட உள்ளே போக மறுத்தது. சோற்றை எதிரே நின்ற நாய்க்கு வைத்துவிட்டு தட்டைக் கழுவி சமையலறையில் வைத்துவிட்டு வெளியே வந்து அப்பாவைப் பார்த்தாள்.

அந்த ஜீவனற்ற ஜீவன், கல்லாய்ச் சமைந்ததுபோல், குற்றுயிர் கொலையுயிராய் ஆனது போல் அப்படியே கிடந்தது. ஒரு காலத்தில் ஜீவநதியாக ஓடி, இப்போது நீரில்லாப் பள்ளத்தாக்காகப் போன அந்த அப்பாவை அப்படியே பார்த்தாள். அவளுள் ஒரு வைராக்கியம் பிறந்தது. அப்பாவுக்கு எப்படியும் அந்த மாத்திரையை வாங்கிக் கொடுத்து, அவர் உட்காருவதைப் பார்த்தாக வேண்டும். அவரது விழிகள் உருள்வதைக் கண்டாக வேண்டும். ஒருவேளை எதையாவது பேசலாம். அதைக் கேட்டாக வேண்டும்.

எப்படி முடியும்? கையிலே காசில்லை. கடன் கேட்க முடியாத 'அந்தஸ்துள்ளவள்' எப்படி முடியும்? எப்படியோ முடிய வேண்டும். அப்போது கையில் நாலைந்து கடிதங்களோடு வெளியே போய்க்கொண்டிருந்த சந்திரனைப் பார்த்தாள். 'நேத்து ஆத்திரத்துல பேசிட்டேன்னு தப்பா நினைக்காதே, மன்னிச்சிருக்கா. இப்பவே தூத்துக்குடிக்குப் போய், நீ சொன்னபடியே அந்த மாத்திரைகளை

வாங்கிக்கிட்டு வாரேன்' என்று சொல்வான் என்று எதிர் பார்த்தாள். அவன் அப்படிச் சொல்லவில்லை. ஒருவேளை நேற்றுச் சொன்னதே போதாது என்று நினைத்தவன்போல் அவளை விழி பிதுங்க முறைத்துக்கொண்டே ஒரு ஈஸிசேரை மடக்கித் தூக்கிக்கொண்டே தோப்புப் பக்க மாகப் போனான். நாற்காலியில் மல்லாந்து படுத்துக் கொண்டு கையிலிருந்த கற்றையில் ஒரு காகிதத்தை எடுத்துப் படித்துக்கொண்டிருந்தான்.

அவன் போவதை கண்களால பின்தொடர்ந்த மணிமேகலை, அவன் எதைப் படிக்கிறான் என்பதை யூகித்துக் கொண்டாள். மடமடவென்று அவனருகே போய் நின்றாள். சந்திரன் அந்த மகாபெரிய ரகசியக் கடிதத்தை மூடினான்.

"பாமா எழுதுன லட்டருங்களா?"

"எதுவோ ஒண்ணு."

"இந்தா பாருப்பா! பாமா நேற்றுவரை உன் காதலியாய் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு அவள் இன்னொரு வனுடைய மனைவி. அவள் கடிதம் ஒன்கிட்ட இருக்கது தப்பு."

"தப்போ சரியோ, அவள் எனக்கு எழுதுன லட்டருங்க. இதுல தலையிட ஒனக்கு உரிமை கிடையாது."

"நீ தரப்போறியா, இல்லியாடா?"

"இதுதான் நான் சாவுறது வரைக்கும் ஆறுதல் தரப் போற கடிதங்கள். இதைவிட நீ என் உயிர எடுத்துக்கலாம்."

"வசனம் பேசாம லட்டருங்கள கொடுடா!"

"நான் ஒன்னை மாதுரி மரக்கட்டை இல்ல."

"மிஸ்டர் சந்திரன்! நான் இப்போ ஒங்களோட அக்கா என்கிற முறையில கேட்கல. ஒரு பெண்ணின் வாழ்க் கையைக் காப்பாற்ற வேண்டிய இன்னொரு பெண்

என்கிற முறையில் கேட்கிறேன். கல்யாணமான ஒரு பெண்ணோட லட்டருங்களை வச்சிருக்கவனுக்கும், ஒரு காலிப்பயலுக்கும் வித்தியாசம் கிடையாது."

"எனக்கும் ரோஷம் உண்டு. யோசித்துப் பேசு."

"சீ... ஒனக்கு ரோஷம் இருக்காக்கும். இதை நான் நம்பணுமாக்கும். அவள் ஒன்னை ஒரு பொருட்டாக நினைக்காமல் 'பெரியவங்க' காட்டுனவன் நீட்டிய தாலிக்கு நிம்மதியாய் தலையை நீட்டிட்டாள். உன்கிட்ட இருந்து தப்பிச்சதையே பாக்கியமாய் நினைக்கிறாள். நீ வெட்கங் கெட்டதனமாக விரும்பாத பெண்ணோட லட்டருங்கள வச்சிக்கிட்டு பாக்கியில்லாம படிக்கிறியாக்கும். இதுல வேற ஒனக்கு ரோஷம் இருக்காக்கும்? உதறிவிட்ட பெண்ணோட லட்டருங்கள உதறாமல் இருக்கிற நீ, ஒரு ஆண் மகனாடா? நம் சங்க கால இலக்கியத்துல 'கைக்கிளைன்னு' ஒரு பிரிவு இருக்குது தெரியுமா? ஒன்னை மாதுரி பேடிப் பயலுவளுக்காக அப்பவே பாடி வச்சிருக்காங்க பாரு சீச்சி!"

சந்திரன், தனக்கு ரோஷம் இருக்கிறது என்று நிரூபிக்க விரும்பியவன்போல ஒரே ஒரு கடிதத்தை மட்டும் வைத்துக் கொண்டு இதர கடிதங்களை வீசினான். மணிமேகலை வீசப்பட்டவைகளை குனிந்து எடுத்துக்கொண்டு வீசாமல் இருந்ததை அவன் கையை மடக்கிப் பிடுங்கிக்கொண்டு அவற்றைக் கிழிக்கப் போனாள். பிறகு பாமாவுக்குக் கொடுத்த வாக்கு. அவளுக்கு நினைவுக்கு வந்தது. அவளிடம் காட்டிவிட்டுக் கிழிக்க வேண்டும். அவள்தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றவில்லை. நாமாவது நிறைவேற்றுவோம்.

தம்பிமீதே சற்று இரக்கம் ஏற்பட்டது. அவனை அனுதாபத்தோடு பார்த்துக்கொண்டே அப்பாவின் பக்கம் வந்தாள். இப்போது அந்த அனுதாபம், கடுங்கோபமாக

வந்தது. இவரைவிட, எவர் உசத்தியாயிடுவார்?... எவள் உசத்தியாயிடுவாள்? நம்மை கருவாய் பெற்று உருவாய் ஆக்கினவங்களைவிட அந்த உருவங்களில் மோகித்து வரும் யாரும் இணையாக முடியுமா?

என்ன நடந்தாலும் சரி, இன்றைக்கு அப்பாவுக்கு மாத்திரைகளைக் கொடுத்தாக வேண்டும்.

மணிமேகலை அப்பாவையே பார்த்துக்கொண்டு சுவரில் சாய்ந்தாள். இடையிடையே 'கூத்து' கோவிந்தன், சந்திரமதி, மகன் லோகிதாசனை பிணமாக வைத்துக் கொண்டு புலம்பியது நினைவுக்கு வந்தது. கடவுளே! என் மகனுக்கு அப்படில்லாம் ஆகக்கூடாது!

திடீரென்று காலடிச் சத்தங் கேட்டுத் திரும்பினாள். வெங்கடேசன் வந்துகொண்டிருந்தான். அண்ணன் சிறுமைப்படக் கூடாது என்பதற்காக தான் பெருமையுடன் கைவிட்ட அந்த தோழமை ஆடவன்—அவளோடு, 'ரயில் எஞ்ஜினாக' இருந்து விளையாடியவன், கையில் மஞ்சள் தடவிய கட்டுக் காகிதங்களுடன் வந்தான். இப்போது முகத்தில் தாடியில்லை. மீசை கம்பீரமாக இருந்தது.

அவளைப் பார்க்கவே அவனுக்கு சங்கடமாக இருந்தது. எழுந்து நின்ற மணிமேகலையை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் "ராமலிங்கத்தான் இருக்காரா? எனக்கு நாளைக்குக் கல்யாணம். சிம்பிள் கல்யாணம். திருச் செந்தூர்ல தாலி கட்டிட்டு, அப்படியே மெட்ராஸ்ல பெண் வீட்டுக்குப் போறேன்" என்றான். அவள் எதுவும் பேசாமல் இருப்பதை மௌனத்தால் அங்கீகரித்துக் கொண்டே வீட்டுக்குள் போனான். ராமலிங்கத்திடம் அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு, ஐந்து நிமிடத்திற்குள் வெளியே வந்தான். அவளையே பார்த்தான். பிறகு ஒரு கையை ஸ்டூலில் ஊன்றி, அதில் அழைப்பிதழை வைத்து 'மிஸ்ஸஸ் ஜெயராஜ்' என்று எழுதி முடித்துவிட்டு அதனை

நீட்டினான். அவன் கைகள் ஆடிக்கொண்டே கொடுத்தன. அவள் கரங்களும் அதை ஆடிக்கொண்டே வாங்கிக் கொண்டன. மணிமேகலை அழைப்பிதழைப் பிரித்துப் படித்தாள். ஆயாசப்பட்டவள்போல், சுவரில் தலையைச் சாய்த்துக்கொண்டாள். அவளுக்கு இருந்த நோயையும் இருக்கின்ற பிரச்னைகளையும் ஓரளவு அறிந்து வைத்திருந்த வெங்கடேசன் அவளைக் கல்லூரிக் காலத்தில் பஸ் நிலையத்தில் எப்படிப் பார்ப்பானோ அப்படிப் பார்த்தான். ஆசை பொங்கப் பார்த்தான். பிறகு அழுகை பொங்கக் கேட்டான்.

"ஏம்மா, பேசமாட்டக்கே? ஒரு வார்த்தையாவது பேசும்மா!"

மணிமேகலை தன்னை அடக்கிக்கொண்டு தலையை சுவரில் இருந்து எடுக்க முடியாமல் "என்னத்த பேச? நான் எஞ்ஜின் இல்லாத ரயிலாய் போயிட்டேன்" என்றாள். சொல்ல வேண்டியதை அவள் சொல்லிவிட்டாள். அவளையே மெய்துடிக்க, மெய் மறக்கப் பார்த்துக் கொண்டிருந்த வெங்கடேசன் வெளியேறினான்.

அந்த 'எஞ்ஜின்' ரயில்பெட்டியை விட்டுவிட்டு தனியாக ஓடியது.

'புதியோன் பின்னே போனது என் நெஞ்சே' என்று அந்த மணிமேகலையே புலம்பினாள் என்றால்,, இந்த மணிமேகலையோ "பழையோன் முன்னே நெஞ்சம் பட்டுப் போனது" போல் விக்கித்து நின்றாள். அந்த மணிமேகலையின் எண்ணச் சேர்க்கையால் புன்னை மரத்திற்குக் கீழே காதலனுடன் பேச நாணிய சங்ககாலப் பெண்—காதலன் காரணம் கேட்டபோது "என் அன்னை எனக்கு முன்னால் நட்ட புன்னை மரம். இது என் தமக்கை. நாணம் வராதா?' என்று சொன்னதாக புலவர் பாடிய

பாட்டொன்றை கல்லூரியில் படித்ததும், அந்தப் பாட்டுக்கு வெங்கடேசன், ‘கோனார் நோட்ஸ்’ கொண்டு வந்து கொடுத்ததும் அவள் நினைவுக்கு வந்தது. உடனே மரம்போல் கிடந்த தந்தையை நாணங்கலந்த அவலத்துடன் பார்த்தாள். அந்த உருவத்தின் பொட்டல் கண்கள் இரண்டிலும் ஒரு சொட்டு நீர் உருண்டு திரண்டு நின்றது.

மணிமேகலை அவரது கால் பாதங்களைக் கட்டிக் கொண்டே கண்ணீர் சிந்தினாள். கண்ணீர் விடும் அந்த உருவத்தை, இருக்க வைத்து, முடியுமானால் பேச வைத்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம், வைராக்கியமாக அவள் தன்னை தைரியப்படுத்திக் கொண்டதுடன், தனக்குள்ளே தன்னை நொந்துகொண்டாள்.

‘சேசே... பெற்ற அப்பாவை விட காதலியை தம்பி பெரிசா நினைச்சிட்டான்னு நான் கோபப்பட, எனக்கு என்ன அருகதை இருக்கு? நான்கூட, அப்பா மரணப் படுக்கையில் இருக்கிற இந்தச் சமயத்தில்கூட, வெட்கங்கெட்டத்தனமாய் நினைக்கிறேனே, சந்திரன் எம்மாத்திரம்? எப்படியும் அவனுக்கும் ஒரு கல்யாணம் ஏற்பாடு பண்ணிட்டுதான் ஊருக்குப் போகணும்...’

மணிமேகலை வெங்கடேசனை விலக்கிக்கொண்டு, தம்பியைத் தள்ளிகொண்டு தன்னையும் பின்னால் வைத்து, தந்தையை முன்னால் வைத்தாள். மாத்திரைகள் வாங்கியாகணும். யார் போய் வாங்கி வருவார்கள்? ஒரு வேளை ரத்தின அண்ணன்கிட்ட கேட்டுப் பார்க்கலாமா?

மணிமேகலை வாரிச் சுருட்டி எழுந்தாள். தலை முடியைச் சரிப்படுத்தாமலே செருப்புகளைப் போட்டுக் கொள்ளாமலே முந்தானையை மட்டும் இழுத்துப் பிடித்துப் போர்த்துக்கொண்டு நடந்தாள். வழியில் இவள்

ஜாதி ஏழைப்பெண் காத்தாயியும், ஹரிஜனப் பெண் ராமக்காவும் இன்னும் இவர்களைப் போன்ற இரண்டொரு விவசாயக் கூலிப் பெண்களும், இவளைச் சூழ்ந்து கொண்டார்கள். ராமக்கா மூச்சைப் பிடித்து வெளியே நிறுத்துபவள் போல் பேசினாள்.

"எம்மா... எம்மா... எப்படிச் சொல்லுறதுன்னே தெரிய மாட்டக்கு. சொல்லாமலும் இருக்க முடியல. இங்க நாயும் பேயும் நாலு விதமாப் பேசுது. வேற யாருமில்ல, ஒங்க ஜாதில ஒசந்து நிக்கிற ஆளுங்கதான். நீங்க வாழா வெட்டியா வந்துட்டியளாம். புருஷங்கிட்ட ஒத்து போவத் தெரியாதவியளாம். இன்னும் ஒரு வருஷத்துல கையி காலுல விரல் இருக்காதாம். ஒங்க நாத்தனார்காரியும் 'பீட போவமாட்டக்குன்னு' எல்லாருகிட்டயும் சொல்லுதாவ. உங்கள வாய் நிறைய வரணுமுன்னு சொன்ன இந்த வாயாலயே இப்போ சொல்லுதேன், பேசாம புருஷன் வீட்டுக்குப் போயிடுங்கம்மா! நல்லதோ கெட்டதோ அங்கயே பழிகிடங்கம்மா. இன்னொண்ணயும் சொல்ல நினைக்கேன்... வரமாட்டக்கே..."

"சும்மா சொல்லு! நான் இப்போ எல்லாத்தையும் தாங்கிக்குவேன்."

"ஒங்களபோயி—இங்க ராசாத்திய போயி—கூத்துப் போடுற கோவிந்தனை வச்சிக்கிட்டு இருக்கதா, ஒங்க நாத்துனாரே சொல்லியிருக்காம்மா. என் ராசாத்தி! மவராசி! பேசாம போயிடும்மா! வந்துடும்மான்னு சொல்ல முடியாமப் போன என் வாயில கரையான் அரிக்க—கட்டெறும்பு திங்க—பேசாம போயிடும்மா! போயிடு என் மவராசி!"

எல்லாப் பெண்களும், ராமக்கா சொல்வது உண்மை என்று ஒப்புக்கொண்டவர்கள் போல் 'பரக்கப்பரக்க' விழித்தார்கள். மணிமேகலை அந்த அன்புப் பெட்டகங்களை

ஆசை தீரப் பார்த்துக்கொண்டே, நெஞ்சில் விழுந்த இடியை நிலத்திலே போட்டவள் போல் நிலம் நோக்கி நடந்தாள்.

ரத்தினத்தின் ஓலை வீட்டிற்குள் அவள் வந்தபோது அவன் தன் மகனுக்கு 'தெல்லாங்குச்சி' சீவிக்கொண்டிருந் தான். அந்தப் பயலோ 'நொங்குவண்டி... நொங்கு வண்டி' என்றான். வாராததுபோல் வந்த மணிமேகலையைப் பார்த்த ரத்தினத்திற்கு, முதலில் ஒன்றும் ஓடவில்லை. உள்ளே அம்மியில் துவையல் அரைத்துக்கொண்டிருந்த பெண்டாட்டிக்கு கேட்கும் வகையில் "மிராசுதார் மகள் வந்துருக்கு" என்றான். பிறகு "ஏய் கொம்பேறி மூக்கி! இங்க வந்து பாருடி. ஒன் நாத்துனா வந்திருக்காள்" என்று ஆனந்தக் கூத்தாடியபோது, அவனோடு அம்மி மிதித்த அந்தப் பெண், மணிமேகலையை, அருந்ததியைப் பார்ப்பது போல் பார்த்தாள். பிறகு "எழுந்திரும்மா. இந்த கோரப்பாயில உட்காரும்மா ஓம்மத்தானே! பக்கத்து டெய்லர் கடையில முக்காலி கிடக்கு, எடுத்துக்கிட்டு வாருமே" என்றாள். ரத்தினம் முக்காலியை எடுப்பதற்காக, தன் இருகாலை குவித்தபோது மணிமேகலை கையாட்டித் தடுத்தாள்.

ஆரவாரங்கள் ஓய்ந்தபிறகு, மணிமேகலை தன் அப்பாவின் நிலைமையையும், சகோதரர்களின் போக் கையும் நாகரிகமாக எடுத்துச் சொன்னாள். பிறகு "என் வீட்டு நிலயும் சரியில்ல அண்ணே" என்றபோது ரத்தினம் அமைதி கலந்த ஆவேசத்தில் அவளிடம் பேசினான்.

"ஒனக்கு நடந்தது எல்லாம் எனக்குத் தெரியும்மா. அரக்கோணத்துல இவளோட பெரியய்யா பேரன் ஒரு தொழிற்சாலையில டர்னரா வேலை பாக்கான். ஒனக்கு அவனைத் தெரியாட்டாலும் அவனுக்கு ஒன்னைத் தெரியும். நீ அங்க பட்டபாடுல்லாம் அவனுக்குத் தெரியும்.

ஒன் புருஷனை, இன்னொரு பெண்ணோட சினிமா தியேட்டர்லகூட பாத்திருக்கான். மனிதர்கள் ஜாதி அடிப்படையில தனித்தனியா நிற்குற—ஒரே ஜாதியிலயும் மனுஷங்க, பணத்தின் அடிப்படையில தனித்தனியா நிக்கற இந்த சமுதாயத்துல, இந்த மாதிரி நடக்கது சகஜந்தான். இதுக்கு நீயும் ஒரு வகையில காரணம். எப்போ புருஷன் ஒன்னைத் தள்ளி வைக்கிறானோ, அப்பவே நீயும் அவனைத் தள்ளி வச்சிடணும். சொத்துல பங்கு கேட்டிருக்கணும். எப்போ ஒன் அண்ணன் தம்பிங்க அப்பாவ பார்க்கலியோ, நீ அப்பவே அவங்க முகத்துக்கு எதுருலயே 'என் சொத்த பிரிச்சிக் கொடுங்கடா. எனக்கும் சொத்துல உரிம இருக்குன்'னு அடிச்சிப் பேசியிருக்கணும்."

"இந்தக் காலத்துல நல்லவனா மட்டும் இருந்தால் பத்தாது, வல்லவனாயும் இருக்கணும். இப்படித்தான் இந்தப் பொண்ணு வடிவுக்கரசிக்கு, அறுபது பவுனும், இருபதாயிரம் ரூபாய் ரொக்கமும் போட்டு எவனோ ஒரு கிளார்க்குக்கு கட்டிக் கொடுத்தாங்க. அந்தப் பய அப்பா அம்மா பேச்சக் கேட்டு, 'தூத்துக்குடியில வீடு வாங்குறதுக்கு ஒப்பாகிட்ட ரூபாய் வாங்கிட்டு வந்தால்தான் வீட்டுக்குள்ள நுழையணுமுன்னு சொன்னானாம். இந்தப் பொண்ணும் அப்பாக்கிட்ட வந்து ஒப்பாரி வைக்க, அவரும் ரூபாய கொடுத்து விடுறாரு. இப்படிப்பட்ட பயலுவகிட்ட எதுக்காவ வாழணும்? தாலிய அத்து அவன் முகத்துல வீசினா என்ன? இந்த லட்சணத்துல கல்யாண அழைப்பிதழ்ல முருகன் படத்தப் போடுறாங்க. முட்டாப் பயலுவ! இவங்க முருகனுக்குப் பதிலா ரூபாய் நாணயத்தல்லா அழைப்பில போடணும்? துப்புக்கெட்ட பயலுவ! துட்டுத்தான் இவங்களுக்கு முக்கியம்."

மணிமேகலை சிந்தனையில் இருந்து விடுபட்டவாறு கேட்டாள்:

"சரி இப்போ ஆக வேண்டியதுக்கு வழியச் சொல்லு."

"பொறு. தூத்துக்குடிக்குப் போறேன். நாலு மாத்திரை வாங்கிட்டு வாரேன். யாரிடமாவது கொடுத்து அனுப்புறேன். நான் அங்க வர முடியாது. ஒங்க அண்ணனுக்கும் எனக்கும் அடித்தடி மட்டும் வரல. இப்போ வந்தால் நல்லா இருக்காது."

"ஒன்கிட்ட பேசிக்கிட்டு இருந்தால், எத்தனையோ விஷயம் புரியுறாப்போல இருக்குது. நீ சொல்றத ஒத்துக்க முடியாட்டாலும் ஆறுதலா இருக்கு. அப்போ நான் வரட்டுமா? அப்பா தனியா இருப்பாரு."

"கடலுக்கு மத்தியில தாகத்துக்கு தண்ணி கிடைக்காத கதை ஒங்க அப்பாவோட கதை; ஒன்னோட கதை?"

"நான் வரட்டுமா...?"

"அவ்வளவு சீக்கிரமா ஒன்ன விட்டுடுவோமா? அடியே பகவதி அம்மாளு! ஒன் நாத்தினார உபசரிக்கிற லட்சணமாடி இது?"

பகவதி அம்மாள் சிரித்துக்கொண்டே, ஒரு தட்டில் வறுத்த மொச்சக்கொட்டைகளையும், கூடவே ஒரு டம்ளர் 'கருப்பட்டிக் காபியையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு "இவிய பேச்ச கேளாதம்மா. ஊர்ல யாரும் சண்ட போடலன்னா இவியளுக்கு தூக்கம் வராது" என்றாள்.

"நான் இப்போ சொல்றதுதான் தங்கச்சி. ஒன் புருஷங் கூட இனிமேல் உன்னால இருக்க முடியாது. அந்த நரிப் பயல் ராமபத்திரனப்பத்தி எனக்கு நல்லா தெரியும். என் உதவி ஒனக்குத் தேவன்னா ஒரு லட்டர் போடு. நான் அங்க வந்து நிக்குறேன்."

"மருந்த எப்படிண்ணே கொடுக்கணும்? எப்பண்ணே கிடைக்கும்?"

"இன்னும் ஒரு மணி நேரம் பொறுத்திரு."

"பணம் எவ்வளவு?"

"அட சும்மாக் கிடம்மா. ஒன் பணத்துலதான் நான் அந்த கம்மாவ விலைக்கு வாங்கப்போறேன்? சரி கிளம்பு. ஒன் அண்ணன் இங்க வந்து ரகளை பண்ணப் போறாரு. அப்புறம் மருந்த நல்லா தூள் தூளாக்கி, வெந்நீர்ல கலந்து கொடு. ஒரு நாளைக்கி இரண்டு வேளை."

மணிமேகலை புறப்பட்டாள். மத்தியான வேளை. அப்பா அப்படியே கிடந்தார். அண்ணன் குடும்பத்தினர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். சந்திரன் இன்னும் அந்தத் தோப்பிலேயே இருந்தான். ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே, மாத்திரைகளை 'கூத்து' கோவிந்தன் கொண்டு வந்து கொடுத்தான். மணிமேகலை உடனடியாக ஒரு மாத்திரையை தூள் தூளாக்கி வெந்நீரில் நன்றாகக் கலக்கி தந்தையை லேசாகத் தூக்கிக்கொண்டு, உதடுகளைப் பிரித்து உள்ளே ஏற்றினாள். வெந்நீர்க் கலவை, தொண் டைக்குள் போகும் சத்தம் குட்டி அருவியோசை மாதிரி கேட்டது. இதற்கிடையே வெங்கடேசன் வகையறாக்கள், பூத்தட்டுகளுடன் மேளதாளத்துடன், பத்ரகாளியம்மன் கோவிலுக்குப் போனார்கள். வெங்கடேசன் மேல் சட்டை போடாத மேனியில் ரோஜாப்பூ மாலை விளங்க, கையில் மஞ்சள் காப்பு குலுங்க, கூட்டத்தின் மத்தியில் போய்க் கொண்டிருந்தான்.

நடந்ததையும், நடப்பவைகளையும், அவள் நினைத்து நினைத்து இறுதியில் நெஞ்சத்தை நிர்மூலமாக்கியபோது, பகல் பொழுதும் நிர்மூலமானது. இரவு எட்டு மணிக்கு மீண்டும் ஒரு மாத்திரையை எடுத்து தந்தையின் வாயில் ஊற்றினாள்.

விடிந்தது. அவளுக்கு விடியாததுபோல் விடிந்தது. காலைப்பொழுது. கதிரவன் 'கை விரித்தான்.'

மணிமேகலை அப்பாவைப் பார்த்தாள். ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவரது கையாடியது. காலாடியது. கண்கள் சுழன்றன. வாய் ஊமைபோல் முனங்கியது. அவள் வீட்டுக்குள் இருந்தவர்களைப் பார்த்து 'இங்கே பாருங்க... பாருங்க' என்று சொல்லிவிட்டு அப்பாவை அணைத்தபடி தூக்கி கட்டிலில் வைத்தாள். அவர் அப்படியே இருந்தார். உடம்பு கீழே சாயவில்லை. 'எம்மா...எம்மா...மணி...மணி' என்று சன்னமாகச் சத்தங் கேட்டது. ஓட்டில் இருந்து குதித்த கோழியைப் பார்த்து அவரது கண்கள் சுழன்றன. காதுகூட கேட்குதோ?

மணிமேகலை ஆனந்தப்பரவசமானாள். அப்பாவைக் கட்டிப்பிடித்து குழந்தை மாதிரி விம்மினாள். பின் தாய் மாதிரி நீவி விட்டாள். பாட்டி மாதிரி அவரை உச்சி மோந்தாள்.

"அப்பா...அப்பா...அப்பா."

"எம்மா...இம்மா...எம்மா..."

மோனத்தின் முழுச்சுகத்தில் அந்த இரு ஜீவன்களும் லயித்தன. மணிமேகலை தந்தையின் கைகளை எடுத்து, தன் முதுகைச் சுற்றி வட்டமாக வைத்துப் பிடித்துக் கொண்டிருந்தபோது அவள் போட்ட சத்தங் கேட்டு அங்கு வந்த அண்ணனும், அண்ணியும் திகைத்து நின்றார்கள். 'ஒங்களால செய்ய முடியாததை, நான் செய்து காட்டிட்டேன் பாருங்க' என்று பவுசு செய்றாளோ?

அண்ணன் அவளைப் பாராட்டாமல் அவள் மாத்திரைகள் வாங்கிய விதத்தைப் பாராட்டினான்.'

"ஆமாழா, நீ எதுக்காவ ரத்துனத்தோட வீட்டுக்குப் போன?"

"போனால் என்ன?"

"அவன் என் வயலுல மறியல் பண்ணப் போறேங்றான். நீ என் மானத்த வாங்கும்படியாய் எதுக்காவ போன?"

"நான் எதுக்காவவும் போவல. மாத்திரை வாங்கத்தான் போனேன்!"

"அதுக்கு மட்டுந்தானா, இல்ல...?"

அண்ணிக்காரி, அவன் பேச்சுக்கு இடைச்செருகல் ஆனாள்.

"இன்னும் எதுக்காவ மறச்சி... மறச்சிப் பேசணும்? நேத்து கோவிந்தன்கூட கூத்தடிச்சா. மத்தியானம் ரத்துனங்கிட்ட போயிட்டு வாராள். நாளைக்கி எவன்கூட போகப் போறாளோ? கல்யாணம் ஆவுமுன்னதான் வெங்கடேசன்கிட்ட சிரிச்சா. இன்னுமா இப்படி? நம்ம வீடு தேவடியாக் குடியா மாறப்போவுது பாரும். அங்கேயும் ஏடாகோடமா நடந்திருப்பாள். அதனாலதான் அவங்க துரத்திட்டாவ. ஊர மூட உலமடியா?"

மணிமேகலை காதுகளைப் பொத்திக்கொண்டாள். கண்கள் அப்படியே கொட்ட மறந்து, விழிகள் இமைக்க மறந்து நின்றன. வார்த்தைகளின் வலிமையினால், உள்ளத்தால் உதைபட்டு, முகத்திலே வேர்வை பட்டு, முன்னிருப்பவர் புரியாமல் அவள் தவித்தபோது திடீரென்று 'ஆங் ஆங்' என்று சத்தம்.

மணிமேகலை தவிர, இதர இருவரும் அந்தக் கிழவரைத் திரும்பிப் பார்த்தார்கள். அந்த உருவம் இப்போது சன்னமாகவும், அதே சமயம் சாபக் குரலிலும் பேசியது. கண்களில் நெருப்பும் நீரும் ஒன்றாக நின்றன.

"எம்மா! என் மவளே! உடனே போயிடு. அரக்கோணம் போயிடு. நீ... நிசமாவே என் மகள்னா போயிடு. போ... என் மவளே... போ."

இப்போது மணிமேகலையும் அந்த இருவருடன் சேர்ந்து பார்த்தபோது, அந்த உருவம்—ஆசை குலுங்க, மேனி குலுங்காமல் அமர்ந்திருந்த அந்த உருவம், அணு அணுவாகச் சாயாமல், சட்டென்று கட்டிலில் விழுந்தது. ஒரேயடியாய் ஒட்டு மொத்தமாய் விழுந்தது. தானும் அப்படியே விழக்கூடாதா என்று ஏங்கிய மணிமேகலை வெறித்துப் பார்த்தாள். உற்றுப் பார்த்தாள். தன்னைப் பெற்றவனை 'ஏன் பெற்றாய்' என்பது போலும் பார்த்தாள்.

எல்லோரும் அவரை நெருங்கிப் பார்த்தார்கள். கண்கள் மீண்டும் நிலைகுத்தி நின்றது. வாய் கோணிப் போய் நின்றது. கைகால்கள் ஜில்லிட்டவை போல் உணர்வின்றிக் கிடந்தன. மூக்கின் வழியாக மட்டும், லேசாகக் காற்று வந்துகொண்டிருந்தது.

மணிமேகலை புரிந்துகொண்டாள். இது மீளாத முடக்கம். மீட்க வேண்டியவர்களே, முடக்கிப் போட்ட முடக்குவாத முடக்கம். இடக்குவாத முடக்கம். இனிமேல் கண்கள் சுழலாது. கை கால்கள் ஆடாது. நீர் முட்டாது. இனி நெருப்புதான் சுடும். அந்த நெருப்பு பற்றி எரிவது வரைக்கும் இவள் அண்ணனின் மேலான அங்கீகாரத்தில், அண்ணி கொடுத்த நெருப்புக் கட்டிகளை நெஞ்சில் வைத்துக்கொண்டு இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் இனிமேல் அவள் தேவடியாள்தான். சந்தேகமே இல்லை. அடிச்சாலும், உதைச்சாலும் அரக்கோணம்தான் அவளது வீடு. இங்கே நடக்கும் ஏனோதானோ போக்குகளுக்கு சாட்சிக்காரியாய் இருப்பதைவிட அங்கே சண்டைக்காரி யாகக் கூட இருக்கலாம்.

மணிமேகலை சூட்கேஸை எடுத்துக் கொண்டாள். அண்ணிக்காரி அவள் அதை எப்போது வேண்டுமானா லும் எடுத்துக்கொள்ளலாம் என்பதுபோல், முன்னறையில் தான் வைத்திருந்தாள்.

மணிமேகலை அப்பாவையே பார்த்தாள். அருகே போய் அவர் கண்களையே பார்த்தாள். அந்தக் கண்களில் இப்போது நீர் முட்டவில்லை. அவரது பாதத்தருகே வந்து சூட்கேஸை கீழே வைத்துவிட்டு கையெடுத்துக் கும்பிட்டாள். பிறகு அவர் கால் பாதத்தை கைகளால் அழுத்தி அதில் கிடைத்த புழுதியை எடுத்து தன் நெற்றியில் வைத்துக்கொண்டே கண்களை மூடியபடியே நின்றாள். பிறகு கால்களை, போனபடியே விட்டாள்.

வீட்டின் காம்பவுண்ட் கேட்டுக்கு வந்தபோது இன்னொரு தடவை அப்பாவை இறுதியாகப் பார்க்க லாமா என்றுகூட நினைத்தாள். வேண்டாம். 'போகாண் டாம்' என்று ஒரு வார்த்தை சொல்லாத அந்த சொந்தங் கள் சுகஜீவனம் செய்யும் வீட்டிற்குள், இனியொரு தடவை போக வேண்டாம். அப்பா ஏற்கெனவே செத்துவிட்டார். அப்படியே சாகவில்லையானாலும், அந்த உறவுக்காரர் களின் சுமை தாங்காது அந்த மூக்கு மூச்சு, ரோஷத்தோடு போய்விடும்.

வீதிக்கு வந்த அவளை 'ஊர்ப்பிரமுகர்கள்' கண்டுக்க வில்லை. வேறு பக்கமாகத் திரும்பிக் கொண்டார்கள். ராமக்கா, காத்தாயி, தங்கம்மா பாட்டி போன்ற பெண்கள் வாயடைத்துப் போய் நின்றார்கள். 'போயிட்டு வாங்கம் மான்னு' எப்படிச் சொல்ல? 'வாங்கம்மான்னு' இந்த கேடு கெட்ட ஊருக்கு அவளை வரச் செல்லப்படாது. அதே சமயம் 'போ' என்று மொட்டையாகவும் சொல்ல முடியாது. ஆகையால் அந்த ஏழை பாளைகள், மொட்டை மரம்போல் கையை மட்டும் நெரித்தார்கள்.

'கூத்து' கோவிந்தன் அந்தப் பெண்களுக்குப் பின்னால் நின்றான். அவனை ரயில் நிலையம் வரை கூப்பிடலாமா? ஏன் கூப்பிட்டாலென்ன? கூடப் பிறக்காமலே பிறந்த அண்ணன் அவன். வேண்டாம். நான் கூப்பிட்டால்

வருவான். அப்புறம் நம் சொந்தக்காரர்கள் எனப்படுபவர்கள் இந்த அப்பாவியை கட்டிவைத்து 'நீ எப்படிடா போலாம்' என்று உதைக்கலாம். வேண்டாம்.

மணிமேகலை கூனிக் குறுகி நடந்தாள். "அந்த அம்மாவோட குடியக் கெடுத்திட்டியேய்யா. நீ சூதுவாதுல்லாம போனாலும், அந்த வீட்ல இருக்கவிய சூதுவாது சூன்யக்காரப் பேயுவன்னு ஓம் களிமண்ணு மூளையில ஏன் படல?" என்று சற்றுமுன்பு ராமக்காவிடம் வாங்கிக் கட்டிக்கொண்ட 'கூத்து' கோவிந்தன் சந்திரமதியையும், மணிமேகலையையும் ஒருசேர நினைத்துக்கொண்டே பயந்துபோய் திருட்டுத்தனமாகப் பார்த்தான்.

மணிமேகலை குனிந்த தலை நிமிராமல் அக்கம்பக்கம் அவளுக்காக வருந்தும் எளியவர்களைப் பார்க்காமல் நடந்தாள். திடீரென்று ஒரு கம்பீரமான குரல்.

"சூட்கேஸ கொடும்மா. இந்த அண்ணங்கிட்ட கொடும்மா."

ரத்தினம் கம்பீரப் பார்வையுடன் நின்றான். தலையில் முண்டாசு. உடம்பில் பனியன். தார் பாய்த்த வேட்டி.

மணிமேகலை மௌனமாக பெட்டியைக் கொடுத்துவிட்டு அவன் பின்னால் நடந்தாள். எதிரே சந்திரன் வந்தான். கரும்புத் தோட்டத்தில் பாமாவின் கையை வங்கி மோதிரக் கையோடு அழுத்திய அந்த இடத்தில் அழுத்தமாக உட்கார்ந்துகொண்டு, ஒரு ஆமணக்குச் செடியைப் பிடித்து, அதை பாமாவாகப் பாவித்து அதன் 'கொட்டமுத்தை' மோதிரமாக நினைத்து அழுந்தப் பிடித்து, சொல்லி மாளாத கற்பனைச் சுகங்களைக் கண்டுவிட்டு, வயிற்றுப் பசி, காதல் பசியை அடக்கியதால் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த அவன் அக்கா எங்கே போகிறாள் என்று புரியாமல் தவித்து நின்றபோது, ரத்தினம் 'எட்டு ஊருக்கு'க் கேட்கும்படி பேசினான்.

"நானும் ஒனக்கு அண்ணன்தாம்மா. என் பின்னா லயே வா. முருங்கை மரம் தேக்காகாது. ஊர்க்குருவி பருந் தாகாது. கூடப் பிறந்ததுனாலயே ஒருவன் சகோதரனாயிட மாட்டான். உடன்பிறந்தே கொல்லும் நோயின்னு ஒரு பாட்டு இல்லியா? நீ வாம்மா. எவனையும் பார்க்காம இந்த அண்ணன் பின்னால வா!"

சந்திரன் குழம்பினான். ஊர் ஜனங்கள் ஒட்டு மொத்தமாக அவனைப் பார்த்தார்கள். அவன் தன் சகோதர பாசத்தை நிரூபித்தாக வேண்டும்.

"நானும் ஸ்டேஷனுக்கு வாரேன்."

மணிமேகலை தம்பியைப் பார்த்தாள். "தம்பியுள்ளான் படைக்கு அஞ்சான்" என்ற கம்பனை நினைத்தாள். 'உள்ளான்' என்றுதானே சொன்னான். 'உள்ளாள்' என்று சொல்லவில்லையே. இப்பகூட 'என்னக்கா நடந்தது? அந்த வீட்ல எனக்கும் உரிமை உண்டு. வாக்கா வீட்டுக்கு' என்று சொல்ல மனசு வரலியே! ஸ்டேஷனுக்கு வருவானாம். அக்காவை வழியனுப்பி வைப்பதில் அவ்வளவு அவசரம்!

சந்திரன் தயங்கி மயங்கியபோது, மணிமேகலை மயக்கம் தீர்ந்தவள்போல் கம்பீரமாகப் பதிலளித்தாள்.

"நீ வீட்டுக்குப் போப்பா. ஸ்டேஷனுக்கு வந்தால், ஒனக்கு ரெண்டு கண்ணும் போன ஞாபகம் வந்துடும். ஒன்னால தாங்க முடியாது. அப்பா இறந்ததும், அவருக்கு 'கொள்ளியாவது' வை. போப்பா போ. நான் இப்போ என் அண்ணனோடதான் போய்க்கிட்டிருக்கேன்."

சந்திரனும், ரத்தினத்துடன் மணிமேகலையும் எதிர் எதிர் திசைகளில் போய்க் கொண்டிருந்தார்கள்.

'டவுன்' கட்டபொம்மனில் ஏறி ரயில் நிலையத்திற்கு வந்துவிட்டார்கள். அங்கே 'கூத்து' கோவிந்தன் நின்றான்.

எப்படி வந்தான்? இந்த பஸ்ல வரலியே. அந்த இருவரின் திகைப்பையும் ரசித்துவிட்டு கோவிந்தன் 'லாரில வந்தேன்' என்றான்.

ரயில் புறப்பட இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. இப்போதுதான் மணிமேகலைக்கு டிக்கெட் ஞாபகம் வந்தது. கையில் இருபது ரூபாய்தான் இருக்கு. டிக்கெட் முப்பது ரூபாய். அங்கிருந்து அரக்கோணம் போயாக வேண்டும். அவள் கையை நெரித்தாள். அப்போது கையில் போட்டிருந்த ஒரே ஒரு தங்க வளையலைப் பார்த்தாள். ஒரு பவுன் தேறும்.

'கூத்து' கோவிந்தனைக் காணவில்லை. ரத்தினம் எதையோ யோசித்துக்கொண்டு நின்றான்.

"அண்ணே! அண்ணாச்சி!"

"என்னம்மா? சொல்லும்மா!"

"டிக்கெட்டுக்குப் பணம்... பணம் போதல... இந்தக் காப்ப..."

ரத்தினம் அவளையே பார்த்தான். அவள் தயங்கிப் பேசிவிட்டு தயங்காமல் கொடுத்த தங்க வளையலை, தயங்கியபடியே வாங்கிக்கொண்டான். மணிமேகலைக்கா இந்த கதி?

"என்னண்ணே யோசிக்கிற? என் தங்க வளையலைப் பார்த்ததும், கண்ணாடி வளையல்கூட இல்லாத பெண்களோட நெனப்பு வருதா?"

மணிமேகலை சிரித்தாள். அந்தச் சிரிப்பால், இதுவரை எல்லோரையும் 'அழவைத்து'ப் பார்க்கும் அந்தக் கம்பீரக் காரன், இப்போது வேறு பக்கமாகத் திரும்பி தன் கண்களைத் துடைத்துக்கொண்டான். பாவாடை கட்டிக் கொண்டு தன் வீட்டில் சுட்ட வடைகளைக் கொண்டு வந்து கொடுக்கும் அந்த பத்து வயதுச் சிறுமி... அவள்

தலையிலே செல்லமாகக் குட்டும் பதினைந்து வயதுச் சிறுவன்... எல்லாமே இப்போது நடந்தது போலவே இருக்கு!

ரத்தினம் போய்விட்டான். 'கூத்து' கோவிந்தன் ஏழெட்டு ஆப்பிள் பழங்களோடும், ஒரு தயிர்ச்சாதப் பொட்டலத்துடனும் வந்தான்.

கனிகளை கையில் வைத்துக்கொண்டே நின்றான். மணிமேகலையை பணிந்து பார்த்துக்கொண்டே நின்றான். இதற்குள் ரயில் வந்துவிட்டது. 'கூத்து' கோவிந்தன் 'லேடீஸ்' கம்பார்ட்மெண்டில் ஏறி, ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டான். மணிமேகலை அங்கு போய் தன்னை முடக்கிக் கொண்டாள். "அரிச்சந்திரன் ஜெயிக்காம போகல... திரௌபதி தேவி முடியை முடியாமல் போகல... கண்ணகி எரிக்காம போகல... கவலப்படாதிங்க தங்கச்சிம்மா..." என்று அப்போதும் மரியாதையுடன் முறை செப்பினான் கோவிந்தன்.

இதற்குள் ரத்தினமும் வந்துவிட்டான். கையில் பழங்கள். அவற்றை அவளிடம் கொடுத்துவிட்டு, பையில் இருந்த டிக்கெட்டை எடுத்து ஜன்னல் கம்பிகள் வழியாகக் கொடுத்தான்.

'சிக்னல்' விழுந்தது. ரயில் சத்தம் போட்டது. பிறகு மெல்ல நகர்ந்தது. வேக வேகமாக நகர்ந்தது. அதனுடன் ஓடிய ரத்தினம், ஒரு பொட்டலத்தை உள்ளே எறிந்தான். "பொட்டலம் ஜாக்கிரதை" என்று அவன் சொல்லி முடிக்கும் முன்பே ரயில் ஓடியது. மணிமேகலையின் கண் முன்னால் அவர்கள் மறைந்து மறைந்து மங்கலானார்கள். அப்படியே தன் பிறந்த ஊரின் முகப்புக்குள் அவர்கள் போவது போலவும், அவர்களே அந்த ஊர் என்பது போலவும் அவளுக்குத் தோன்றியது.

# 14

தொட்டில்போல் ஆடிய ரயில் பெட்டிக்குள் மடியில் போட்டிருந்த பொட்டலத்தை மணிமேகலை பிரித்தாள். கண் கொட்டாது பார்த்தாள்.

அவள் கொடுத்த அதே தங்க வளையலும், ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களும் அதில் இருந்தன!

எழும்பூர் ரயில் நிலையத்தில், முன்பு எந்த இடத்தில் வந்து நிற்குமோ அந்த இடத்தில்தான் அவள் இருந்த பெட்டி வந்து நின்றது. ஆனால் அன்று எவன் எந்த இடத்தில் நின்று கையை ஆட்டினானோ அந்த இடம், அவளைப் பொறுத்த அளவில் காலியாகவே இருந்தது.

மணிமேகலை எல்லோரும் போகட்டும் என்பதுபோல் காத்திருந்தாள். வெளியே வெறுமை நிரம்பியதால், அவள் உள்ளேயே கண்களை விட்டுக் கொண்டிருந்தாள். ஆரவாரம் ஓய்ந்து கொண்டிருந்தபோது அந்த ஓய்ந்து போனவளும் சூட்கேஸை எடுத்துக்கொண்டு வெளியே இறங்கினாள். திடீரென்று பழக்கப்பட்ட குரல் ஒன்று, சிரிப்புக்கும், கும்மாளத்துக்கும் இடையே கணீரென்று ஒலிப்பது கண்டு அவள் திரும்பிப் பார்த்தாள்.

வெங்கடேசன் தன் மனைவியுடனும் மைத்துனி களுடனும் இறங்க, மணமக்களுக்கு மாலைகள் போடப் பட்டன. ரோஜாப்பூ செண்டுகள் கொடுக்கப் பட்டன. சில ஆடவர்கள், அவனை முதன்முறையாகப் பார்ப்பது போல் நிமிர்ந்து பார்த்தார்கள். கை தட்டல்கள்! கை குலுக்கல்கள்! கண் சிமிட்டல்கள்! அவர்கள் ஒரு பெரிய

காரை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். "மாப்பிள்ள! அவள் கையைப் பிடிங்க!" என்று செல்லமான ஆக்ஞை. மணப்பெண்ணின் செல்லமான சிணுங்கல். மணமகனின் முறுவல்.

மணிமேகலை சூட்கேஸை வைத்து தன்னை மறைத்துக் கொண்டாள். இதே ரயில்தான் இவர்களையும் சுமந்து வந்திருக்கிறது. மணப்பெண் அழகாகத்தான் இருக்கிறாள். சென்னைக் கல்லூரியில் படித்த பட்டதாரிப் பெண்ணாம். நீண்டு குவிந்த கைகள்; நிம்மதி பேசும் கண்கள்; எடுத்து முடிந்த கொண்டை; தலைமைக்குரிய தோற்றம்; இரு பக்கமும் மச்சங்கள் கொண்ட சிப்பி வாய்; படிந்த முடி; பணிந்த நோக்கு; உறுதி காட்டும் தோரணை; உவகை காட்டும் புன்முறுவல்; கடைந்தெடுத்தது போன்ற கழுத்து. 'வெங்கடேசத்தான்' கொடுத்து வச்சவர். ஆனால் நான்... நான் கெடுத்துத் தொலைத்தவள்.

மணக்கோஷ்டி தன்னைக் கடந்தபோது மணிமேகலை யின் உடம்பு ஆடியது. மெல்ல நகர்ந்து பின்பு விறுவிறுப் பாய் நடந்து பிளாட்பார படியருகே தன்னைக் கொண்டு போய் மறைத்துக் கொண்டாள். அவர்கள் மறைந்து விட்டார்கள்.

மறைந்தவள் சிறிது நகர்ந்தாள். திடீரென்று பையன் ஞாபகம் வந்தது. ஞாபகம் என்று சொல்வதுகூட தவறு. நாடி நரம்பெங்கும் ஊனுடம்பின் அணுவெங்கும் ஊடுறுவி உட்பாய்ந்து நின்ற அந்தத் தாய்ப்பாசம், இப் போது மொத்தமாகத் திரண்டு இதயத்தை அழுந்தப் பிடித் தது. மணிமேகலை எல்லாவற்றையும் மறந்தாள். எதிரே வந்த வண்டிகளைத் தாண்டி, தான் போன திசையில் போன கார்களைவிட வேகமாக ஓடி வெளியே வந்தாள்.

பிள்ளையைப் பார்க்க வேண்டும்! கண்ணோடு கண்ணை உரச வேண்டும்! 'என் கண்ணே! என் ராசா!

கலிதீர்க்கும் தெய்வமே! இதோ வாரேண்டா! இனிமேல் நீ அழவேண்டியது இல்லடா... இல்லடா!'

அரக்கோணம் ரயில் நிலையத்திலிருந்து, அவள் படுவேகமாக நடந்தாள். உச்சி வெயில் அவளுக்கு உறைக்கவில்லை. கொட்டிய தார் ரோடு, அந்த செருப்பில்லாக் கால்களைச் சுடவில்லை.

ஒதுங்கிய இடத்தில் ஒய்யாரமாக இருந்த வீட்டுக்கு வந்த பிறகுதான் அவள் மூச்சு விட்டாள். வந்த வேகத்தில் ஜன்னலைப் பார்த்தாள். என் பையன் எங்கே? எங்கே? அது பூட்டிக் கிடந்தது. கதவைப் பார்த்தாள். பெரிய பித்தளைப் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. இரும்புக் கேட்டைத் திறக்கப் போனாள். அது சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தது.

'என்ன இதெல்லாம்? எங்கே போய்விட்டார்கள்? ஒருவேளை என் பிள்ளைக்கு... சந்திரமதியின் லோகிதாசன் போல்...'

இதயத்தைப் பிடித்துக்கொண்டவள் போல், அவள் சற்று குவிந்து முழங்கை முன் மார்பில் பட்டபோது 'கம்பவுண்டர் மணி' வருவது கண்ணில் பட்டது. தன்னை நோக்கி வந்தவனை நோக்கி அவள் ஓடினாள்.

"என் பையன் எங்கே?"

"எப்போ வந்தீங்க?"

"என் பையன் எங்கே?"

"சொல்றேம்மா. பெரிய கதையே நடந்துட்டு."

"என் பையன் கதையச் சொல்லுங்க."

"பையன் நல்லாத்தான் இருக்கான். ஒங்கள நினைச்சி இங்க அழுதது எனக்கு அங்கே கேட்கும். சதா 'அம்மாங்க தான்'; மற்றபடி நல்லாத்தான் இருக்கான்."

மணிமேகலை சற்று நிம்மதியுடன் அவனைப் பார்த்தாள். பிறகு சாவகாசமாக, நின்று நிதானித்துப் பேசலாம் என்று நினைத்தவள் போல் தன் வீட்டை நோக்கி நடந்தாள். அவன் தன்னோடு இணையாக நடந்தபோது, இவள் சிறிது விலகி நடந்தாள். இருவரும் அந்தப் பெரிய வீட்டின் வெளிப்பக்கம் நின்றார்கள்.

மணி ஒரு யோசனை சொன்னான்.

"இந்தச் சுவர... சிரமப்படாமலே தாவிடலாம்."

மணிமேகலை அதை அங்கீகரிக்காதவள்போல், தலையைப் பக்கவாட்டில் ஆட்டினாள். அவன் பேசப் போவதை கேட்கப் போகிறவள் போல் காதுகளை கூர்மையாக்குபவள்போல், முகத்தை குவித்துக் கொண்டாள். 'கம்பவுண்டர்' மணி பேசாமல் இருந்தான். அவளால் அப்படி இருக்க முடியவில்லை.

"பாமாவுக்குக் கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுதா?"

"பாமாவுக்கும் ஆயிட்டுது!"

"இவங்கல்லாம் எங்க போயிருக்காங்க?"

"திருப்பதிக்கு."

"சாமி கும்பிடவா? பரவாயில்லியே! மாமா போக மாட்டாரே?"

"வெங்கடாஜலபதிக்கு அடுத்தபடியா அவரோட ஆசீர்வதம் வேணுமில்லையா?"

"நீங்க என்ன சொல்றிங்க?"

"சொல்றேன் மனச கல்லாக்கிக்கங்க!"

"உம்..."

"ஒங்க புருஷனுக்கு ராமபத்திரன் கன்னிகாதானம் செய்றார்."

"வசந்தியையா?"

"ஆ...ஆமாம்... இந்நேரம் கல்யாணம் முடிஞ்சிருக்கும்."

மணிமேகலைக்கு தலை சுழன்றதோ இல்லையோ, எதிரே இருந்த எல்லாப் பொருட்களும் சுழல்வது போலிருந்தன. எங்கே இருக்கிறோம் என்ற இடமோ, என்ன பேசினோம் என்ற பொருளோ, என்ன விளைவு என்ற ஏவலோ—எதுவும் புரியாமல் அதே சமயம் எல்லாம் புரிந்ததுபோல் தோன்றியது. மாவிலைத் தோரணப் பந்தலில் ஐயர் மறையோத கொட்டு மேளம் கொட்ட அப்பா அகம் மகிழ்ந்து நிற்க ஜெயராஜ் அவள் கையைப் பிடிக்கிறான். விடமாட்டேன் என்பதுபோல் பிடிக்கிறான். பிடிக்குள்ளேயே அடிவிரலால் அவள் கையை அழுத்துகிறான். மங்களப் பெண்கள் குலவையிடுகிறார்கள். தங்கம்மா பாட்டி 'என் தங்கமே' என்கிறாள். "ராம—சீதா கல்யாணத்தை பார்க்க முடியலியே என்ற குறை இன்னையோட தீர்ந்து போச்சு" என்கிறான் 'கூத்து' கோவிந்தன்.

இதோ இப்போதான் நடக்குது. இங்கேயே நடக்குது. அதோ மேளச் சத்தம். அதோ அப்பா... இதோ ஒரு மஞ்சள் கயிறு. என் பக்கத்திலேயே அவரு கையை அவர் பிடிக்க கமல முகம் நாண சிவக்க இதோ இப்போதான் அம்மி மிதித்துவிட்டு மணப்பந்தலைச் சுற்றி வருகிறோம்.

இது எப்படி இதுக்குள்ள முடிந்தது? ராவணன் பிறந்ததை தூங்கி எழுந்த உடனேயே கேள்விப்பட்ட பிரம்மா, பல் தேய்க்கும்போது, பத்துத்தலை ராவணன், இறந்ததுபோல ஆயிட்டே... காலக் கோளாறு, காலத்தை நெருக்குமோ? காலத்தின் முன்னால் போனதெல்லாம் கண்முன்னால் வந்து மறுபிறவி எடுக்குமோ?

கால மயக்கத்தில் கடந்த காலமும், நிகழ்காலமும் இரண்டறக் கலக்க எது துவக்கம், எது முடிவு என்பதை

அறியமாட்டாது அவள் மயங்கினாள். பிறகு மயக்கம் தெளிந்தவள்போல் மங்கிய பார்வை மாமூலுக்கு வந்தவள் போல் அவள் எதிரே நின்றவனைப் பார்த்தபோது, அவன் காபி டம்ளரை நீட்டிக்கொண்டு நின்றான். எப்படி 'காபி' வந்தது? எங்கிருந்து வந்தது?

மணிமேகலை, சுயமேகலை ஆனாள். எதிர்பார்த்திருந்த ஒன்று 'எப்படியோ' நடக்கும் என்று நினைத்தது, இப்படி நடக்கும் என்று அவள் நினைக்கவில்லை. அவள் தன் தங்கத்தாலியை சுண்டிப் பிடித்தாள். அது பாம்பு மாதிரி அவளைப் பற்றியது.

"சரி. எங்கம்மா தங்குறது?"

"என்ன சொன்னிங்க?"

"வெயிலாய் இருக்கு. வீதியில நின்னா எப்படி?"

"இதுதானே நான் இருக்க வேண்டிய இடம்."

"அத அப்புறமா யோசிக்கலாம். இப்போ என் ரூமுக்கு வேணுமுன்னால் போவோமா?"

மணி லேசாக அவள் கையைத் தொட்டான். அவளும் சுரணை இல்லாதவள்போல் அவன் கையை ஆதரவாகப் பிடித்துக்கொண்டே எழுந்தவள், பிறகு அந்தக் கரத்தை உதறிவிட்டுக் கொண்டே நடந்தாள்.

மணி தன் அறையைத் திறந்தான். நல்ல வெயில் சமயம் என்பதால் யாரும் பார்க்கவில்லை. மணிமேகலை அங்கே வந்து கீழே உட்கார்ந்து, கட்டிலின் விளிம்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு முதுகை கட்டில் சட்டத்தில் சாத்திக்கொண்டு தலையை அங்குமிங்குமாக ஆட்டினாள்.

மணி கதவைச் சாத்தப் போனான். அவள் ஓரளவு சுய பிரக்ஞை பெற்றவளாய் அவனை வினாவுடன்

பார்த்தபோது மணி, "எதிர் வீட்ல இருக்கறவங்க பார்த்தால் தப்பா நினைப்பாங்கன்னுதான்..." என்றான். மணிமேகலை தன்னையே தன்னுள்ளே தாக்கிக் கொண்டாள். சூதுவாதில்லாத மனிதர்.

ஒரு மணி நேரம் அப்படியே ஓடியது. அவள் வெறித்த பார்வை திரும்பாது அப்படியே சாய்ந்திருந்தாள். மணியும் அதிர்ந்து போனவன்போல் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான். அவளுக்கு ரத்தினம் சொன்னது நினைவுக்கு வந்தது. அதுகூட தவறு. அவளோடு அந்தக் கணத்தில் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

தள்ளி வைத்தவனை நான் ஏன் தள்ளி வைக்கக் கூடாது? பிடிக்காதவனிடம் ஏன் பிச்சைக்காரிபோல் இருக்க வேண்டும்? தாலியை அறுத்துப் போட்டு விடலாமா? எனக்கு வழி சொல்லிட்டு, அப்புறமாய் ஒன் ரெண்டாந்தர பெண்டாட்டியுடன் கொஞ்சுடான்னு கேட்கலாமா? அந்த வசந்தியை விரட்டியடிக்கலாமா? வேண்டாம்! இது, என் மகனுடைய எதிர்காலம் சம்பந்தப் பட்ட விவகாரம். அவன் நல்லா இருக்கணும். நல்லா படிக்கணும். நான் கெட்டாலும் அவன் கெடக்கூடாது. அவன் அப்பா மாதிரியே எஞ்ஜினியராய் வரணும். "சீச்சி... எஞ்ஜினியராய் வேணு முன்னா வந்துட்டுப் போவட்டும். ஆனால் அந்த வஞ்சகனை மாதிரி வரவேண்டாம். அந்த அடுத்துக் கெடுத்த பாவி மாதிரி ஆகாண்டாம். என்ன செய்யலாம்? என்னால கட்டிக் கொள்ளவும் முடியல. வெட்டிக் கொள்ளவும் முடியலியே. இங்கேயே இருந்துட லாமா? வேலைக்காரியாவே இருந்துட லாமா? வேண்டாம். நான் படும் பாட்டை என் மகன் கண்டு, அவன் பிஞ்சு மனம் பழுத்துவிடக் கூடாது. காய்க் காமலே பழுக்கக் கூடாது.

"அப்படின்னா, என்ன செய்யலாம்? இங்க இருக்க முடியாது. இருக்கக் கூடாது. எங்கேயாவது ஓடிடணும்.

என் பிள்ள இப்போ கொஞ்சம் என்னை மறந்திருப்பான். அவங்க வாரது வரைக்கும் காத்திருந்து அவன் கண்ணில் என் முகத்தைக் காட்டி, அப்புறம் அதை மறக்கதுக்காக அவன் ஒரு மாசம் அழக்கூடாது. என் பிள்ள அழவே கூடாது."

மணிமேகலை நிமிர்ந்து நின்றாள். ஓராண்டு கால பிரச்னைக்கும் ஒருகண தீர்மானம் தீர்வாகி விடுவது போல், அவள் இப்போது தன் நோக்கையும், போக்கையும் தீர்மானித்துக் கொண்டாள்.

"மணி! மெட்ராஸ்ல ஏதோ ஒங்களுக்கு ஒரு அனாதை விடுதி இருக்கதாச் சொல்லுவிங்களே பேரு என்ன?"

"மணிமேகலை விடுதி!"

"நல்ல பொருத்தந்தான். என்னை, இப்பவே உங்களால கொண்டுவிட முடியுமா?"

"ஆர அமர யோசிக்கலாம். இன்றையப் பொழுத இங்கேயே கழியுங்க. நாளைக்கு அந்த ஸ்கவுண்ட்ரல்ஸ் வந்துடுவாங்க. அப்புறமாய் யோசிப்போம். நீங்க என்ன சொன்னாலும் நான் செய்யத் தயார். ஆனால் இன்னைக்கி வேண்டாம். நான் வேணுமானால் வெளில படுத்துக் கிறேன்.

"அய்யோ மணி. நான் அதுக்காவச் சொல்லல. உங்களச் சந்தேகப்பட்டால் என் நெஞ்சுல புத்து வரும். தப்பாப் பேசுனால் வாய் அழுகிடும். நான் அதுக்காகச் சொல்லல. என்னால இங்க இருக்க முடியாது. நாளைக்கி அவங்கள பார்த்தால் ஒருவேள கொலைகூட பண்ணு னாலும் பண்ணிடுவேன். நான் இப்போ எங்கேயாவது போயாகணும். உங்களால அந்த விடுதியில் என்னை சேர்க்க முடியுமோ முடியாதோ, நீங்க வந்தாலும்,

வராட்டாலும் நான் போய் விடுதி விடுதியா தட்டப் போறேன்.”

“சரி உங்க இஷ்டம்.”

“உம்; சீக்கிரமா புறப்படுங்க.”

மணி தலையை வாரிக் கொண்டான். அவன் வாரி முடியவில்லை. இருந்தபடியே எழுந்தாள். சூட்கேஸை எடுத்துக் கொண்டாள். இருவரும் ஒருவருடன் ஒருவர் பேசாமல் நடந்தார்கள். மணிமேகலை தன் முன்னாள் வீட்டுக்கு முன்வந்ததும் விம்மினாள். அந்த அறை, அவருடன் உறவு கொண்ட அறை, அதோ அந்த இடத்தில் தான் லேடி டாக்டர் பெர்க்னன்ஸி டெஸ்ட் நடத்தினார். அதோ அந்தப் படியைப் பிடித்துதான் என் பிள்ள முதன் முதலாய் எழுந்தான். உடனே நான் ‘பாருங்க... பாருங்க... பயலைப் பாருங்க’ என்று கத்தினேன். எல்லோரும் வந்து பார்த்தார்கள். என் பிள்ளய எடுத்து உச்சி மோந்தார்கள்.

அவள் சிறிது நடந்து நடக்க மனமில்லாமல் திரும்பி வந்து வீட்டின் முன்னால் வந்து நின்றாள். இந்த சின்ன அறையில்தான் என்னை நானே ஒதுக்கிக் கொண்டேன். அந்தப் பெரிய படிக்கட்டில் நின்றுதான் அவர் எனக்கு கையுரை கொடுத்தார். அந்த தளத்துல நின்னுதான், வசந்தா அந்தப் பாவியோட கொஞ்சுனாள். இதோ இப்போ நிக்கனே... இதே இடத்துலதான் அந்தக் கார் நின்னுது. இதுல நின்னுதான் வசந்தியும், மிஸ்டர் ஜெயராஜூம் நெருங்கி உட்கார்ந்திருக்க, கார் புறப்பட்டது.

மணிமேகலையும் புறப்பட்டாள். இனிமேல் இப்போதைக்கு இங்கே வேலையில்லை. தோன்றிய வேகத்தில் நடந்தாள். தெரிந்த இடமெல்லாம் வழியாக, தெரியாத ஒன்றை நோக்கி அவள் வேகவேகமாக

நடந்தாள். மணியால் அவளுடன் இணையாக நடக்க முடியவில்லை. ஓடிப் பார்த்தான். மூச்சு இளைத்தது. பிறகு பின்தங்கி நடந்தான்.

நல்ல வேளையோ, கெட்ட வேளையோ எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி நின்றது. இருவரும் ஏறிக் கொண்டார்கள். எதிரெதிர் இருக்கைகளில் அமர்ந்து கொண்டார்கள்.

சென்னைக்கு வந்தபோது மணி மாலை நாலாகி விட்டது. இருவரும் பாரிமுனை வந்து அங்கிருந்து பஸ் ஏறி அண்ணா சதுக்கம் வந்தார்கள். அங்கே கூட்டம் அதிக மாய் இருந்த இடத்தில் அவள் அமர்ந்தாள். சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்த மணி அவளருகே உட்கார்ந்தான். மணிமேகலை ரசாயன ரீதியில் அவனிடம் கேட்டாள்:

"விடுதி எங்க இருக்கு?"

"அடையாறுல."

"போவோமா?"

"நீங்க இங்கயே இருங்க. நான் போய் விசாரிச்சிட்டு வாரேன்."

"இதுல விசாரிக்க என்ன இருக்கு? எப்படியாவது சேர்ந்திடணும்."

"அவசரப்படாதிங்க. நான் போய் பக்குவமாய் பேசிட்டு வாரேன்."

'கம்பவுண்டர்' மணி போய்விட்டான். மணிமேகலை வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஜோடிகள் பக்கமாகப் போய் அவர்களின் நெருக்கத்துக்கு குறுக்கே நின்று 'மிளகு வட ஸார்... வேர்க்கடல ஸார்' என்று தகர டின்னை வைத்துக்கொண்டு 'தகாது' நடந்து கொள்ளும் வியாபாரச் சிறுவர்கள். சாப்பாடு சரியாகக்

கிடைக்காததால், கர்ப்பிணிப் பெண்கள்போல் வயிறு புடைக்க நின்ற குழந்தைகள். சக்கரவண்டியில் 'பஜ்ஜி' சுடும் பையன்கள். கரும்புச்சாறு பிழியும் இளைஞர்கள். சந்தேகத்துடன் தன்னைப் பார்க்கும் சிவப்புத் தொப்பிகள் சந்தேகமில்லாமல் தன்னையே வாடிக்கைக்காரி மாதிரி நினைத்து, முகந்துருத்தி முறைக்கும் முரடர்கள்—இத்தனை பேரையும் அவள் வேடிக்கையாகப் பார்த்தாள்; வாழ்க்கை வேடிக்கையாகி விட்டால், வாழ்வதும் வேடிக்கைபோல் தெரியுமோ? கஷ்டங்கள் அடுக்கடுக்காய் வந்தால், அந்தக் கஷ்டமே ஒரு ரசனையாகி விடுமோ?

ரசனையுடன் பார்த்த அவளுக்குக் கொஞ்சம் பயம் பிடித்தது. அந்த முரடர்கள் அவளை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். பத்திரிகைகளில் வேறு, பலவிதமான செய்திகள் வருகின்றன. இவள் பயந்துபோய் எழுந்தபோது மணி வந்துவிட்டான். இந்த மணியால் இவ்வளவு பெரிய விஷயத்தை எப்படி இவ்வளவு சீக்கிரமாய் முடிக்க முடிந்தது? சரியான மணி! மணியான மணி!

மணி பேசாமல் சிரித்துக்கொண்டே நின்றான். அவள் அவசரத்துடன் கேட்டாள்:

"பழந்தானே?"

"இன்னைக்கு காய். நாளைக்குப் பழம்!"

"என்ன சொல்றிங்க?"

"மணிமேகலை விடுதி வார்டன் பம்பாய் போயிருக்கார். நாளைக்குக் காலையில வந்துடுறாராம். வந்ததும் சேர்ந்துடலாம்!"

"அப்படியானால் இன்னையப் பொழுதை எப்படிக் கழிக்கது?"

"என்ன பண்றது? ஏதாவது ஒரு லாட்ஜில தங்க வேண்டியதுதான்."

"ஊருக்குப் போயிட்டு நாளைக்கு வரலாமா?"

"அங்கேயும் ஓங்க வீடு பூட்டித்தானே இருக்கு."

மணிமேகலை எதுவும் பேசாமல் கீழே வைத்திருந்த சூட்கேஸை எடுத்தாள். 'போலாமா' என்றாள். கிட்டே வந்த டாக்ஸிக்காரர்களை கடந்து எதிரே வந்த ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி பழைய பஞ்சாங்கம் மாதிரி இருந்த எதோ ஒரு லாட்ஜுக்குப் போனார்கள். லாட்ஜ் பையன்களுக்கு மணியைத் தெரியும் போலுக்கு! கண் சிமிட்டிச் சிரித்தார்கள். அவளுக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. 'ரூம் பாய்' ஒரு அறையைத் திறந்து கொடுத்தான்.

கட்டிலில் வந்து உட்கார்ந்த மணிமேகலை சூட்கேஸைத் திறந்தாள். அங்கே துணிகளுக்கு அடியில் இருந்த பாமாவின் கடிதங்களை எடுத்து குவியலாக்கிக் கொண்டு "ஓங்ககிட்ட வத்திப்பெட்டி இருக்கா?" என்றாள். மணி, உரிமையோடு அருகில் வந்து அவள் கையைப் பற்றி ஒரு கடிதத்தை பிடுங்கிப் படித்தான். படித்துவிட்டு, "அடடே இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிறமாதிரி இருந்த இந்த பாமாவா இப்படி எழுதியிருக்காள்? 'ஓங்கள கன்னத்தில் முத்தமிடத் துடிக்கிறேன்.' பரவாயில்லியே... முத்தங் கொடுக்கிற அளவுக்குப் போயிட்டாளா? முத்தம் நல்லாதான் இருக்கும், இல்லியா? இதுல தப்பில்ல. செக்ஸ் ஒரு பயாலஜிகல் நீட்... அதை எப்படி வேணுமுன்னாலும் நிறைவேற்றலாம்!"

இந்த மணியின் பேச்சு, ஒரு மாதிரியாகத் தெரிந்தது. அரக்கோணத்தில் ஒரு மணியும், இங்கே இன்னொரு மணியும் இருப்பதுபோல் அவளுக்குத் தெரிந்தது. இங்கே இருக்கும் மணியே, நிஜமான மணி. அவள் சென்ட்ரலில் ரயிலைவிட்டு இறங்கியதும் அவள் முதுகைத் தட்டி 'புறப்படலாமா' என்று சொன்னதும் கடற்கரையில் விடுதி தேட அவன் தயங்கியதும், இப்போது அவள் வாழ்க்கை

யில் எதுவுமே நடக்கவில்லை என்பதுபோல், பாதி அட்டகாசமாகவும் மீதி வேடிக்கையாகவும் பேசுவதும் அவளுக்கு திட்டமிட்ட சதிச் செயல்களாகத தெரிந்தன. என்றாலும் கலவரத்தைக் காட்டிக்கொள்ளாமல் அவன் கையில் இருந்த காகிதத்தை வெடுக்கெனப் பிடுங்கி காகிதக் குவியலோடு சேர்த்து அந்தக் குவியலை சுக்கு நூறாக்கி பாத்ரூமிற்குள் கொண்டுபோய் போட்டாள்.

மணி சற்றுக் கோபத்தோடு பேசினான்.

"என்ன இது? ஒவ்வொரு லட்டரும் ஒரு லட்சம் தாளுமே. நமக்கு நாளைக்கு உதவக்கூடிய காகிதங்களை இப்படியா பண்றது? பாமாவை ஆட்டு ஆட்டுன்னு ஆட்டி வச்சிருக்கலாமே. சரி போனால் போவட்டும். படுக்க லாமா? லைட்ட ஆப் பண்ணட்டுமா? ரூம்பாய் ஒங்க சம்சாரமான்னு கேக்கான். நம்ம ரெண்டு பேருக்கும் அவ்வளவு பொருத்தம். ரிஜிஸ்டர்லகூட ஹஸ்பண்ட் அண்ட் ஒய்ப்புன்னுதான் எழுதியிருக்கேன். என்ன பண்றது? நாட்ல நடக்கிற தப்புக்கு இந்தத் தப்பு பெரிசில்ல. ஒரு தப்பில் இன்னொரு தப்பு பிறக்குது. இந்தப் புடவ ஒனக்கு ரொம்ப அழகாய் இருக்கு"

மணிமேகலை திடுக்கிட்டாள். அட கடவுளே...

'இவன் ஒரு 'ஜென்டில்மேன்' அயோக்கியன். இனிய சுபாவம் இவனுக்கு ஒரு கபட நாடகம். அபலைப் பெண் களின் சிரமங்களைப் புரிந்துகொண்டு, அந்தச் சிரமங் களால் தானும் சிரமப்படுவதுபோல் அவர்களை நம்ப வைத்து, அவற்றிற்குப் பரிகாரங்களையும் கொடுத்துக் கொண்டே, அவர்களின் கற்பை எடுப்பது தெரியாமலேயே எடுப்பவன். இப்படிப்பட்ட அயோக்கியத்தனமான யோக்கியர்களால்தான், பெரும்பாலான பெண்கள் கெட்டுப் போகிறார்கள். அவர்களே கெட்டுப் போகும்படி செய்யும் இந்த 'ஒயிட் காலர்' வித்தைக்காரர்கள்,

கெடுப்பதற்கும் தயாராக இருப்பவர்கள். இவன் கொடுத்த மாத்திரைகள் வசிய மாத்திரைகளைப் போன்றவை. பெண்கள் முரட்டு மீசையும், பரட்டைத் தலையும் உள்ளவர்களைவிட, இப்படிப்பட்ட சுருட்டை முடியும், கிருதாவும் உள்ள கீழ்த்தரமான மேல்தர போர்வழிகளிடந் தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த மடையன் என் சம்மதம் கிடைத்துவிடும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் இப்படிப் பேசுகிறான். இவனிடம் பகைமை பாராட்டாது பக்குவமாகப் பேச வேண்டும்.'

"அந்த விடுதில இடம் கிடைக்குமா?"

"அடடா! எந்தச் சமயத்துல எதைப் பேசணுமுன்னு தெரியாதா?"

"அந்த விடுதி எங்க இருக்கு? இடம் மறந்துட்டு."

"எட்வர்ட்ஸ் எலியட்ஸ் ரோட்ல."

அடையாரை எட்வர்ட்ஸ் எலியட்ஸ் ரோடாய் இடமாற்றம் செய்த அந்த ஆள்மாறாட்டக்காரனை அளவெடுப்பதுபோல் அவள் பார்த்தாள். எப்படி தப்பிப்பது? ஒண்ணும் முடியாட்டால் ரத்தின அண்ணன் சொன்னது மாதிரி கொலை பண்ணிட வேண்டியதுதான். அதோ நல்ல வேளையா, ஒரு இரும்புத்துண்டு இருக்கு. விடுதியும் கிடைச்சிடும்...

ஜெயிலும் ஒரு விடுதிதானே!

## 15

அவள் அந்த லாட்ஜை விட்டு வெளியேறிய விதமே தனிவிதம். அவள் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் 'கம்பவுண்டர்' மணி உடை மாற்று வதற்காக உள்ளே வந்து கட்டிலுக்குக் கீழே போட்டிருந்த

தன் "பேக்கை" எடுக்கப் போனபோது மணிமேகலையும் தன் சூட்கேஸை எடுத்துக்கொண்டு அந்த அறையைவிட்டு வெளியேறி படிக்கட்டுக்கள் வழியாக கீழிறிங்கி தெருவுக்கு வந்து திரும்பிப் பாராமலே நடந்தாள். சிறிது நேரத்தில் ஒருவர் ஓடிவரும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள்.

கம்பவுண்டர் மணி ஓடிவந்தான். லுங்கி பனியனுடன் ஓடிவந்தான்.

"என்ன இப்படி ஒரே விசித்திரமா இருக்கு? இப்படியா போறது?"

"இதில் என்ன விசித்திரம்? அடையாறில் இருந்த விடுதி எட்வர்ட்ஸ் எலியட்ஸ் ரோடுக்கு வரும்போது, நான் போறதில் என்ன விசித்திரம்?"

"நீங்க என்ன தப்பா நினைச்சிட்டிங்க."

"தப்பா எடுக்கல. நாம அரக்கோணத்துல இருந்து புறப்படுறதுக்கு முன்னால 'ஒங்கள தப்பா நினைச்சா... நெஞ்சுல புற்று வரும். வாய் அழுகிடுமுன்னு சொன்னேன். ஞாபகம் இருக்கா? இப்போ... அப்படி நினைக்காததாலேயே அந்த ரெண்டும் வந்துடுமோன்னு நினைக்கேன். பரவாயில்ல. இருக்கிற ஒரு நோயோட, இது இரண்டு, மொத்தம் மூணு."

"நான் ஏதோ கற்பழிச்சிட்டது மாதிரி..."

"ஒரு பெண்ணுக்கு நன்மை செய்யுறதாய் ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்திட்டு, அப்புறம் அவளை அடுத்துக் கெடுப்பதைவிட கற்பழிப்பு எவ்வளவோ மேல்! ஒண்ண மட்டும் மறந்திடாதிங்க மணி. என்கூடப் பிறக்காத சகோதரர்களாய் மூணுபேரை நினைச்சேன். அதுல ஒருவர் இப்போ செத்துட்டார். நான் வாரேன் மணி. வேண்டிய கணவனுக்கு விரும்பாதவளா போகும்போது தனிவழியில்

எப்போ நடக்கத் துணிஞ்சேனோ அப்பவே, எந்த ஆணையும் தூசாய் நினைக்க, தேவையானால் துடைப் பத்த வைத்து அடிக்கவும் துணிந்துதான் வந்தேன். மணி தயவுசெய்து ஒங்க சொந்த தங்கையையும் இப்படி...”

மேற்கொண்டு தொடர்ந்து முடிக்கத் தெரிந்த வார்த்தைகளை முடிக்காமலே, குமுறிக்கொண்டே அவள் நடந்தாள். மணி யோசித்தான். இந்த இருட்டில் இந்தத் தனிவழியில் எப்படிப் போவாள்? போகலாமா? வேண்டாம். அயோக்கியன் செய்கிற அப்பட்டமான நன்மைகூட தீமையில் விட்டாலும் விட்டுடலாம்.

எங்கே போவது, எப்படிப் போவது என்பது தெரியாமலே தன் பாட்டுக்கு கால்போன போக்கில் நடந்தாள். அவளைப் பார்த்து முறைத்த கண்கள்கூட, அந்தத் தோரணையில் தோல்வி கண்டு துவண்டன. ‘உயர்தரமான’ சிகரெட்டுகளை புகைத்துக்கொண்டே அவளுடன் ‘சைடில்’ நடந்த பூட்ஸ் கால்கள், பெல்பாட் டம்கள், கிருதாக்கள் முதலிய எல்லாம் மேற்கொண்டு நடக்காமல், நடந்த வழியை, கடந்தால் கடைக்காரர்களும், மற்றவர்களும் தப்பாக நினைப்பார்களே என்று தயங்கி, நின்ற இடத்திலே நின்றபோது...

மணிமேகலை அங்கே வந்த பஸ்ஸில் அதன் போர்டை பார்க்காமலே ஏறினாள். அது அவளுக்குத் தெரிந்த பாரிமுனையில் விட்டது. மணி ஒன்பது. என்ன செய்யலாம்? எனக்கா இந்த கதி? எனக்கா? அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

பஸ் கவுண்டர் அருகே குப்புறப் படுத்துத் தூங்கும் சிறுவர்கள். மரக்கட்டையை தலையணையாய் வைத்து, இன்னொரு மரக்கட்டைபோல் தூங்கும் ஒரு வயதுப் பெண். கரியடுப்பில் ஒரு பானை பொங்க, பொங்கியதை

இறக்கி ஓலைப்பாயில் உட்கார்ந்திருக்கும் கணவனுக்கும், குழந்தைகளுக்கும் உணவு கொடுக்கப் போகும் பூக்காரி. ஒரு சின்னத் தட்டுப் பலகையை வீடாகக் கொண்ட ஒரு நடுத்தர வயது மாது. பஸ் ஸ்டாப்புகளில் பயணிகள் எப்போது போவார்கள் தாங்கள் ஒவ்வொரு தூணுக் கருகிலும் பிளாட்பாரத்திலும் படுத்துத் தூங்கலாம் என்று நினைத்து நிற்கும் தெருவோரப் பெண்கள். அப்புறப் படுத்துவதற்குக்கூட அருகதை இல்லாதவர்களாய்ப் போன இவர்கள் முன்னால் நான் சாதாரணம். வெறுஞ் சாதாரணம் இந்த மனித ஜீவன்கள் அருகே முடங்கலாமா? எப்படி முடியும்? பழக்க தோஷமுன்னு ஒண்ணு இருக்கே!

மணிமேகலை உயர்நீதிமன்ற காம்பவுண்ட் சுவரை விழித்துப் பார்த்தாள். அது நீதி வழங்குவதுபோல ஒரு போஸ்டரைக் காட்டியது. பேரின்பப் பெருவிழா... கடற் கரையில்... சீரணி அரங்கத்தில் இன்று இரவு முழுக்கப் பிரார்த்தனையாம். பிரார்த்தனை செய்கிறோமோ இல்லையோ, பிரார்த்திப்பவர்களை மானசீகக் காவலர் களாக நினைத்து இன்றைய இரவை ஓட்டிவிடலாம்.

அந்த இரவில் ஓட்டத்திற்கும் நடைக்கும் உருவமாகி, சீரணி அரங்கிற்கருகே அவள் வந்தபோது, அரசியல் வாதிகள் நான்கு பேரையும் வைத்துக்கொண்டு சொல்வார் களே ‘அலைகள் அங்கே தலைகள் இங்கே’ என்று, அது போல் நிஜமாகவே மனிதத் தலைகள். தாழ்ந்த தலைகள். தலை கவிழ்ந்த தலைகள். மேடையில் வண்ண விளக்குகள் ஜொலித்தன. சிலுவைக்குறி வண்ண வண்ண விளக்கு களால் எண்ணத்தை தூய்மையாக்கும் எழுச்சிக் குறியாகச் சுடர் விட்டது. கூட்டத்தோடு கூட்டமாக, மணிமேகலை உட்கார்ந்தாள். கிறிஸ்தவர்களின் பேரின்ப விழா நடந்து கொண்டிருந்தது.

மேடையில் ஒருவர் தாள நயங்களுடன் பாடிக் கொண்டிருந்தார்.

இல்லங்கள் யாவிலும்
உள்ளங்கள் உண்டல்லோ
உள்ளங்கள் உண்டல்லோ...
காடு மலைகளிலும்–பல
வீடுகள் சிதறி உண்டே
தோட்டத்தில் உண்டு, தீவினில் உண்டு.
செல்வதுதான் யாரோ
சொல்வதுதான் யாரோ —(இல்லங்கள்)

பிள்ளையைக் கொடுப்பாயா–இல்லை
உன்னையே தருவாயா
உன்னையே தருவாயா...
உன் ஜெபம் தாங்குமோ... உன் பொருள் வருமோ
உன்னதர் கேட்கிறாரே... உன்னிடம்
உன்னதர் கேட்கிறாரே (இல்லங்கள்)

*மணிமேகலை விம்மினாள். இல்லம் தோறும் இதயங்கள் உண்டல்லவா! இது ஏன் மனிதர்களுக்குத் தெரியவில்லை? இது ஏன் உறவைச் சுமப்பவர்களுக்குப் புரியவில்லை? இது ஏன் மிஸ்டர் ஜெயராஜுக்கு தெரியவில்லை?*

உள்ளங்கள் உண்டல்லோ
உள்ளங்கள் உண்டல்லோ...
உன்னையே தருவாயா...
உன்னையே தருவாயா...
உன்னதர் கேட்கிறார்

*பாடல் முடிந்ததும், மற்றவர்களைப் போல் அவளும் முழங்காலிட்டாள். என்னையே தருகிறேன் என்பவள் போல் அந்த உன்னதனை முருகனாகவும், இயேசுவாகவும் எண்ணி, எல்லாம் கடந்தும், எல்லாவற்றிலும் ஊடுருவியும் நீக்கமற நிற்கும் ஞானப்பெருவெளிக்குள், அவள் பறவை போல் பறந்தாள். ரத்தினத்தின் பேச்சுக்கு இணையாக,*

இந்தப் பாடல் அவளை ஆட்கொண்டது. முரண்பட்டது போல் தோன்றிய இந்த இரண்டும், உண்மையில் ஒருமைப் பட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது. முன்னது, இப்படி வாழ்கிறார்களே என்ற தார்மீகக் கோபம், பின்னையது கோபத்தை நீக்கிய ஒரு தார்மீக வேதனை.

அப்படியும் இப்படியுமாக அந்தப் பெருங்கூட்டத்தில் பிரார்த்தனையிலும், பாட்டிலுமாக நேரத்தைக் கழித்தாள். அந்தக் கூட்டத்தையும் அதற்கு மேடையில் நின்று 'சுவிசேஷ செய்தி' வழங்கியவர்களையும் பார்த்தபோது அவளுக்கு ஒன்று புரிந்தது. உலகில் பாவிகள் இருக்கும் அளவிற்குத் தியாகிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த இரு துருவத்திற்கும் இடைப்பட்டவர்கள்தான் மதில்மேல் பூனையாகிறார்கள்.

காலங் கழிந்து, காலையானது.

எல்லோரும் கலைந்தார்கள். சுற்றமும் நட்பும் சூழ வந்தவர்கள் இப்போது அவர்கள் புடைசூழப் போய்க் கொண்டிருந்தார்கள். பூச்சியைக் கௌவும் பல்லிபோல மணிமேகலையை பயம் கௌவிக்கொண்டது. எங்கே போவது? விடுதிகளை விசாரித்துப் போகலாமா? வீட்டுக்கே திரும்பலாமா?

மனம் அலைந்ததுபோல் கால்களும் அலைந்தன. இவ்வளவு பெரிய சபையிலே எனக்கொருவர் இல்லையா? இவ்வளவு பெரிய தலைநகரில் எனக்குப் புகலிடம் இல்லையே! சமுத்திரத்தில் விழுந்து சாகலாமா? ரயில் தண்டவாளத்தில் தலையைக் கொடுக்கலாமா?

உள்ளம் விறைக்க, உடம்பெல்லாம் வேர்க்க அவள் நடந்தாள். எதாவது ஒரு வழி கிடைக்கும் என்று நம்பியவள் போல வானொலி நிலையத்தைக் கடந்து ஆழ்வார் பேட்டையை விட்டு அகன்று, வன்னிய தேனாம்

பேட்டைக்கருகே வந்துகொண்டிருந்தாள். எதிரே 'கிராமத்து ஹிப்பிபோல' ஒரு உருவம் வந்தது. சந்தனப் பொட்டு நெற்றி. துளசி மாலைக் கழுத்து. சந்தேகமில்லை. 'கூத்து' கோவிந்தன்தான்.

மணிமேகலை அப்படியே நின்றாள். பின்னால் வந்த சைக்கிள்காரன் 'மணி அடிக்கேனே காதில் விழலியா' என்று கேட்கும்படி நின்றாள். பாதாதி கேசம் வரை பரவச மானாள். சற்றுநேரம் வரை நொந்த நெஞ்சம், இப்போது வட்டியும் முதலுமாக ஆனந்தத்தை அனுபவித்தது.

எதிரில் வருவோரை முட்டாக் குறையாக மோதிக் கொண்டே, பவளக்கொடியின் அரண்மனையில் அர்ச்சுனன் நடந்ததுபோல், கோவிந்தன் நடந்து, அவளைப் பாராமலே கடந்தபோது அவள் 'அண்ணே' என்றாள். அவன் இப்போது அப்படியே நின்றான்.

"நீங்க எப்பண்ணே வந்திங்க?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால."

"ரயில் இன்னும் வந்திருக்காதே."

"லாரி வந்துடும்."

"அப்பா எப்படி இருக்கார்?"

"அப்படியே படுத்துக் கிடக்காராம்."

இருவரும் குடிசை மாற்று வாரிய வீட்டடுக்கு வரை நடந்து போனார்கள். மணிமேகலை தான் பட்ட நிலையையும், ஏற்படவிருந்த விபத்தையும் எடுத்துக் கூறக் கூற எத்தனையோ சந்திரமதிகளாய், திரௌபதிகளாய், கண்ணகிகளாய் நடித்த அந்த நடிகன் இப்போது தன் இயல்பான உணர்வுகளை அவற்றின் போக்கிலேயே விட்டவன்போல் கண்களைத் துடைத்துக் கொண்டான். பிறகு அவனும் அவள் வந்தபிறகு தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை, ஒரு கூத்து போலவே விளக்கினான்.

ஊருக்குத் திரும்பிய அவனை, அவள் அண்ணன் உதைக்கப் போனானாம். தம்பிக்காரன் பிடித்துக் கொண் டானாம்; அண்ணனையல்ல, இவனை! ஊர்ப்பிரமுகர்கள் எல்லோரும் இவன்தான் மணிமேகலையைக் கடத்தி ரயிலேற்றிவிட்டு மிராசுதாரின் நிலையை இப்படிக் கொண்டுவந்து விட்டுவிட்டான் என்று திட்டினார்களாம். அப்பாவிப் பெண்ணான மணிமேகலையின் மனதை மாற்றி அவள் மனதையும் கெடுத்துவிட்டானாம். இதே போல் இன்னும் எத்தனையோ பெண்களையும் கெடுத் தாலும் கெடுப்பானாம். ஊர் கெட்டுப் போகக்கூடாதாம். இவன் இருந்தால் ஒழுங்குமுறை போய்விடுமாம். உதைப்போம் என்றார்களாம். ஓடி வந்துட்டானாம். ரத்தினத்தை அடிக்க முடியாது என்பதால் அதற்கும் சேர்த்து இவனை அடிக்கப் போனார்களாம். அந்தச் சமயம் பார்த்து ரத்தினமும் ஊரில் இல்லையாம்.

மணிமேகலை அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

“என்னால ஒங்களுக்கு...”

“ஒனக்குன்னு சொல்லும்மா... அண்ணன நீன்னுதான் சொல்லணும். நான் அதுக்காவ ஓடி வரல. ஏற்கெனவே எப்படா மெட்ராஸ் ஓடலாமுன்னு நினைச்சிருந்தேன். கெட்டும் பட்டணம் சேருன்னு சொன்னாவல்லா... ஊரு கெட்டுக்கிட்டே வந்ததுனால நான் வந்துட்டேன். கவலப் படாதம்மா. இந்த பேட்டையில நாடகக் கலைஞர்கள் நிறையா இருக்காவ. நான் வந்தால் இங்க ஒரே சண்டதான்; என் வீட்ல சாப்புடு, உன் வீட்ல சாப்புடுன்னு. வந்த நேரத்த பாருங்க. சேலத்துல ஒரு எக்ஸிபிஷன் நாடகம் பத்து நாளைக்கி. அடியேனுக்கு வில்லன் வேடம். ஒரு சினிமா ஸ்டார புக் பண்ணியிருக்கு. அவரு வராட்டா ஒரு கழுதய ஏத்தப் போறோம். அதுக்கு பின்னணி அடியேன். ‘கண்மணி படப் புகழ்’ காந்தாவ போட்டிருக்கு.

அவள் வராட்டா கதாநாயகிய ஒரு கூனியா மாற்றி, அடியேனை அதுக்கும் போடுறதா நடிகர் நம்பீசன் உத்தேசிச்சிருக்காரு. என்னமோ நம்மள மாதுரி நல்லவங்களுக்கு வாழ்க்கை நாடகமாகவும், நாடகம் வாழ்க்கையாவும் போயிட்டு. அப்புறம் ஒங்க நிலைமையை யோசிக்க கஷ்டமாய் இருக்கு. சரி! ரெண்டு நாளைக்கு, எதாவது ஒரு கலைஞர் வீட்ல இருங்க. அப்புறமா யோசிக்கலாம்.”

“இல்லண்ணே. என்னை ஏதாவது ஒரு வீட்ல வேலக்காரியா சேத்துடுங்க.”

“தங்கச்சி எனக்கு என்ன வேணுமுன்னாலும் தெரியாம இருக்கலாம். ஆனா... அழத் தெரியாதுன்னு மட்டும் நினைக்காத.”

“நீங்க சொல்றது தப்புண்ணே. எந்தத் தொழிலும் கேவலமில்ல. ஒரு தடவ மிஸ்டர் ஜெயராஜோட சோளிங்கர் போயிருந்தேன். பெருமாள் கோயிலுக்குப் போயிட்டு அவர்—அதுதான் மிஸ்டர் ஜெயராஜ் படிச்ச ஒரு ஹைஸ்கூலுக்கு போனோம். பழைய ஹெட்மாஸ்டரே இருந்தாரு. அவருகிட்ட படிச்ச பையன் கனடாவுல ஒரு காலேஜ்ல புரபசர் வேலைக்கு போனாராம். ஹோட்டலுல அவருக்கு ‘காபி’ கொண்டுவந்த சர்வர் இன்டர்வ்யூ போர்ட்ல இருந்தாராம். அவருதான் அந்த காலேஜுக்கே பிரின்ஸ்பாலாம். ஆனால் நாம் கஷ்டமான தொழில கேவலப்படுத்தி அதைச் செய்யுறவங்களயும் கேவலமாக் கிட்டோம்.”

“ஒனக்கா இந்த கதி?”

“ஒன் கதி என்னன்னு நினைச்சிப் பார்த்தியா? மேல இருந்து கீழ வாரவங்களுக்காக இரக்கப்படுற நேரத்தை நமக்கும் கீழே இருக்கவங்களுக்காக உதவுறதுல செலவிடணும். சொல்லப் போனால் நான் ஒன்

லெவலுக்கு வந்து சகஜமா பழகுறதுல நீ சந்தோஷப் படணும்."

"ஆஹாஹா! இப்போ வார சந்தோஷத்த மாதிரி, எப்போதுமே எனக்கு சந்தோஷம் வரல. ஒன் அண்ணன் என்னை உதைக்க வந்தான் பாரு, அப்போ வந்த சந்தோஷத்தவிட இது அதிகம். கூத்துக்கு கூட்டிக்கிட்டு போன ஒரு பயல் நான் தூங்கும்போது என் வெள்ளி அரணைக் கயிற்றை அறுத்துக்கிட்டு ஓடுனபோது ஏற்பட்ட சந்தோஷம், இந்த சந்தோஷத்துக்கு ஒரு தூசு."

"நீ இப்படியே பேசினால், நான் இதுக்கு மேல நடக்க மாட்டேன். ஆனானப்பட்ட சந்திரமதியே அடிமையாக லியா? திரௌபதி அஞ்ஞான வாசத்துல சேடியாகலியா?"

"அவங்க கணவங்க வந்து காப்பாத்துவாங்க என்கிற நம்பிக்கையில இருந்தவங்க. ஆனால் நீ...?"

"என் அண்ணன் கோவிந்தன், எனக்கு சுயமரியாதை யோடு வாழுறதுக்கு வழிகாட்டுவார் என்கிற நம்பிக்கையில இருக்கிறவள் நான்!"

"சரி நீ சின்ன வயசில சொன்னத கேட்டால்லா இப்போ கேட்பே. என்னோட முன்னாள் பாய்ஸ் கம்பெனி பவளக்கொடி, இப்போ சினிமாவுல கறுப்புப் பணம் வாங்குற அளவுக்கு முன்னேறியிருக்கிற நட்சத்திரம். அந்த நட்சத்திரம் பங்களாவுல வீட்டு வேலயப் பார்க்கதுக்கு... பார்க்கதுக்கு..."

'கூத்து' கோவிந்தன் விம்மினான். வாயில் துண்டை வைத்தான். "எதுக்குண்ணே அழுவுற? என்ன நடந்துட்டுன்னு அழுவுற? இதோ பாரு! கண்ண துடைச்சுக்க. வாரபோற ஆட்கள் வேடிக்கை பார்க்கது மாதிரி பார்க்காங்க. அட ஒன்னத்தான்! பரமசிவமே பிட்டுக்கு மண் சுமக்கலியா? மகாத்மா காந்தி எதிரிக்கும் செருப்பு

தைக்கலியா? அரிச்சந்திரன் மயானம் காக்கலியா? உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் கார்க்கி தெரியுமா? அவரு ஒரு தோட்ட வேலைக்காரர். ஊர் புகழும் கூத்து கோவிந்தன் தெரியுமா? அவரும் ஒரு சாதாரண ஏழை. அதுவும் உதை வாங்கப் போன எளியவன்!"

'கூத்து' கோவிந்தன் லேசாகச் சிரித்தான். பிறகு அவன் மௌனமாக முன்னால் நடக்க அவள் பின்னால் நடந்தாள். இருவரும் அந்த சினிமா நடிகர் வீட்டுக்குப் போனார்கள். கோவிந்தன் செருப்பை வீட்டுக்கு வெளியேயே போட்டுவிட்டு சுருட்டிய 'ஆப் கையை' புல் கையாக்கி பாய்ஸ் கம்பெனியில் 'தடிமாடே! எருமை மாடே! இடியட் மாடே!' என்று தான் கூப்பிட்ட தன் முன்னாள் பவளக்கொடியான நடிகர் வெண்சாமரத்தின் வீட்டுக்கு முன்னால் "அண்ணே! அண்ணே!" என்று சொல்லிக்கொண்டே போனான். 'அண்ணனின்' காரிய தரிசி அவனுடன் பேசினான். வேலைக்காரி அண்ணனுக் கில்லியாம், காரியதரிசிக்கித்தானாம். இந்த அவுட்ஹவுஸ்ல யேதானாம்.

வெளியே ஒதுங்கி நின்ற மணிமேகலைஉள்ளே 'ஆஜர்' செய்யப்பட்டாள். காரியதரிசி கண்ணை மூடிக்கொண்டே பேசினார்.

"மாசம் இருபது ரூபாய் சம்பளம். மூணு வேள சாப்பாடு. குழந்தைகளை ஸ்கூல்ல விடணும். சமைக்கணும். பாத்திரம் தேய்க்கணும். அவள் ஹிஸ்டிரியா பேஷண்ட். அனுசரித்துப் போகணும். ஒருவார 'காய'மில்லாத வேலை அப்புறந்தான் காயம். சரியான்னு கேட்டுச் சொல்லுப்பா...?"

மணிமேகலை சரியென்று சொல்லாமலே "இப்போ தேய்க்கிறதுக்கு பாத்திரம் இருக்கா?" என்றாள் அவனைப் பார்த்து.

மணிமேகலை சூட்கேஸை வீட்டுக்கு வெளியே வைத்துவிட்டு அவுட்ஹவுஸிற்குள் போனாள். அது நல்லாத்தான் இருந்தது. இரண்டு அறைகள். நல்ல கட்டில். ஸோபா செட்டும் இருந்தது. காரியதரிசியின் மனைவி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"ஒரு வேலைக்காரிகூட இங்க ஒழுங்கா இருக்கல. கோபத்துல செம்பைத் தூக்கி எறியுறதுதான். இதுக்காவ கோபப்பட்டு போயிடுறதா? அந்த சமயத்துல வடை பாயசம் கொடுத்ததை நினைத்துப் பார்க்காண்டாமா? பார்க்காண்டாமா? நீங்க சொல்லுங்கோ?"

மணிமேகலை சிரித்துக்கொண்டே பதிலளித்தாள்.

"என் மேல எதை வேணுமுன்னாலும் எறியுங்க...! ஆனால் என்னை மட்டும் எறிஞ்சிடாதிங்க!"

காரியதரிசியின் மனைவி முதலில் அவளைக் கண்டிப்புடன் பார்த்துவிட்டு, பிறகு அவள் சொன்னதன் பொருள் விளங்கியவளாய் 'லேட்டாகச்' சிரித்தாள்.

"அப்ப நான்... சே...சே இப்பவே சேலத்துக்குப் போகணும்." என்றான் கோவிந்தன்.

மணிமேகலை அவனுடன் வீட்டுக்கு வெளியே வந்தாள். கோவிந்தன் புலம்பினான். கைகள் கண்கள் பக்கம் போய் பிறகு கைக்குட்டையைத் தேட தாளாது பேசினான்.

"சந்திரமதி மாதுரி ஆயிட்டியேம்மா. இந்த சந்திரமதிக்கா இப்படி வரணும்?" மணிமேகலையின் கண்களும் இப்போது கலங்கின.

"நான் சந்திரமதி இல்லண்ணே. ஏன்னு கேக்குறியா? சந்திரமதியோட கழுத்தில் இருந்த தாலி அவள் புருஷனுக்கு மட்டும் தெரியுமாம், மற்றவங்களுக்குத்

தெரியாதாம். ஆனால் என்னோட தாலி எல்லோருக்கும் தெரியுது. என் புருஷனுக்குத்தான் தெரியாமல் போயிட்டு. நான்... நான்... சந்திரமதியில்ல அண்ணே."

'கூத்து' கோவிந்தன் ஓடினான். சேலத்து ரயிலுக்கு நேரமாகிவிட்டதால் அல்ல. அவனால் அங்கே நிற்க முடியவில்லை. நின்றால் நெடுநேரமாய் விழுந்து இந்நேரம் செத்திருப்பான்.

## 16

ஒருவாரம், ஒரு வருடம்போல் யுகம் யுகமாக ஓடியது.

மணிமேகலைக்கே ஆச்சரியம். தந்தையின் வீட்டிலும், கணவனின் வீட்டிலும், அங்குள்ளவர்களின் முகச்சுழிப்புக்கும், ஜாடைப் பேச்சுக்கும், தொட்டால் சுருங்கி செடி போல துவண்டவள், இப்போது கிட்டத்தட்ட பாதிப் பைத்தியம்போல் நடந்துகொள்ளும் இந்த காரியதரிசியின் கையைப் பிடித்தவளான காமாட்சியின் இடிபோன்ற ஏச்சுக்களுக்கு ஒரு இடிதாங்கியாய் போய்விட்டதை நினைத்து வியந்தாள். ஒருவேளை தனக்கு ரோஷம் போய்விட்டதோ என்றுகூட சந்தேகப்பட்டாள். இல்லை... இல்லை... மனிதர்களின் பேச்சுக்கள் முக்கியமல்ல; அதன் பின்னணியும் முன்னணி நோக்கமுந்தான் முக்கியம். 'டார்லிங்' என்ற வார்த்தையைவிட "என்னடி இழவெடுத்த பய மவள' என்ற வார்த்தைகள், மாறாத—மாற்றமுடியாத பேரன்பைக் காட்டுவதாகக் கூட இருக்கலாம். அதோடு பிற மனிதர்களைப் புரியப் புரிய நம் மனமும் நமக்குப் புரிகிறது. இதனால்தான் மகான்கள் 'சுகமும் துக்கமும் உன்னிடமே உள்ளன' என்று உரைத்தார்களோ? இதனால் கல்லூரியில் பாடமாக வந்த 'பாரடைஸ் லாஸ்ட்'டில் ஒரு

பகுதியில் 'மைன்ட் இஸ் ஹெல் ஆப் ஹெவன் அண்ட் ஹெவன் ஆப் ஹெல்' என்று படித்தது அவளுக்கு பக்கம் திறந்த பழைய புத்தகம்போல், கண்முன் தோன்றியது.

வந்த இரண்டு நாளைக்கு வளைந்து வளைந்து வேலை பார்ப்பது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. பாத்திரத் தேய்ப்பு, பக்குவச் சமையல், கடைக்குப் போவது முதலிய கணக்கில்லா வேலைகள்! மூன்றாவது நாள் சுவர்க் கடிகாரம் ஐந்து தடவை கத்தினாலும் அவளால் எழும்ப நினைத்தும் எழும்ப முடியவில்லை. பாயில் புரண்டு கொண்டிருந்தாள். திடீரென்று தலையிலும் காதுகளிலும் ஜில்லிட்ட தண்ணீரால் சிலிர்த்து எழுந்தாள். காமாட்சி, அவள் தலையில் 'தண்ணீர் அபிஷேகம்' செய்துவிட்டு காலியாக இருந்த செம்பை வைத்துக்கொண்டு காளிபோல் கத்தினாள்.

"ஒன் மனசில் என்னடி நினைக்கிறே? பொறுப்பிருந்தா இப்டி தூங்குவியாடி? ஒன்பது மணிக்கெல்லாம் கோவிலுக்குப் போகணுமுன்னேன். இப்படித் தூங்குனால் போக முடியுமாடி? இன்னுமாடி இருக்கிற? ஒங்களெல்லாம் வைக்க வேண்டிய இடத்துல வைக்கணும். அவரு இன்னைக்கு ராத்திரி எட்டு மணிக்கு வாரார். ஷூட்டிங் போயிட்டு, நாலு நாளாய் நாயாய் சுத்திட்டு வருவாரு. அவருக்கு உருளைக்கிழங்குன்னா உயிரு. மார்க்கெட்டுக்குப் போகணும். இப்படியாடி தூங்குறது? தூக்கம் பிடிச்ச மூதேவி! எனக்கு ராத்திரி முழுசும் வராத தூக்கம் ஒனக்கு எப்படிடீ வரும்? எப்படிடீ வரும்?"

முதலில் அதிர்ச்சியுற்ற மணிமேகலை பிறகு ஒரு தீர்மானத்தோடு எழுந்தாள். உரலுக்குள் தலையைக் கொடுத்துவிட்டு உலக்கை அடிக்குப் பயப்படுவதில் நியாயமில்லை. பி.யூ.ஸிக்கு மேலேயே படிததிருக்கேன். பி.ஏ. முதலாவது ஆண்டு... எப்படியாவது ஒரு கம்பெனில

கிளார்க்கா போகணும். டைப்ரைட்டிங் எப்படியாவது கத்துக்கணும். என் பிள்ளையை எப்படியாவது கொண்டு வந்துடணும்... எப்படிக் கொண்டு வாரது? எப்படியோ அவனைக் கொண்டு வரமுடியும்.

வீட்டு வேலைகளைக் கவனித்துவிட்டு ஏழு மணிக்கெல்லாம் அவள் சற்று நிமிர்ந்தபோது "சீக்கிரண்டி சீக்கிரண்டி. மார்க்கெட்ல நல்ல உருளைக்கிழங்கு வித்துடும். அழுகுனதுதான் இருக்கும். சீக்கிரமாப் போடி. சீக்கிரம். என்னடி எருமைமாதிரி நடக்குற" என்றாள். அருகிலேயே இருந்த பாலசுப்பிரமணியர் கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பியபிறகு மணிமேகலையின் கைகளைப் பிடித்துக்கொண்டு "நான் ஒரு கிறுக்கிடி... வாய் இருக்கிற அளவுக்கு மனசு கிடையாதுடி. என்னைக் கை விட்டுடாதே! ஒன்னையே திட்டணுமுன்னால் நான் எவ்வளவு பெரிய பைத்தியமாய் இருப்பேன்" என்று அழுதாள். மாலையில் நட்சத்திர வீட்டு வேலைக்காரி, காரியதரிசியின் வேலைக்காரிக்கு உத்திரவுகள் இட்டுக் கொண்டிருந்தாள். தன்னை, அந்த நடிகரின் இடத்திலும் இவளை அந்தக் காரியதரிசியின் இடத்திலும் அவளாகவே நியமித்துக் கொண்டவள்.

"ஒன் பேரு என்ன, மணிமேகலையா? போவட்டும்... இந்தா பாரும்மா இனிமேல் இந்த பூந்தொட்டிகளுக்கும், செடிகளுக்கும் நீதான் தண்ணி ஊத்தணும்!" என்று சொல்லிக்கொண்டு கையிலிருந்த ரப்பர் குழாயை நீட்டியபோது மணிமேகலை அதை வாங்கிக்கொள்ள கைகளை நீட்டப் போனபோது வந்தாள் காமாட்சி. மணிமேகலையைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு "இவள் கால் தூசிக்கு நீ பெருவியாடி? நீ எப்டிடி இவளுக்குச் சொல்றது? ஒன் ராங்கித்தனத்தை எங்க வச்சுக்கணுமோ அங்க வச்சுக்கோ. இவள் என் மகளவிட ஆயிரம் மடங்கு

உயர்வானவா. நீயாடி என் பிள்ளைக்கு உத்திரவு போடுற? பூந்தொட்டிக்கு தண்ணி ஊத்துறதுனாலேயே நீ குப்பத் தொட்டில்லன்னு ஆயிடுமாடி? நீயும் ஒன் தளுக்கும் ஒன் மினுக்கும்..." என்று கத்தியபோது சில வேலைக்காரச் சிறுவர்கள் அங்கே கூடாதது போல் ஒதுங்கி ஒதுங்கி நின்று கூடியபோது "பாருங்கடா இந்த மூதேவி பண்ற வேலையை. என்னோட மணிமேகலை இவள் செய்யுற வேலையைச் செய்யணுமாம். அறிவுகெட்ட மூதேவி. நீ இதைவிட என்னச் செய்யச் சொல்லலாமுடி" என்று சொல்லிக் கொண்டே அந்த ரப்பர் குழாயை கீழே போட்டு அதை மிதிமிதியென்று மிதித்தாள். பிறகு, "இவளையா இப்டிப் பண்ற? பரவாயில்ல. நானே நீ சொன்ன வேலையச் செய்யுறேன்" என்று குழாயை எடுத்து எதையோ பண்ணி விட்டு பிறகு கை வலித்ததால் மீண்டும் அதைக் கீழே போட்டு "நானாடி ஒனக்கு வேலைக்காரி? என்கிட்டயாடி வேலை வாங்குற?" என்று சொல்லி அதை அவளாக நினைத்து மிதித்தாள்.

இன்னொரு சமயத்தில் காரியதரிசி மணிமேகலை யிடம் எதையோ பேசினார். பொதுப்படையான பேச்சு. ஆனால் அதை அவர் 'டயலாக்' மாதிரி பேசிவிட்டு பிறகு அதே பாணியில் "மணி கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து தரலாமா?" என்றார். அவள் டம்ளரை நீட்டியபோது அவரது கை தற்செயலாகப் பட்டதோ அல்லது 'டெஸ்ட்' செயலாகப் பட்டதோ தெரியவில்லை. அவர் போனதும், ஓணான் மாதிரி அவர்கள் பார்வைக்கு அகப்படாத இடத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த காமாட்சி ஒரே ஓட்டமாக ஓடி வந்தாள். மணிமேகலையின் கையில் இருந்த டம்ளரை வாங்கி அவள்மீது வீசினாள். மணிமேகலை பிரமை பிடித்தவளாய் ஒதுங்காமல் நின்றபோது டம்ளர் ஒதுங்கிச் சுவர்க் கண்ணாடியை உடைத்தது. காமாட்சி குறிதவறிய கோபத்தில் குதித்துக் கொதித்தாள்.

"கட்டுன பெண்டாட்டி செத்துப் போயிட்டாள்னு நினைத்தியாடி? என் இடத்த அபகரிக்கலாமுன்னு நினைக்கியாடி? அந்த மூளகெட்ட முண்டத்தோடு, கை மேல கைபோட்டு நடக்கலாமுன்னு நினைக்கியாடி? கொலை பண்ணிடுவேன்! அவன் கையைத் தொடுற அளவுக்கு, நீ ஏண்டி டம்ளரை பிடித்தே? வேலைக்காரியா வந்து வீட்டுக்காரியா மாறி இந்த வீட்டுக்காரியை வேலைக் காரியாய் மாற்றப் பார்க்குறியோ? நடக்காதுடி. ஒங்க ரெண்டு பேரையும் கொலை பண்ணிட்டு போலீஸ்ல சரணாயிடுவேன். ஒங்கள கொஞ்சுறதுக்கு விடமாட் டேண்டி, கொஞ்ச விடமாட்டேண்டி. மணியாம் மணி. பேரைச் சுருக்குற அளவுக்கு வந்துட்டிங்களோ? அவனும், வெறுந்தண்ணி டம்ளர விஸ்கிப் பாட்டலை வாங்கிறது மாதிரி எப்படி மயங்கி வாங்குறான்! என்னமா ஏங்கி வாங்குறான்! அந்த சீமப்பண்ணி வரட்டும். ஒங்க ரெண்டு பேரையும் கோர்ட்ல ஏத்துறனா இல்லையான்னு பாரு. ஒஹோ..."

இது அதிகப்பட்சம். இனிமேல் இருப்பது, அவள் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவது மாதிரி. கோவிந்தன் வருவது வரைக்கும் காத்திருக்கலாம் என்று நினைத்தது தப்பு. பழையபடியும் தெருவுல நடக்கலாம். யாராவது நல்லவங்க கண்ணுல விழுவாங்க.

சிந்தனைச் சிரமங்களுக்குப் பிறகு மணிமேகலை புறப் பட்டாள். காமாட்சியின் பதினைந்து வயது 'பாப்பாவும்' எட்டு வயது 'அரசுவும்' அவள் கையில் இருந்த சூட்கேஸைப் பார்த்ததும் புரிந்துகொண்டார்கள். 'பாப்பா' மணிமேகலையை வாசல்படியோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். "போகாத அக்கா போகாத அக்கா! மதர் ஒரு மண்ணாங்கட்டி..." என்று அவள் புலம்பியபோது அரசு உள்ளே போய் அம்மாவைக் கூட்டிக்கொண்டு

வந்தான். காமாட்சி, நாலடியை ஓரடியாய்த் தாண்டி, நடைவாசலுக்கு வந்து, திடீரென்று குனிந்து, மணிமேகலையின் காலைத் தூக்கி தன் இடுப்புப் பக்கமாக வைத்துக் கொண்டு "என்னடி நினைச்சே" என்று பயங்கரமாகச் சொன்னபோது பிள்ளைகள் "வேண்டாம்மா... வேண்டாம் மம்மி" என்று அழுதன. காமாட்சி தன்னிடம் பிடிபட்ட மணிமேகலையின் காலில் போட்டிருந்த ரப்பர் செருப்பைக் கழட்டி மணிமேகலையை விட்டாள். அவள் ஒரு கால் செருப்போடு ஒன்றும் புரியாமல் தவித்தபோது காமாட்சி தன் கைச் செருப்பை அவளின் கைக்குள் திணித்துக்கொண்டே "இந்தாடி என்னை இந்தச் செருப்பால அடிடி! நான் ஒன்னைச் சொன்னது தப்புத் தாண்டி! நல்லா அடிடி! ஒன்னைச் சொல்லிட்டு நான் உயிரோட இருக்கதே தப்புடி. நீ அடிக்க மாட்டியாடி? செருப்பை வைத்து அடிக்கமாட்டியாடி? நான் சொல்றத செய்யத்தானடி வேலைக்காரியாய் வந்தே. என்னை அடிக்க மாட்டியாடி? அவ்வளவு திமிறாடி! சரி, நானே என்னை அடிச்சிக்குறேன்..." என்று அழுதுகொண்டே மணிமேகலையிடம் திணிக்கப்பட்ட செருப்பை எடுத்து, தன் தலையிலேயே அடித்துக்கொண்டாள் பல தடவை. 'மம்மிக்கு இப்படியாவது புத்தி வரட்டும்' என்று நினைத்ததுபோல் பிள்ளைகள் பேசாமல் இருந்தபோது மணிமேகலை அந்தக் குழந்தையிலும் படுகுழந்தையான காமாட்சியை கட்டியணைத்து வீட்டுக்குள் கொண்டு போனாள்.

இரவில் வெளியே நட்சத்திர வீட்டு போர்டிகோவில், வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த கணவனுக்கு காமாட்சி சவாலிடுவது மணிமேகலைக்கு நன்றாகக் கேட்டது. "யோவ் சீமப்பண்ணி! ஒரு வேலைக்காரியை யாவது உருப்படியா விட்டியாய்யா! ஏய்யா ஒனக்கு இந்தப் புத்தி? பொம்புள பொறுக்கி! ஆனால் ஒண்ணு. இந்த

மணி வெறும் சாதா மணியில்லய்யா, இது வைரமணி! ஒன் ஜம்பம் சாயாது. பந்தயத்துக்கு வாரியாய்யா? நீ இவளை நெருங்கிப் பாரு, இவள் கையாலயே நீ செருப்படி படாட்டால், நான் உனக்கு என் உடம்பை செருப்பா தைத்து போடுறேன். அவள் புதுசா பிறந்திருக்கிற கண்ணகி. அவள் நொந்து பார்த்தாலே போதும், நீ வெந்து போயிடுவே! பந்தயத்துக்கு வாரீயா?”

மணிமேகலை பெருமையாகவும், வெறுமையாகவும் நெஞ்சை நிமிர்த்தி தலையைத் தாழ்த்தினாள். இதனால் இந்த காமாட்சி மீண்டும் சந்தேகப்படமாட்டாள் என்று அர்த்தமல்ல. அவள் இவளை நன்றாகப் புரிந்துவிட்டாள். சின்ன வயதில் அம்மாவை இழந்தவள். பிறகு சித்திக் காரியின் கொடுமையால் குறுகிப் போனவள். அவளுக்குப் பயந்து சென்னைக்கு ஓடிவந்து மாமா வீட்டுக்கு வந்தவள். அங்கே மாமா பிள்ளைகளின் ‘நேரப் போக்குக்கு’ கோமாளியாகவும் கோபங்களுக்கு குறியாகவும் போனவள். அழுது அழுது ஆத்திரப்பட்டு பட்டு, இப்போது அந்த ஆத்திரமும், அழுகையும் இல்லாமல் வாழ முடியாமலும், அவற்றிலிருந்து மீள முடியாமலும் போனவள். கண் நிறைந்த இரண்டு பிள்ளைகளையும் சீமைப் பண்ணி என்றாலும், சிரித்து மழுப்பும் கணவனையும் வைத்துக் கொண்டே “எனக்கு யாருமே இல்லியே, யாருமே இல்லியே காமாட்சி” என்று தன் தலையில் அடித்துக் கொள்பவள். இளமையில் ஏற்பட்ட நிர்கதியான உணர்வு அப்போது முடங்கிக் கிடந்து இப்போது முழு உருவம் பெற்றிருக்கிறது இந்த பரிதாபத்துக்குரியவள் பேசுவதைப் பாராட்டலாகாது.

மணிமேகலை காமாட்சியைக் கந்தசாமி கோவிலுக்கு அடிக்கடி கூட்டிக்கொண்டு போனாள். ஒரு சமயம் அவள் சந்நிதி முன்னே நின்று “முருகா! எனக்கு யாருமில்லன்னு

நினைச்சது தப்புடா. என் மணிமேகலை இருக்காடா" என்று கரங்குவித்துச் சொன்னபோது மணிமேகலை மெய்யுருகி நின்றாள். அவர்கள் வெளியே வந்தபோது ஒரு காரில் இருந்து ஆண்களும் பெண்களுமாக அட்டகாசமாக இறங்கினார்கள். மணிமேகலை கல்லாய் நின்றாள்.

மிஸ்டர் ஜெயராஜ், மிஸ்ஸஸ் ஜெயராஜ், பாமா, அவள் புருஷன் எல்லாவற்றிற்கும் மேலாக ராமபத்திரன்.

காருக்குள்ளேயே ராமபத்திரன் கையை விட்டு இழுத்தார். அழுகைச் சத்தங் கேட்டது. பிறகு ஜெயராஜ் வந்து காருக்குள் கையை விட்டு அழுததை வெளியே கொண்டு வந்து தோளில் போட்டான். மணிமேகலையின் ஏழு வயது மகன். இளைத்திருக்கிறான். முகம் வீங்கியது போல் தோன்றியது. செத்த ஆட்டின் கண்களைப் போல் கண்கள் மங்கலாய் வெளுத்துத் தெரிந்தது.

மணிமேகலை தன் வயிற்றைப் பிடித்தாள். 'என் செல்வமே...' என்று வந்த வார்த்தைகளை விரட்டிப் பிடித்தாள். ஓடப்போன கால்களுக்கு நிலத்தில் அவற்றைத் தேய்த்து உதை கொடுத்தாள்.

"என் ராஜா... என் முத்தே... அம்மா இங்கேதான் இருக்கேண்டா... இங்கேதான் இருக்கேண்டா... அப்பா அடிக்காராடா? வசந்தி திட்டுறாளாடா? நல்லாச் சாப்பிடுறியாடா? நல்லாத் தூங்குறியாடா?"

பையன் வசந்தியைப் பார்த்து "சித்திகிட்ட போயிட்டேன்' என்று அப்பாவிடம் சொல்வது மணிமேகலைக்கு நன்றாகக் கேட்டது.

'என் ராஜா சித்தின்னு சொல்லாதடா. அம்மான்னு அவளைப் பார்த்து ஒரு தடவயாவது சொல்லுடா. அப்படியாவது நீ அம்மான்னு கூப்புடுற வார்த்தையை கேக்குறேண்டா. எப்படியாவது யாரைப் பார்த்தாவது

அம்மான்னு சொல்லுடா. சித்தியைப் பார்த்து வேணுமுன்னால் நீ விரும்புறதையே சொல்லுடா. 'அம்மா கிட்ட போமாட்டேன்னு' சொல்லுடா. என் நிலைமையும் அதுதாண்டா. என் கண்ணே, பரவாயில்லடா. கோவிலுக்குப் போடா. நம்ம அப்பன் முருகன் இருக்காண்டா. அவனை ஒன்னை நினைத்துத்தான் கும்பிட்டுட்டு வாரேண்டா. நாம ஒருவரை. ஒருவர் பார்க்கிற காலம் வருண்டா. வரட்டுமா? ஏய், படுவாப் பயலே! அம்மான்னு சொல்லுடா! சொல்லுடா...'

"என்ன யோசிக்கிற? போகலாண்டி!" என்று காமாட்சி சொன்னபோது அவள் முதுகுக்குப் பின்னால் தன்னை மறைத்துக்கொண்டே பார்த்த மணிமேகலை, அப்படியே மறைந்து மறைந்து அவள் பின்னாலேயே போனாள். சிறிது தூரம் போனதும் முன்னால் போனாள். தன் பிள்ளையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அவளைப் பார்க்கப் பார்க்க, தன்னைப் பார்த்து இதேமாதிரி துடித்த அவள் அப்பாவின் ஞாபகம் வந்தது. யாருக்காக அழுவது? பெற்றவனுக்கா? பிறந்தவனுக்கா? இரண்டு பேரில் யாருக்கு அதிகமாய் அழுவது என்று போட்டியிட்டு இறுதியில் மனம் சலித்துப் போனதுபோல் அவள் போனாள். இறுதியாக அவள் திரும்பிப் பார்த்தபோது மிஸ்டர் அண்ட் மிஸ்ஸஸ் ஜெயராஜ்களும், இதரர்களும் கோவில் முனைப்பில் இருந்த பையனிடம் டோக்கன் வாங்கிவிட்டு செருப்பைக் கழட்டிப் போட்டார்கள்.

வாரங்கள், ஒரு மாதமாகச் சேர்ந்தது. 'கூத்து' கோவிந்தன் அடிக்கடி வந்து கொண்டிருந்தான். அவனிடம் 'கிளார்க்' வேலையைப் பற்றி அவள் பேசவில்லை. இந்த வேலையில் இப்போது அவளுக்கு ஒரு நிறைவு ஏற்பட்டது.

ஒருநாள். இதுவும் அவளை இன்னொரு விதமாக மாற்றிய மாறுபட்ட நாள்!

கண்ணாடி பீரோவைத் துடைத்துக் கொண்டிருந்தவள் தன் முகத்தைப் பார்த்துவிட்டுத் திடுக்கிட்டாள். காதோரம் மீண்டும் ஒரு புள்ளி. இப்போது ஓரளவு அது கூர்மைப் பட்டு சிவந்திருந்தது. இன்னொரு மங்கலான புள்ளி. அப்படியானால்...

மாத்திரைகளின் நினைவு இப்போதுதான் நிஷ்டூரமாக வந்தது. இந்த வீட்டில் உண்மையை மறைக்கக் கூடாது. மறைத்தால் பாவம். தெரிவித்தால், காமாட்சி குறைந்த பட்சம் சொன்னவுடனேயாவது ஒன்று ஒப்பாரி வைப்பாள், அல்லது திட்டித் தீர்ப்பாள். நிலைமையை இப்படியே விடக்கூடாது. ஒருவேளை... இந்த சின்னஞ்சிறு செவ்வரளிப் பூக்களுக்கும் தொத்தக்கூடாது. தொற்றுமோ தொற்றாதோ இந்த குழந்தைகளுக்கு கிலி பிடிக்கக்கூடாது. காமாட்சியின் 'ஹிஸ்டிரியா' பிரேக்டவுனாகி விடக்கூடாது. 'கூத்து' கோவிந்தன் வந்ததும் அவனிடம் சொல்லி எங்கே யாவது போக வேண்டும். எந்த மடமோ, எந்த ஊரோ எப்படியோ போக வேண்டும். கோவிந்த அண்ணன் வந்தாலும் சரி. வராவிட்டாலும் சரி போயாக வேண்டும்.

இரண்டு மூன்று நாட்கள் அவள் ஒதுங்கி ஒதுங்கி பிள்ளைகளை விட்டு விலகி விலகி அவர்களையும் அம்மா வையும் பிரியப் போகிறோமோ என்று கலங்கிக் கலங்கி தவித்துக் கொண்டிருந்தாள்.

நான்காவது நாள், 'கூத்து' கோவிந்தன் வந்தான். கூடவே வெங்கடேசன் வந்தான். அந்தச் சூழலிலும் மணிமேகலை ஆனந்த மயமானாளா அல்லது சோக மயமானாளா என்று சொல்ல முடியாது. எப்படியோ ஒரு 'மயமானாள்.'

வெங்கடேசன் அவளையே வெறித்துப் பார்த்தான். 'உனக்கா... உனக்கா, என் மணிமேகலைக்கா...?' என்று

சொல்லப் போனவன் முகத்தை திருப்பி முதுகுப் பக்கத்தை நனைத்துவிட்டு "எனக்கு இன்னைக்குத்தான் தெரியும். தற்செயலாய் இவனைப் பார்த்தேன்," என்று சொல்லி விட்டு "கவலப்படாத, நானிருக்கேன். இன்னையில் இருந்து உன் கவலையை நான் வாங்கிக் கொண்டேன். இனிமேல் நீ கவலைப்படக் கூடாது. புரியுதா?..." என்றான். அவளை வாங்க முடியாது போனாலும் அவள் கவலைகளை வாங்கிக்கொண்ட திருப்தியோடு சோகமாகப் புன் முறுவலித்தான்.

மணிமேகலை விம்மினாள். கையிலிருந்த ஒரு கரண்டி அப்படியே கீழே விழுந்தது. அவள் புலம்பினாள்.

"அத்தான்! என் அத்தான்! என்னை நீங்க மறக்கலியே மறந்திருக்கக் கூடாதா? மறக்கலியே!"

வெங்கடேசன் இப்போது சுயத்துக்கு வந்துவிட்டான். ஆனால் அவன் பதில் கம்பீரத்தோடு வந்தது.

"என்ன மணிமேகலை... 'அன்பு ஒரு சக்தி. அதன் ரூபம் மாறலாமே தவிர அந்த சக்தி மாறாதுன்னு' நீயே சொன் னதை மறந்துட்டியே. நான் ரூபம் மாறியிருக்கேன். அவ்வளவுதான். ஒனக்கே இந்த நிலைமைன்னா இயற்கை யின் சூட்சுமத்தில் ஏதோ ஒன்று இருக்கும்மா. கடவுள், உலகின் பாவங்களைத் தாங்குவதற்கு தைரியசாலிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் சுமக்கக் கொடுப்பாராம். ஒனக்கு வந்த நோய் ஒரு சிலுவைக் குறி. எதோ ஒரு காரணத்திற்காக வந்த திரிசூலம். ஒனக்குப் புரியுதோ, இல்லியோ எனக்குப் புரியுது!"

அவளும் புரிந்தவள்போல் கம்பீரமாய் நின்றாள்.

# 17

செங்கை மாவட்டத்தில் சமூகத்தில் இருந்து ஒதுக்கியவர்களுக்காக ஒரு ஒதுங்கிய பகுதியில் கட்டப்பட்ட இல்லம். மரமும் செடியும் மைனாவும் கிளியும் மண்டிக் கிடந்த மலைப்பகுதி. உலகை விட்டு ஒதுங்கியதுபோல் தோன்றிய அந்தப் பெரிய கட்டிடத்திற்குள்தான் உலகத்தின் தலைவிதியே நிர்ணயிக்கப்படுகிறது என்ற பிரமையை ஏற்படுத்தும். ஒரு தார்மீக ஒளி அங்கிருந்த ஒவ்வொரு மரத்திலும், மரக்கிளைகளிலும், புல்லிலும், பூவிலும் உள்ளொளியாய் ஓங்கிக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது.

கட்டிடத்தின் வராந்தாவின் முனையில் ஒரு வரவேற்பு அறை. தொழுநோயாளிகளைத் தொழுது இறுதியில் ஒரு தொழுநோயாளியாகவே மரித்து இன்று எல்லோரும் தொழும் உள்ளொளியான டாக்டர் ஆல்பார்ட் ஸ்விச்சரின் படம் பெரிதாகச் சிரித்துக் கொண்டிருந்தது. அருகில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் படம். அந்த மனிதாபிமானக் காவலர்களுக்கு நேர் கீழே இருந்த நாற்காலியில் அந்த மாது கண்ணாடி போடாமலே ஒரு புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மணிமேகலை அம்மூதாட்டிக்கு பார்க்க முடியாத இடங்களைப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தாள்.

இந்த மூதாட்டியின் பெயர்... பெயர் எதுக்கு? அவரே பெயரைப் பற்றிக் கவலைப்படாத போது? வேண்டுமானால் மனிதாபிமானி என்று சொல்லிக் கொள்ளலாம். இந்த அம்மையார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு,

வெளிநாட்டில் இருந்து இந்தியாவில் தேவதாசிகளைப் பற்றி ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் எழுதுவற்தகாக வந்தவர். இவரது தமக்கை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியுடன் நெருங்கிப் பழகியவர். அப்போதுதான் தேவதாசி ஒழிப்புச் சட்டம் வந்திருந்தது. புதிய வாழ்க்கை கிடைக்கப் போகிறது என்று மகிழ்ந்திருந்த தேவதாசிகளை, அவர்கள் குடும்பத்தினரே விரட்டினார்கள். அந்த அபலைகளுக்கு வாழ்வளிப்பதற்காக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவ்வை இல்லத்தைத் துவக்கினார். தமக்கையின் அறிமுகக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அவருடன் 'ஆராய்ச்சி' பற்றிப் பேசப் போனார். அந்த அம்மையாருக்கு டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி அறிவுரை கூறினார். "ஆயிரம் ஆராய்ச்சிகளை விட அதில் கிடைக்கும் பட்டங்களைவிட, ஒரு அபலைக் காவது ஆதரவளிப்பது தனக்கே ஒரு காலத்தில் தற்காப் பாக மாறும்" என்றார். தர்மம் என்பதே ஒரு தற்காப்பு யக்ஞம்தானே! அதோடு, எளியவர்களை ஆய்ந்து அவர் களை வைத்துப் பட்டம் பெற்று அவர்களுக்காக எதுவும் உதவவில்லையானால் அது எழுத்தாளனாக இருந்தாலுஞ் சரி ஆராய்ச்சி மேதையாக இருந்தாலுஞ் சரி அதுவே அவர்களுக்கு ஒரு தற்கொலை தர்மமாகும் என்றார்.

சிந்தனையில் மூழ்கிப்போய், தமிழகத்தைச் சுற்றிப் பார்த்த இந்த மாது, தேவதாசிகளைவிட, தொழு நோயாளிகள் மிகக் கேவலமாக நடத்தப்படுவதைக் கண்நோகக் கண்டார். தேவதாசிகள் வாழ்கிறபடி வாழ விரும்பாததால் துரத்தப்பட்டார்கள். ஆனால் இவர்களோ, வாழ்கிறபடி வாழ விரும்பினாலும் வாழாதே என்பது போல் துரத்தப் பட்டவர்கள். கணவன் மனைவியாலும், மனைவி கணவனாலும், பிள்ளைகள் பெற்றோராலும், பெற்றோர்கள் பிள்ளைகளாலும் துரத்தப்பட்டவர்கள்.

அன்று, அவர்களுக்காகக் கட்டப்பட்ட இந்த இல்லத்திற்கு இப்போது நினைவுச் சின்னமாக இருக்க

வேண்டிய இந்த மனிதாபிமானக் கட்டிடத்திற்கு இன்னும் வேலையிருப்பது மனிதாபிமானத்திற்கே ஒரு சாட்சி யாகவும், அதேசமயம் ஒரு சாவு மணியாகவும் தோன்றியது. இன்றும் இவர்கள் துரத்தப்படுகிறார்கள். இன்றும் இங்கே மனிதாபிமானம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இருநூறு பேர் இருக்கிறார்கள். உருக் குலைந்தாலும் உள்ளம் குறையாத வர்கள். சிலருக்கு உடம்புக்கும் பலருக்கு உள்ளத்திற்கும், மருந்தும் கருணையும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இங்கே ஒரு தொழிற்கூடம் இருக்கிறது. நாற்காலி, மேஜை கள் செய்யப்படுகின்றன. பெண்கள் பாய் நெய்கிறார்கள். பெட்டிகள் பின்னுகிறார்கள். இவர்களுக்காக, அரசாங் கமும் மான்யம் கொடுக்கிறது. நல்லவர்களும், கெட்டவர்களும் நன்கொடை கொடுக்கிறார்கள். இவை கடலில் கரைத்த காயக் கட்டிகள். வெறும் உப்பு. இந்த உப்புப் போடுவதற்கான உணவுப் பொருட்களுக்கும் மருந்துகளுக்கும் இந்த அம்மையாரின் தாய்நாட்டில் உள்ள ஒரு தர்ம ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

ஆறு மாதங்களுக்கு முன்னால், வெங்கடேசனால் இங்கு சேர்க்கப்பட்ட மணிமேகலை முதலில் பெட்டி முனைந்து பழகினாள். பிறகு தனது இயல்பான தாய்மை யாலும் இக்கட்டான சமயத்தில் சொன்ன உபாயங் களாலும் அந்த மூதாட்டியால் அடையாளம் காணப்பட்டு அவரது வாரிசுபோல் ஆகிவிட்டாள். இதனால் இவள் பெட்டி பின்னுவதை விடவில்லை. விற்பனைப் பொருட் களை தயாரிப்பதிலும், உணவுப் பொருட்களை வாங்கு வதிலும் கண்ணாகவும், காதாகவும் கையாகவும் இருந்து வருகிறாள்.

“முந்நூறு ரூபாய் துண்டு விழுதேம்மா” என்று அந்த மூதாட்டி சொன்னபோது, எதையோ சொல்லப்போன மணிமேகலை, குதிரை லாடம் போன்ற ஒலியைக் கேட்டு நிமிர்ந்து பிறகு “வாங்க” என்றாள் வாயார.

'சமூக சேவகிகள்' வந்தார்கள். உருக்குலைந்தோர் நிறைந்த அந்த இல்லத்திற்குள் லிப்ஸ்டிக்ஸ் உதட்டோடு, பெரிய காரோடு வந்தார்கள். குதிரைக் கொண்டைகள். ஹை ஹீல்கள். 'பேஷன் பிளம்ப்' பாலீஷ் செய்த நகங்கள். தொப்புளுக்குக் கீழே போன புடவைகள்... 'சேவையில்' ஈகோவை திருப்தி செய்யும் மை படர்ந்த கண்ணினர். பொய் நிறைந்த பேச்சினர்.

அறிமுகம் முடிந்ததும், மிஸ்ஸஸ் ராம்நாத் குழையக் குழையச் சிரித்துவிட்டு பின்னர் அழுவதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு "இந்த ஆர்பன்ட் டெஸ்டிடூட்ஸ்காக ஆப்பிள் கொண்டு வந்திருக்கோம். நானூறு ரூபாய் டொனேஷனும் கொடுக்கலாமுன்னு வந்திருக்கோம். ஏன் இவங்கள ஸொஸைட்டி பாய்காட் பண்ணுதுன்னு புரியலே" என்றாள்.

அந்த மூதாட்டி அவற்றை வாங்காமலே "வெரி குட்! எங் லேடீஸ், ஒங்க உதவிக்கு ரொம்ப நன்றி...! என்ன சாப்புடுறிங்க?" என்றார்.

"நோ தேங்ஸ் மேடம்."

"நோ நோ! எதாவது சாப்பிடணும்!"

"ஓகே! எதாவது ஜூஸ் இருந்தால்..."

"கொடுக்கிறேன்."

மணிமேகலையை அந்த மாது பார்த்தபோது அவள் அதற்குள்ளேயே உள்ளே போனாள். ஐந்து நிமிடத்தில் நான்கைந்து உருக்குலைந்த—அதே சமயம் சுகப்பட்ட—பெண்கள் ஆளுக்கொரு தட்டில் பழங்களையும், ஜூஸ் களையும் கொண்டு வந்தார்கள். அந்த 'தொண்டுக்' கிழவி விளக்கினாள்.

"இங்க எல்லாருக்கும் இவங்கதான் சமைக்கிறது. இவங்கதான் படைக்கிறது. அப்கோர்ஸ் இன்னும்

டேப்லெட்ஸ் சாப்புடுறாங்க. ஆனால் இவங்களால ஆபத்து கிடையாது. இந்த ஜூஸ்களைக்கூட இவர்கள்தான் பிழிந்தார்கள். பிளீஸ், டேக் தெம்."

சமூக சேவகிகள் திக்குமுக்காடிப் போனார்கள். ஒருத்தி அந்த வெள்ளிக்கிழமையில் 'சனிக்கிழமை விரதம்' என்றாள். இன்னொருத்தி 'கோல்ட் பிடிச்சிருக்கு.' என்றாள். மிஸ்ஸஸ் ராம்நாத்துக்கு ஜூஸ் அலர்ஜியாம். அவசரப்பட்டவர்கள் போல், "இந்தாங்க பணம். ரசீத அப்புறமா அனுப்பிடலாம். வி ஹேவ் சம் எங்கேஜ் மென்ட்" என்றாள் மிஸ்ஸஸ் டி. ஸூஸா.

ஒரு டம்ளரை எடுத்து ஜூஸைக் குடித்துக்கொண்டே "தேவைப்படும்போது வாங்கிக்கிறேன். தேங்யூ எங் லேடீஸ். குட் பை!" என்று சொல்லிவிட்டு இருக்கையை விட்டு எழுந்தார் அந்த மூதாட்டி. அவர்கள் எழுந்தார்கள். அவசர அவசரமாகக் காரில் ஏறிப் பறந்தார்கள். பணத்தை வாங்கிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் பத்திரிகை களில் தங்களின் போட்டோக்களுடன் செய்தி கொடுத்து விட்டு இப்போது அந்த செய்தியை நிறுத்துவதற்காக இப்போது நிற்காமலே ஓடினார்கள். 'திஸ் இஸ் எ வெரி பேட் இன்ஸ்டிடியூஷன். வி வில் நெவர் கம். கம் ஓட் மே...'

அந்த மூதாட்டி வியப்போடு பார்த்த மணிமேக லையை நோக்கி "முந்நூறு ரூபாய் துண்டு விழுதேன்னு சொல்லிட்டு நானூறு ரூபாயை ஏன் வாங்கலன்னு நினைக்கிறியா? இந்த யங் லேடீஸ் தாங்கள் 'சமூக சேவை' செய்யணும் என்கிறதுக்காகவே, எங்கயாவது குடிசைகளில் தீப்பிடிக்காதா யாராவது நடு ரோட்ல சாகமாட்டாங் களான்னு நினைக்கிற சேடீஸ்ட்ஸ். இவங்ககிட்ட பணம் வாங்குறது நாம இவங்களையே கெடுக்கிறது மாதிரி. டூ யூ அண்டர்ஸ்டாண்ட் மை டாட்டர்?"

"எஸ் மதர்!"

மணிமேகலைக்கு மனதார நிம்மதி ஏற்பட்டது. பேரானந்தப் பெருவாழ்வு கிட்டியதுபோல் வந்தது. உலக மக்கள் ஒவ்வொருவரும் நம் உடம்பின் உறுப்புக்களில் ஒன்று என்றும், நாம் அந்த உலக மக்களின் உறுப்புக்களில் ஒன்று என்றும் 'இரண்டறக்' கூட அல்ல, 'ஒன்றர' கலக்கும்போதும், நினைக்கும்போதும் ஏற்படும் பரமானந்தத்திற்கு இணை ஏது? ஈடேது?

என்றாலும் அவளுக்கு மகனின் நினைவு வராமல் இல்லை. அப்பாவின் ஞாபகம் போகவில்லை. அவ்வளவு ஏன்? மாமனாரின் நினைவோடு மிஸ்டர் ஜெயராஜின்மீது கூட நினைவு வந்தது. அவ்வப்போது வெங்கடேசனும், 'கூத்து' கோவிந்தனும் வந்து அவளுக்கு ஆறுதல் கூறு வார்கள். சில சமயம் தங்களின் பிரச்னைகளுக்கு ஆறுதல் தேடியும் அவர்கள் வந்தார்கள். 'கூத்து' கோவிந்தன் அங்கே கூத்து போடப் போவதாக வாக்களித்திருக்கிறான்.

ஒருநாள் மணிமேகலை மேஜை நாற்காலிகளை மதுராந்தகத்தில் உள்ள ஒரு பர்னிச்சர் கடைக்கு வண்டியில் அனுப்பிவிட்டு வண்டிக்காரருக்கு வாடகைப் பணம் கொடுத்துவிட்டு கைகளைத் துடைத்துக் கொண்டிருந்தபோது ரத்தினம் வந்தான். இப்போது பனியனுக்கு மேலே சட்டை போட்டிருந்தான்.

"வா அண்ணே! இவ்வளவு நாளும் ஏன் வரல? மெட்ராஸ்ல எதுவும் வேலையா?"

"மெட்ராஸ்ல வேலை இருந்து அங்க வந்தால்தான் இங்க வரணுமா? நிஜமாச் சொல்றேன். ரெண்டு மாசத்துக்கு முன்னாலக்கூட மெட்ராஸ் வந்திருந்தேன். ஆனால் இங்க வரல. ஏன் தெரியுமா? ஏதோ ஒரு காரியத்துக்கு போற இடத்துல இருக்கிற கோவிலுக்கு போறது புண்ணியமில்லியாம். அந்த கோவிலுக்குன்னே

தனியாப் போவணுமாம். இதுமாதிரி என் தங்கச்சிய சிரமப்பட்டு பார்க்கணுமுன்னு நினைச்சே இதுவரைக்கும் வரல. ஆனால் இப்ப ஒனக்காகவே ரயிலேறி ஒனக்காகவே ஒரு பொண்ண கிண்டல் பண்ணுன ஒரு பயல உதச்சிட்டு இந்த பாழாப் போற பஸ்ல ஏறி வாரேன். இது பஸ்ஸா? சரியான நொண்டிப் பசு. ஒங்க வீட்ல குட்டி போட்டுட்டு, அப்புறம் எழுந்திருக்க முடியாமல் கிடந்தது பாரு, மயிலப் பசு, அதுமாதிரி ஒரு பஸ் நின்னு நின்னு ஒரு இடத்துல ஒரேயடியாய் நின்னே போச்சு. நான் நடந்தே வாரேன். நான் சொல்றது கொஞ்சம் பைத்தியக்காரத்தனந்தான். ஆனால் ஏதோ ஒரு வகையான பைத்தியம் இல்லாம உலகத்துல எவனுமே கிடையாது."

இருவரும் வரவேற்பு அறைக்கு வந்தார்கள். 'அம்மாவை' அறிமுகப்படுத்தலாம் என்று போனாள். அந்த மூதாட்டி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். சத்தம் போடாமலே ரத்தினத்தை வெளியே கூட்டிக்கொண்டு வந்தாள்.

"அப்பா எப்படி இருக்காரு அண்ணே?"

"யாரோட அப்பா?"

"என்னோட அப்பா! ஒன்னோட சித்தப்பா!"

"என்னம்மா நீ? நாலு மாதத்துக்கு முன்னால நடந்து போன சங்கதிய இப்போ கேக்குற? வெங்கடேசன் சொல்லலியா? உடனே இந்த கூத்துப் பயகிட்டகூட சொல்லி யனுப்புனேன். சொல்லலியா? ஒரு வேள ஒன் மனசக் கஷ்டப்படுத்தாண்டாமுன்னு சொல்லல போலுக்கு."

மணிமேகலை அவனிடம் கேட்கவில்லை. செத்துட் டார் என்கிற வார்த்தையை தன் காதுபடக் கேட்க வேண்டாம் என்று நினைத்தவளாய் தலையை இரண்டு தடவை ஆட்டிக் கொண்டாள். உள்ளத்தில் ஏதோ ஒரு இடம் சூன்யமாக இருந்தது. அதேசமயம் அப்பாவின்

வாதை உயிரோடு போய்விட்டது. என்ற லேசான நிம்மதியும் ஏற்பட்டது.

ரத்தினம் அனுதாபம் சொட்டச் சொட்டப் பேசினான்.

“கலங்காதம்மா. ஒனக்கே தெரியும், ஒங்க அப்பாவும் நானும் கூலிக்காக வயலுல ஒருவர ஒருவர் முறைச் சிருக்கோம். ஆனால் அந்த பெரிய மனுஷன் என்ன செய்தார் தெரியுமாம்மா? ராமபத்ரன் தேவடியா மவன், ஒனக்கு அது வந்துட்டுன்னு சொன்ன மறுநாளே இவரு தூத்துக்குடில வக்கீலப் பாத்து உயில் எழுதி வச்சிட்டாரு. சொத்துல ஒனக்கு உரிம உண்டுன்னாலும், அவரு உயிலுல தெளிவா எழுதிட்டாரு. மாசுலாங்குளத்துப் பாசன வயலும், பேயான் தோட்டமும் ஒனக்கு. ஒரு லட்சம் ரூபாய்க்கி மேல பெறும் உயிலை என்கிட்டதான் தந்தாரு. ‘நான் செத்த பிறவு ஒன் உயிரக் கொடுத்தாவது இந்த உயில நிறைவேத்து’ன்னு சொன்னாரு. அவரு செத்ததும் ஒன்னோட அண்ணன் தம்பிங்க என்கிட்ட ஆள் அனுப்பி ஐயாயிரம் பத்தாயிரம் தாரதாயும் உயில கிழிக்கும்படியும் சொன்னாங்க. நான் காலுல கிடக்குறத கழத்துனேன். உயிலப்பத்தி ஏன் அப்போ ஒன்கிட்ட சொல்லல தெரியுமா? என்னதான் புருஷன எதிர்த்து போடான்னு நீ சொல்லணுமுன்னு நான் ஒன்கிட்டச் சொன்னாலும் அவனோட நீ வாழணுங்ற ஒரு ஆசை. உயிலைப்பத்தி சொன்னால் ஒருவேள புருஷங்கிட்ட தைரியமாய் கோவிச்சு காரியத்த கெடுத்துப்பிடுவியோ என்கிற பயம். உயிலுல ஒன்னைப்பத்தி எழுதியிருக்கிற இடத்தைப் படிக்கேன் கேளு! ‘பிறந்தபோது மட்டும் மகளா இருந்து அப்புறம் தாயா மாறிப்போன என்னோட செல்லமகள், என் மூச்சுக்கு காற்றாயும், உடலுக்கு உயிராயும் ஆகிப் போன என் தங்கமகள் நல்லதங்காள் மாதுரி ஆகிக்கிட்டு

வாராள். அவளை இந்தக் கோலத்துல கேள்விப்பட்ட எனக்கு இன்னும் சாவு வரலியே. கை காலு முடங்கலியே. மேற்கொண்டு பயங்கரமானத கேட்க முடியாதபடி காது முடங்கலியே. அப்பப்போ வார ரத்தக் கொதிப்பு இப்போ வரலியே. அவள பாக்க முடியாதபடி கண்ணு கெடலியே!"

மணிமேகலையின் விம்மல் ரத்தினத்தை நிறுத்தியது.

"அப்பா! என் அப்பா! என் கடவுளே! என் கண் கண்ட தெய்வமே! நான் ஒங்க கால முடக்கிட்டேனே. கண்ணைக் குத்திட்டேனே!"

ரத்தினம் தன்னையே நொந்துகொண்டான். தன் கண்களையும் துடைத்துக்கொண்டான். சிறிதுநேரம் பேசிவிட்டுப் புறப்பட்டான்.

"இந்தாம்மா உயிலு."

"என் உயிரே போயிட்டு. இது எதுக்கு? அவங்ககிட்ட காட்டி நீயே கிழிச்சிப் போட்டுடு."

"சரி, ஒன்கிட்ட கொடுத்தால் நீ கிழிச்சிப் போடுவ. என்கிட்ட இருக்கட்டும். அப்புறம் அந்த ஜெயராஜ் பய மேல வழக்கு போடணும். செறுக்கி மவனை கோர்ட்ல நிக்க வச்சி, நானே அவனை செருப்பால அடிக்கப் போறேன். அவன் சொத்துல நீ எப்போ பாகம் கேக்கப் போறியோ, அப்பதான் நான் இனிமே இங்க வருவேன்."

ரத்தினம் புறப்பட்டான். போனவன் திரும்பி வந்தான்.

"மணிமேகலை! முன்னால அவன்கிட்ட நீ வாழணு முன்னு நினைச்சும், அடாபிடியாப் பேசுனது மாதிரி இப்பமும் ஒப்புக்குச் சொல்றேன்னு நினைக்காத. நிச்சயமா இல்ல. ஒண்ணு மட்டும் ஒப்புக்குச் சொன்னேன். அதுதான் வழக்குப் போடுமுன்ன, இங்க வரமாட்டேன்னு சொன்னேன், பாரு அதுதான் புளுகு. அண்டப் புளுகு."

ரத்தினம் போய்விட்டான். அவனையே பார்த்து நின்ற மணிமேகலை, பிறகு அவனுடன் போய், பஸ் வருவது வரைக்கும் அருகிலேயே நின்று வழியனுப்பி வைத்தாள். பஸ் போன பிறகுதான், அண்ணன் தம்பிகளைப் பற்றி கேட்காமல் போய்விட்டதை உணர்ந்தாள். திடீரென்று தன் பெயரை அழைக்கும் சத்தங்கேட்டு, நடந்தாள். நாளைக்கு அந்த மூதாட்டி தன் தமக்கையைப் பார்ப்பதற்காக சொந்த நாட்டுக்குப் போகிறார். ஒரு மாதத்தில் வந்துவிடுவார் என்றாலும் அவளுக்கு என்னமோ போலிருந்தது. அதுவும் அப்பாவின் இந்த மரணச் செய்தியைக் கேட்ட சூழ்நிலையில்...

## 18

அவள் உள்ளுணர்வு உணர்த்தியது போலவே ஒன்றின் முடிவு இன்னொன்றின் துவக்கமாகி விட்டது. கணவனிடம் இருந்து பிறந்தகம் செல்லும் மனைவி பிரியாவிடை பெறுவதுபோல, அந்த இல்லத்தில் இருந்து கண்ணீர், கழுத்து மாலையாகும்படி விடைபெற்றுச் சென்ற அந்த மூதாட்டி பிறந்த நாட்டில் தமக்கையைப் பார்த்துவிட்டு வருவதற்காகப் போனவள் அக்காள் இறக்குமுன்பே இறந்துவிட்டாள். முதுமையின் கோளாறா? முடியாத பணிக்கு வாரிசு கிடைத்துவிட்ட திருப்தியில் ஓயாது உழைத்த ரத்த நாளங்கள் ஓய்வெடுக்க நினைத்ததோ? தெரியவில்லை!

அந்த விடுதியும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களும், தத்தம் வீடுகளிலேயே ஏதோ ஒன்று நடந்துவிட்ட திகைப்பில் சோகத்தில் ஆழ்ந்து போயின. "கலங்காதிங்க! இதுதான் அந்த நாட்டுக்கு நான் போகிற கடைசித் தடவை!" என்று சொல்லிவிட்டுப் போனவள் முதல்

தடவையாகத் திரும்பாமல், முதல் தடவையாகக் கொடுத்த வாக்கை நிறைவேற்றாதவள்போல் போய்விட்டாள்.

ஆல்பர்ட் ஸ்விட்சரின் படத்துக்கருகே அந்தத் தாயின் படத்தை இணையாக மாட்டிய மணிமேகலை யாரும் எதிர்க்காமலே பொறுப்புகளை மேற்கொண்டாள். சொல்லப் போனால் அவள் பழையபடியும் பெட்டி பின்ன நினைத்தாள். ஆனால் பெட்டிப் பாம்புகளாய் அங்கிருந்தவர்கள் செய்வதறியாது திகைத்தபோது வெங்கடேசன் கொடுத்த உற்சாகத்தில், அவள் உற்சாக மின்றியே பணியாற்றத் துவங்கினாள். இப்போதுதான் அப்பா செத்திருக்கிறார் அதுக்குள்ளேயே அம்மா சாவது என்றால்...?

'காபந்து' சர்க்கார் மாதிரி அவள் காரியமாற்றிக் கொண்டிருந்தபோது அந்த மூதாட்டியின் தார்மிகப் பார்வைக்கு அஞ்சி பொருளுதவி செய்த வெளிநாட்டு நிறுவனம், அங்கே அரசியல் கொந்தளிப்பில் சிக்குண்டு பணவுதவியை பட்டென்று நிறுத்தியது.

மணிமேகலை செய்வதறியாது தடுமாறினாள். அந்தச் சமயத்தில் அவளைப் பார்க்க வந்திருந்த வெங்கடேசன், "இனிமேல் வெளிநாட்டில் கையேந்தாமல் இதை நடத்து வதற்காக நீ பெருமைப்பட வேண்டும்" என்று சொன்ன போது, அவள் பெருமிதப்பட்டாள். விரைவில் அந்த பெரு மிதமும் யதார்த்தத்தில் பட்டு, முட்டி மோதிச் சிதறியது.

அரிசி ஸ்டாக் தீர்ந்து போயிற்று. மரச்சாமான்களை வாங்கிய பேர்வழிகள்—அந்தக் கடன்காரப் பாவிகள்—அந்த மூதாட்டியின் ஈமச்செலவை தன் வீடுகளில் செய்து விட்டதுபோல் கை விரித்தார்கள். மூலப்பொருட்களை கடனுக்குக் கொடுத்து வந்த கம்பெனிகள் 'ரிக்ரட்' செய்தன. அந்த அம்மாவுடன் போட்டோ எடுத்துக் கொள்வதற்காக நன்கொடை கொடுத்தவர்கள் நல்லவர்கள். ஆகையால் கொடுத்ததைத் திருப்பிக் கேட்கவில்லை. நோயாளிகளுக்கு

மாத்திரைகள் குறைந்துகொண்டு வந்தன. கம்பவுண்டராக வந்து, இப்போது எத்தனையோ எம்.பி.பி.எஸ்களை உள்ளடக்கிய மருத்துவருக்கு மாதச் சம்பளம் கொடுக்க முடியவில்லை. பிள்ளை குட்டிக்காரரான அவர் வாய் திறந்து கேட்கவில்லையானாலும், அவரது காய்ந்த வயிறு கதையைச் சொன்னது. மணிமேகலை கையில் இருந்த தங்கக் காப்பை விற்றாள். சேமித்து வைத்திருந்த ரூபாயைச் செலவிட்டாள். இருநூறு ஜீவன்களுக்கும் எப்படிப் போதும்?

ஒருநாள் மத்தியானம் எல்லோருமே அரைபட்டினி. தூக்கம் வரமுடியாத அளவிற்கு வயிற்றை வலிக்கும் பசி. இரவில் தண்ணீரைத் தவிர எதுவும் இல்லை. மணிமேகலை அலுவலக அறையில், சுவரை அலங்கரித்த ஸ்விட்சர்—முத்துலட்சுமி ரெட்டி—அந்த மூதாட்டி ஆகிய அந்த சேவையின் திரிமூர்த்திகளை கண்கலங்கப் பார்த்தாள். அவள் ஏதாவது ஒரு வழிகாட்டுவாள் என்பது போலவும் அதற்கு அந்த திரிமூர்த்திகள் வழி சொல்வார்கள் என்பது போலவும் இரண்டு பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டார்கள்.

செய்வதறியாது, கழுத்தைத் தடவிய மணிமேகலை, தன் ஏழு பவுன் தங்கத் தாலியைப் பிடித்தாள். சந்தோஷம் தாங்காமல் தரையை மிதித்தாள். இதை விற்று இன்னும் ஒரு மாதத்தை எப்படியும் ஓட்டிவிடலாம். கூடவே இன்னொரு யோசனை.

இந்தத் தாலியைக் கட்டியவனே தனக்கு இல்லாமல் போனபோது ஏழு பவுன் தாலிக்காக அவனிடம் விட்டு வைத்திருந்த அறுபது பவுன் நகை ஏன் இருக்க வேண்டும்? அதோடு அவனிடம் ஜீவனாம்சம் ஏன் கேட்கக்கூடாது? சகோதரர்கள் அனுபவிக்கும் நிலத்தை ஏன் பிரிக்கக் கூடாது? எதற்காக, விட்டுப்போன உறவை ஒரேயடியாக

விட்டுவிடக் கூடாது? அவர்களாவது நிம்மதியாக இருக்க வேண்டும் என்று நினைத்து ஒன்றையும் நினைக்காமல் இருந்தது சரிதான். ஆனால் இங்கே இந்த அனாதைகள், வயிற்றுக்குக் கிடைக்காமல் கையது கொண்டு மெய்யது பொத்தி, அவள் எப்படியும் தங்களைக் கைவிட மாட்டாள் என்று நம்பும்போது நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா?

ஒன்று இந்த இல்லத்தை சிலர் சொல்வதுபோல் இழுத்து மூட வேண்டும். அல்லது தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சொத்தைப் பெற்று இதன் கதவு களை—இந்த பேரின்பப் பெரு உறவுக் கதவுகளை அதியமானின் அரண்மனையைப் பற்றி ஔவையார் சொன்னதுபோல, 'அடையா நெடுங்கதவாய்' ஆக்க வேண்டும். ஜன சமுத்திரத்தில் தன்னை இணைத்துக் கொண்ட ஒருத்தி உறவுக் கிணற்றை மூடுவதில் தவறில்லை. விலக்கியவர்களிடமிருந்து சொத்தை விடுவித்து இந்த இல்லத்தின் ஒளியைப் பராமரித்தாக வேண்டும். இங்கே ரத்த பாசத்திற்கு இடமில்லை. ரத்தம் நீரைவிட அழுத்த மானதாக இருக்கலாம். ஆனால் அந்த ரத்தம் சேவை யென்று வரும்போது, சீழாகவும் மாறலாம். பொதுநலத்தில் இவர்களின் விருப்பங்கள்தான் முக்கியம். இவர்களின் நம்பிக்கைதான் முக்கியம். 'இவளா செய்தாள்' என்று உறவு நம்பிக்கையிழந்து போனதுபோல் ஓலமிட்டால் ஓல மிடட்டும். அவள் அனுபவிக்காத ஓலமா?

மணிமேகலை திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்தாள். அப்போது 'அம்மா அரிசிக்கு' என்று ஒரு 'இன்மேட்' கேட்டபோது அவள் ஒரு மஞ்சள் கயிற்றைப் போட்டுக்கொண்டு, தாலிச்சரட்டைக் கொடுத்து மதுராந்தக சேட்டிடம் விற்று அங்கேயே நாலு அரிசி மூட்டைகளை வாங்கி வரச் சொன்னாள். மாத்திரைகள், இன்னும் ஒருவாரம் தாளும். மருத்துவருக்கு மூன்று மாத பாக்கியில் பாதியாவது கொடுத்துவிடலாம்.

அசைக்க முடியாத முடிவுக்கு வந்துவிட்டதால் மணிமேகலை அசைந்தாலும் கலையாத தூக்கத்தில் சங்கமமானாள். மறுநாள் வெங்கடேசன் அரை மூட்டை காய்கறிகளோடு வந்தான். 'கூத்து' கோவிந்தன், நான்குபடி உப்பு வாங்கிக்கொண்டு வந்தான். அதுவும் தீர்ந்து போயிருந்தது.

அவள் முடிவைத் தெரிவித்ததும் சற்று அயர்ந்துபோன வெங்கடேசனிடம் "அன்பு ஒரு சக்தின்னு சொன்னே மில்லா, இப்போ அந்த அன்பின் சக்தி நான். இந்த சக்தி பத்ரகாளியாகவும் மாறும் என்பதைக் காட்டப் போகி றேன். என்னை ஆசீர்வதியுங்கள்" என்று சொன்னபோது அவனால் 'சிவனே' என்று இருக்க முடியவில்லை. அந்த சக்தியின் பெயரில் தன் ஸீனியர் மூலமாக, மிஸ்டர் ஜெயராஜுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பினான். அறுபது பவுன் நகை வேண்டும். ஜீவனாம்சம் வந்தாக வேண்டும். நோட்டீஸிற்கு எதிர் நோட்டீஸ் வரவில்லை. இரண்டாவது நோட்டீஸ் அனுப்பினால், 'விலாசதார் வாங்க மறுக்கிறார்' என்ற தபால் அலுவலகக் குறிப்புடன் ரிஜிஸ்டர் நோட்டீஸ் திரும்பி வந்தது. இனிமேல் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும். அது ஆயுள் வரைக்கும் நீடிக்கும். என்ன செய்யலாம்?

இந்தச் சந்தர்ப்பத்தில், 'உடனே வரவும்' என்ற கடிதத்தைப் படித்தவுடனேயே ரத்தினம் வந்துவிட்டான். மணிமேகலைக்கும், வெங்கடேசனுக்கும் உபதேசத்தான்.

"இதுக்குப் போயா கவலப்படுறிய? நம்மள மாதுரி ஏழைங்க கோர்ட்டுக்கு அபராதம் கட்டப் போகலாமே தவிர, நியாயம் கேட்கப் போகக்கூடாது. அடிக்கிறதுல அடிச்சால் கிழியுறதுல கிழியட்டும். நாளைக்கே ஜெயராஜ் வீட்டுக்குப் போவோம். அவன் தலையைப் பிடிச்சால் முடியைப் பிடிப்போம். முடியைப் பிடிச்சால் தலையைப்

பிடிப்போம். நானும் பழைய செருப்பத்தான் போட்டிருக்கேன்.”

அந்த இல்லத்தில் ஒரு காரும் இருந்தது.

வெங்கடேசனும், ரத்தினமும் பின்னால் ஏறிக்கொண்டார்கள். மணிமேகலை வண்டியை ஓட்டினாள். நல்ல வேளையாக ஜெயராஜைக் கட்டியதில் இந்த ‘டிரைவிங்’ நன்மையாவது கிடைத்தது. இல்லையானால், டிரைவருக்கு சம்பளம் கொடுக்க வேண்டியதாயிருக்கும். கார், மதுராந்தகம் வந்தபோது அங்கே மணிமேகலையைப் பார்ப்பதற்காக, சென்னையில் இருந்து திண்டிவனம் பஸ்ஸில் ஏறி அந்த இல்லம் வழியாக ஏதாவது லாரி போகுமா என்று தேடிக் கொண்டிருந்த ‘கூத்து’, கோவிந்தன், வண்டியைப் பார்த்ததும் கையாட்டி காலாட்டி அதை நிறுத்தி ஏறிக் கொண்ட பிறகு சிரித்துக்கொண்டே ‘ஊய் ஊய்’ என்று விசிலடித்தான். கார் புறப்பட்டது.

அரக்கோணத்திற்குள் வந்தவுடனேயே அவளால் காரை ஓட்ட முடியவில்லை. கைகள் ஆடின. ‘என் பிள்ள எப்படி இருக்கானோ? எப்படி இருக்கானோ?’

எதிரே வழக்கத்திற்கு மாறாக இடது பக்கமாகவே வந்த லாரியில் மோதாமல், சைக்கிள்களை அடிக்காமல், அவள் எப்படியோ—தெய்வாதீனம் என்று சொல்லலாம். தன் மாஜி வீட்டின் முன்னால் நிறுத்தினாள். பையனைப் பார்க்கப் போகிறோம் என்ற இன்பப் பரவசத்துள் ஆழ்ந்து அவள் காரில் இருந்து இறங்கினாள்.

வீடு அப்படியேதான் இருந்தது. மாமனார், அதே சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். இப்போது சற்று அதிகமாகச் சாய்ந்ததுபோல் இருந்தது. ஜெயராஜும், சங்கரனும் வீட்டில்தான் இருந்தார்கள். இந்திராவைக்

காணவில்லை. வசந்தி வாயும் வயிறுமாக இருந்தாள். சங்கரன் மனைவியையும், பிள்ளைகளையும் காணவில்லை.

படியேறிய மணிமேகலை மாமனார் காலைத் தொட்டுக் கும்பிட்டாள். அந்தக் கிழவர், அவளை அடையாளம் கண்டுகொண்டவர் போல் தள்ளாடி எழுந்து, அவளை அணைத்துக் கொண்டார். 'பையனை எங்கே மாமா?' என்று அவள் கேட்கவில்லை. எங்கே அவர் அவன் இங்கே இல்லையென்று பதிலளித்து விடுவாரோ என்று பயந்தாள். அந்தப் பதில் உண்மையாகவே இருந் தாலும், அவளால்—அவள் உயிரால்—தாங்கிக்கொள்ள முடியாது.

இதற்குள் வீட்டில் இருந்தவர்கள் எல்லோருமே அங்கே வியப்போடும் பயத்தோடும் வந்துவிட்டார்கள். ரத்தினம் கோஷ்டி அவர்கள் சொல்லும் முன்னாலேயே நாற்காலி களை அலங்கரித்தார்கள். மணிமேகலை மாமனாரைப் பார்த்தாள். அவர் முன்னால் வந்த விஷயத்தைப் பேசத் தயங்கினாள். தாட்சண்யம் என்று ஒன்று இருக்கிறதே. இது தாட்சண்யம் பார்க்கிற சமயம் இல்லை; தாட்சண்யம் பார்க்கவும் கூடாது. தாட்சண்யம் பார்த்துப் பார்த்து குட்டிச்சுவரான நாடுகள் சில. வீடுகள் பல. இதனால்தான் 'நரகத்திற்கான வழியும் சில சமயம் நல்லெண்ணங்களால் அமைக்கப்படுகிறது' என்று ஒரு அறிஞர் சொன்னார். அர்ச்சுனன் தாட்சண்யம் பார்த்தால் பாகம் கிடைத்திருக் காது. தர்மன் தாட்சண்யம் பார்த்த போது ஒரு குடிசைகூட கொடுக்கப்படவில்லை. உரிமையை எடுத்துக் கொள்ள வேண்டும்; யாரும் தரமாட்டார்கள்.

மணிமேகலை எல்லோரையும் பொதுப்படையாகப் பார்த்துவிட்டு ஜெயராஜை குறிப்பாகப் பார்த்தாள். அவன் அசந்துவிட்டது, அவன் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது போல் தோன்றியது. இவள் புதிய மணிமேகலை. அந்த

கெஞ்சும் கண்கள் போய், மிஞ்சும் கண்கள் வந்துவிட்டன. கைகள் ஒன்றை ஒன்று நெறிக்காமல், அவனை நெறிக்கப் போவதுபோல் குவிந்தும் விரல்கள் கூர்மைப்பட்டும் காட்சியளித்தன. அவன் பயந்துவிட்டான். அதனால் பலமாகக் கத்துவது என்று தீர்மானித்தான். நழுவப்போன சங்கரனை, ரத்தினம் தன் விழிகளை உருட்டியே உள்ளே விரட்டினான்.

மணிமேகலை ஆரம்பித்தாள்.

"என் பையன் எங்கே? மிஸ்டர் ஜெயராஜ், என் பையன் எங்கே?"

ஜெயராஜ் ஒரேயடியாக அதிர்ந்து போனான். மிஸ்டரா? தாலி கட்டிய மனைவி பேசுகிற வார்த்தையா? சுடச்சுட பதில் கொடுக்க வேண்டாமா?

"என் பையன் எங்க இருந்தால் ஒனக்கென்ன?"

"ஒங்க பையன்தான். எங்கேயும் இருக்கட்டும். ஆனால் எங்கே இருக்கிறான் என்கிறதை தெரிஞ்சுக்க எனக்கு உரிமை உண்டு."

மாமியார்க்காரி மறுமொழி சொன்னாள்:

"ஒன் பிள்ளய கடிச்சித் தின்னுப்புடலம்மா. சோளிங் கர்ல கான்வெண்டோ... கருவண்டோ... அதுலதான் சேர்த்திருக்கு. நல்லாத்தான் இருக்கான். நாளைக்கு வருவான். வேணுமுன்னால் பார்த்துட்டுப் போ."

"கவலப்படாதிங்க அத்தே! நான் போகத்தான் போறேன்!"

மணிமேகலையின் மனம் இறுகியது. தன் பிள்ளையை பார்க்க முடியாமல் போய்விட்டதில் ஏமாந்த தாய்மையின் சக்தி, இப்போது கொஞ்ச நஞ்சமிருந்த தாட்சண்யத்தையும் அழித்துக்கொண்டு ஒரு கோப சக்தியாக மாறியது.

"மிஸ்டர் ஜெயராஜ்...! நான் அனுப்புன நோட்டீஸ ஏன் வாங்கல?" ஜெயராஜுக்கும் பதில் பேசத் தெரிந்தது. ராமபத்திரனின் மாப்பிள்ளை அல்லவா?

"சட்டப்படி நீ அனுப்புன நோட்டீஸ நான் வாங்க மறுத்துட்டேன். இனிமேல் நீ சட்டப்படி என்ன செய்யணுமோ அதைச் செய்."

வெங்கடேசன் இடைமறித்தான்:

"மிஸ்டர் ஜெயராஜ்! தபால்காரர் கொடுக்கிற எதையும் அது ஒங்க பெயர்ல வாரது வரைக்கும் வாங்க முடியா துன்னு சொல்றது ஒரு குற்றம். இனிமேல் வருகிற தபால் களை போஸ்ட் ஆபிஸில் போயே வாங்க வேண்டிய திருக்கும். தபால்காரர் இனிமேல் இந்த வீட்டுக்கு வர மாட்டார். இனிமேல் தபால் உங்களுக்கு வராது. நீங்க கேர் ஆப் போஸ்ட் ஆபீஸ்—சீக்கிரம் கேர் ஆப் பிளாட் பாரமா ஆகப்போறிங்க."

"நீங்க யாரு?"

"ஐ அம் லாயர் வெங்கடேசன். இவர் என் கட்சிக் காரர்." மணிமேகலை தன் 'வக்கீலை' கையாட்டித் தடுத்தாள்.

"என் அறுபது பவுன் நகையை தரப்போறிங்களா இல்லியா...? ஏன் பேசமாட்டக்கிங்க? நான் வேண்டாத வளாய் ஆனபிறகு என் நகை எதுக்கு? என்னை விட்டுட்டு என் நகைகளை வச்சிருக்கது ஒங்களுக்கு வெட்கங்கெட்ட செயலாய் தெரியல?"

"நீதான் வெட்கங்கெட்டு..."

'கூத்து' கோவிந்தன் குதித்தான்.

"யோவ்! வார்த்தய அனாவசியமாய் விடாத. அப்புறம் பழையபடி பேசுறதுக்கு பல்லு ஒண்ணுகூட இருக்காது.

ஒப்பன உதைக்கிற பயலே. வெட்கங்கெட்டுப் போனது நீயா என் தங்கச்சியாடா? அவளைத் துரத்திட்டு அவளோட நகை நட்டுங்கள வச்சிருக்கதை விட நீ தூக்குப் போட்டுச் சாவலாம். யாரப் பாத்துடா...?"

மணிமேகலை தான் ஆடவில்லையானாலும் அவள் தாலி ஆடியதுபோல்,

"அண்ணே! அவர் சட்டப்படி இன்னும் என் கணவர். இனிமேல்தான் டைவர்ஸ் செய்யணும். அதுவரைக்கும் சும்மா இருங்க. ஏங்க ஒங்களத்தான்! என் நகைகள இப்போ தரப்போறிங்களா இல்லியா?" என்றாள்.

இந்த அமளியில் சங்கரன் திருட்டுத்தனமாக டெலிபோன் பக்கம் போனான். இதைப் பார்த்த ரத்தினம் "டெலிபோனை கீழே வைக்கிறியா இல்ல அந்த டெலி போன் குமிழிய வச்சே ஒன் குடல குத்தி எடுக்கணுமா? அதை வைடா படுவா!" என்றான்.

வெங்கடேசன் அமைதியாகப் பேசினான்.

"நீங்க போலீஸுக்குப் போன் பண்ணணுமுன்னால் பண்ணுங்க. போலீஸ் வரட்டும். மனைவி இருக்கையில் அவள் சம்மதம் இல்லாமல் இன்னொருத்தியக் கல்யாணம் பண்றது ஒரு கிரிமினல் குற்றம். நான் பேய்லபிள் அபன்ஸ். அண்டர்ஸ்டாண்ட்! இவருக்கு ஏழு வருஷம் வாங்கிக் கொடுக்காட்டால் நான் வக்கீல் திருமலாச்சாரியோட ஜுனியர் இல்ல; போன் பண்ணுங்க ஸார்!"

மணிமேகலை மீண்டும் பேசினாள்.

"நகையைத் தரப்போறீங்களா இல்லியா? சும்மாச் சொல்லுங்க! அறுபது பவுனையும் அடகு வச்சிருந்தாலும் பரவாயில்ல. தர்மர் மாதிரி டயம் கொடுக்கிறேன். சொல்லுங்க... மானம், வெட்கம் மனுஷனுக்கு இருக்கணும்.

ஏன் யோசிக்கிங்க? ஓஹோ! நகையை என் கையில் கொடுத்தால் என் கையில இருக்கிற நோய் தொத்திடும்னு நினைக்கிங்களோ? பரவாயில்ல! கையில உறை போட்டுக்கிறேன். எனக்கு இப்போ பதில் தெரிஞ்சாகணும்."

வாயும் வயிறுமாக இருந்த வசந்தி உள்ளே இருந்த படியே முணுமுணுத்தாள்.

"பையன் எங்க கிட்டதானே இருக்கான். அவனுக்கு வேண்டாமா?" 'கூத்து' கோவிந்தனால் தாங்க முடியவில்லை.

"வாம்மா ராசாத்தி! நான் மூளியலங்காரி மூதேவி சண்டாளியாய், அதாவது நல்லதங்காளோட அண்ணியா நடிக்க ஆள் கிடைக்காமல் அவஸ்தப்படுறேன். வாரியாம்மா! சீ! நீயில்லாம் ஒரு பொண்ணா? இருக்க இடம் கொடுத்த தங்கச்சிகிட்ட படுக்க இடத்த பறிச்ச முண்ட! ஒன்னை மாதுரி பொண்ணுங்க இருக்கதனால தான் நானே நாடகத்துல பெண் வேஷம் போட்டுக்கிறேன். பொண்ணு என்கிற வார்த்தைக்கே தகுதியில்லாத அரக்கி."

ஜெயராஜ் மணிமேகலை தனியாக வந்திருந்தால் இந்நேரம் தலைமுடியைப் பிடித்திழுத்து உதைத்திருப்பான். வசந்தியும் அவனுக்கு ஒத்தாசை செய்திருப்பாள். ஆனால்...

மணிமேகலைக்கே 'கூத்து' கோவிந்தன்மீது கோபம் ஏற்பட்டது.

"நமக்கு யாரையும்—அவங்க எவ்வளவு பெரிய பாவியாய் இருந்தாலும்—இழிவுபடுத்துறதுக்கு உரிமை கிடையாது. இதுதான் நான் 'அம்மா'கிட்ட கத்துக்கிட்ட பாடம். கோவிந்தண்ணே! நீ இனிமேல் வாயைத் திறக்கக் கூடாது. வசந்தி! மன்னிச்சிடும்மா. மிஸ்டர் ஜெயராஜ்! நான் கேட்ட கேள்விக்கு நீங்க ரெண்டுல ஒண்ணு பதிலாய் சொல்லியிருந்தால் இந்த ரகளையே வந்திருக்காது.

இன்னொண்ணையும் மறந்துட்டேன். எங்கப்பா கொடுத்த வரதட்சணை பணமும் வந்தாகணும். வாங்காமல் விடமாட்டேன்."

ஜெயராஜ் யோசித்தான். 'ஐடியா' கேட்க மாமனர் ராமபத்திரன் இல்லை. அப்பாகிட்ட 'ஐடியாவே' இல்லை. ஆகையால் 'தராட்டால்...' என்று சன்னமாகச் சொல்லி சொன்னதை விழுங்கி, விழுங்கியதைத் திருப்பிச் சொன்னான்.

ரத்தனம் முழங்கினான்:

"இந்தா பாருங்க ஸார்! நான் சொல்றத நல்லாக் கேளுங்க. எங்க வக்கீல் கிரிமினல் கேஸ் போடுவார்!"

வெங்கடேசன் இடைமறித்தான்.

"நோ நோ! கேஸுக்கு முன்னால இந்த பேக்டரிய முடக்கி 'ரிட்' வாங்குவேன். ஏன்னா இதனோட வளர்ச்சி யில என் கட்சிக்காரியோட நகைகள் அடமானமாயிருக்கு. என்கிட்ட எவிடென்ஸ் இருக்கு. நாளைக்கு யாரும் பேக்டரிக்குள்ள போக முடியாது. சும்மா ஏதோ போனால் போவுதுன்னு பார்த்தால்..."

ரத்தினம் தன் பேச்சை தடைபட்ட இடத்தில் இருந்து துவக்கினான்:

"அது அவரோட வழி. நான் என்ன செய்யப் போறேன் தெரியுமா? நாளைக்கே தெருவுல மைக்கை வச்சிக்கிட்டு என் தங்கச்சிக்கு ஏற்பட்ட அவமானத்தை தெருத் தெருவாச் சொல்லப் போறேன். என் தங்கச்சி ஒங்க தொழிற்சாலை முன்னால் சாகும்வரை அல்லது சொத்தும் நகையும் சரியாய் கிடைக்கும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போறாள். ஒங்க தொழிலாளிங்ககிட்ட இவள் கதையை பாட்டாய் சொல்லப் போறான். சும்மா வெறுங் கோர்ட்டு, வெறும் வழக்குன்னு போக நாங்க

பைத்தியக்காரங்க இல்ல. சாம, பேத, தான, தண்டம். தண்டம் என்கிறது கொலை."

மணிமேகலை கர்ஜித்தாள்.

"நான் மட்டும் தனியா உண்ணாவிரதம் இருக்கப் போறதில்ல. பேப்பர்ல படிச்சிருப்பிங்களே அன்னை மார்க்கரெட் செத்துப் போனதாய்! அவரோட இடத்துல அந்த நிவாரண இல்லத்தை பரதன் ராமனோட பாது கையை வைத்து ஆண்டது மாதுரி நான் நடத்துறேன். அங்கே இருக்கிற என் தாய்களுக்காகவும் பிள்ளைகளுக் காகவுந்தான் வந்திருக்கேன். அவங்களும் இங்க வந்து என்னோட உண்ணாவிரதம் இருப்பாங்க. சிலர் மறியல் பண்ணுவாங்க. அங்கே சாப்பாடு இல்லாமல் வெறுமனே சாகிறவங்க இங்க ஒரு லட்சியத்துக்காக சாவட்டும். உம், பதில் சொல்லுங்க! என் நகை, ரொக்கம் சொத்துல பங்கு கிடைக்குமா கிடைக்காதா? எனக்கு இப்போதே தெரிந்தாகணும்..."

ஜெயராஜ் வகையறாக்கள் பயந்துவிட்டார்கள். பத்திரி கைகளில் மார்க்கரெட் மரண அனுதாபக் கூட்டத்தில் பேசியது இந்த மணிமேகலைதானா? யோசிக்காம போயிட்டோமே! எதையாவது கொடுத்து சரிக்கட்டணும். முதல்ல நகையைக் கேட்டாள். அப்புறம் ரொக்கத்தைக் கேட்டாள். இப்போ, சொத்துல பங்கு கேட்கிறாள். சீக்கிரமா விவகாரத்தை முடிச்சிடணும்... இல்லன்னா லிஸ்ட் ஏறும்!

சங்கரன், தம்பியை அதட்டினான்.

"நீயும் ஒரேயடியாய் பிடிவாதம் பிடிக்கக்கூடாதுடா. ஏதோ கொடுக்கத கொடுத்து, நாமும் கஷ்டப்படுறோம். அவளும் கஷ்டப்படுகிறாள்."

மணிமேகலை ஆணித்தரமாகப் பேசினாள்:

“அறுபது பவுன் நகை வரணும். அப்பா கொடுத்த ரொக்கம் வரணும். சொத்து செட்டில் ஆகணும். என் பிள்ளையும் எனக்கு வேணும்.”

மாமியார்க்காரிக்கு த்ன் முன்னாள் மருமகள்மீது கருணை வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. அறுபது பவுனை விட முடியுமா?

“எப்படியோ ஒன்னப் பிடிச்ச சனியும், எங்களப் பிடிச்ச சனியும் ஏழரை நாட்டானாய் ஆயிட்டு. ஒன்னை நாங்களும் அப்படி பண்ணியிருக்கப்படாதுதான். சரி போவட்டும். பேசாமல் இனிமேல் நீ இந்த வீட்டுக்கு வந்துடு. தாயாய் பிள்ளயாய் இருக்கலாம்.”

மணிமேகலை மாறவில்லை.

“சரி நாம போவோமா? இவங்ககிட்ட பேசி பிரயோ ஜனமில்ல. பேசவேண்டிய இடத்துல பேசிக்கலாம். நாளைக்கே என்னோட நோயாளிச் சகோதரிகளை கூட்டி வாரேன். ரத்துனம் அண்ணே! மெகாபோன் இந்த ஊர்லயே கிடைக்கும். என்னை தாயாய் நினைச்ச தொழி லாளிங்க எனக்கு உதவாமயும் போகமாட்டாங்க. சரி. எழுந்திருங்க! நான் இனிமேல் போய்தான் அங்க, அவங் களுக்கு சாப்பாட்டைக் கவனிக்கணும். மதுராந்தகத்துல வாங்குன அரிசி தீர்ந்து போயிருக்கும்...”

ஜெயராஜும், சங்கரனும், வசந்தியும், கிழவியும் திணறினார்கள். திடீரென்று சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்த கிழவர் எழுந்தார். ஜெயராஜிடம், “சாவியைத் தாடா வேட்டியை மாத்தணும்” என்று சொல்லி அதை வாங்கிக்கொண்டு உள்ளே போனார்.

கால்மணி நேரத்தில் நகைப்பெட்டியைக் கொண்டு வந்தார்.

"இந்தாம்மா! இதுல ஒன் நகை எல்லாம் இருக்கு. நேற்று நான்தான் பாங்ல போய் மீட்டிக்கிட்டு வந்தேன். இந்த பர்ஸ்ல பத்தாயிரம் ரூபாய் இருக்கு. மீதியை நானே அங்க வந்து முடிக்கிறேன். மாமாவை நம்பும்மா!"

"ஏதோ வயித்தெரிச்சலில் தாரேன்னோ, வெறுமையில தாரேன்னோ நினைக்காதம்மா. நீ, மாதா மார்க்ரெட்டுக்குப் பதிலா வந்திருக்கிற என்கிறது எனக்குத் தெரியும்மா. அந்த புண்ணியவதி கிட்டதாம்மா நான் ஆரம்பத்துல வேலை பார்த்தேன். மதுராந்தகத்தில் காய்கறி கடை போட்டிருக்கையில் அந்த புண்ணியவதிக்கு காய்கறி கொடுத்தவன் நான். அதோட ஒங்க அப்பாவுக்கு நான் சளைச்சவன் இல்ல. ஒனக்கும் இங்க உள்ளதுல எல்லாத் துலயும் பங்குண்டும்மா. உன் வயிறு எரிஞ்சா, இந்தப் பய மவனுவளும் எரிஞ்சி போயிடுவாங்க! அவங்களும் நல்லா இருக்கணுமுன்னு வாழ்த்தும்மா! ஒன்னை அவங்க படுத்துனபாடு, அவங்க மேல பாவமா போயிடக் கூடாதுன்னு ஆசீர்வாதம் பண்ணும்மா!"

மணிமேகலை, மாமாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டு விம்மினாள். கிழவர் இப்போது "என் தாயே! என் தாயே! எங்களை மறந்துடாத தாயே!" என்று மன்றாடினார். ஆனானப்பட்ட ரத்தினங்கூட பிரமிப்பில் தானாக எழுந்தான்.

சிறிதுநேரம் மௌனம் கொடிகட்டிப் பறந்தது.

மணிமேகலை, மாமாவின் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு காரில் ஏறினாள். மாமியார்க்காரி "நாளைக்கு ஒன் பையன் வந்துடுவான். பார்த்துட்டு போயேன்" என்றாள். அப்படிச் சொல்லியாவது கொடுக்க வேண்டியதைக் குறைக்க நினைத்தாளா அல்லது நிஜமாகவே, கணவரின் பேச்சு அவளைக் கலக்கி மாற்றி விட்டதா என்பது புரியவில்லை.

மணிமேகலை சிறிது யோசித்தாள். அவனைப் பார்த்த பிறகு அவனும் தன்னோடு வருவேன் என்றால்... இப்போது தான் அம்மாவை மறந்திருப்பான். இப்போதுதான் ஏக்கக் காயங்கள் ஆறிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அவனைப் பார்த்து தன்னை நினைவூட்டி, அவனுக்கு கலக்கத்தைக் கொடுக்கலாமா? கூடாது! என் கண்மணி இங்கேயே இருக்கட்டும். என் ராஜா, அம்மாவைப் பார்க்க வேண்டாம்! அவன் அப்பா பிள்ளையாகவே இருக்கட்டும்.

மணிமேகலை, மாமியாருக்குப் பதில் சொல்லாமலே காரில் ஏறினாள். அவளுடன் வந்தவர்களும் வண்டியில் அமர்ந்தார்கள். எவரும், எதுவும் பேசவில்லை. அந்த மௌனத்தின் கோர தாண்டவத்தை கலைத்துக்கொண்டே கார் புறப்பட்டது.

## 19

நல்ல காரியங்களைத் துவக்குவதற்கு, நாளையோ நட்சத்திரத்தையோ அல்லது ஆளுதவி, பொருளுதவி யையோ எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடாது. காந்தம் இரும்பை இழுப்பதுபோல், இந்த காரியங்களே தாங்கள் நிலைப்பதற்கான வழிவகைகளை கண்டுபிடிக்கும். பேசாமல் பேசி, பேசாமடந்தைகளையும் பேச வைக்கும். ஈயாத லோபிகளையும் வள்ளல்களாக்கும். நலமனைத்தும் வருவதற்கு காலமாகலாம். ஆனால் அவை காலாவதி யாகாது. ஏனென்றால் நற்பணிகள் இறைவனின் திருமிகு அவதாரங்கள். அவற்றை வணங்காத முடி இல்லை. வாழ்த்தாத வாயில்லை. ஈயாத கரமில்லை. பூமியின் ஈர்ப்பு சக்தியைக் கடந்துவிட்டால் எந்த ஒரு பொருளும், எப்படி மேலோங்கி மேலோங்கிப் போக முடியுமோ, அப்படி நற்பணிகளை நம் சுயவிருப்பு—வெறுப்பின் ஈர்ப்புக்கு

அப்பால் கொண்டு போய்விட்டால் அவை 'அப்பல்லோ' வேகத்தில் மேலோங்கும். "மண்ணுள்ளார் பண்ணிடும் புண்ணியக் குறைவுகளை" படம்பிடித்து அல்லவை போக்கி நல்லவை சிறக்க அந்த நல்ல காரியங்களே காரணங்களாகவும் மாறும்.

இந்த அரிய உண்மையை அறிந்துகொண்டவள் போல் மணிமேகலை பம்பரமாகச் சுழல்கிறாள். இப்போது இரண்டு தொழிற்கூடங்கள் இயங்குகின்றன. ஐந்து தையல் மிஷின்கள் இருக்கின்றன. உணவுப் பொருட்கள் வண்டி வண்டியாக வருகின்றன. எல்லோரும் அந்த இளம் பெண்ணைத் தாயாகப் பாவித்து 'அம்மா' என்கிறார்கள். வேலைக்காரர்கள் சொல்லும் விதத்தில் அல்ல; பெற்ற பிள்ளைகள் விளிக்குமே அப்படி!

அன்னை மார்க்கரெட் அருளில்லம் என்ற புதிய பெயர்ப் பலகையில் அந்த மாதாவின் படம் மகிழ்ச்சி யுடன் சிரிக்கிறது. அரசாங்க அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும், சமூக நிறுவனங்களையும் சந்தித்து இல்லத்தின் நிலையை எடுத்துக் கூறி, அதை இப்போது எல்லோரும் அனிச்சையாகவே பாராட்டும்படி செய்து விட்டாள். தனது நகைகளை விற்று கணவன் வீட்டில் கிடைத்த பணத்துடன் சேர்த்து சகோதரர் களுடன் போராடிக் கிடைத்த கிராமத்துச் சொத்தையும் இதனுடன் கூட்டி எல்லாவற்றையும் இந்த இல்லத்தின் பெயருக்கே அவள் எழுதி வைத்துவிட்டதால் பத்திரிகைகள் அவளைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதுகின்றன.

அவளது முன்னுதாரணம் பல 'பின்னுதாரணப்' பேர்வழிகளையம் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. அரசு மான்யம் கூடியது. சமூக நிறுவனங்கள் தாராளம் காட்டு கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக ஏழை எளியவர்கள் 'எங்கள் இல்லம்' என்கிறார்கள். காமாட்சியின் கணவர் மூலம் நடிக நடிகையர்கள் 'நல்ல' நன்கொடை கொடுத் தார்கள். சொன்னபடி கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

ஊரில்கூட அண்ணனும், தம்பியும் பெருமையோடு பேசிக் கொள்கிறார்களாம். “எங்க மணிமேகல சின்ன வயசிலேயே இப்படித்தான். பிறத்தியார் கஷ்டப்படுறத பார்த்துக்கிட்டு சும்மா இருக்க மாட்டாள்” என்று அண்ணிக்காரிகூட சொல்கிறாளாம். சொல்லட்டும்! அவர்கள் சொன்னதால் அவள் குளிர்ந்துவிடவும் இல்லை. உயிலைக் காட்டிய பிறகும், ஒரு மாதம்வரை முரண்டு பிடித்த அண்ணன் தம்பிகள்மீது, அவர்களின் அன்றைய போக்கை நினைத்து கொதிக்கவும் இல்லை. உறவின் உள்ளர்த்தத்தைப் புரிந்தவளாய் மனித நேயத்தின் பெருஞ்சக்தியை அறிந்தவளாய் சேவைக்கு ஈடு தெய்வம் ஒன்றே என்ற பேரானந்த அனுபவத்தில் தோர்ந்தவளாய்த் திகழ்கிறாள்.

காலம் மாறியதோ என்னவோ அந்த காலத்தின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் போனவர்கள் கூட இப்போது எழுந்து நிற்கிறார்கள். அந்த முன்னாளைய நோயாளிகள் இங்கே சஞ்சலமற்று கழிவிரக்கம் இல்லாமல் வாழ்கிறார்கள்.

மணிமேகலையை வெங்கடேசன் அடிக்கடி வந்து பார்க்கிறான். அவளின் பிரச்னைகளை தீர்த்து வைத்தவன். இப்போது தன் பிரச்னைகளின் தீர்வுக்கு அவளை நாடுகிறான். எல்லோரையும்போல அவனும் அந்த இளம் பெண்ணை ‘அம்மா’ என்கிறான். அவளுக்கு பணம் கொடுத்து விடுதலைப் பத்திரம் வாங்க வந்த ஜெயராஜ்கூட அவளைக் கையெடுத்து கும்பிட்டுவிட்டுப் போனான். அவள் மாமனார் இங்கே வந்து இரண்டு நாட்கள் இருந்துவிட்டுப் போனார். ஊரில் ரத்தினம் அவளுக்கு ‘வரவேற்பு விழா’ வைக்கப் போனான். அவள்தான் ‘அந்தப் பணத்தை இங்கே அனுப்பு இப்போதே அனுப்புக’ என்று சொல்லிவிட்டாள். நம் ‘கூத்து’ கோவிந்தன் இந்த இல்லத்தில் இருந்த முன்னைய நோயாளியும் இன்றைய

அழகியுமான ஒரு இளம்பெண்ணை திருமணம் செய்து கொண்டு மதுராந்தகத்தில் குடியிருக்கிறான். 'அல்லி அரசாணியையும்' 'பவளக்கொடியையும்' 'மதுரை வீரனையும்' கூத்தாகப் போட்டுக் கொண்டிருந்தவன், இப்போது மணிமேகலையின் அறிவுரைப்படி 'நோயாளி என்றால் இளக்காரமா?' 'கிழவனும் ஒரு காலத்தில் வாழ்ந்தவனே' 'மனைவி என்ன மண்ணாங்கட்டியா?' 'உனக்கும் நோய் வரலாம்' 'ஈயாதவன் இருந்தென்ன போயென்ன' என்ற தலைப்புக்களில் பல கூத்துகளை போடோ போடென்று போடுகிறான். காசுக்குக் காசு! சீர்திருத்தத்திற்கும் சீர்திருத்தம்! என்றாலும் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கை அந்த அருளில்லத்திற்கு கொடுத்து விடுகிறான். சமீபத்தில், 'இப்போது கண்ணகி முக்கியமல்ல... கற்பழிக்கப்பட்ட பெண்களே' என்ற தலைப்பில் அவன் கதை வசனம் எழுதி டைரக்ஷன் செய்து வில்லனாகவும் நடித்த நாடகம் ஒன்று சக்கை போடு போடுகிறது. அரசாங்கத்தின் விளம்பர இலாகா அந்த நாடகத்தை வாங்கி அவனுக்கு 'ராயல்டி' கொடுக்கப் போவதாகக்கூட கேள்வி. அதை அவசரப்படுத்துவதற்காக மணிமேகலை யிடம் 'ஒரு போன் போட்டு சொல்லு தங்கச்சி' என்றான். அவளோ "நல்லதுக்கு சிபாரிசு செய்தால் சிபாரிசு செய்யப் படுகிறது எல்லாம் நல்லதுன்னு ஆயிடும். அதனால வாரது அது பாட்டுக்கு வரட்டும்" என்று சொல்லிவிட்டாள்.

என்றாலும், மணிமேகலை ஒரு பற்றற்ற யோகியாகி விட்டாள் என்றும் சொல்ல முடியாது. ஆயிரம்பேர் அவளை அம்மா என்று சொன்னாலும் தன் ஒன்பது வயது மகனிடம் இருந்து கடந்த இரண்டு வருடமாக இந்த வார்த்தையை கேட்கவில்லையே என்ற ஆதங்கம் அப்பப்போ வருகிறது. கேட்பது கிடக்கட்டும். அவனைப் பார்க்கக்கூட இல்லையே?

இன்றும் அப்படித்தான்—

கணக்குப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலைக்கு திடீரென்று தன் மகனின் ஞாபகம் வந்துவிட்டது. எவரும் நினைவு படுத்தாமலேயே வந்து விட்டது. தாய்மையின் தாபம் அவளைக் கொல்லாமல் கொன்றது. கணக்குப் புத்தகத்தை மேற்கொண்டு பார்க்க முடியவில்லை. அதை மூடிவிட்டு 'அம்மாவின்' படத்தைப் பார்க்கிறாள். பிறகு தற்செயலாக இந்திய அரசாங்கத்தின் தகவல்—ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்ட மாதக் காலண்டரைப் பார்க்கிறாள். சர்வதேச குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு பல குழந்தைகளின் படங்களை, பலவித கோணங்களில் காட்டும் புதுமையான காலண்டர். மணிமேகலை அந்த மாத இதழின் 'குழந்தையைப்' பார்க்கிறாள். எல்லோரும் பந்து விளையாடும்போது தான் மட்டும்—விளையாடுவது கிடக்கட்டும், நிற்கக்கூட முடிய லியே' என்று ஏங்கும் ஒரு முடச் சிறுமியின் படம் அது. மணிமேகலை குழந்தை மாதிரி ஒவ்வொரு தாளாகப் புரட்டுகிறாள். கஞ்சியில்லாக் குழந்தை... வாடிய குழந்தை இடையிடையே வண்ணச் சிரிப்புதிர்க்கும் குழந்தை... இறுதியில் யாருமே இல்லை என்று கைவிரித்துக் காட்டும் பரிதாபக் குழந்தை!

மணிமேகலைக்கு கண்ணீர் வருகிறது. திடீரென்று ஒரு எண்ணம் வருகிறது.

என் பிள்ளை நன்றாய்த்தான் வளர்கிறான். ஆனால் இங்கே—இந்த காலண்டரில்—காலண்டர் கிடக்கட்டும், இந்த இல்லத்தில் இருக்கின்ற பல இளம்பெண்கள், வீட்டில் விட்டுவிட்டு வந்த தங்கள் குழந்தைகளை நினைத்து தன்னிடம் எத்தனை தடவை அழுதிருக்கிறார் கள். 'என் பிள்ளையைப் பார்க்க முடியலியே' என்று புலம்ப வில்லை. என் பிள்ளையை அங்கே கவனிக்க ஆளில் லையே' என்ற இயலாமைப் புலம்பல்கள். எதுவும் செய்ய முடியாத நிர்க்கதியான நெஞ்ச வெடிப்புக்கள்!

திடீரென்று அவள் மனதில் இன்னொரு செயல் திட்டம் வருகிறது.

பூந்தமல்லிக்கு அருகே மதுரவாயல் என்ற சாலையோர கிராமத்தில் திருமதி லில்லி பிரபாகர் என்ற நிஜமான சமூக சேவகி குழந்தைகள், காப்பகம் ஒன்றை உருவாக்கி இருக்கிறாராம். நாடெங்கிலுமுள்ள பெரு வியாதிக்காரர் களின் பிள்ளைகளைக் கொண்டுவந்து நாள்தோறும் மும்முறை உணவளித்து, கல்வியளித்து, நற்பணி செய்வதாகக் கேள்வி. நாமும் ஏன் இந்த தாய்மார்களின் வசதியற்ற பிள்ளைகளைக் கொண்டுவந்து இதர அனாதைக் குழந்தைகளையும் கூட்டி வந்து ஒரு காப்பகம் கட்டக் கூடாது?

மணிமேகலை அந்த காம்பவுண்டுக்குள் வெற்றிடம் ஒன்றை நோக்குகிறாள். அவள் மனவெளிக்குள் ஒரு கட்டிடம் எழும்புகிறது. குழந்தைகள் குவிகிறார்கள். கட்டிடம் பெரிதாகிக் கொண்டே வருகிறது. குழந்தைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. மனவெளியில் இவை பரந்து விரிய விரிய அவளது சொந்த தாபம் குறைந்து குறைந்து ஒரு அணுவாக மாறுகிறது.

தூய வெண்துகில் ஆடையில் செவ்வரளிப் பூப்போல, சிவந்திப் பூ நிறம்போல, எளிமை அழகாக, அந்த அழகே கருணையாக பேனா பிடித்த சரஸ்வதி போல, அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அவள் சிந்தனை, சீக்கிரமாய் காப்பகமாய் உருவாகும் என்பதுபோல் டெலிபோன் மணி அடிக்கிறது.

மணிமேகலை எழுகிறாள்.

卐

கங்கை

மலர் பிரிண்டர்ஸ் 044–8224803